# தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்



மா. செல்வராஜா

மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

599089

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

[illegible] KALVI [illegible]

CINTANAIKALUM

PATATTITTAMUM

MĀ. CELVARĀTĀ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்



ஆசிரியர் :

**மா. செல்வராஜா**

சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பிரிவு கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி, இலங்கை.

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
WebSite : www.manimekalaiprasuram.com

599089

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | * | தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும் |
| ஆசிரியர் | * | மா. செல்வராஜா<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பிரிவு<br>கிழக்குப் பல்கலைக்கழகம்,<br>வந்தாறுமூலை, செங்கலடி, இலங்கை. |
| மொழி | * | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | * | 2005 |
| பதிப்பு விவரம் | * | முதல் பதிப்பு |
| உரிமை | * | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | * | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | * | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | * | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | * | viii + 260 = 268 |
| அட்டைப்பட ஓவியம் | * | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | * | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 26. ✆ 23725639 |
| அச்சிட்டோர் | * | ஸ்கிரிப்ட் ஆஃப்ஸெட்<br>சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | * | தையல் |
| வெளியிட்டோர் | * | மணிமேகலைப் பிரசுரம்<br>சென்னை - 17. |

இந்திய விலை : ரூ. 70.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தொடக்கப் பள்ளிக் கல்வியில்

பணியாற்றும் அனைவர்க்கும்

இந்நூல் சமர்ப்பணம்

– மா. செல்வராஜா

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொடக்கக் கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு இன்று உலகு பூராகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. பிள்ளை வளர்ச்சியின் முக்கிய கட்டமான 2லிருந்து 5 வயது வரையான காலப் பகுதியை தொடக்கப் பள்ளிகள் கொண்டுள்ளன. உலகு பூராகவும் அரசாங்கங்கள் இதற்கான கொள்கைகளை உருவாக்குவதிலும், வசதிகளை ஏற்படுத்துவதிலும் போதிய அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பிள்ளையின் முழுமையான வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றனர். ஆகவே அவர்கள் தொடக்கப் பள்ளி தொடர்பான சிந்தனைகளையும், கருத்துகளையும் தெளிவாக விளங்கியிருப்பதுடன் அது தொடர்பான செயல் முறைகளிலும் போதிய தேர்ச்சிகளைப் பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

தொடக்கப் பள்ளி தொடர்பான நூல்கள் தமிழ் மொழியில் மிக அரிதாகவே வெளிவந்துள்ளன. ஒவ்வோர் ஆண்டும் புதிய சிந்தனைகளும், செயற்பாடுகளும் பிற மொழிகளில் வந்தவண்ணமுள்ளன.

பொருத்தமான சிந்தனைகளும், செயல்பாடுகளும் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டாலேயே நமது தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அவற்றைக் கற்று செயலுருவில் கொண்டு வரமுடியும். அந்த வகையில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பானவன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலும், ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கும், பராமரிப்புக்குமான நிலையத்தின் பணிப்பாளன் என்ற வகையிலும் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இந்நூலை வெளியிட முயற்சி எடுத்தேன்.

தொடக்கப் பள்ளிக் கல்விச் சிந்தனைகள், செயற்பாடுகள் தொடர்பான பல முக்கிய விடயங்களைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய பல தேர்ச்சிகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

தங்களது தொழில்வாண்மையைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளிகளை மேற்பார்வை செய்யும் முகாமையாளர்கள், நிருவாகிகள் ஆகியோருக்கும் தொடக்கப் பள்ளி தொடர்பான தமது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்பும் பெற்றோருக்கும் இந்நூல் பயன்படுமென்பது எனது நம்பிக்கை, இதைத் தொடர்ந்து வெளிவரும் புதிய பதிப்புகளில் சேர்த்துக் கொள்ளக்கூடிய விடயங்களை வாசகர்கள் குறிப்பிட்டு எழுதும் பட்சத்தில் புதிய பதிப்பு மேலும் பயனுடைய விடயங்களைத் தாங்கி வெளிவரலாம் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

அன்புடன்

**- மா. செல்வராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பிள்ளையின் கல்வி வளர்ச்சிப் படிமுறைகளில் தொடக்கப் பள்ளி பருவமே ஏனைய கல்வி வளர்ச்சிப் படிகளின் அத்திவாரமாக அமைந்துள்ளது. அதனால் உயர் கல்வியைவிட இதன் முக்கியத்துவம் இன்று உலகு பூராகவும் உணரப்பட்டதொன்றாக விளங்குவதோடு பல நாட்டு அரசாங்கங்களின் கவனத்தை ஈர்த்து வருகின்ற துறையாகவும் இது காணப்படுகின்றது. உலக வங்கியும் கூட தனது நிதி உதவிகளில் முன்னுரிமை கொடுக்கும் துறையாகவும் தொடக்கப் பள்ளிக் கல்வி விளங்குகின்றது. பல வளர்முக நாடுகளில் இத்துறையை அரசு பொறுப்பேற்கும் போக்கினையும் தற்பொழுது அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் தொடக்கப் பள்ளிக் கல்வி, அதன் செயற்பாடுகள் தொடர்பான நூல்கள் தமிழ் மொழியில் வெளிவர வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்பிள்ளைப் பராமரிப்பிற்கும், அபிவிருத்திக்குமான நிலையத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு. மா. செல்வராஜா கல்வியுலுலகிற்கு பல நூல்களின் மூலம் ஏற்கனவே அறிமுகமானவர் என்ற வகையிலும், இத்துறை தொடர்பாக பிற நாடுகளின் அனுபவங்களைப் பெற்றவர் என்ற ரீதியிலும் இந்நூல் தொடக்கப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், தமது தொழில் வாண்மையை வளர்த்துக் கொள்வதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

திரு. மா. செல்வராஜாவின் முயற்சியை மனதாரப் பாராட்டுவதோடு அவரது நூல் வெளியீட்டுப் பணி தொடர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பேராசிரியர் **சோ. சந்திரசேகரன்**

கல்விப் பீடம்,

கொழும்புப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

கல்வி இன்று ஒன்றிணைந்த துறையாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இத்தன்மையை இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கல்வியியலாளர்களது சிந்தனைகள், குழந்தைகளின் கற்றல், பெற்றோர், சூழலும் விளையாட்டும், படைப்பாற்றல், பகுத்தாய்தல், தேர்ச்சிகள், தொடர்பாடல், உடல் தேர்ச்சி முதலான விடயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கல்வியில் மாற்றங்களைக் காணவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஏனெனில் இன்று கல்வி பல்வேறு வழிகளிலும் பின்னடைவுக்குட்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிவு ரீதியான அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர்களாகவும், அதற்குப் பங்களிக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். இது அவர்களது தலையாய கடமையாகும். மேலும் நமது தமிழ் நூல்கள் ஆங்கில நூல்களின் தரத்திற்கு உயரவும் வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு இதில் பெரும் பங்குண்டு.

அந்த வகையில் திரு. மா. செல்வராஜா கடந்த பல ஆண்டுகளாக கல்வி தொடர்பான பல நூல்களை வெளியிட்டு வருபவர். 'தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்' எனும் அவரது இந்நூல் எமது முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், இத்துறையில் பணியாற்றும் முகாமையாளர்கள், நிர்வாகிகள் ஆகியோருக்கும் தேவையான ஒன்று. வளர்ந்துவரும் ஒரு துறையான தொடக்கப் பள்ளிக் கல்வி தொடர்பான அவரது முயற்சியைப் பாராட்டுவதுடன் எதிர்கால முயற்சிகளுக்கும் அவரை வாழ்த்துகின்றேன்.



பேராசிரியர், முனைவர் **சபா. ஜெயராஜா**

கல்வித்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


அத்தியாயம் - 1

முன்பள்ளிக் குழந்தைகள் கல்வியில் ஆரம்பகாலக் கல்வியியலாளர்கள் ........ 1

அத்தியாயம் - 2

குழந்தைகளின் கற்றலும் பெற்றோரும் ........ 30

அத்தியாயம் - 3

குழந்தைகள் கற்கும் சூழலும் விளையாட்டும் ...... 56

அத்தியாயம் - 4

படைப்பாற்றல், அழகியல் திறன்கள் ........ 89

அத்தியாயம் - 5

பகுத்தாயும், பிரச்சினை தீர்க்கும் திறன்கள் ........ 122

அத்தியாயம் - 6

தனியாள், சமூகத் தேர்ச்சிகள் ........ 145

அத்தியாயம் - 7

தொடர்பாடல் திறன்கள் ........ 185

அத்தியாயம் - 8

உடல் தேர்ச்சி ........ 215

அத்தியாயம் - 9

கணிப்பீடும் பதிவுகள் பேணலும் ........ 235


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கக் கல்வி பற்றிய



# சிந்தனைகளும் பாடத்திட்டமும்

அத்தியாயம் 1

## முன்பள்ளிக் குழந்தைகள் கல்வியில் ஆரம்பகாலக் கல்வியியலாளர்கள்

முன்பள்ளிக் குழந்தைகள் என்போர் இரண்டு வயதுக்கும் ஐந்து வயதுக்குமிடைப்பட்ட பிராயத்தினராவர். இவர்களது கல்வி சம்பந்தப்பட்ட எந்த நூலிலும் ஆரம்பக் கல்வியியலாளர்களது கருத்துக்களைக் காணாமலிருக்க முடியாது. தற்காலக் கல்விச் சிந்தனைகளில் இவர்களது தாக்கம் புறக்கணிக்கக் கூடியதல்ல. ஆரம்பகாலக் கல்வியியலாளர்களில் பிரெட்றிச் புரோபல், றடொல்ப் ஸ்ரெயினர், மரியாமொன் ரிசோரி, மார்க்கரட் மிக்மிலன், சுசான் ஐசாக்ஸ் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிக் குழந்தைகளின் கல்வியில், இவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்றனர். இந்த ஐவரும், 'இளம் குழந்தைகள் அக்கறையுடன் விருத்தியாக்கப்படவேண்டிய உணர்வுகள், கற்பனைகள், எண்ணங்கள் முதலியவற்றைக் கொண்ட முழுமையான ஆட்கள்' என்ற கருத்தினை முதன்முதலில் வெளிப்படுத்தியவர்களாவர். இளம் குழந்தைகள் நாள் முழுவதும் மேசை கதிரைகளில் வரிசையாக அமர்ந்திருக்கக் கூடியவர்களல்லர். வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் பலவகைப்பட்ட செயல்களில் சுதந்திரமாக ஈடுபடுபவராவர். இந்த உண்மை பொதிந்த நிலைப்பாட்டை ஆரம்பகாலக் கல்வியியலாளர்களாகிய இந்த ஐவரும் கொண்டிருந்தனர். இந்த நிலைப்பாடு பிரதானமாக பிள்ளைமையக் கல்வி அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இளங்குழந்தைகள் அகவூக்கல்களுக்குட்பட்டவர்கள். கற்பதற்கு இயற்கையாகவே மிக விருப்புடையவர்கள் என்பது இச்சிந்தனையாளர்களின் நம்பிக்கையாகும். முன்பள்ளிக் குழந்தைகள் கல்விக் கலைத்திட்டத்தில் இவர்களது செல்வாக்கினை இங்கு கவனத்திற்கொள்ளலாம்.

**பிரெட்றிச் புரோபல்**

பிரெட்றிச் புரோபல் மறைந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. ஆயினும் இளங்குழந்தைப் பருவக் கல்வியில் அவர் இன்னமும் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்துகிறார். மேலே கூறப்பட்ட ஐந்து கல்வியியலாளர்களிலும் முன்னவராய் விளங்குபவர் பிரெட்றிச் புரோபல் அவர்களேயாவார். அவரது ஆசிரியத்துவம் தொடர்ந்து விருத்தியற்றதாகக் கருதப்பட்டாலும் குழந்தைகளின் இயக்கத்தையும் அவர்கள் கற்கும் உத்திகளையும் நாம் தெளிவாக விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கான ஒரு புதிய அணுகுமுறையின் முன்னோடியாகப் புரோபல் மிளிர்ந்தார் என்பதில் ஐயமேயில்லை. 'குழந்தைகள் தம்மைப் பற்றியும் தாம் வாழும் உலகு பற்றியும் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னதாக ஏராளமான பல்வேறு சுய அனுபவங்கள் அவசியமாகின்றன' என்பதையும் புரோபலே நமக்குப் புலப்படுத்தியுள்ளார்.

புரோபல், ரூசோ, பெஸ்டலோசி ஆகியோரின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தவர். இளங்குழந்தைகளைப் பொறுத்து விளையாட்டானது மிகக் காத்திரமானதும், பொருள் நிறைந்ததுமாகுமெனப் புரோபல் வலியுறுத்தினார். 'குழந்தைப் பருவத்தைப் பொறுத்து நாம் விளையாட்டை அற்பமாகக் கணிக்க முடியாது; அது இன்றியமையாதது, பொருள் பொதிந்தது. உள்ளத்தின் உணர்ச்சிகரமான இயல்புகளோடு குழந்தை முழு ஆளாக விருத்தி பெற்று வெளிக்காட்டப்படுதல் விளையாட்டிலேயே தங்கியிருக்கிறது. குழந்தையின் எதிர்காலத்தின் மூலாதாரம் விளையாட்டிலேயே நிலை கொண்டிருக்கிறது. எனவே குழந்தையைப் பொறுத்து விளையாட்டென்பது சாதாரண விடயமல்ல' என அவர் குறிப்பிடுகிறார்.

குழந்தைப் பள்ளிகளாவன, குழந்தைகள் தமக்குத் தாமே போதித்து அறிவு புகட்டும் நிலையங்களாகும். ஆக்கச் செயற்பாடாகவும், தன்னிச்சையான போதனையாகவும் அமைகின்ற விளையாட்டுகளினூடாக குழந்தைகளின் அனைத்து ஆற்றல்களும் இங்கேயே விருத்தி செய்யப்பட்டு ஒன்றிணைக்கப்படுகின்றன என்பது புரோபலைப் பொறுத்தவரை ஐயத்துக் கிடமற்ற உண்மையாகும். புரோபல் தத்துவத்தின் அடிப்படை, 'குழந்தை விளையாட்டினூடாகவே கற்றுக் கொள்கிறது' என்பதே. குழந்தைக் கல்வியியலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு தழுவலாயினர். புரோபலைப் பின்பற்றிய பிற்காலக் கல்வியியலாளர்கள் கருதியது போல், குழந்தைகளின் விளையாட்டானது கட்டமைப்பற்றவாறு இருக்க வேண்டுமெனப் புரோபல் கருதியதாகத் தெரியவில்லை.

புரோபலைப் பொறுத்தவரை விளையாட்டென்பது தற்செயலானதல்ல. அது இன்றிமையாதது. பின்வரும் அவரின் கூற்று இதனை நிரூபிக்கிறது. "விளையாட்டினூடாகக் கற்றுக் கொள்வதனாலேயே விருப்பத்துடனும் அதிகளவிலும் குழந்தை கற்றுக் கொள்கிறது. கற்றல், செயற்படுதல் என்பன போன்று விளையாட்டும் அதற்கே உரித்தான, திட்டவட்டமான ஒரு காலவரையறையைக் கொண்டிருப்பதுடன் அது ஆரம்ப காலகட்டத்திலிருந்து விலக்கப்பட முடியாததுமாயிருக்கிறது. விளையாட்டு, மிக முக்கியமானதாகையால் அதனை ஆற்றுப்படுத்துதல் மட்டுமின்றி, முதலில் இவ்வகை விளையாட்டினைக் கற்பிக்கவும் வேண்டும்."

குழந்தைகள் விளையாட்டினூடாகக் கற்றுக் கொள்வதற்கென புரோபல் ஏராளமான விளையாட்டுப் பொருட்களையும், விளையாட்டுகளையும் வடிவமைத்தார். அவர் வடிவமைத்த விளையாட்டுப் பொருட்களில் அல்லது வெகுமதிகளில் ஆறு தொகுதிகளும், பல மென்பந்துகள் முதலாக மரத்தினாலான கோளங்கள், கனக்குற்றிகள், உருளைகள் என ஓர் ஒழுங்குத் தொடர் உருவானது. வரைதல் அல்லது மாதிரியுருவமைத்தல் போன்ற செயற்பாடுகளில் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் செயற்பாடுகளும் அங்கு காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார்ந்த எண்ணங்கள் குறித்த புரோபலின் சித்தாந்த அடிப்படைக் கூறுகள், வெகுமதிகள், செயற்பாடுகள் என்பனவாகும். அவற்றின் குறியீட்டுப் பண்பை நீக்கிப் பார்த்தால், அவையே எக்காலத்திலும் பிள்ளைப் பருவத்தினரின் விளையாட்டுப் பொருட்களாகும். பந்துகள், பலகைகள், மணல், களிமண் போன்றவை காலங்காலமாகக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக இருந்து வந்துள்ளன என்பன இதற்கு உதாரணமாகும். இதிலே மூத்தோரின் வகி பங்கானது இந்தச் செயற்பாடுகளை திட்டமிடுதலும் மேற்பார்வை செய்தலுமாகும்.

எண், எழுத்து, வாசிப்பு என்னும் மூன்றையும் மேற்கொள்ளுதலை நாளாந்த வழக்கமாகக் கொண்டிருந்த அக்காலக் குழந்தைப் பள்ளிகளுக்கு மாறாக, வெகுமதிகள், செயற்பாடுகள், பாடல்கள், விளையாட்டுகள், கதைகள், உரையாடல்கள் என்பன புரோபலின் குழந்தைப் பிள்ளைகளின் கலைத் திட்டத்தினை உருவாக்கின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை 1990களில் குழந்தைகளின் தேவைகளுக்கேற்ப - ஈடு கொடுக்கும் வகையில் விசாரிக்கப்பட்டும், திருத்தியமைக்கப்பட்டும் காணப்பட்டன. எனினும் தற்காலத்துக் குழந்தைப் பள்ளிகள் புரோபலின் செல்வாக்குக்கு அதிகளவில் உட்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது. மேலும் இன்றைய குழந்தைப் பள்ளிகளிலும் பராமரிப்பு நிலையங்களிலும் வழங்கப்படும் செயற்பாடுகள் பல, புரோபலின் குழந்தைப் பள்ளியின் செயற்பாடுகளிலிருந்து தோற்றம் பெற்றன என்பதை நாம் கருத்திற் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளின் நாட்டங்களுக்குப் பொருத்தமான செயல்களை உள்ளடக்குகின்ற, ஒரு முழுமையான அலகாகப் பாடசாலை நாளைக் கருதுகின்றோம். இது புரோபலின் சிந்தனை மரபிலிருந்து உதித்ததாகும். புரோபல் குழந்தைக்கல்வி முன்னோடிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவர் என்பதை அறிவோம். அவரின் செல்வாக்கினை ஆரம்பப் பள்ளிகளில் காண்கிறோம். எதிர்காலத்திலும் அது தொடரும். ஆயினும் 'மனிதனின் கல்வி' (1896) எனும் அவரின் பிரதான நூலானது இலகுவாசிப்புக்கு ஏற்றதாக அமையாததால், அவரின் நூல்கள் அதிகளவில் இன்று வாசிக்கப்படுவதில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம். எப்படியாயினும் புரோபலின் பங்களிப்பு முன்பள்ளிக் கல்வியைப் பொறுத்து சிறந்த வரப்பிரசாதமே என்பதில் ஐயமில்லை.

**றடொல்ப் ஸ்ரெயினர்**

றடொல்ப் ஸ்ரெயினர் ஸ்ரட்காட் என்னும் இடத்தில் சிகரட் தொழிற்சாலைத் தொழிலாளர்களினது குழந்தைகளுக்காக முதலாவது வால்டோர்ப் பாடசாலையை நிறுவினார். ஸ்ரெயினர் அவுஸ்திரிய நாட்டுத் தத்துவ ஞானியும் பரஞானியுமாவார். அவரது பாடசாலை, சகல வயதுக் குழந்தைகளுக்குமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றோ சகல நாடுகளிலும் ஸ்ரெயினர் பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. ஸ்ரெயினர் 'முழுமையான குழந்தை' என்பதையே முதன்மைப்படுத்தி யிருந்தார். அத்தோடு பிள்ளை விருத்தி பற்றிய குறித்த ஒரு நோக்கை அடிப்படையாகக் கொண்டே அவரது கோட்பாடுகள் அமைந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் தனித்துவத்தை விருத்தி செய்வதானால் அவர்களது இயல்புகளை நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும் என்பது ஸ்ரெயினரின் தத்துவ அடிப்படையாகும். குழந்தைகள் நெகிழ்ச்சியும் படைப்பாற்றலுமுள்ள முதியவர்களாக வளர்ச்சியடைவதானால் அவர்களுக்கு, கலைகள் அறிவியல்கள் சார்ந்த சமநிலைப்பட்ட அனுபவங்களையும், சிந்தனை, உணர்வு, விருப்பு ஆகியவற்றை விருத்தி செய்யக்கூடிய சந்தர்ப்பங்களையும் வழங்கக்கூடிய கலைத்திட்டம் வழங்கப்படவேண்டும். இவர்களுக்குப் பாடசாலைச் சூழலை வீட்டுச் சூழலாக உருவாக்கக்கூடிய ஒருவரே சிறந்த பாலர் பாடசாலையாசிரியராக இருக்கமுடியும் என்பது ஸ்ரெயினரின் கருத்தாகும்.

ஸ்ரெயினர், குழந்தைகளின் கற்பனையையும் விளையாட்டையும் ஊக்குவிக்கக் கூடிய சுயமான செயற்பாடுகளையும், பல்வகையான பொம்மைகளைப் பயன்படுத்தலையும் வலியுறுத்துகிறார். ஸ்ரெயினரின் பாலர் பள்ளிகளில் தைப்பதற்கும் வரைவதற்கும், மரவேலையில் ஈடுபடுதற்கும் குழந்தைகள் ஊக்குவிக்கப் படுகின்றனர். இங்கு விலங்குகளின் ஓடுகள், சிப்பிகள், மரத்துண்டுகள் போன்ற இயற்கைப் பொருட்கள் காணப்படும். அவற்றைக் கையாண்டு குழந்தைகள் இயல்பாகவே செயற்படுவார்கள்.

பாலர் பள்ளியின் மரவேலைப் பகுதியில் பொம்மைகளைத் தாமே செய்வதற்கு வேண்டிய சிறிய, ஆனால் உண்மையான கருவிகள் குழந்தைகளுக்குக் கிடைக்கும். அவற்றின் உதவியோடு குழந்தைகளால் உருவாக்கப்பட்ட பொம்மைகள் கற்பனை விளையாட்டுக்களில் ஈடுபட உதவுகின்றன. ஏராளமான இயற்கை விளையாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை அங்கு காணலாம். உதாரணமாக மரங்களையும் மரக்குற்றிகளையும் குறிப்பிடலாம். இவை குழந்தைகள் ஏறி விளையாட ஊக்குதலளிக்கின்றன. இவற்றோடு மட்டும் நில்லாமல், வர்த்தக நோக்கிலான உபகரணங்கள் மிகக் குறைந்த அளவில் கொண்ட வெளியரங்கும் அங்குள்ளது. இவையெல்லாம் குழந்தைகளின் விளையாட்டை ஊக்குவிக்கின்றன.

வர்த்தக நோக்கில் உருவாக்கப்பட்ட பொருட்கள் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டிருப்பது குழந்தைகள் தமது விளையாட்டில் உயர் படைப்பாற்றலுடனும், கற்பனைத் திறனுடனும் செயற்படவேண்டும் என்பதற்காகவேயாகும். கங்கேரியிலுள்ள ஒரு ஸ்ரெயினர் பாலர் பள்ளியில் அண்மையில் இத்தத்துவத்தை நேரடியாகவே நடைமுறையிற் காணமுடிந்தது. இங்கு இயற்கையில் காணக்கூடிய சில ஆதாரப் பொருட்களைப் பயன்படுத்தி மூன்று வயதிற்கும் ஆறு வயதிற்குமிடைப்பட்ட குழந்தைகள் கற்பனை விளையாட்டில் உயர்மட்ட ஈடுபாட்டைக் காட்டினர்.

நிறங்களை உயிருள்ளனவாகவும், உயிர்ப்புள்ள நிலைப்பாடுகளாகவும் குழந்தைகள் கருத வேண்டுமென ஸ்ரெயினர் நம்பினார். அக்காரணத்தால், நிறங்களைப் பல்வேறு முறைகளில் பயன்படுத்துவதற்கு குழந்தைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆனால் குழந்தைகள் கட்டாயமாக நிறந்தீட்டும் பணிகளில் ஈடுபடவேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஸ்ரெயினரின் பாலர் பள்ளிகளில் பாடல்களும், பாடல் விளையாட்டுகளும் மிக முக்கியமாகக் காணப்படுகின்றன. இசை, பேச்சு ஆகியவற்றுடன் சேர்ந்த தாளலய அசைவுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையொன்று ஸ்ரெயினரால் உருவாக்கப்பட்டுள்ளது. பாடல்களும், பாடல் விளையாட்டுகளும் அதன்பாற்பட்டன என்பதை நாம் அறியலாம். ஸ்ரெயினரின் கலைத்திட்டத்தில் கதை சொல்லுதல் ஒரு முக்கியமான செயற்பாடாகும். இதன் காரணம் கதைவாசிப்பில் குழந்தைகளுக்கும் கதை கூறுபவருக்குமிடையே வாசிக்கப்படும் நூல் வந்துவிடுமென ஸ்ரெயினர் கருதுவதேயாகும். கதை நூல்கள் படங்கள் இல்லாதனவாயின் குழந்தைகளால் நிலைமைகளைத் திறம்பட முழுமையாகக் கற்பனை செய்து கொள்ளமுடியும். நூலில் படங்கள் இருக்குமானால் குழந்தைகளின் உளவிருப்பங்களை அவை அழித்துவிடுமென ஸ்ரெயினர் கருதுகிறார். ஸ்ரெயினரின் பாலர் பள்ளிகளில் வாசிப்பதற்கோ, எழுதுவதற்கோ நிர்ப்பந்திக்கும் எம்முயற்சியும் மேற்கொள்ளப்படுவதுமில்லை; குழந்தைகளுக்குக் கற்பித்தற் பொருட்கள் வழங்கப்படுவதுமில்லை.

இன்று பெற்றோர், ஸ்ரெயினர் பாலர் பள்ளிகளைப் பொறுத்து அதிக அக்கறை காட்டுகின்றனர். இதற்கான காரணம், குழந்தைகள் மீது சுமத்தப்படும் கல்விசார் அழுத்தங்களையிட்டு அவர்கள் கவலை கொள்வதேயாகும்.

**மரியா மொன்ரிசோரி**

மொன்ரிசோரி அம்மையார் உளரீதியாகவும் சமூக ரீதியாகவும் குறைபாடுள்ள குழந்தைகளுக்குப் பணிபுரிந்தவர்ாவார். இவரது பணிகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பித்தன. இவரின் குழந்தைக் கல்வி பற்றிய கருத்துகள் பிரித்தானியாவிலும் பார்க்க ஐக்கிய அமெரிக்காவிலேயே பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று இவரின் குழந்தைக்கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான நாட்டங்கள் மேலும் புத்துயிர்ப்புப் பெறுவதைக் காணமுடிகிறது.

மொன்ரிசோரியும் அவருக்கு முன்னிருந்த புரோபல், பெஸ்ரலோஜி ஆகியோரின் அடிச்சுவட்டில், உயிரியல் ரீதியில் தவிர்க்கமுடியாத விரிவடைதலே விருத்தியென்பதை உணர்ந்து கொண்டார். இவர் தமது பாலர் பள்ளிகளுக்கு வழங்கிய பெயர் 'குழந்தைகள் இல்லம்' என்பதாகும். குழந்தைகள் இல்லத்தில் இவர் அவதானிப்புகளை மேற்கொண்டார். அவற்றின் பயனாக குறித்த சில திறன்களும் எண்ணக் கருக்களும் இலகுவாகக் கற்றுக்கொள்ளப் படுகின்றன. ஆயினும் குழந்தைகளின் விருத்தி, ஒவ்வொருவரினதும் உணர்திறன் பருவங்களினூடாக முன்னேறுகிறது என்ற முடிவுக்கு வந்தார். அந்தப் படிநிலைகள் 0-6, 6-12, 12-18 எனும் காலப்பகுதிகளைக் கொண்டிருந்தன.

குழந்தைகள் சுயசெயற்பாடுகள் மூலமாகக் கற்றுக் கொள்கின்றனர். ஆகவே ஏற்பாடு செய்யப்பட்ட சூழல் ஒன்று ஏனையவற்றைவிட முக்கியமானது என நம்பினார். வயது கூடிய குழந்தைகளைப் போன்று, ஆறு வயதுக்குக் குறைந்த குழந்தையினால் நியாயிக்கவோ, மொழியைப் பயன்படுத்தவோ முடியாமலிருப்பதால், முதியவர்கள் இளம் குழந்தைகளால் விளங்கிக் கொள்ளமுடியாத மொழியைப் பயன்படுத்தக் கூடாது. இதை முதியவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமென மொன்ரிசோரி வலியுறுத்தினார்.

தனியாள் வேறுபாடு ஒவ்வொரு குழந்தைக்குமுள்ளது. அதே நேரம் குழந்தை சமூகத்தாலும் சூழலாலும் வலுவான தாக்கத்திற்குள்ளாக்கப்படுகிறது. இவ்வாறான குழந்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் இல்லத்தின் அமைதியான சூழலில் தனது செயலாற்றலை விருத்தி செய்யக்கூடிய வாய்ப்பையடைகிறது என மொன்ரிசோரி கருதினார். ஒழுங்கு பற்றிய உள்ளார்ந்த விருப்பம் குழந்தைகளிடம் காணப்படுவதால் பொருட்களையும், உபகரணங்களையும் எடுப்பதிலும் அவற்றை ஒழுங்காக மீளவைப்பதிலும் ஒவ்வொரு குழந்தையும் பொறுப்பாக நடந்துகொள்ளும் எனவும் அவர் எதிர்பார்த்தார்.

ஒவ்வொரு குழந்தையும் சரியாக மேற்கொள்ள வேண்டிய ஒரு செயலொழுங்குத் தொடரிலேயே மொன்ரிசோரி முறை தங்கியுள்ளது. குறித்த சில பொருட்களை எடுத்து, குறித்த ஒரு பாணியில் அவர்களுக்கு வழங்கிய பின்னர், அவர்களின் செயற்பாடுகளில் தலையிடாது அப்பொருட்களுடன் அவர்களைத் தனியே விடவேண்டும் என மொன்ரிசோரி தமது 'உள்ளீர்க்கும் உள்ளம்' (1984) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒழுங்குக்கமைய, குழந்தையின் விருத்திப்படிநிலைக்குப் பொருத்தமான, பலதரப்பட்ட பொருட்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சூழலை ஆராய்ந்தறிவதற்கும், இடைவினையாற்றுதலுக்கும் குழந்தைக்குச் சுதந்திரமுண்டு. ஆனால் இது தாம் விரும்பியவாறே செயற்படுவதற்கு அனுமதிப்பதாக அமையாது. சமூகத்தில் வாழவிரும்பும் எவரும் பூரணமான முழுச் சுதந்திரமுடையவராக இருக்க முடியாது என்பதையும் மொன்ரிசோரி வலியுறுத்துகின்றார்.

சுற்றுச்சூழலை ஒழுங்கமைத்து குழந்தைக்கும் பொருட்களுக்குமிடையே ஓர் இணைப்பையேற்படுத்துதலே மொன்ரிசோரிப்பள்ளி இயக்குநரின் வகிபங்காகும். பொருத்தமான தருணங்களில் உதவக்கூடியவகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநரின் உன்னிப்பான அவதானத்துக்கூடாகவே இது அடையப்படும். ஆனால் முழுமையான அணுகுமுறையானது குழந்தைகளின் சுதந்திரத்தை வலியுறுத்துவதேயாகும். இயக்குநர் திறமை கூடியவராக இல்லாவிட்டாலுங்கூட ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுச் சூழலைப் பயன்படுத்துவது மூலம் குழந்தைகளால் கற்றுக்கொள்ள முடியும் என மொன்ரிசோரி நம்புகிறார். இதற்கான காரணம், முறையைவிட ஆசிரியரின் திறமை, குறைந்த முக்கியத்துவம் பெறுவதேயாகும்.

இன்றைய நிலையில் பலருக்கு இது அந்நியமானதாகக் காணப்படலாம். ஆனால் இளம் வயதுக் குழந்தைகளின் ஆசிரியர்கள் பயிற்றப்படாதவர்களாகவிருந்த (குறிப்பாக) இத்தாலியச் சூழ்நிலையில் (இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்) இதுவே மிக முக்கிய பிரச்சினையாகவிருந்தது. அதிக விமர்சனத்துக்குள்ளான மொன்ரிசோரியின் மற்றொரு கருத்தானது, குறிப்பாக கற்பனை விளையாட்டு குறித்த அவரின் மனப்பாங்காகும்.

விளையாட்டு என்பது குழந்தையின் பணியென வலியுறுத்திய மொன்ரிசோரி, 'முதியோரின் இடைவினை வடிவங்களுக்கான ஒரு தொடக்கச் செயற்பாட்டைக் கொண்ட விளையாட்டு மட்டுமே பொருத்தமானதாகும்' எனக்கருதினார். தழுவல் சார்ந்த கற்றல் முறையிலிருந்து குழந்தைகளை அப்புறப்படுத்துவதால் பயன்குன்றியது என்ற காரணத்தினால் கற்பனை விளையாட்டு என்னும் எண்ணக்கரு ஏற்கக் கூடியதல்ல என்பது கவனிக்கத்தக்கது.

பல வருடங்களின் பின் கொரைன் ஹட் என்பவர் இக்கருத்தை ஏற்றுக்கொண்டார் என்பது சுவாரஸ்யமானதாகும். கோமாளித்தனமான விளையாட்டுச் செயற்பாடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பமாகவே கற்றல் நிகழ்கிறது, அல்லது கற்றல் நிகழ்வதேயில்லை. ஆனால் தேடியாராயும் விளையாட்டுகளில் தழுவுதலும் கற்றலும் நிகழ்கின்றன எனவும் அவர் வலியுறுத்தினார். சூனியக்காரிகளையும் அரக்கர்களையும் அல்லது பேசும் மிருகங்களையும் கொண்ட கதைகளைப் பொறுத்துக் குழந்தைகளுக்கு யதார்த்தத்தைப் பற்றிய ஒரு போலி மனப்படம் வழங்கப்படுகின்ற காரணத்தால் மொன்ரிசோரியும் அவரைப் பின்பற்றியோரும், புனைவாற்றல் விளையாட்டானது நிச்சயமாக நேர்மையற்றதெனக் கருதினர். இந்த அணுகுமுறை, பல பிரித்தானிய முன்பள்ளிக் கல்வியாளர்களால் மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தற்காலக் கல்வியியலாளர் சிலரால் திட்டமிட்ட சுற்றுச் சூழலின் அவசியம் ஒப்பப்படாமலிருக்கலாம். உடனே கிளர்ந்தெழும் சமயாசமயக் கற்றலுக்கு இதில் இடமில்லை; குழந்தை வெளியிலிருந்து பள்ளிக்குக் கொண்டுவரும் அனுபவங்கள் மீது கட்டியெழுப்பும் வாய்ப்புகள் ஆசிரியருக்கு வழங்கப்படவில்லை என்ற குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டு, ஓர் ஒழுங்குத் தொடராக அமைந்த படிநிலைகளைக் கொண்ட மொன்ரிசோரி முறையின் இறுக்கத் தன்மை விமர்சிக்கப்பட்டது.

மொன்ரிசோரியின் முறை மொழி விருத்தியையோ, குறியீட்டுச் சிந்தனையையோ மிகச் சிறிதளவே ஊக்குவிக்கிறது. அதுமட்டுமின்றி, குழந்தையின் விருத்தி எவ்வழியிலேனும் விலகிச் செல்லக்கூடிய வாய்ப்புமுள்ளது. இதைக் கணக்கிலெடுக்க மொன்ரிசோரி முறை தவறிவிட்டது. எனவே இம்முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனத் தற்காலக் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றிசோரி முறை கற்றல் இடர்ப்பாடுகளைக் கொண்ட குழந்தைகளுக்காகவே முதலில் வடிவமைக்கப்பட்டது என்பதை ஒருவர் கருத்திலெடுப்பாராயின் இவ்விமர்சனம் அவருக்கு வினோதமாகத் தோன்றும்.

இவ்வாறான விமர்சனங்களிருந்தாலும் இளங்குழந்தைகள் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையான முன்பிள்ளைப் பருவக்கல்விக்கு பல பங்களிப்புகளை மரியா மொன்றிசோரி வழங்கியுள்ளார் என்பதை எவருமே மறுக்கமுடியாது.

இன்றைய நடைமுறையில் இயல்பாக அமைந்துவிட்ட குழந்தைகளுக்குகந்த தளபாடங்கள் எமது பாலர் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்தவர் மரியா மொன்றிசோரி அவர்களே. இதைப்போல இளங்குழந்தைகளுக்குகந்த பெரும்பாலான கணித உபகரணங்களும், புலனுணர்வுச் சாதனங்களும் மொன்றிசோரி கோட்பாடுகளிலிருந்து உதித்தவையே. இவையாவற்றுக்கும் மேலாக இளங்குழந்தைகளைத் தனியாட்களாக மதிக்கும் நிலைமையை முன்பள்ளிக் கல்வியில் கொண்டு வந்தவர் மரியா மொன்றிசோரியே.

உலகம் முழுக்க இளங்குழந்தைகள் பெரிய குழுக்களாகக் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், சுதந்திரமாக சுயசிந்தனையாளர்களாக உருவாக்குமாறு அவர்களை இட்டுச் செல்லக்கூடிய கற்றல் முறைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியவரும் மரியா மொன்றிசோரியே. குழந்தைகள் சுறுசுறுப்பானவர்கள், உள்ளார்ந்த ஊக்கல்களைக் கொண்டவர்கள், அவர்கள் தகவல்களைத் திணிக்கவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்பற்ற கற்போர் அல்லர். இவ்வாறான மனப்பாங்கை மொன்ரிசோரி கொண்டிருந்தார்.

தமது சிந்தனைக்கு மொன்ரிசோரி வழங்கிய பங்களிப்பை வியந்து வரவேற்ற கல்விச்சிந்தனையாளர் தலைமுறைகளால் ஒவ்வொரு குழந்தையும் தன்னாட்சி யுடையதாகத் தொழிற்படக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்ட சூழலானது ஒரு சில உருமாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்று முன்பிள்ளைக்கல்வியில் நடைமுறைப்படுத்தப்படும் அனேகச் செயற்பாடுகளில் மொன்ரிசோரியின் செல்வாக்கு வியாபித்துள்ளது.

1990களில் அவரின் முறை பொருத்தமற்ற ஒன்றாகப் பலராலும் நோக்கப்பட்டாலும், முற்போக்குச் சிந்தனையுள்ள இந்த வைத்தியருக்கு கல்வியுலகு பெரிதும் கடமைப் பட்டுள்ளது. அவரது ஆதரவாளர்களிற் பலர், அவரின் தத்துவத்திற்குச் சவால்விடாத போதிலும், நவீன கல்விச் சிந்தனையடிப்படையில் சில கற்பித்தல் அணுகுமுறைகளை மீளக்கருத்தில் எடுக்கின்றனர். இதன் காரணம், எவ்வளவு பயனுடைய சிறந்த முறையென்றாலும் இன்றைய சமூகத்தின் தேவைகளை நிறைவாக்கக் கூடியவாறு அதில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை ஆதரிப்பதேயாகும்.

**மார்க்கரட் மக்மிலன்**

'அற்புதங்களைப் படைத்த தொந்தரவாளர்' என ஜே.பி. பிறீஸ்ட்லியால் குறிப்பிடப்பட்ட பெண்மணி யார் தெரியுமா? அவர்தான் மார்க்கரட் மக்மிலன். அவரது சமகால கல்விசார் புத்தாக்க நடைமுறையாளர்களுள் தலைசிறந்தவராக அவர் விளங்கினார். குழந்தைப் பள்ளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதகரான பி. பலாட் என்பவர், "இன்றைய பாலர் பள்ளிகள் மக்மிலனது மேதாவிலாசத்தின் உருவாக்கமே" என 1993 இல் குறிப்பிட்டிருந்தார். மக்மிலனின் கருத்துகளையும் கல்விப் பணிகளையும் ஆராய்ந்தால் இக்கூற்றுகளின் உண்மையை நாம் உணரமுடியும். மக்மிலன் நிலைநிறுத்த முனைந்த கருத்துகள் 1960களின் பிற்பகுதிகளுக்கும் பொருந்தக் கூடியனவன்றி, அவற்றின் பெரும் பகுதி இன்றும் கூடப் பொருந்தக் கூடியதாகவுள்ளது.

மார்க்கரட் மக்மிலனும் அவரது சகோதரி றாச்செல்லும் ஏழைக் குழந்தைகளினதும் அவர்களின் குடும்பங்களினதும் சுகாதாரம், வீட்டு நிலைமைகள் என்பனபற்றி அக்கறை கொண்டமைக்குக் காரணம் அந்தக் குழந்தைகள், குடும்பங்களின் மத்தியில் வாழ்ந்தமையாகும்.

தேசிய சுகாதார சேவை அன்று இருக்கவில்லை. அந்த நிலையில் தொழிலாளியின் உடல் நலக்கேடும் வறுமையும் தவிர்க்கமுடியாத இயல்பாகவே கருதப்பட்டது. இந்த நிலைமையிலேதான் 'உடல் நலமென்பது தொழிலாளியின் முதலீடு' என வாதிட்ட மக்மிலன் வைத்திய சேவை நிலையங்களைத் தொடங்கினார். முதலில் பிராட்போட் என்ற இடத்திலும், பின்னர் டெட்போட் என்ற இடத்திலும் உடல் நல மேம்பாட்டினை ஏற்படுத்த முயன்றார்.

ஒரே அறையில் பல பிள்ளைகளுடன் நெருக்கடியைச் சமாளித்து வாழ்கின்ற அல்லது தொழிலாற்றுகின்ற தாயைக் கொண்டுள்ள தொழிலாளர் வர்க்கப் பிள்ளைகளின் அனுபவங்களுக்கும் நடுத்தர வர்க்கப் பிள்ளைகளின் அனுபவங்களுக்கு மிடையேயுள்ள இடைவெளியை முன்னாள் ஆளுநர் என்ற வகையில் முழுமையாக உணர்ந்துகொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்மிலன், வீட்டின் கல்விசார் பெறுமானத்தை முதலில் கணிப்பிட்டவராவார். குழந்தைப் பராமரிப்பு நிலையங்களின் பெறுமதிபற்றிச் சிந்திக்க அவரைத் தூண்டியது. குழந்தைகளை வளர்த்தெடுக்கும் சமூகம், குடும்ப வாழ்க்கை என்பனவற்றில் அவருக்கு இருந்த ஆழ்ந்த கரிசனையே எனலாம். சமூகத்தின் கல்வி மேம்பாட்டை முழுக்குறிக்கோளாகக் கொண்ட 'பேபியன்' என்ற சமதர்ம அமைப்பின் பயிற்சியை, மக்மிலன் பெற்றிருந்ததன் விளைவே, தனது அயல் மீது அவர் கொண்டிருந்த அக்கறை எனச் சில நூலாசிரியர்கள் கருதுகின்றனர்.

மக்மிலனின் நோக்கின்படி வீடும் சமூகமும் இளங்குழந்தைகளின் கல்விக்குப் பங்களிப்புச் செய்பவை. பிள்ளை விருத்தியில் வாழ்வின் முதற்சில வருடங்கள் அதிமுக்கியமானவை.

பிள்ளையின் முன்னேற்றத்திற்கு அன்பும் பாதுகாப்பும் மிக அவசியமானவை என்பன முதலான அவரது வலுவான கருத்துகள் தெளிவான நடையில் அவரது 'சிறுவர் பள்ளி' (1919) என்ற நூலில் காணப்படுகின்றன.

குழந்தைகள் கல்வியில் முன்னேறுவதானால் பெற்றோர் அதில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்பதனை நேர காலத்தோடே உணர்ந்திருந்த மக்மிலன், பாலர் பள்ளிகளால் மட்டுமே சமூகக் கேடுகளை வெற்றி கொள்ளமுடியாது எனவும், பெற்றோர் தமது செயலாற்றலையும் பிள்ளை வளர்ப்பு முறைகளையும் மேம்படுத்த அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் கருதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்மிலன், இந்த நூற்றாண்டின் முன் தசாப்தங்களிலேயே, வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையே நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டித் தம்து உதவியாளர்களுக்கும் பயிலுநர் ஆசிரியருக்கும் வலியுறுத்தியுள்ளார். இக்கருத்தை அரசாங்க அறிக்கைகள் இன்றுதான் வலியுறுத்துகின்றன. வீட்டுக்கும் பாடசாலைக்கு மிடையேயான தொடர்பு நாடளாவியரீதியில் பல தசாப்தங்களாகப் பேணப்பட்டு வந்தமைக்கான உந்து சக்தி மக்மிலனின் சிந்தனைகளாகும்.

இக்கருத்துகள் புதிய பிரமாணங்களாக வந்தபோது மக்மிலனின் சிந்தனையின் செல்வாக்கின் கீழ் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மக்மிலனின் தூர நோக்கையிட்டு ஆச்சரியப்பட்டதில் விந்தையில்லை. ‘பாலர் பள்ளியானது குழந்தையின் வீட்டுக்கு மாற்றீடல்ல. அது வீட்டின் தொடர்ச்சியாகும்’ என்ற எண்ணக்கரு மக்மிலனாலும், அவரைப் பின்தொடர்ந்தோர்களாலும் நீண்ட காலத்துக்கு முன்பே ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாகும்.

இதைப் போல பெற்றோர் மனிதராக மேம்படுவதற்கு உதவுதல் சார்பான அவரின் கருத்துகளும் இன்று பாலர் பள்ளிகளிலும், நிலையங்களிலும் நடைமுறைச் செயற்பாடாக மாற்றப்பட்டுள்ளன என்பதை அறிகிறோம்.

பொழுதுபோக்குச் செயற்பாடுகள், மொழி வகுப்புகள், பிள்ளை வளர்ப்புச் செயற்பாடுகள் போன்றனவற்றில் இன்று பெற்றோர் ஈடுபடுகின்றனர். ஆரம்பகாலக் கல்வியியலாளரான மக்மிலனின் கருத்துகளுக்கும் 1960களில் ‘ஹெட் ஸ்டார்ட்’ திட்டமிடலாளர்களின் கருத்துகளுக்குமிடையே ஒற்றுமை யிருப்பதை மக்மிலனின் எழுத்தாக்கங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்போமானால் கண்டு கொள்ளமுடியும். வெறும் பொருட்சூழலின் விளைவுகளை விஷேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட முன் பள்ளிக் கல்வியால் சமப்படுத்த முடியும் என்பது மக்மிலனின் நம்பிக்கையாகும்.

கல்வியடையவும் வாழ்வின் சிறந்த தொடக்கமும் பாலர் பள்ளியுடன் இணைந்துள்ளதென்பதை இவர் உணர்ந்திருந்தார். அவற்றைத் தம் குழந்தைகள் பெறவேண்டுமென அவாவுகின்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கெல்லாம் இவ்வளர்ப்பு முறை அவசியம் என்பதற்காக இவர் குரல் கொடுத்தார்.

பாலர் பள்ளி தொடர்பாகப் பெரும்பாலான ஆரம்பகாலத் திட்டங்கள் தோல்வியைத் தழுவின. இதன் காரணம் வெற்றிகரமான விளைவுகளைத் தரக்கூடியதாய் நிருவாகிகள் குழந்தைகளின் கல்வியில் பெற்றோரை ஈடுபடுத்தாமையெனலாம். இவ்விடயத்தில் மார்க்கரட் மக்மிலன் முந்திக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பிள்ளைக் கல்வியில் ஈடுபட்ட சமகாலக் கல்வியாளர்களினின்றும் மார்க்கரட் மக்மிலனை வேறுபட்டவராகக் காட்டும் அம்சங்கள், வீடு - பள்ளித் தொடர்புகள் குறித்த அவரின் நோக்குகளும், வகுப்பு ஒழுங்கமைப்பு குறித்த அவரின் அணுகுமுறையுமாகும். வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், மேம்பட்ட சுகாதார கவனிப்பு என்பன மக்மிலனின் ஆலோசனைகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்ட திறந்த - காற்றோட்டப் பள்ளிகளுக்கான தேவையை இல்லாமல் செய்துவிட்டன. ஆயினும் வீட்டுச் சூழல், வீட்டுக்கு வெளியேயுள்ள சூழல் என்பவற்றிற்கிடையே குழந்தைகள் சுதந்திரமாக ஓடித் திரிவது ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான வெளிக்காற்று முன்பள்ளிக் கல்வியின் ஒரு முக்கிய தேவை என்பதும் உணரப்பட்டது.

மார்க்கரட் மக்மிலன் குழந்தைவிருத்தியைப் பேணி வளர்க்கும் தேவையையும் முழுமையான முன்னேற்ற வேகத்துக்கேற்றவாறு ஒருவரின் முறையைத் தழுவுதலையும் வரவேற்றார். குழந்தை கற்றலில் இறங்கும் வரை காத்திராது, முன்பள்ளிக் கலைத்திட்டத்தினைப் பரீட்சிப்பதிலும், அதிகமாக குழந்தைகளின் செயற்பாட்டை எதிர்பார்ப்பதிலும் ஆசிரியர்களை அவர் ஊக்குவித்தார்.

ஆசிரியர்களின் நடிபங்கு கற்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை இனங்காணலும் பொருத்தமான தருணத்தில் தலையிடலுமாகும். இரு அம்சங்களில் மொன்ரிசோரியின் கருத்துக்கு மக்மிலன் முழுமையான எதிர்க்கருத்துடையவராக இருந்தார். அவை: ‘குழந்தைகளின் கற்பனையையும் மொழியையும் கதை, லயம் என்பவற்றினூடாக விருத்தி செய்தல்; வசதி கிட்டும் போதெல்லாம் கற்பனை விளையாட்டை ஊக்குவித்தல்’ என்பன. ஏனைய விடயங்களில் மொன்ரிசோரியும் மக்மிலனும் ஒத்த கருத்தையே கொண்டிருந்தனர்.

இவ்விரு குழந்தைக் கல்வியியலாளரும் கற்றலை ஊக்குவிப்பதாயும், உபகரணங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரத்தைப் பாலர்களுக்கு வழங்குவதாயுமுள்ள சூழலைப் பொறுத்து பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். பொறுப்புணர்ச்சியோடு தெரிவுகளைச் செய்வதற்கும் ஊக்கமோடு கற்பதற்கும் தமக்கு எவற்றில் நாட்டமுண்டு, எவற்றில் இல்லை என்பதைத் தாமே அறிந்து கொள்வதற்கும் இவ்வாய்ப்பு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையான சூழலை உண்மையாகத் தயார்படுத்துதலிலேயே இவ்விரு குழந்தைக் கல்வியியலாளரும் வேறுபடுகின்றனர். மொன்ரிசோரியின் புலன் பயிற்சிச் சாதனங்கள் ஒரு குறித்த முறையில் குழந்தைகளால் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டே வழங்கப்பட்டன. அதேவேளை தோட்டத்தில் விளையாடுவதனூடாகவே பிள்ளை சிறந்த புலன் அனுபவத்தைப் பெறமுடியும் என மார்க்கரட் மக்மிலன் நம்பினார்.

தனது ஆசிரியர்களிடமும் அதனையே அவர் எதிர்பார்த்தார். மக்மிலன் சிறந்த கற்பனைத்திறனும் புதியன கண்டறியும் ஆற்றலும் கொண்டு திகழ்ந்தார். குழந்தைகள் அவர்களது பயிற்சியில் சூழலைப் பயனுடையதாகப் பயன்படுத்துவதற்குக் கற்றுக் கொள்வதையும், குழந்தையின் முழுமையான விருத்தியில் மொழியின் முக்கியத்துவத்தை முழுமையாக அறிந்துகொள்வதையும் தான் வழங்கும் பயிற்சியில் உறுதிப்படுத்திக் கொண்டார். இதன்படி இளங்குழந்தைகளின் கல்வியில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமாகிறது.

மொன்ரிசோரி முறையின்படி முக்கியமானது கற்பித்தல் முறையேயன்றி இயக்குநர் அன்று. குழந்தைகள் உடல் நலம் குன்றியிருப்பின் அவர்களால் கற்கமுடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்த மார்க்கரட் மக்மிலனின் அனைத்து முயற்சிகளும் அவர்களது உடல்நலத்தினை மேம்படுத்துதலைச் சார்ந்திருந்தன. இவ்வாறு அவர் வளர்ப்பு முறையை அவர் வலியுறுத்தியமையை அறிகை - அறிவாற்றல் விருத்தியை விட்டுக் கொடுத்து, உடல் விருத்தியையே ஏற்படுத்துவதில் மக்மிலன் நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார் எனப் பொருள் கொண்டு பின்நாளில் அவரைப் பின்பற்றியோர் விளக்கமளித்தனர்.

அத்தோடு எவ்விதத் தலையீடுமின்றி பிள்ளைகள் தம்பாட்டில் சுதந்திரமாக விளையாட விட்டுள்ளார் எனவும் கருதிக் கொண்டனர். மக்மிலனின் எழுத்தாக்கங்களும் (பாலர் பள்ளி (1919); கற்பனைக்கூடாகக் கல்வி (1902) அவரது ஏராளமான கட்டுரைகளும், குழந்தைகளை நல்ல உடல் நலமுள்ளவர்களாக்கி அவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட உற்சாகமளிக்கும் செழிப்பான சூழலுக்கும் போதனைத் திட்டத்திற்கும் துலங்கச் செய்யலாம் எனும் கருத்தைத் தெரிவானதாக்குகின்றன.

மார்க்கரட் மக்மிலனும் புரோபலைப் போன்று விளையாட்டைக் கல்விக்கான ஒரு ஊர்தியாகக் காண்கிறார். பாலர் பள்ளிக் கலைத்திட்ட நோக்கமானது, எல்லா ஆரம்பக் கற்பித்தலுக்கும் முன்னர், ஒழுங்கமைப்பான இயல்பான கல்வியை வழங்குவதாக இருக்க வேண்டுமென்பது அவரது கருத்தாகும். அது இல்லையேல் பள்ளிகளின் பணிகள் வியர்த்தமாகிவிடும்.

தோட்டத்தில் குழந்தைகள் விளையாடும் போது விஞ்ஞானம், புவியியல் என்பவற்றின் அடிப்படைகளையும், பேசுதல், பாடுதல் என்பவற்றிற்கூடாகப் படிப்பறிவு, இசை, நயப்பு என்பவற்றின் ஆரம்பங்களையும் கற்றுக் கொள்கின்றனர்.

மார்க்கரட் மக்மிலனாலும் அவரது ஆசிரியர்களாலும் பேணப்பட்ட பள்ளியை முடித்துக்கொண்ட குழந்தைகளின் பதிவேடுகள் உற்றுநோக்கற்பேறுகள் என்பன குழந்தைகள் ஏழு வயதுவரை பள்ளியில் இருக்கவேண்டும் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை இக்கல்வித் தூர நோக்காளர் வலியுறுத்துவதற்கு வழிகோலின எனலாம்.

பாலர் பள்ளி (Infant school)யை முடித்துக்கொண்டு குழந்தைப் பள்ளிக்குச் சென்ற பல பிள்ளைகளிடம் பின்னடைவைக் கண்ட இவர், பாலர் கலைத் திட்டத்தில் பிள்ளைகள் முன்னேறுதலும் அதனைத் தொடர்தலும் அவசியம் என வலியுறுத்துகிறார்.

இங்கே இங்கிலாந்தின் ஆரம்பக் கல்வி பற்றிய எச்.எம்.ஐ. அறிக்கை பிள்ளைகளின் அனுபவத் தொடர்ச்சி பற்றிய ஆய்வு (1982) கற்றலில் விரும்பத்தகு புலப்பாடுகள் எனும் எஸ்.சீ.ஏ.ஏ. ஆவணம் என்பவற்றில் உள்ள விதப்புரைகளை 1920களில் இவர் முன்வைத்த கருத்துகள் முந்திக்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

கலைத்திட்டம், கற்பித்தற் பயிற்சி என்பன பற்றிய இவரது கருத்துகள் பெரும்பாலும் தற்காலத் தத்துவங்களிற்குப் பொருந்துவதாகவுள்ளன. பாலர் பள்ளி ஆசிரியவாண்மைக் குழுவாகச் செயற்படும் ஆசிரியருக்கான பயிற்சி பற்றிய இவரது எண்ணக்கருவானது ‘டெட்போட்’டில் அமைந்துள்ள கல்லூரியின் செயற்பாட்டில் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்தோடு ஆசிரியர் கல்வியின் ஒரு கூறாகவும் அமைந்துள்ளது. இன்றைய நிலையில் இவரின் கருத்துகள் எல்லாமே பொருத்தமானவையெனக் கூறமுடியாது.

பாலர் பள்ளிகள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டும் மொத்தமாக 200-300 வரையிலான பிள்ளைகளைக் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென மக்மிலன் விரும்பினார். பிள்ளை விருத்தி பற்றிய தற்காலக் கருத்துகளைப் பொறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நோக்கு பொருத்தமானதல்ல. மேலும். குழந்தைப் பள்ளிகளுடன் இணைக்கப்பட்ட பாலர் வகுப்புகள் என்னும் தற்போதைய அபிப்பிராயத்திற்கு மாறாக, பாலர் பள்ளிகள் என்னும் கருத்தின் காவலராக இவர் திகழ்ந்தார்.

பாலர் கல்வியைத் தனியான பள்ளிகளில் தொடர்தல் என்னும் கருத்துக்கு வாதப் பிரதிவாதங்கள் இன்று காணப்படுகின்றபோதும், தனது சமகாலத்தில் நடைமுறையிலிருந்த குழந்தைப் பள்ளியானது, பாலர் பள்ளியின் நடைமுறைகளிலிருந்து பெருமளவில் வேறுபட்டது என்பது பற்றிய தனது முன்னோக்கினை அடிப்படையாகக் கொண்டே மார்க்கரட் மக்மிலன் மேற்கூறப்பட்ட கருத்தை முன் வைத்தார். 'அற்புதங்களைப் படைத்த தொந்தரவாளர்' என அழைக்கப்பட்ட இவர் இன்றைய முன்பிள்ளைப் பருவச் செயற்பாடுகளில் தனது முத்திரையைப் பதித்துள்ளார். அத்தோடு பெற்றோரின் ஈடுபாடு, ஆசிரியர் கல்வித் தொடர்ச்சியும், படிமுறை முன்னேற்றமும் என்பன அரை நூற்றாண்டுக்கு முன்னர் எவ்வாறு பொருத்தமானவையெனக் காணப்பட்டனவோ அவ்வாறே இன்றும் காணப்படுகின்றன.

**சுசான் ஐசாக்ஸ்**

சுசான் ஐசாக்ஸ் அறிவாற்றலைப் பொறுத்து முனைப்பான ஆற்றலுள்ள பெண்மணியாவார். இவரின் நூறாவது ஜயந்தி 1985இல் கொண்டாடப்பட்டது. இளங்குழந்தைகளின் சமூக விருத்தி, அறிவாற்றல் விருத்தி என்பன பற்றி நாம் தெளிவான விளக்கம் பெற, கேம்பிரிட்ஜ் மோல்றிங் கவுஸ் பள்ளி முன்னோடிப் பரிசோதனைகளில் குழந்தைகள் மீதான இவரது அவதானங்கள் பெரிதும் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராய்ட்டினதும், மெலானி கிளெய்னினதும் கருத்துகளின் செல்வாக்குக்குட்பட்ட சுசான் ஐசாக், இளங்குழந்தைகளின் உணர்வுகள் பற்றிச் சிறிதளவே விளங்கிக் கொள்ளப்பட்ட காலகட்டத்தில், குழந்தைகளின் செயல், மனவெழுச்சி வெளிப்பாடு என்பனவற்றைப் பொறுத்து சுதந்திரமானவர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளப்பெரிதும் முயன்றார். பகை, கோபம், பயம், வலிந்து சண்டைக்குப் போதல் போன்ற உணர்ச்சிகளை அடக்குதல், குழந்தைகளின் நனவிலி உள்ளத்திற்குத் தீங்கை ஏற்படுத்தக் கூடியதென அவர் நம்பிய காரணத்தால், அந்த உணர்ச்சிகள் வெளிப்பட 'மோல்றிங் கவுஸ்' குழந்தைகள் உற்சாகமூட்டப்பட்டனர்.

இளங்குழந்தைகளின் நடத்தைகளைப் பொறுத்து நுண்ணறிவுமிக்க அவரது கருத்துகள், பின்னர் 'இளங்குழந்தைகளின் சமூக விருத்தி' (1993) என்ற நூலில் இடம்பெற்றன. அவை மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையான குழந்தைகளால் அனுபவிக்கப்பட்ட அகமுரண்பாடுகள் பற்றிய பயங்கள் பற்றியும் விளக்கம்பெற உதவின.

ஆசிரியர் குழந்தைகளின் நடத்தைகளைத் திருத்தமாகப் பதிவு செய்து கொள்வதற்கு உற்சாகமளித்த சுசான் ஐசாக்ஸ், தான் ஓர் உளப் பகுப்பியலாளர் என்ற வகையில் சம்பவங்களுக்குக் கற்றுக்குட்டித்தனமான வியாக்கியானங்கள் அளிக்கப்படுவது பற்றி எச்சரித்தார். அத்தகைய செயல்களில் அடங்கியுள்ள அபாயங்கள் பற்றி அவர் விழிப்புடன் இருந்தார். சாதாரண நபர்கள் உற்று நோக்கலையும் பதிவையும் மேற்கொள்ளலாம். ஆனால் பயிற்சிபெற்ற பகுப்பாளர் மாத்திரமே வியாக்கியானமளிக்கவேண்டும்.

599089

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசான் ஐசாக்ஸ் அவர்களும் புரோபலைப் போலவே குழந்தைகளின் கற்றலில் விளையாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். அன்றைய காலகட்டத்தைப் போன்று இன்றைக்கும் முற்றிலும் பொருந்தக்கூடிய தகவல்களைக் கூறும் 'பாலர் பள்ளியின் கல்விப் பெறுமானம்' என்னும் சிறு பிரசுரத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"மற்றைய குழந்தைகளுடனான விளையாட்டு குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுப்பதோடு, தமது சிறிய நண்பர்களிடத்தும் சற்றும் குறையாத அளவு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அத்தோடு, மற்றையோர் மீதில் அதிகம் சந்தேகம் கொள்ளாதிருக்கவும், அவர்களுடன் வலிந்து சண்டைக்குப் போகாதிருக்கவும் உதவுகிறது.

அது மட்டுமின்றி, செயலிலும் பகிர்ந்து கொள்ளலிலும் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சியை வழங்கி, ஏனையோருடன் தனது சொந்த நடைமுறையும் கற்பனைத் திறனும் மிக்க முயற்சிகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும் உதவுகிறது. அத்தோடு பிற்காலப் பாடசாலைக் காலங்களில் கூட்டுறவான சமூக வாழ்வுக்கும் அடித்தளம் இடுகிறது."

"விளையாட்டு அறிவாற்றற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் குழந்தைகளுக்கு உதவுகிறது. அத்தோடு, உணர்வுகளும் சடுதியான செயல்களும் நிறைந்த தனது உலகில், செயற்றிறன் வாய்ந்த வெளிப்படுத்தலினூடாக, அகச்சமநிலை ஒத்திசைவு என்பன பெறவும் உதவுகிறது." இவ்வாறு சுசான் ஐசாக்ஸ் நம்பியதோடு எம்மை நம்பச் செய்யவும் கூடியவகையில் அவரிடத்து விளையாட்டு சிறப்பான அழுத்தம் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்குழந்தைகளின் கற்பனை விளையாட்டின் முக்கியத்துவம் பொறுத்த இவரது வலியுறுத்தல்களுக்கும், றடொல்ப் ஸ்ரெயினரின் தத்துவார்த்த அணுகுமுறைக்குமிடையே அதிகளவு ஒற்றுமையை நாம் காணலாம்.

குழந்தைகளின் சுதந்திரமான செயற்பாட்டை ஆதரித்த சுசான் ஐசாக்ஸ், இளங்குழந்தைகளுக்கு ஒழுங்கும் உறுதிப்பாடும் அவசியம் என்பதிலும் விழிப்புணர்வுடன் இருந்தார். 'மோல்ரிங் கவுஸ்' பள்ளியின் கலைத்திட்டம் தனியார் விருத்தியை வலியுறுத்தியது.

அதற்கேற்ப அங்கு மொன்ரிசோரி உபகரணமும் காணப்பட்டது. அத்தோடு வாசிப்புக்கும் எழுத்துக்கும் மொன்ரிசோரி முறை பயன்படுத்தப்பட்டது. ஆயினும் குழந்தையின் அறிவு விருத்திக்கான அணுகுமுறையில் தர்க்கரீதியாக நியாயிக்கும் முறையில் சிந்திக்கப் பயிற்றுவித்தலே கற்பித்தலின் மையநோக்கு என நம்பியது மூலம் டூயியின் சிந்தனைகளை சுசான் ஐசாக்ஸ் பிரதிபலித்தார்.

தெளிந்த சிந்தனை, சுதந்திரமான தீர்ப்பு தொடர்பாகச் சிறப்பான ஒரு தொடக்கத்தை வழங்கலே குழந்தையின் கல்விக்கான நோக்கங்களில் ஒன்றாகும் என 'இளங்குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சி' (1930) என்ற நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினை தீர்த்தலில் இளங்குழந்தைகளின் ஆற்றலை இனம் கண்டுகொண்ட இவர், குழந்தைகள் அகமையமாகக் காரணங்காண முடியாமலிருப்பர் என்ற பியாஷேயின் கருத்துப்பற்றி வினாவெழுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் ஊக்குவிக்கப்பட்டால், பயன்படுத்தும் மொழியை இரசிக்கத் தெரிந்துகொண்டால், குழந்தைகளுக்குச் சவாலாக அமையும். அவர்கள் விரும்பும் வினாக்களைத் தொடுக்கக்கூடிய முதியவர்களுடன் செயற்பட அமைந்துவிட்டால், சிக்கலான வினாக்களை விளங்கிக் கொள்ளவும் கருத்துகளைப் புலப்படுத்தவும் அவர்களால் முடியுமெனத் தற்கால உளவியலாளர்கள் ஏற்றுக்கொள்வது சுவாரஸ்யமானது.

'மோல்ரிங் கவுஸ்' பள்ளியில் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட பரந்த கலைத்திட்டப் பகுதிகள், விஞ்ஞானப் பரிசோதனைகளும், கருதுகோள்களைச் சோதித்தலுமாகும். இப்பள்ளி இருந்த காலத்தில் சுசான் ஐசாக்ஸ் பிள்ளைகள் பற்றி மிக விபரமான பதிவுகளை வைத்திருந்தார்.

இந்த உற்று நோக்கல் பதிவுகள், லண்டன் பல்கலைக்கழக கல்வித்துறை மாணவர்க்கும், பணியிடை நெறிகளை மேற்கொண்ட ஆசிரியர்களுக்கும் கற்பிப்பதற்கு அடிப்படையாயமைந்தன.

இளங்குழந்தை பிரச்சினை விடுவித்தலில் அறிவியல் சார் நாட்டத்தைக் கொண்டிருக்கிறது. விளையாட்டின்போது உண்மை நிகழ்வுகளைக் கொண்டு கருதுகோள்களைச் சோதிக்கக் கூடியதாகவிருக்கிறது. இவ்வாறான இளம் வயதில் குழந்தை ஒரு சிந்தனையாளனாக இருக்கமுடியும்.

இவற்றை நயக்கும் வகையில் போதனைமுறைக் கற்பித்தல் உபகரணங்களில் இன்னும் தங்கியிருக்கும் ஆசிரியர்களுக்கு இவர் உதவினார். எல்லாவற்றிற்கும் மேலாக முன்பிள்ளைப்பருவக் கல்விக்கான சுசான் ஐசாக்ஸின் பிரதான பங்களிப்பு, ஆசிரியர், பெற்றோர் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதரப்பாருக்குமான தெளிவான பிறரை ஏற்கவைக்கும் வலுவான எழுத்தாக்கங்களாகும்.

இந்த எழுத்தாக்கங்களை இவர் 'உர்சலா வைஸ்' என்னும் புனைபெயரில் வெளியிட்டார். இந்த எழுத்தாக்கங்களுக்கூடாக இளம் பிள்ளைகளின் மனவெழுச்சி உணர்வுகளின் வலுவை இவரால் விளங்க வைக்க முடிந்தது.

பாலர் பள்ளியை குழந்தை வாழும், வீட்டுச்சூழற் செயற்பாட்டின் ஒரு விரிவாக்கத் தொடர் நிகழ்வாக மார்க்கரட் மக்மிலனைப் போன்றே சுசான் ஐசாக்ஸும் கருதினாரேயன்றி வீட்டின் பிரதியீடாகக் கருதவில்லை. இவ்விரு ஆரம்பகாலக் கல்விச் சிந்தனையாளர்களும் பாலர் பள்ளியில் பெற்றோரின் ஈடுபாடு இருக்கவேண்டுமென எதிர்பார்த்தனர். 'டொறதி கார்டினர்' அவர்கள் சுசான் ஐசாக்ஸ் அவர்களின் பிரதம சீடராவார். அவரின் கூற்று பாலர் கல்வி பற்றிய இருவரினதும் கருத்தொற்றுமையைக் காட்டுகிறது.

'குழந்தைகள் பொதுவான பிரச்சினைகள், பயங்கள், பதகளிப்புகள் என்பவற்றைக் கொண்டுள்ளனர் என்பதைப் பள்ளியால் அறிந்துகொள்ள முடியும் என்பதால் பெற்றோரும் இளங்குழந்தைகளும் சந்திக்கும் ஒரு பொது இடத்தை வழங்குதலே பாலர் பள்ளியின் மிகப்பெரும் பயனைப் பெறும் சிறந்த வழியாகும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 2

# குழந்தைகளின் கற்றலும் பெற்றோரும்

கல்வியியலாளர் கொமனியஸ் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, 'அன்னையின் மடியில் பெறக்கூடிய கல்வி' பற்றி எழுதியிருந்தார். 'பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு ஆறு வயது வரை முறையாகக் கல்வியளிக்கவேண்டும்' என்று வற்புறுத்தினார். தாய்மார் தமது குழந்தைகளுக்கு, கதைகள், பாடல்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றும் கூறினர்.

பாலர் பாடசாலை நிலையில் குழந்தைகளின் கல்வியில் பெற்றோர்கள் - குறிப்பாகத் தாய்மார்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆயினும் இரண்டாம் உலகப்போருக்கு முன்பு, சுகாதாரம், உடல்நலம் போன்றனவே வலியுறுத்தப்பட்டன. பாலர் பாடசாலை சார்பான ஹடோ அறிக்கை, ஆசிரியர்கள் பெற்றோருடன், சுகாதாரம் உடல் நலம் பற்றிக் கலந்துரையாடுவதன் நன்மை பற்றித் திருப்தி தெரிவித்திருந்தது. அக்காலத்தில் பல குடும்பங்களில் இதுபற்றிய போதிய அறிவு இருக்கவில்லையென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் இதுபற்றிய தகவல்களைப் பெற்றோருக்குக் கொடுத்துதவ வேண்டுமென்றும் கருதப்பட்டது.

தொடக்க கால ஆரம்பப் பள்ளிகள் வறுமையான பெற்றோரின் பிள்ளைகளை, பெற்றோரின் ஒழுக்கக் குறைபாடுகளிலிருந்து மீட்கவே ஏற்படுத்தப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில், குறிப்பாக ஒழுக்க விழுமியங்கள், உடல்நல விழுமியங்கள் ஆகியவற்றைப் பெற்றோர்கள் ஏற்று நடக்க வேண்டுமென வேண்டப்பட்டனர். இன்றும் சில ஆசிரியர்கள் பெற்றோருக்குத் தொழில் முறையான ஆலோசனை வழங்க வேண்டுமெனக் கூறுகின்றனர்.

1960களில் முன் பள்ளியாசிரியர்களிடம் பெற்றோரின் ஆதரவு சார்பாக செல்வாக்குச் செலுத்திய இருமனப்பாங்கு அம்சங்களைக் குறிப்பிடலாம். அதில் ஒன்று 1967இல் வெளிவந்த பிளௌடன் (Plown) அறிக்கையாகும். இவ்வறிக்கை குழந்தைகளின் பாடசாலைக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பிற்கு அதிகாரபூர்வமான அங்கீகாரம் வழங்கியது. அவ்வறிக்கை கீழ்வருமாறு குறிப்பிட்டது.

‘ஒவ்வொரு குழந்தையின் கல்வியிலும், பாடசாலை, பெற்றோர் ஆகிய இருதரப்பினருக்குமான நெருக்கமான தொடர்பு, கல்வி ரீதியான முன்னேற்றத்தின் ஒரு அத்தியாவசிய அம்சமாகும்.’ (Central Advisory for Education - 1967).

இரண்டாவது அம்சம், விளையாட்டுக்குழு அமைக்கப்பட்டமையாகும். பெல்லே டூடாஸ்வ் (Belle Tutasv) என்பவர் கார்டியன் பத்திரிகையில் 1969இல், ‘தாய்மார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, தமது குழந்தைகளுக்கு விளையாடும் வாய்ப்புகளையளிக்க வேண்டும்’ என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருந்தார். அதன் பின்னரே விளையாட்டுக் குழு இயக்கம் வளர்ச்சி பெற்று இன்று 'முன்பள்ளிக் கற்றல் முன்னணி' என்ற பெயருடன் இயங்குகிறது. ஆரம்பத்தில் குழந்தைகளின் விளையாட்டில் அதிக ஈடுபாடு காட்டப்பட்டது. காலப்போக்கில் தாய்மாரின் அக்கறை குறைந்துவிட்டது. அதன்பின் விளையாட்டுக் குழுவுக்கென முழுநேர ஊழியர் நியமிக்கப்பட்டு, தன்னார்வ அடிப்படையிலன்றி தகுதிபெற்ற உதவியாளர்களாகப் பணியாற்றினர். ஆயினும் பெரும்பாலான விளையாட்டுக் குழுக்களில் குழந்தைகளின் நாளாந்தப் பணிகளில் அதிகளவிலான பெற்றோர் பங்கேற்கின்றனர்.

பெற்றோரின் பங்கேற்புக்கு இவ்வாறு அதிகாரபூர்வ அங்கீகாரம் கிடைத்தாலும், பெற்றோர்கள் பாடசாலைக்கு ஆதரவு தருவதில்லை என்ற கருத்து தொடர்ந்து நிலவியது. அத்தோடு குழந்தைகளின் சீரற்ற மொழிநடைக்கும் பெற்றோரே காரணம் என்ற குற்றச்சாட்டுமிருந்தது. ஆசிரியர்கள் தொழிலாளர் குடும்பங்களின் மொழிநடையில் செல்வாக்குச் செலுத்தினால், பொருத்தமான மாதிரிகளை வழங்கினால் இதில் முன்னேற்றமேற்படும் எனவும் கல்வியாளர்களின் அறிக்கைகள் அபிப்பிராயப்பட்டன. இந்த நிலைமைகள் மொழியறிவுப் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆயினும் இதனை வெல்ஸ் (Wells 1984) திஸார்ட், ஹியூக்ஸ் (Tizard, Hughess 1984) ஆகிய ஆய்வாளர்கள் நிராகரித்தனர்.

பின்தங்கிய குழந்தைகளின் மொழி மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் ஐக்கிய அமெரிக்க, பிரித்தானிய, ஐரோப்பிய நாடுகளில் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் பெற்றோரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவும் ஒத்துழைப்பும் இன்மையால் முன்னேற்றத்தைப் பேண முடியவில்லை. அவை இருந்திருக்குமாயின் குழந்தைகளுக்கு நீண்டகால நன்மைகள் கிடைத்திருக்கும். ஆயினும் இந்நிகழ்ச்சித் திட்டங்களோடு, பெல்ஜியம், ஒல்லாந்து ஆகிய நாடுகளின் நிகழ்ச்சித் திட்டங்கள், குழந்தைகளை குடும்பம் சமுதாயம் என்பவற்றுடன் இணைத்துக் கருதும் போது, கல்விச் செயற்பாடுகள் கூடிய நன்மை தரக்கூடியதாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டின.

மொழியறிவுப் பற்றாக்குறை பற்றிய இவ்வாறான கருத்துகள் இருந்தாலும், பல முன் பள்ளியாசிரியர்கள் அதனை மேம்படுத்தப் பொருத்தமான முறைகளை மேற்கொள்வதாக இல்லை. மீண்டும் அதே அணுகுமுறையையே பின்பற்றுகின்றனர். மனப்பாங்கு மாறுவதாக இல்லை. ஆரம்பப் பள்ளிகளில் அனுமதிபெறும் குழந்தைகளின் மொழியறிவும், திறன்களும் குறைவாக இருப்பதற்குக் காரணம். பெற்றோரின் குறைந்த மொழியறிவும், தொலைக்காட்சி, வீடியோ சாதனங்களுமாகவிருக்கலாம். பல மத்திய வகுப்புக் குடும்பங்களில் தொலைக்காட்சியும் வீடியோவும் நாள் முழுக்க இயங்குவதால் இளம்பிள்ளைகள் மணிக்கணக்காக அவற்றையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் எதிர்பார்க்கப்படும் மொழித்தேர்ச்சி அவர்களிடம் இல்லாதிருப்பது விந்தையில்லை.

பிள்ளைகளின் கல்வியைப் பொறுத்து பெற்றோர் வகிக்க வேண்டிய பங்கு 1980, 1981. 1986, 1988 ஆண்டுக் கல்விச் சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அப்பங்களிப்புகள், தமது குழந்தைகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையைத் தெரிவு செய்தல், மதிப்பீட்டில் பங்கு பற்றுதல், அதிகார அலகுகளில் பிரதிநிதித்துவம் பெறல், தகவல்களை அறிதல் என்பவையாகும். இச்சட்டங்கள், பாடசாலைகள் பெற்றோருக்குப் பதில் சொல்லவேண்டிய தன்மையுள்ள நிலையை அறிமுகம் செய்தன. இதனால் குழந்தைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு அதிகரிக்க வசதி செய்தன. இப்போது அனைத்துப் பாடசாலை அதிகார அலகுகளிலும் பெற்றோரின் பிரதிநிதித்துவம் இருக்கிறது. அரச, தொண்டு நிறுவன, தனியார் பாடசாலை அனைத்திலும் நிருவாகக் குழுக்கள் பெற்றோரை உள்ளடக்குகின்றன.

சட்டங்கள் இவ்வாறிருந்தபோதிலும், பெற்றோர்கள், சில கல்வியாளரின் பார்வையில் பிரச்சினை யேற்படுத்துபவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். பெற்றோரும் கல்வியாளர்களும் ஒத்துழைக்க வேண்டிய விளையாட்டுக் குழுக்களில் கூட, சில கல்வியாளர்கள் பெற்றோரின் தலையிடியில்லாமல் செயற்பட விரும்புகின்றனர். பெற்றோரை நுகர்வோராகக் கருதும் அரசின் நிலைப்பாட்டுக்கும் நிஜத்துக்குமிடையே அதிக வேறுபாடு காணப்படுகிறது. மனிதரின் உளப்பாங்குகளை சட்டவாக்கம் இரவோடிரவாக மாற்றிவிட முடியாதென்பது இதனால் புலனாகிறது.

பாலர் கல்வியாளரிடையே, பெற்றோரின் பங்களிப்பைப் பொறுத்து வித்தியாசமான உளப்பாங்குகள் உள்ளன. இதேபோல பெற்றோர்களுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்குமிடையே இடைவெளியுள்ளது. வுக்ஸ் (Wughes-1994)ம் இதுபற்றிய ஆய்வில் சட்டம் முன்னெடுக்க விரும்பும் நெருங்கிய கூட்டுறவைப் பெற்றோரும் விரும்பவில்லையெனக் கண்டுகொண்டார். பெற்றோரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வோர் எனக்கொள்வது எப்போதும் பொருந்து மென்பதில்லை.

பிரித்தானியாவின் பாடசாலை ஒழுக்கம் பற்றிய விசாரணைக் குழுவின் எல்ரோன் அறிக்கையானது (Great Britan Committee into Dicipline in School - 1989, Elton Report) பெற்றோர் பங்களிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டது. பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையிலான உறவை மேம்படுத்தும் ஒரு செயல்முறையாகப் பெற்றோரின் பங்குபற்றுதலைக் கணித்தது. பாடசாலைகளால் கொடுக்கப்படும் சகலவிதமான தொடர்பாடல்களையும் பெற்றோர் நன்றாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் எடுத்துரைத்தது. இக்கூற்று பெற்றோருக்கு அழுத்தம் தருவதை உணரலாம்.

**பெற்றோர் சம்பந்தப்படல் என்றால் என்ன?**

தமது குழந்தைகளின் கல்வியில் பெற்றோர் சம்பந்தப்படுவதற்கு, பெற்றோர் 'வாடிக்கையாளர்' என்றில்லாமல் பங்காளரராக ஆதல் வேண்டும்.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் சம்பந்தப்படல் என்பது பற்றி வொல்ப்பெண்டால் (Wolfendal-1983) என்பவர் விரிவாக ஆராய்ந்தார். காலங்காலமாகப் பெற்றோர் வாடிக்கையாளராகவே கணிக்கப்பட்டு - கையாளப்பட்டு வந்ததை அவர் எடுத்துக்காட்டினார். வாடிக்கையாளர் என்பது மூலம் கீழ்வரும் அம்சங்கள் பெறப்படுவதாக அவர் சுட்டிக் காட்டுகிறார்.

- வல்லுனர்களின் அபிப்பிராயங்களில் பெற்றோர் தங்கியுள்ளனர் (தொழில் தகைமையாளர், நூல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரபூர்வத் தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையில்).

- சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெற்றோர் துடிப்பின்றிக் காணப்படுகின்றனர்.
- பெற்றோர் (வெளிப்படையாகவே) வழிகாட்டப் படவேண்டிய நிலையில் உள்ளனர்.
- தீர்மானமெடுக்கும் மைய வட்டத்துள் பெற்றோர் இருக்கின்றனர்.
- பெற்றோர் குறைபாடுள்ளவர்களாக, விடயம் அறியாதவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

பங்காளர் எனும் கணிப்பில் (எதிரிடையாக) பின்வரும் பண்புகள் அடங்குகின்றன.

- பெற்றோர் துடிப்புள்ளவர்கள். முடிவுகள் எடுப்பதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் மையநிலை யிலுள்ளவர்கள்.
- ஆசிரியர்களைப் போலவே பெற்றோரும் சமவலுவுள்ளவர்களாகக் கணிக்கப்படுபவர்கள்.
- பெற்றோர்களால் சேவைகளை வழங்கவும் முடியும் பெறவும் முடியும்.
- பெற்றோர் பொறுப்பைப் பகுதியாகப் பெற்றுக் கொள்வதால் பெற்றோரும் கல்வியாளரும் பரஸ்பரம் பதில் சொல்லவேண்டிய நிலையில் உள்ளனர்.

'நிகர்மாற்றம்' எனும் எண்ணக்கருவே 'வொல்பென்டாலின்' மையக்கருத்தாக உள்ளதை நாம் அறியலாம். அது, பாடசாலையானது பெற்றோருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டது என்ற கருத்தைத் தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அரசின் சட்டவாக்கம் சொல்வதிலும் பார்க்க அதிக வலுவுள்ளது. குழந்தைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பால் வரும் விளைவுகள் பற்றிய ஆய்வுகளெல்லாம் இருதரப்பாருக்கும் நன்மையேற்படுவதையே காட்டின. இது குழந்தைகளின் முழுத்தோற்றத்தை அறிய உதவுவதுடன் நில்லாமல் அவர்களின் பாடசாலை வாழ்வின் எல்லா இயல்புகளையும் பெற்றோர் அறிய வாய்ப்பளிக்கிறது.

பரஸ்பர சம்பந்தம், பரஸ்பரம், வகை சொல் கடமை, பரஸ்பர நன்மை என்பனவற்றுடன் 'நிகர் மாற்றம்' என்ற எண்ணக்கரு தொடர்புபடுகின்றது. அது குழந்தை வாழ்கின்ற சமூக, கலாசாரப் பெரும்பரப்பில் வைத்துக் குழந்தையை நோக்குகிறது.

பெற்றோருடைய, குழந்தைகள் சார்பான அறிவை, கல்வியாளர் மதித்தல் கல்வியாளருக்கு குழந்தைகள் சார் முன்னேற்றம் பற்றித் தெரியும் என்பதைப் பெற்றோர் அங்கீகரித்தல் என்பனவே 'பங்குடைமை' என்பதால் கருதப்படுவதாகும். ஒரு பங்காளர் சொல்வதை இன்னொரு பங்காளர் கேட்பதும், கருத்துரைப்பதும் மூலமாகத்தான் குழந்தைகள் நன்மையடைகின்றனர்.

வேலையில் ஈடுபட்டிருக்கும் பெற்றோரை பாடசாலை நேரத்தில் சம்பந்தப்படுத்துவது சிரமமானது எனக் கருதப்படுவதும் சரியானதுதான். இது பிரச்சினைகளுக்கும் இட்டுச் செல்லலாம். ஆயினும் மாலை வேளைகளில் பெற்றோருடன் சந்திப்புகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்குபடுத்துவது மூலம், சிறிய அளவிலாவது வீட்டுக்கும் பாடசாலைக்குமான நெருக்கத்தை உருவாக்கமுடியும். பாலர் பாடசாலைகள் பகல்நேரக் குழந்தைகள் காப்பகங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்துமானால், தொழிலுக்குச் செல்லும் பெற்றோர் குழந்தைகளுடன் அங்கு வரும் சந்தர்ப்பமேற்படும். மேலும் செய்தி மடல்கள் மூலமும் தொடர்பினைப் பேணலாம். இவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் நேருக்கு நேர் பெற்றோருடன் பழகுவதே அதிக பயன்தருவது என்பதையும் மறந்து விடலாகாது.

## நடைமுறைப் பெற்றோர் சம்பந்தம்

நாளாந்தம் குழந்தைகளைப் பாடசாலைக்குக் கொணர்வதும், ஆசிரியர்களுக்கு முகமன் கூறுவதும், மீண்டும் அழைத்துச் செல்வதும் பெற்றோரின் செயற்பாடாக அமைகிறது. இச்சந்தர்ப்பங்களில், குழந்தைகளின் செயற்பாடுகள் அவர்களின் பலம், பலவீனங்கள் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாட ஆசிரியர்களால் முடியும். இது பெற்றோருக்கும் பாடசாலைக்குமிடையிலான பெறுமதிமிக்க, தொடர்பானாலும், இது போதுமானதா எனச் சிந்திப்பது நல்லது.

பெற்றோரைக் குழந்தைகளின் கல்வியில் சம்பந்தப்படுத்த, பல்வேறு மரபு ரீதியான வழிகள் பின்பற்றப்படுகின்றன. நிதி திரட்டுதல், கல்விச் சுற்றுலா போதல், குழந்தைகளின் உடைகளைச் சீர்ப்படுத்தல், கதை சொல்லுதல், வகுப்பில் உதவுதல், சமைத்தல், களிமண்ணால் உருவமைத்தல் போன்றனவாக அவற்றைக் குறிப்பிடலாம். 'ஆரம்பப் பள்ளிகளில் அடிநிலை மதிப்பீடு', 'குழந்தைகளின் கற்றலில் விரும்பத்தக்க விளைவுகள்' என்ற அறிக்கை என்பனவற்றின் பிரகாரம், பாலர் பாடசாலைகளில் பெற்றோர் சம்பந்தப்படும் வகையில் கலைத்திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வரும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரைச் சம்பந்தப்படுத்தல் என்பது ஒரு சிக்கலான விடயமாதலால், இது பற்றிப் பாலர் பாடசாலையாசிரியர்கள் பலமாகச் சிந்திக்கின்றனர். எவ்வாறாயினும் கல்வியாளர்கள் பெற்றோருக்கும், பெற்றோர் கல்வியாளர்களுக்கும் உதவமுடியும் என்பது சிந்திக்க வேண்டியதேயாகும்.

முறைசாரா அமைப்புகளையுருவாக்கி, பெற்றோரை நிர்வாக விடயங்களில் சம்பந்தப்படுத்தும் வகையில் சமீபத்தில் பல பாராளுமன்றச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1988ஆம் ஆண்டின் கல்விச் சட்டமும் கல்வியில் பெற்றோர் பங்காளிகள் ஆகும் வாய்ப்பையளித்தது. ஆயினும் இந்தப் 'பங்குடைமை'யென்பது ஓர் இலட்சியக் கருத்தாக விருந்ததால், உண்மையில் பெருமளவில் அது சாத்தியப்படவில்லை. பெரும்பாலான பெற்றோர்கள் நேரமின்மையாலன்றி, விரும்பாமை காரணமாகவே சட்ட ரீதியாகப் பொறுப்புகள் வகிப்பதில் பின் நின்றார்கள்.

பெற்றோர்கள் எவ்வகையிலும், கல்வி நிறுவனத்தை நடத்துவதில் பங்கேற்க முன்வருவதில்லை. பெற்றோருக்கும் பாலர் கல்வியாளருக்கும், பெற்றோரை கல்வி நுகர்வோராகப் பார்க்கும் கருத்து நிலை ஏற்றுக்கொள்ளச் சிரமமாகவே இருக்கும். முன்பள்ளியாசிரியர்களும் இதை உணர்வர். இது கல்வித்துறை சார்ந்த பலருக்கும் அந்நியமாகவே இருக்கக்கூடும்.

நியூசன் ஆய்வுக் குழுவினரால் 1977இல் ஒரு நேர்முகம் காணப்பட்டபோது 'நீங்கள் உங்கள் குழந்தைக்கு கல்வியில் உதவுவீர்களா?' என ஒரு வினா கேட்கப்பட்டது. இதற்கு அத்தாய் அளித்த பதில்: 'குழந்தை பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத் தொடங்கியபின் இல்லை. வேறு வழியில் கற்பிப்பது தவறெனக் கண்டேன். கற்பிப்பது என்பது வேறு வழி. அதை அவ்வழியே விட்டு விடவேண்டும்' என்பதாகவிருந்தது. இத்தாயைப் போல பலர் 1990களிலும் கருதுகிறார்கள்.

1960களில் ஒரு கல்வி அறிஞர் தனது மகளைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அந்தத் தலைமையாசிரியரிடம் அவர், 'எனது மகளால் வாசிக்கமுடியும்' எனக் கூறினார். அந்தத் தலைமையாசிரியர், 'அதை முடிவு செய்யவேண்டியது நாங்கள்' என்றார். அவரின் சொற்களும் தொனியும் எதைக் காட்டுகிறது? இவ்வாறு பெற்றோர் நடத்தப்படும் நிலையில் பெற்றோரின் பங்களிப்பு எப்படியிருக்கும்? எவ்வாறாயினும் பாடசாலையின் நாளாந்தச் செயற்பாடுகளில் பெற்றோர் சம்பந்தப்பட விரும்பாவிட்டாலும் தமது குழந்தைகள் என்ன கற்கிறார்கள் என்பதையறிய விரும்புகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

**கலைத்திட்டமும் பெற்றோரும்**

சில நாடுகளில் பாடசாலை நிருவாகத்தில் பெற்றோரும் பங்கு வகிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதனால் கலைத்திட்டவாக்கக் குழுக்களில் பெற்றோரும் அங்கம் வகிக்கமுடியும். இனி முன்பள்ளிச் சோதனைகள், சுயமதிப்பீட்டுப்படிவங்கள் பற்றிப் பெற்றோர்களும் அறிய வாய்ப்புண்டு. நிருவாக அலகின் உறுப்பினர் என்ற வகையில் பரிசோதகர்களைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றோர்களுக்கும் கிடைக்கும். பரிசோதகர்கள் கலைத்திட்ட விடயங்களை பெற்றோருடனும் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்விக்கான மையக் கலைத்திட்டமில்லாத டென்மார்க்கில் கல்வியாளர்கள், பெற்றோரினதும் பிள்ளைகளினதும் ஒத்துழைப்புடன் அவர்களது இயல்புக்கேற்ற கலைத்திட்டத்தை அமைத்துக் கொள்கிறார்கள் என்பது ஒரு சுவாரஸ்யமான விசயமாகும். அங்கு ஒவ்வொரு வருடமும் கல்வியாளர்கள் பெற்றோரின் சம்மதத்துடன் செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்குகிறார்கள். இந்த அம்சமொன்றே அங்கு மையப்படுத்தப்பட்ட ஆவணமாகும்.

ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற இடங்களில் பெற்றோர் தமது குழந்தைகளின் கல்வியில் பங்கு கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வகுப்புச் செயற்பாடுகளில் சில பெற்றோர் உண்மையாகவே பங்குபற்றுகிறார்கள். அந்நாடுகளில் அரசியல் மாற்றத்திற்கு முன்னர் மையக் கலைத்திட்டம் நடைமுறையில் இருந்ததால் பாடசாலை விவகாரங்களில் கருத்துக்கூறப் பெற்றோருக்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் இப்போது பெற்றோரின் அபிப்பிராயங்களுக்குக் கணிப்பளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக லிதுவேனியாவில் பாலர் கல்வி சார்பாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தைப் பாடசாலையின் செயற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால், அது குடும்பத்துக்குப் பெரிதும் உதவியாயமைகிறது. இப்போது அங்கு பெற்றோர் ஆலோசனை வழங்கவும், கருத்துகளைத் தெரிவிக்கவும், குழந்தைகளை எப்பொழுது பாலர் பாடசாலையில் சேர்க்க வேண்டுமெனத் தீர்மானிக்கவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலந்தில், பாலர் பள்ளியில் பெற்றோர் பங்காளராவது வாழ்வின் ஒரு கூறாக மாறியுள்ளது.

இந்த நிலையில், முன்னர் வேறு கோட்பாடுகளின் கீழ் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் புதிய மாற்றங்களை எதிர்கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

**எழுத்தறிவும் பெற்றோர் பங்கும்**

1960, 70களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம், பாடசாலைக்கு வரும் சில பிள்ளைகள் பேச்சாற்றலுடன் வாசிக்க ஆர்வமுற்றிருக்க, அனேகமானோர் வாசிக்க விரும்பினாலும், கற்பதற்கான முன்னறிவு இல்லாமல் இருப்பது ஏன் என வினாவெழுப்பப்பட்டது.

இந்த நிலைமை பிள்ளைகளின் எழுத்தறிவு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் வீட்டுக்காரணிகள் பற்றிய ஆய்வுக்கு இட்டுச் சென்றது.

கோடொன் வெல்ஸ் (Gordon Wells) என்பவரின் வழிகாட்டலில் இடம்பெற்ற பிரித்தானிய மொழி விருத்தியாய்வு இதில் ஒரு வகையாகும். இதன் ஒரு பகுதியாக 1979 இல் மூனும் வெல்சும் (Moon and Wells) இருபது பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்துப் பாடசாலை செல்வதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எவ்வாறான பயிற்சிகளில் குழந்தைகளும் பெற்றோரும் ஈடுபடுகின்றனர் என்பதை ஆராய்ந்தார்கள்.

அவ்வாய்வின் பயனாக, பெற்றோரின் ஆர்வம், எழுத்தறிவு, நூல்கள் கிடைக்குமியல்பு, ஆசிரியர்களின் மதிப்பீடு என்பனவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பிருப்பதைக் கண்டார்கள். எழுத்துப் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் அறிவு, சந்தேகமின்றி வீட்டில் பெற்றோரும் குழந்தைகளும் சேர்ந்து இயங்கியதால் கிடைத்ததே என்பதை அறிய முடிந்தது.

இந்த அறிவு பிற்கால வாசிப்பாற்றலுடன் தொடர்புறுகின்றது. பெற்றோரின் ஊக்கத்தின் அடிப்படையிலேயே குழந்தைகளின் வாசிப்பு விருத்தி தங்கியுள்ளது என்பதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டியது.

1987இல் வெல்ஸ் மொழி வளர்ச்சி சம்பந்தமான ஆய்வை மேற்கொண்டார். அவர் 32 முன்பள்ளி மாணவர்களைப் பல ஆண்டுகளாக ஆராய்ந்து, பாடசாலை போகும் வயதடைந்தவுடன் பேச்சாற்றலில் உள்ள வேறுபாடு முக்கியத்துவம் இழக்கிறதெனவும், எழுத்தாற்றல் முக்கியத்துவம் பெறுகிறதெனவும் கண்டறிந்தார்.

எழுத்து மொழியை விளங்கிக் கொள்ளும் திறனை, வீட்டில் பெறும் அனுபவத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறதெனவும் கண்டு கொண்டார். இரு குழந்தைகளைக் கவனித்து அவர்களுக்குச் சொல்லப்பட்ட கதைகளின் எண்ணிக்கையை ஆராய்ந்தார். முதல் குழந்தைக்கு நாள்தோறும் நான்கு கதைகள் சொல்லப்பட்டன. இரண்டாம் குழந்தைக்கு எதுவும் சொல்லப்படவில்லை. அதிக கதைகளைக் கேட்டு வளர்ந்த குழந்தை பாடசாலை ஆசிரியரைக் கதைகள் சொல்லும்படி நிர்ப்பந்தித்தது. இரண்டாவது குழந்தை அவ்வாறு செய்யவில்லை.

வெல்சின் ஆய்வின்படி குறைந்தளவு முன்பள்ளியனுபவத்துடன் வரும் குழந்தைகள், படித்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளைவிடக் குறைவான விளக்கத்தையே கொண்டிருந்தமை தெரிய வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமான குழந்தைகள், பெற்றோர், குடும்பத்தவரிட மிருந்து பலவற்றை அறிந்து கொள்கிறார்கள்.

'ரிசாட்'டும் சகாக்களும் 1988இல் செய்த ஆய்வின் மூலம், குழந்தைகளின் எழுத்தறிவில் பெற்றோரின் செல்வாக்கு எடுத்துக்காட்டப்பட்டது. லண்டனின் உட்புற வசதி வாய்ப்பு குறைந்த குழந்தைகளே அவதானிக்கப்பட்டனர்.

குழந்தைகள் தமது ஐந்து வயதை அண்முவதற்கிடையில் எழுத்தாற்றலைப் பெற்றிருப்பார்களாயின் அதுவே அவர்களது நல்ல வாசிப்பை எதிர்வுகூறும் காரணியாகும். பெற்றோர் நூல்களையும் பத்திரிகைகளையும் குழந்தைகள் பெறும்வண்ணம் செய்து, வாசித்துக் காட்டி பழக்கப்படுத்துகிறார்கள். இதன் மூலம் எழுத்து, வாசிப்புச் சோதனைகளில் அதிக புள்ளிகளைப் பெறுகிறார்கள் என்பது கண்டறியப்பட்டது.

இதேபோல ஸ்நோ (Snow) என்பவரும், வசதி குறைந்த அமரிக்கப் பிள்ளைகளின் பெறுபேறுகளை ஆராய்ந்து, அவர்களின் சொற்களஞ்சியத்துக்கும், சொற்களை இனம் காணலுக்கும் ஆதாரமாக இருப்பது, குழந்தை வாழும் சூழலின் எழுத்தறிவு மட்டமும் தாயின் எதிர்பார்ப்புகளுமே எனக் காட்டினார். 1991 இன் எல்ம்ஸ்வூட் ஆய்வில் (Elmswood Study) கனனும் சகாக்களும் இதே முடிவுகளையே கண்டு கொண்டனர்.

வீடுகளில் குழந்தைகளுக்கு எழுத்தறிவூட்டப் பெற்றோர் எடுக்கும் முயற்சிகளின் முக்கியத்துவத்தை வெயின் பேக்கர் (Weinberger 1996) என்பவர் தொகுத்துத் தந்துள்ளார். அவை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வீடுகளில் எழுத்தறிவூட்டும் நூல்கள் கிடைத்தல்.
2. வீட்டுக்கு வெளியே எழுத்தறிவூட்டப் பெற்றோர் எடுக்கும் முயற்சிகள்.
3. கற்பதற்குப் பெற்றோரால் அளிக்கப்படும் ஊக்கம்.
4. பிள்ளைகளின் எதிர்காலக் கல்விசார்பாகப் பெற்றோரின் எதிர்பார்ப்பு.
5. பாடசாலை பற்றிப் பெற்றோர் அறியாதிருப்பவை; கொண்டிருக்கும் தொடர்புகள்.
6. நூலகங்களுக்கு அடிக்கடி செல்லும் வீதம்.
7. பெற்றோர் சொந்தமாக வைத்திருக்கும் நூல்களின் தொகை; நூல்களின் பன்முகத்தன்மை.
8. குடும்பத்தின் பொதுவான கல்விச்சூழலும் பெற்றோரின் வாசிப்புப் பழக்கமும்.
9. முன்பள்ளியில் பிள்ளைகள் பெற்ற எழுத்துகள் சார்ந்த அறிவு.
10. வீடுகளில் கதை சொல்லப்படும் வீதம்.

அவர் கூறும் வேறு காரணிகள் :

1. வர்க்கம்.
2. பெற்றோரின் கல்வி மட்டம்.
3. குடும்ப வருமானம்.

குழந்தைகள் எழுத்துகளைப் புரிந்து கொள்வது எழுத்தறிவு வளர்ச்சிக்கு மிக அவசியம் என ஆய்வுகள் காட்டுகின்றன.

ஹெரி (Ehri 1983) என்பவர் அமெரிக்கக் குழந்தைகள் காப்பகங்களில் செய்த ஆய்வின்படி, எட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துகளின் பெயர்களைக் கூறக்கூடிய குழந்தைகள் அவ்வெழுத்தொலிகளைக் கற்க வல்லவராயிருந்தனர். அவ்வாறு கூற முடியாத குழந்தைகளால் ஒலிகளை வேறு பிரித்தறிய முடியவில்லை. அவ்வெழுத்தாற்றல் பற்றிய அறிவைப் பாட சாலைக்கு வருமுன்பே பெற்றிருந்தார்கள் எனவும் அவர் கண்டறிந்தார். வீடுகளில் இவை திட்டவட்டமாகக் கற்பிக்கப்படாவிட்டாலும், உரையாடல், வினாவுதல், எழுத்துகளைப் பார்த்தல் என்பன மூலம் இவ்வறிவைப் பெற்றிருந்தனர். பாலர் பாடல்கள் மூலமும் ஒலியமைப்புப் பற்றியறிந்தனர். தொடர்ச்சியான வாசிப்புச் செயற்பாடும் இடம்பெற்றது. இவை இரண்டுக்குமிடையே தொடர்பு இருப்பதுவும் கண்டுணரப்பட்டது. இதிலிருந்து பாலர் பாடலை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தல் அவ்வாற்றலைப் பெற உதவுகிறது எனவும் அறியப்பட்டது.

இவற்றை முழுமையாக நோக்கும் போது பெற்றோரின் ஆர்வத்துக்கும், குழந்தைகள் எழுத்தறிவு பெறுவதற்கும் இடையில் தொடர்பு இருப்பதை நாம் உணரலாம். குழந்தைகளின் எழுத்தாற்றலை விருத்தி செய்வதில் பெற்றோர் மிக முக்கிய பங்கு வகிக்கலாம் என்பது இவற்றின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. ரிசாட்டும் சகாக்களும் (Tizard et al 1988) செய்த ஆய்வு மூலம், முன்பள்ளிக் காலத்தில் குழந்தைகளின் எழுத்துக்குப் பெற்றோர் செய்யும் உதவிக்கும், பாடசாலையில் சேர்க்கையில் அமையும் குழந்தைகளின் கையெழுத்துக்கு மிடையே தொடர்பிருப்பதைக் காணலாம். இவ்வாய்வில் கருதப்பட்ட பெற்றோரில் 50 சதவிகிதத்தினர் தமது குழந்தைகளுக்குப் பெயரையும் சில சொற்களையும் எழுதக் கற்பித்துள்ளனர். 40 சதவிகிதத்தினர் மட்டுமே பெயரை மட்டுமெழுதக் கற்பிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்தறிவுக்குப் பெற்றோர் உதவுவது எவ்வாறு?**

பெற்றோர்கள் தமது குழந்தைகளின் கணித ஆற்றலை வளர்க்க ஆசைப்பட்டாலும் பெரும்பான்மையான பெற்றோர் குழந்தைகள் வாசிக்கக் கற்பதையே மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள். இந்த நிலை பாடசாலை விளையாட்டுக் குழுக்களையும் நெருக்குதலுக்கு உள்ளாக்கலாம். மேலும் வாசிக்கக் கட்டாயப்படுத்தலையும், நெருக்குதலையும் ஏற்படுத்தலாம். இவ்வாறாகாமல் இருக்கப் பாட சாலைகள் ஆவன செய்யவேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்குப் போகுமுன்னரே குழந்தை வாசிக்கப் பயில வேண்டுமா, இது பொருத்தமாகுமா என்பதையும் சிந்தித்தல் வேண்டும். ஒரு நூலை வாசிப்பதற்கான ஆற்றலை ஒரு குழந்தை படிப்படியாகவே கற்றுக் கொள்ளவேண்டும். இதைப் பெற்றோருக்கு ஆசிரியர்கள் விளங்கப்படுத்த வேண்டும். அத்தோடு அவர்களின் பங்களிப்பையும் உணர்த்தவேண்டும்.

வெயின்பேக்கர் (Weinberger-1996) என்பாரின் ஆய்வின்படி, பாடசாலையில் எழுத்தறிவு பெறும் பிள்ளைகளுக்கும், வீடுகளில் பெறும் பிள்ளைகளுக்கு மிடையே வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. எல்ம்ஸ்வூட்டின் (Elmswood) ஆய்வில், மூன்று பிரதான வழிகளில் பெற்றோர் குழந்தைகளின் எழுத்தறிவை வளர்க்க உதவுகின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

1. பெற்றோர் தமது வீடுகளில் அச்சடிக்கப்பட்ட நூல்கள், தபால் மூலம் நூல்களைப் பெறும் பட்டியல்கள், நகைச்சுவைப் பிரசுரங்கள், பத்திரிகைகள், தேர்தல் சஞ்சிகைகள் மற்றும் அச்சிடப்பட்ட விளம்பரங்கள் சுவரொட்டிகள், துண்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரங்கள் போன்றவற்றைக் குழந்தைகள் கண்டு கையாளும் வண்ணம் வைத்திருந்தனர்.

சொந்தமாக வாங்கிய, நூலகங்களிலிருந்து பெறப்பட்ட சிறுவர் நூல்களை வாசிக்கும் வசதிகள் எல்லா வீடுகளிலும் இருந்தன. பாடசாலையில் கிடைக்கும் நூல்களைவிட வித்தியாசமான பல நூல்கள் வீட்டில் கிடைத்தன. இதில் ஒரு சுவாரஸ்யமான விடயம், பெற்றோர் சமையல்கலை, தோட்டக்கலை நூல்கள் வாசிப்பதற்கானவையல்ல எனக் கருதியமைதான். சில பெற்றோர் வீடுகளில் வாய்மொழியாகக் கதை சொல்லும் மரபில் கதை சொன்னார்கள். இந்த அம்சம், தமது கலாசாரத்தை யூட்டுவதற்காகவும், பேணுவதற்காகவும் வாய்ப்பாயிருந்தது. கதைகள் தாய்மொழியிலேயே சொல்லப்பட்டன. வீடுகளில் எழுத்தறிவை வளர்க்கும் மூல வளங்களாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ☆ எழுதுவதற்கான, வரைவதற்கான காகிதாதிகளும் சாதனங்களும்.
- ☆ எழுத்தறிவுடன் தொடர்பான விளையாட்டுகளும் சாதனங்களும்.
- ☆ பொருத்திப் பார்க்கும், இனம் கண்டு பகுக்கும் விளையாட்டுகள்.
- ☆ ஒளி அட்டைகள் (Flash cards).
- ☆ அகர வரிசை எழுத்தட்டைகள்.
- ☆ படங்களின் பின் எண் அமைக்கும் விளையாட்டுகள் (Jigsaws).
- ☆ காந்த எழுத்து வடிவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☆ தபால் அலுவலக மாதிரிகள்.
- ☆ வெட்டுதல், ஒட்டுதல் சார்பான சாதனங்கள்.
- ☆ எல்லாவிதமான ஆவணமாக்கல்கள்.
- ☆ கணினிகளும், விளையாட்டு கணினிகளும்.

இவற்றில் பெரும்பாலானவை எழுத்தறிவை வளர்க்கச் சாதகமானவை என்பதிலும் பார்க்க, விளையாட்டின்பத்தையே நோக்கமாகக் கொண்டவை எனலாம்.

2. எவ்வாறு ஏனைய நடத்தைகளுக்குப் பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்கிறார்களோ, அவ்வாறே வாசிப்பு, எழுத்து என்பனவற்றிற்கும் பெற்றோர்களே முன் மாதிரிகளாக அமைகின்றனர். தம் பெற்றோர்கள் வாசிப்பதையும் எழுதுவதையும் பார்க்கும் குழந்தைகள், வாசிப்பவர், எழுதுபவர் என்போர் பற்றிய கருத்துகளைப் பதித்துக் கொள்கிறார்கள்.

எந்த வீட்டில் வாசிப்பதும் எழுதுவதும் நாளாந்த வாழ்வின் ஒரு கூறாக இருக்கிறதோ, எந்த வீட்டில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் விரவிக் கிடக்கின்றனவோ, அந்த வீட்டுச் சூழல் குழந்தைகளின் எழுத்தறிவு வளர்ச்சியில் நேரத்தாக்கத்தை ஏற்படுத்துவதாகிறது. வீடுகளில் பெற்றோர்கள் எழுதும் சந்தர்ப்பங்கள் பலவாயினும் ஒருசில கீழே தரப்படுகின்றன.

- ☆ பொருள்களின் பட்டியல்
- ☆ அறிவுறுத்தல்கள்
- ☆ குறுக்கெழுத்துகள்
- ☆ தினக் குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☆ சந்திப்பு நேரங்களைக் குறித்தல்
- ☆ குறிப்புகள் எடுத்தல்
- ☆ காசோலை, உண்டியல்கள் எழுதுதல்.
- ☆ சொல்முறை வழிப்படுத்தல் (Word Processing).
- ☆ தொழில் நிமித்தம் எழுதுதல்.
- ☆ காற்பந்துக் கூப்பன் நிரப்புதல்.
- ☆ படிவங்கள் நிரப்புதல்.
- ☆ அட்டைகளும் கணக்குகளும் (Cards, Accounts).

பெரியவர்களின் செயற்பாடுகளைப் பின்பற்றுபவர்களும், போலச் செய்பவர்களும் குழந்தைகள் என்பதை நினைவிருத்தி ஆசிரியர்கள், பாலர் வகுப்பில் இவ்வாறான பொருட்களைக் குழந்தைகளின் மேசையில் பரப்பிவிடல் வேண்டும். இதன் மூலம் அவர்கள் கல்வியாளர்கள் செயற்படுவதையுணர்ந்து கொண்டு செயற்படுவதோடு, கருத்துகளையும் வளர்த்துக் கொள்வார்கள்

3. பெற்றோர்கள் குழந்தைகளுடன் எழுத்தறிவு சார் நிகழ்வுகளிலும் பயிற்சிகளிலும் ஈடுபடுவதன் மூலம் எழுத்தாற்றலை விருத்தி செய்யலாம். அதில் முக்கியமானது குழந்தைகளுக்கு வாசித்துக் காட்டுதல் என வெயின்பேஃகர் குறிப்பிடுகிறார்.

சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம் வாசித்துக் காட்டலாம். குழந்தைகளுக்கு விருப்பமான நூல்களை பிள்ளைகள் கற்று மனனம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் தம்மை வாசிப்பவர் போலப் பாவனை செய்கிறார்கள். அதன்மூலம் தம்மை வாசிப்பாளர்களாகக் காண்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வயதேயான பல குழந்தைகள் புத்தகத்தைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு தமது மனதிலுள்ள கதைகளை வாசிக்கிறார்கள். மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் இவ்வாறு தமது சகோதரர்களுக்கும் சகபாடிகளுக்கும் வாசித்துக் காட்டுகிறார்கள். பெற்றோர்கள் விரல் வைத்து வாசித்துக் காட்டினால் குழந்தைகளும் அவ்வாறே விரல் வைத்து வாசிக்கிறார்கள்.

மரபு ரீதியாகச் சொல்லப்பட்டுவரும் 'ஒரு ஊரிலே' அல்லது 'முன்னொரு காலத்திலே' அல்லது 'ஒரு இராசா இருந்தாராம்' என்பன போன்ற பிரயோகங்களை வாசிக்கையில் குழந்தைகள் பாடத்தை வாசிப்பதில்லை. ஆனால் அப்பாடம் அர்த்தத்தையளிப்பதாக உணர்கிறார்கள். இதுதான் குழந்தைகள் கற்பதற்கான முதற்கட்டமாகும்.

சிறு குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் நோக்கின்றி வாசிக்கக் கற்பிக்கிறார்கள். அதுபோல குழந்தைகளும் எவ்வித முறையான ஒழுங்குமின்றியே வாசிக்க ஆரம்பிக்கின்றனர். இவ்வாறே முன்பள்ளிகளிலும் குழந்தைகள் வாசிக்கக் கற்கிறார்கள். இங்கும் முன்பள்ளியாசிரியர்களால் நோக்கின்றி இது நிகழ்த்தப்படுகிறது. இதற்கு மாறாக ஆரம்பப் பள்ளிகளிலே திட்டமிட்ட நோக்கங்களையடையுமுகமாக குழந்தைகள் முறையாக வாசிக்கக் கற்பிக்கப்படுகிறார்கள்.

பொதுவாக இளம் குழந்தைகளுக்கு எழுதும் ஆற்றலை வளர்ப்பதற்காகப் பெற்றோர் முயற்சிப்பதில்லை. அதைப் பாடசாலைகளும் விரும்புவதில்லை. எவ்வாறாயினும் இயல்பாக எழுதும் ஆற்றலைக் குழந்தைகள் தாமாகவே வளர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டால், அது மிகவும் பயனுள்ளதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு எழுதப் பழக உதவி புரிந்திருக்கக் கூடும். எவ்வாறெனில் எழுத்துகளைப் பார்த்து வரையவும், புள்ளியிட்ட கோலத்தைப் பூர்த்தி செய்யவும் விரல்கள் நெறிப்படுத்தவும் உதவுதல் மூலமாகவென நாம் கருதலாம்.

'எல்ம்ஸ்வூட்'டின் ஆய்வும் இதையே காட்டுகிறது. இதன் காரணம் பெற்றோரிடம் போதிய அறிவுத் தகவல்கள் இல்லாமையாயிருக்கலாம். எழுதப் பழகுதல் சார்பாகப் பெற்றோரிடம் தவறான விளக்கங்களும் இருந்திருக்கலாம். எனவே குழந்தைகள் எவ்வாறு எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதற்கான அறிவுறுத்தலைப் பெற்றோருக்கு வழங்குதல் மூலம் இதனைச் சரி செய்ய முடியும். இளம்பராயத்தில் குழந்தைகள் கிறுக்குவதெல்லாம் பிற்கால எழுத்துப் பயிற்சியில் முக்கிய பங்கு வகிக்கிறதென்பதையும் பெற்றோருக்கு விளங்கப்படுத்துதல் வேண்டும்.

**சூழவுள்ள அச்சிட்ட பொருட்கள்**

குழந்தைகள் தாம் வாழும் சூழலில் உள்ளனவற்றை வாசிக்கப்பழகுதல் வேண்டும். சூழலில் உள்ளனவற்றை வாசிப்பது, பிற்கால எழுத்தறிவில் நேர்த் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கு உறுதியான ஆதாரம் இல்லையானாலும், ஏற்றுக்கொள்ளக் கூடியதேயாகும்.

'பெற்றோர், சூழவுள்ளனவற்றைக் குழந்தைகள் வாசிக்க ஊக்கப்படுத்துதல் மூலம் குழந்தைகளுக்கு, வாசிக்கவும், எழுதவும் உதவுகிறார்கள் எனலாம்' (வெயின்பேஜர்). விளம்பரச் சின்னங்கள் எங்குமே காணக் கூடியனவாகவுள்ளன. பொருட்களை வாங்குவதற்காகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் பெற்றோர் பொருட்களின் பொதிகளை வாங்கிக் கொடுக்கும் போது குழந்தைகள் பொதிகளை உற்று நோக்குகிறார்கள். ஆரம்பத்தில் பொதியை அதன் நிறத்தாலும் அச்சிடப்பட்ட படத்தாலும் இனம் காண்கிறார்கள். காலகதியில் அச்சிடப்பட்ட எழுத்துகளையும் இனம் காண ஆரம்பிக்கிறார்கள்.

குழந்தைகள் பாலர் வகுப்புக்குப் போகுமுன்னரே எழுத்தறிவு பற்றி நன்றாக அறிந்து கொள்கின்றனர். பெற்றோர்களால் நல்ல கல்விச் சூழலைக் குழந்தைகளுக்குத் தர முடிவதுபோல மூன்று வயதுக்கு முன்பிருந்தே தரமுடிவது போல, அதே போன்ற சிறந்த கல்விச் சூழலை கல்வி நிறுவனங்களும் குழந்தைகளுக்கு வழங்கவேண்டும்.

பல குழந்தைகள் எழுத்தறிவு வளர்ச்சியுடன் கணித, விஞ்ஞான எண்ணக் கருக்களையும் வீட்டிலே கற்றுக் கொள்கிறார்கள். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் தனது பங்கையாற்றுவதோடு பெற்றோர்களும் பாடசாலையும் சேர்ந்து செயற்பட ஊக்குவிக்கவேண்டும். பெற்றோரின் ஆதரவைப் பாடசாலைகள் எவ்வாறு பெறமுடியும்? பெற்றோர் விரும்புது என்ன? என்பதையும் இங்கு சிந்திக்கவேண்டும்.

பெற்றோருடன் இணைந்து நன்றாகச் செயற்பட்ட நீண்ட வரலாற்றைப் பாலர் கல்வி கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். பெற்றோர் பாலர் பள்ளியின் பங்காளர் என்பதை ஆரம்பத்தில் ஆராய்ந்தோம். நிகர் மாற்றத்தின் அவசியத்தையும் உணர்ந்தோம். 'குழந்தைகளின் கற்றலில் விரும்பத்தக்க விளைவுகள் அறிக்கையும், தகவல்களும் இரு பக்கத்திலும் பரிமாறிக் கொள்ளப்படவேண்டும்' எனச் சுட்டிக்காட்டியதைக் கண்டோம். பெற்றோருக்கும் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகளுக்குமிடையே இருக்கவேண்டிய உறுதியான இணைப்பு என்பதால் குறித்துக் காட்டப்படும் விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

1. பாலர் கல்வி நிறுவனம், குழந்தைகளின் கல்வியில் பெற்றோர் வகிக்கும் அடிப்படையிலான பங்கை ஏற்றுக் கொள்ளல்.
2. ஆரம்பத்திலிருந்தே குழந்தையின் எழுத்தறிவில் பெற்றோர் வகித்த பங்கை அங்கீகரிப்பதுடன் தொடர்ந்தும் பெற்றோரின் ஈடுபாடு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்ளல்.
3. பாடசாலைக்கான பெற்றோரின் வரவை ஏற்றுக்கொள்ளலும், பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகளிடையே கூட்டுச் செயற்பாடுகளுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தலும்.
4. குடும்பத்திலுள்ள வயதானவர்களின் திறமைகள் அங்கீகரிக்கப்படலும், அத்திறமைகள் கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் கற்பித்தலுக்கு ஆதாரமாகவிருத்தலும்.
5. பெற்றோர்கள் பல வழிகளிலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக பாடசாலை நிர்வாகம் இருத்தல்.
6. தம் பிள்ளைகளின் பெறு பேறுகளையும் சாதனைகளையும் பெற்றோர் முழுமையாக அறியத்தக்கதாக, பங்களிக்கத் தக்கதாகவிருத்தல்.
7. பாடசாலையில் சேர்க்கும் நடைமுறைகள் நெகிழ்வுடையனவாக இருத்தலும், பிள்ளைகள் பாதுகாப்புணர்வுடனிருத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் வாய்ப்புகள் சில தருணங்களில் வீடுகளிலும் வழங்கப்படல். (புத்தகம் வாசித்தல், புத்தகத்தைப் பகிர்ந்து கொள்ளல், வீட்டில் பெற்ற அனுபவம் கல்வி நிறுவனத்தில் கற்பதற்கான தூண்டியாகப் பயன்படல்).

குழந்தைகளின் கற்றல் முழுமையாக வளர்க்கப்பட வேண்டுமானால், வீடும் பாடசாலையும் சேர்ந்தியங்குதல் அவசியம். சிலர் இக்கருத்தை மறுக்கக்கூடும். மொழியறிவு கூடிய குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கு அனுகூலமான ஆதரவு இருக்கிறதென்பதை எல்ம்ஸ்வூட்டின் ஆய்வும் எடுத்துக்காட்டியுள்ளது. இதனை ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கல்வியறிவு குறைந்த சூழலிலிருந்து வரும் குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு ஆசிரியர்கள் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

**மாறும் காலகட்டமும் பெற்றோரும்**

குழந்தைகள் தொடர்ந்தே முன்பள்ளியில் இருப்பவர்களல்லர். முன்பள்ளியிலிருந்து அவர்கள் நியம சட்டரீதியான பாடசாலைக்கு மாறிச் செல்ல வேண்டியவர்கள். இவ்வாறு மாறிச் செல்லும் கட்டத்தில் பெற்றோர் மிக முக்கியமான பங்கை வகிக்க வேண்டியவர்களாவர். ஆரம்பப் பள்ளிக்கு, குழந்தை மாறிச் செல்லும் கட்டம் மிக முக்கியமானது என்பதைப் பெற்றோர் உணர்ந்திருத்தல் வேண்டும். இதைப் பற்றியும் நாம் விரிவாகச் சிந்தித்தல் வேண்டும்.

UNIVERSITY OF JAFFNA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 3

# குழந்தைகள் கற்கும் சூழலும் விளையாட்டும்

குழந்தைகள் பாதுகாப்பும், இடருமற்ற சூழ்நிலையில் செயற்படக்கூடியவர்களாகவும் விளையாடக் கூடியவர்களாகவும் இருந்தால்தான் அவர்களது திறன்களும் தேர்ச்சிகளும் விருத்தியாகும். ஆரம்பக்குழந்தைக் கல்வியாளர்கள் அவர்களுக்கு நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட கற்றல் சூழலை வழங்கவேண்டும். பரந்தளவிலான சாதனங்களும் பொருட்களும் அதற்குத் தேவைப்படும்.

குழந்தைகள் அவற்றைச் சுதந்திரமாகப் பயன்படுத்தவேண்டும். இந்த வகையில் சாதனங்கள் குவிந்துள்ள பாலர் பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே கற்றல் இடம்பெறுகிறது. அதே நேரம் வளங்கள் பெருமளவில் காணப்பட்டாலும் அங்கு கற்றலும் கண்டறிதலும் உயர் மட்டத்தில் அமையக்கூடிய வகையில் சந்தர்ப்பங்களை வழங்குமாறு ஒழுங்கமைக்கப்பட்ட பாலர் பாடசாலைகளும் உள்ளன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இவ்விருவகைப் பாடசாலைகளையும் மேலோட்டமாக நோக்குவோமானால், அவை ஒத்த தன்மையுடையனவாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டாலும் அவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒன்று அதிக சவாலுக்குரியதாகவும் மற்றது விமர்சனதுக்குரியதாகவும் இருப்பதற்குக் காரணமென்ன? குழந்தைகள் முழு நாளும் விளையாடுவதைத் தவிர வேறொன்றும் ஆவதில்லையென குறிப்பிடுகிறார்களே; இவை கருத்திலெடுக்கப்படவேண்டும்.

இங்கு நாம் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட கற்கும் சூழலின் பிரதான அம்சங்கள் பற்றியும், தூண்டுதளிக்கும் பல்வேறு பின்னணிகள் பற்றியும் இளங்குழந்தைகளின் தேடுதல்கள், ஆர்வங்கள் என்பனவற்றை விருத்தி செய்யும் வழிவகை பற்றியும் ஆராய முற்படுவோம். எந்தக் கற்கும் சூழலுக்கும் முதலிடம் பெறும் முன் தேவை குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்தலாகும். இரண்டு தொடக்கம் ஐந்து வயது வரையிலான எல்லாக் குழந்தைகளுக்கும் ஐந்து வயது வரையான எல்லாக் குழந்தைகளுக்கும் இத்தேவைகள் பொதுவாக ஒரே மாதிரியானவையாகும்.

**கற்றலுக்கான பௌதிகச் சூழல்**

பாலர் பாடசாலைக்குரிய மிக முக்கிய அம்சம், அது உளவியல் ரீதியாகப் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் இருத்தல் வேண்டும் என்பதாகும். அங்கு இளங்குழந்தைகள் பாதுகாப்பு உள்ளதென்ற உணர்வோடு, ஆறுதலாக இருந்து தேடுதல் நடத்தவும், ஓடியாடித் திரியவும் வாய்ப்பு வசதிகள் வேண்டும். இல்லையானால், அங்கு ஒழுங்கமைக்கப்பட்ட சாதனங்களும் பொருட்களும் பெறுமதியற்றவையாகிவிடும். அங்குள்ள பாதுகாப்பான, பத்திரமான சூழல் குழந்தைகளின் வயதுக்கும் ஆற்றலுக்கும், பொருத்தமான சவால்களுக்கும் தடையாக இருக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் அடிப்படைத் தேவையில் முதலிடம் வகிப்பது இடவசதியாகும். நகர்ப்புறத்துக் குழந்தைகள் பலருக்கு இந்த வசதியில்லை. பலர் அடுக்கு மாடிகளில் நெருக்கமான சூழ்நிலையில் வெளியில் விளையாட இடமின்றியிருக்கின்றனர். நான்கு வயதுக் குழந்தைகளின் விருத்திக் கட்டத்தில், அவர்களுக்குப் பாரிய அளவில் இயக்க அசைவுகளுக்கான சந்தர்ப்பங்கள் தேவை. ஒரு மேசையில் நீண்டநேரம் அமர்ந்திருப்பது, மனவெழுச்சி மற்றும் உடல் ரீதியாக நன்மையளிக்கக் கூடியதல்ல.

மற்றொரு முக்கிய அடிப்படைத்தேவை. குழந்தைகள் செயற்படுவதற்கான நேரமாகும். சில சந்தர்ப்பங்களில் இதற்குத் தடையேற்பட வாய்ப்புள்ளது. நெருக்கடியான, பரப்பரப்பான வீடுகளில் இதனால் அடிக்கடி குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். குழந்தைகள் சுய எண்ணப்படி பணியாற்றவும், அதைப் பூர்த்தியாக்கவும் நேரம் வழங்கப்பட்டால் மட்டுமே, மன ஒருமைப்பாட்டையும் கூடுதலான கவன ஈர்ப்பையும் அடையலாம்.

**பாடசாலையின் உட்புறச் சூழல்**

கடந்த காலங்களில் பாலர் பாடசாலைக் கட்டடங்கள் பல பெரியனவாகவும் திறந்த பிரதேசங்களாகவு மிருந்தன. அங்கு வளர்ந்தோரின் கண்ணிற்படாமல் விளையாடுவதற்கான வாய்ப்புகளும் இல்லை. இத்தகைய கட்டடங்களில் இட ஒழுங்கு படுத்துதலுக்குக் கற்பனையும் புத்திசாதுரியமும் அவசியம்.

குழந்தைகள் ஒளித்து விளையாடும் மூலைகள், உணவருந்தும் இடம், குழந்தைகள் இடையீடுகளின்றி பொருட்களை உருவாக்கவும் கையாளவும் தேவையான இடங்கள் முதலியன இருக்கவேண்டும். சாதனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் பார்க்கவும் பயன்படுத்தக் கூடியனவாகவும் வைத்திருக்க வேண்டும். இத்தகைய இடங்களில் சுதந்திரமாகவும், மற்றவர்களின் உதவியின்றியும் சாதனங்களைத் தெரிவு செய்யக் கூடியதாகவும், திரும்பவும் அதே இடங்களில் வைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

குழந்தைகளின் முழுமையான விருத்திக்கு அவர்களே தெரிவுகளையும், தீர்மானங்களையும் சுயமாக மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல், பெரிய உயரமான அலுமாரிகள் இருக்குமானால் குழந்தைகளுக்கு அவை ஆபத்தாகவும் அமையலாம். அத்தோடு சுதந்திரத்தை ஊக்குவித்தல் மற்றும் சுய உதவிகள் இழக்கப்படலாம்.

குழந்தைகள் அமர்ந்திருந்து புத்தகங்களைப் பார்க்கக்கூடிய வசதி அல்லது கதை கேட்பதற்கு ஒன்றாகச் சேரும் வசதி என்பன முக்கியமானவை. ஆனால் அனேகமான பாலர் பாடசாலைகளில் குழந்தைகள் ஒளித்து விளையாடக்கூடிய இடங்கள் இருப்பதில்லை. அவ்வாறான இடங்களிலேயே குழந்தைகள் பெரியவர்களின் தலையீடின்றிச் சுயமாக விளையாட முடியும். இதன் முக்கியத்துவம் ஒக்ஸ்போட் முன்பள்ளிச் செய்திட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஒன்று சேர்ந்து விளையாடும் போது – வளர்ந்தோரின் கண்ணிற்படாத நிலையில் உயர்தரத்திலான தொடரும் வலிமைப் போட்டி விளையாட்டுகள் நிகழ்வதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வயதுப் பிள்ளைகளை பாலர் பாடசாலையில் மாணவராகக் கொண்ட ஆசிரியர், குழந்தையின் தனித்துவ அடையாளம் சார்பாகத் தனித்தும், குழுவோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகியிருத்தலும், தமது அந்தரங்கத்தையும் நெருக்கத்தையும் பேணிக்கொள்ளளலுமான அனுபவத்தைப் பெறுதல் அவசியமென செபஸ்ரியன் (Sebastian 1986) கருதுகிறார்.

வீட்டு மூலையென்பது கற்கும் சூழலின் முக்கியமான ஒரு அம்சமாகும். கற்பனை ரீதியான விளையாட்டுக்கு இது மிக அவசியமாகும். இந்தப் பின்னணி பெரிதாகவிருத்தல் குழந்தைகள் விளையாட வசதியாகும். அத்தோடு இது வளர்ந்தோரின் அவசியமற்ற உற்றுப்பார்த்தலிலிருந்து போதியளவு ஒதுக்குப் புறமாயிருக்க வேண்டும். வழமையான வீட்டைப் போன்ற பாலர் பாடசாலைப் பரப்பொன்று சற்றுப் பெரிய அளவில், பலவகைப்பட்ட தளபாடங்கள், கொளுவிகள் போன்ற சாதனங்களுடன் இருத்தல் வேண்டும்.

இக்கொளுவிகளில் அணியும் ஆடைகள் தொங்கவிடப்படல் வேண்டும். அவ்வாறானால் அவற்றை எடுப்பதும் சுத்தமாக்குவதும் இலகுவானதாகவிருக்கும். நன்கு பாதுகாக்கவும் முடியும். ஆடைகளைக் கழுவும் போதும் குழந்தைகளைப் பராமரிக்கும் போதும், வளர்ந்தோர் தமது கற்பனை விளையாட்டுகளை மதிப்பிடுகிறார்கள் எனக் குழந்தைகள் உணர்வர்.

பாத்திரமேற்று நடித்தல் (Roleplay) என்பது 'வீட்டு மூலை' விளையாட்டில் மிகமுக்கியமான செயற்பாடான போதும், சில குழந்தைகள் அந்த இடத்தைத் தேடுதலுக்கான இடமாகப் பயன்படுத்துவர். பல்வேறு கருவிகளையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் கையாள்வர். கூட்டு விளையாட்டுகளில் பலர் ஈடுபடுவர். ஏனையோர் நிரப்புதல், கிளறுதல், கலத்தல் என்பனவாகத் தமது திறன்களைப் பூரணமாக்கும் முயற்சிகளில் பங்கு கொள்வர். இங்கு 'போலச் செய்தல்' இடம்பெறும். இது தேடலின் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவடையும். இத்தகைய அம்சங்களால் குழந்தைகள் தமது சூழலில் பொருத்தப்பாடடைகின்றனர்.

கற்பனை விளையாட்டுகள், மரக்கட்டைகள் உள்ள மூலையிலும் தோற்றம் பெறுகின்றன. குழந்தைகள் தமது தயாரிப்புகளை பயமும் மற்றவர் தலையீடுமின்றிப் பாதுகாப்பதற்கு ஏற்றதான பரந்த பிரதேசம் இருத்தல் நல்லது. பாலர் பாடசாலை நாளாந்தம் திறக்கும் மூடும் நேரங்களிலும், குழந்தைகள் தமது வேலைகளை விட்டுப் போகும்போதும் பிரச்சினைகள் ஏற்படலாமாயினும், தொடர்ந்து தமது தயாரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் இருத்தல் வேண்டும். மரத்துண்டு மூலை, பிரச்சினை விடுவித்தல், கணிதக் கற்றல் என்பன நடப்பதற்கு வாய்ப்பளிக்கிறது. எண், வடிவம், தொகை, நீளம், பரப்பு, நிறை, இடம்பற்றிய அறிவு மற்றும் திணிவு போன்ற எண்ணக்கருவிகளைப் பெறுதலுக்கும் வாய்ப்பு வழங்குகிறது.

அத்தோடு உண்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இடமளிக்கிறது. குறாவும் புறூசும் (Gura & Bruce) கூறுவது போல கவர்ச்சியான கூறும் அலகுக்கட்டைகளின் பெறுமானமும் வடிவமைக்கப்பட்ட விதம் அவற்றோடு சேர்ந்து இயங்குவது காரணமாக, சுயசெயற்பாட்டின் பொருத்தமான தன்மைகள், நோக்கங்கள் சார்பாக அமைந்துவிடும். மரக்கட்டை விளையாட்டு பல கற்றல் பரப்புகளை எவ்வாறு கொண்டிருக்கும் என்பதைக் கீழ்வரும் உதாரணம் மூலம் அறியலாம்.

நான்கு வயது கொண்ட குழந்தைகள் குழுவாகச் சேர்ந்து மரக்கட்டைகளுடன் விளையாடும் பொழுது, பல அடுக்குமாடி கொண்ட வாகனத் தரிப்பிடமொன்றைக் கட்டத் தீர்மானிக்கின்றனர். அது பற்றி விவாதிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடலின் போது ஒரு குழந்தை, தனது தாயார் மோட்டார் வண்டி ஓட்டப் பழகுவது பற்றியும் சக்கர இயக்கியைச் செயற்படுத்த அவர் படும் பாட்டையும் கூறத் தொடங்குகிறது. மற்றொரு குழந்தை குறுக்கிட்டு போக்குவரத்து மேற்பார்வையாளர் பற்றித் தெரிவிக்கிறது. சற்று நேரத்தில் அவர்களது கட்டடத்தின் மூலையொன்று விழுகிறது. அப்போது ஒரு குழந்தை கட்டைகள் விழுவதை எவ்விதம் தடுக்கலாம் என ஆலோசனை கூறுகிறது.

அதுவும் ஒரு வாதத்தை ஏற்படுத்துகிறது. ஆலோசனை கூறிய குழந்தை தனது தந்தை ஒரு நில அளவையாளன் எனச் சொல்கிறது. இந்த நிலையில் அடுக்கு மாடித் தரிப்பிடம் பற்றிய கலந்துரையாடல் இடை நிறுத்தப்பட்டு, குழந்தைகள் தமது பெற்றோரின் வேலைகள் பற்றிக் கதைக்கத் தொடங்கிவிடுகின்றனர். ஒரு குழந்தை தனது தாயார் ஒரு 'றேடியோ கிறாப்'பர் எனக்கூறி அத்தொழில் பற்றிச் சரியாக விளக்கத் தெரியாமல், ஆசிரியரின் உதவியை நாடுகிறது.

ஆசிரியருடன் கலந்துரையாடல் நிகழ்கிறது. அதன்பின் ஒரு குழந்தை போய் வாகனத் தரிப்பிடத்தைக் கட்ட விரும்புகிறது. ஏனைய குழந்தைகளும் சென்று படத்தினதும், வளர்ந்தோரினதும் உதவியுடன் அக்கட்டடத்தை அமைக்கின்றனர். அது பூரணமானதும், கார்களுடன் விளையாடும் ஒரு விளையாட்டை உருவாக்குகிறார்கள். அந்த விளையாட்டு நீடிக்கிறது.

மேலே கண்ட விளையாட்டிலிருந்து குழந்தைகள் கற்றுக்கொண்டவை யாவை? குழந்தைகள் ஒன்றுகூடி வேலைகளில் ஈடுபட்டார்கள். அறிவைத் தேடினார்கள்; உலகைப் புரிந்துகொண்டார்கள்; கணிதச் சிந்தனைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடினார்கள்; ஆக்கத்திறனையும் பிரச்சினை விடுவிக்கும் திறனையும் பயன்படுத்தினார்கள்; நுணுக்கமான, மொத்த இயக்கத்திறன்களை வெளிப்படுத்தினார்கள். இங்கு கற்றலில் விரும்பிய விளைவுகள் சார்பான எல்லாக் கற்றல் பரப்புகளும் அந்த ஒரு செயற்பாட்டின் மூலம் அடையப் பெற்றன. மேலும் குழந்தைகளின் கவனமும் மனனத் திறன்களும் விருத்தியாயின. இவ்வாறு மரக்கட்டைகளுடன் விளையாடுகையில் இடம்பெறும் கற்றலை கல்வியாளர்கள் எடுத்துக்காட்டும் அம்சங்கள் மேலும் அனேகம் உள்ளன.

குழந்தைகளின் கற்றலில் முக்கியம் பெறும் சூழல் அம்சங்கள் பற்றி அடுத்து நோக்கலாம். இதில், முதலில் இடம்பெறுவது குழப்பமான பிரதேசமாகும் (Messy Area). அங்கே, மணல், நீர் விளையாட்டு நிகழும்; களிமண் பயன்படுத்தப்படும்; ஓவியம் வரையப்படும். கழிவுப் பொருள்களால் ஆக்கப்படும் கைவேலைகள் இடம்பெறும். இவையெல்லாம் அச்சமோ, தண்டனையோ இல்லாமல் இடம்பெறும். பாலர் பாடசாலைக் குழந்தைகள் இங்கு விளையாடுவதில் மகிழ்கின்றனர். சொல்லப்போனால் இத்தகைய செயற்பாடுகள் வீடுகளில் மிக அருமையாகவே நிகழ்கின்றன.

நீர், மண் விளையாட்டை இளங்குழந்தைகள் பெரிதும் விரும்புகிறார்கள். இவ்விளையாட்டு குழந்தைகளின் மனவெழுச்சித் தேவைகளைத் திருப்தி செய்கின்றது. கணித, விஞ்ஞான எண்ணக் கருக்கள் கற்கப்படுகின்றன. ஆயினும் இவ்விளையாட்டின் முழுமையான பயனைப் பெறுவதனால், அது நன்றாக ஒழுங்கு செய்யப்படவேண்டும். விளையாட்டு மூலம் கற்றலை விரிவுபடுத்த இது உதவும். இதைப் பலமுறைகளில் மேற்கொள்ளலாம். மண், நீர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்களை நிரப்புகையில் மூலப் பொருளைக் காணக்கூடியதாக விருத்தல் வேண்டும். நல்ல வானிலை நிலவும் நேரங்களில் இவ்விளையாட்டு இடம் பெறவேண்டும். சிறிய பாத்திரங்கள் இடம் பெறலாம். மாணவர் தொகையும் இயல்பாகவே வரையறுக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

ஈரமான மற்றும் காய்ந்த மணல் பயன்படுத்தப்படும் பொருட்களின் பல்வேறு இயல்புகள் பற்றிய அனுபவம் கிடைக்கிறது. ஆயினும் பல பாலர் பாடசாலைகளில் ஒரேவகை மணலே பயன்படுத்தப்படுகின்றன. மணல் அதன் நிறத்தால் மட்டுமன்றி, அமைப்பு, அடர்த்தி என்ற வகையிலும் வேறுபடலாம். இவை பற்றிய குழந்தைகளின் விளக்கத்தை – வகைகளை அறிமுகப்படுத்தலாலும், பொருத்தமான சாதனங்களை வழங்கலாலும் ஏற்படுத்தலாம். மேலும் குழந்தைகள் தாமாகவே பல்வேறு வகைகளின் ஒற்றுமை – வேற்றுமைகளைக் கண்டறிய உதவலாம். பொருத்தமான சொற்களஞ்சியத்தை அறிமுகப்படுத்தக் கூடிய, சாதனங்களின் பயன்பாடுகளைக் கூறக்கூடிய பெரியவர்கள் உடன் இருப்பதும் பூரண பயன்பெற வாய்ப்பளிக்கும்.

கற்றல் சூழலுக்கான பெறுமதியான இயல்பை மணல் தட்டுகள் கொண்டிருப்பதுபோல நீர்க்கொள் கலன்களும் பெறுமதியுடையன. இளங்குழந்தைகள் நீருடன் விளையாடுதலில் பல்வேறு பயன்கள் ஏற்படுகின்றன. நீருடன் விளையாடுவது பல குழந்தைகளுக்கு மகிழ்ச்சி தரும் அனுபவமாகிறது. இவ்விளையாட்டு சிகிச்சையாகவும் அமைகிறது. சில குழந்தைகளுக்கு, இவ்விளையாட்டில் திரும்பத் திரும்ப ஈடுபடல் அலுப்பையும் உண்டாக்கலாம். நீர் விளையாட்டு பெரும் மகிழ்ச்சி தருகிறது. கற்கும் சூழலின் முக்கியப் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் மூலம் பெறும் அனுபவம் உலகு சார்ந்த பௌதீக அறிவை மேம்படுத்த உதவுகிறது. அதுவுமன்றி, திணிவு, கொள்ளளவு போன்ற அடிப்படை எண்ணக் கருக்களைக் கண்டறியவும் நீர் விளையாட்டு துணைபுரிகிறது. ஆயினும் நீர்த்தட்டுகளைப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் நன்கு திட்டமிடல் வேண்டும்.

நீர்த்தட்டுகளில் வைக்கப்படும் பொருட்கள் மிதக்கக் கூடியவையாகவுமிருக்கலாம். புனல்கள், வடிகுழாய்கள் நீண்ட குழாய்களைப் பயன்படுத்துதல் மூலம் குழந்தைகள் நீரின் இயல்புகளை அறியும் வாய்ப்பு ஏற்படும். நீரில் குமிழிகளையுண்டாக்கல், காய்கறி நிறங்களையிடல் என்பன குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டவல்லன. அதிகநேரம் கவனத்தில் ஈடுபடாத குழந்தைகள் நீர்க் குமிழிகளை ஊதிப் பார்த்து அவதானித்து இன்புறலாம். மணல், நீர்த்தட்டுகளைத் திட்டமிடும் முறைமூலம் குழந்தைகளின் கற்றலை நீடிக்கலாம். மணல், நீர்த்தட்டுகளுக்கு அண்மையில் பணியாற்றுவோர், பொருத்தமான புதிய சொற்களஞ்சியத்தைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.

குழந்தைகள் ஓவியம் தீட்டும்; கழிவுப் பொருட்களுடன் ஈடுபடும் பகுதி 'குழப்பமான இடத்தின் மற்றொரு பிரிவாகும். கழிவுத் தொட்டி, நீர், கழிவுப் பொருள் என்பவற்றுடன் ஈடுபடும் போது, அவற்றைத் தாங்கக்கூடிய நிலமேற்பரப்பு அவசியம். ஓவியம் தீட்டுமிடம் முக்காலிகளைக் கொண்டிருக்கும். நின்று கொண்டு வர்ணம் தீட்டுவதைவிட, குழந்தைகள் இருந்துகொண்டு தீட்டுதற்கேற்றவாறு, தட்டையான மேற்பரப்பு அமைவது நல்லது. வர்ணம் தீட்டும்போது சாய்வான பரப்பானால் வர்ணம் வழிந்தோட நேரிடும். அதைக்கண்டு குழந்தைகள் விரக்தியடைய நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்களைக் கலக்கும்போது ஏற்படும் மாற்றங்களைக் குழந்தைகள் தாமாகக் கண்டறிவது முக்கியமாகும். ஆயினும் தேவையான நேரம் வளர்ந்தோரின் தலையீடும் சரியானதேயாகும். குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் நிறத்தினை வரையறைப்படுத்தல் மூலம் விரும்பிய விளைவுகள் விரைவில் பெறலாம் என குழந்தைகள் அறிந்து கொள்ளலாம்.

சில நிறங்களைச் சேர்க்கும் போது அவை எல்லாவற்றையும் மாற்றிவிடக் கூடும் என்பதைக் குழந்தைகள் தெரிந்துகொள்ளா விட்டால் அவர்கள் ஏமாற்றமடையலாம். பல்வேறு தோற்ற விளைவுகளைக் குழந்தைகள் அறிந்துகொள்ள முடியும். தாம் விரும்பியதையடைவதில் மூன்று நான்கு வயதுக் குழந்தைகள் உறுதியாகவிருப்பர். ஆயினும் தமது கருத்துகளையடைவதில் பெரியவர்களின் உதவியும் அவர்களுக்குத் தேவையாகும். கோபாலுக்கு நான்கு வயது. அவன் வரைவு பலகைக்கு முன்னே நின்றபடி அழுகிறான். ஏன் அழுகை எனக் கேட்டபோது, 'நான் அம்மாவோடு கோயிலுக்குப் போனபோது கண்டதை வரையவேண்டும். எப்படி வரைவது என்று தெரியவில்லையே?' என்கிறான். இங்கே அவனுக்குப் பெரியவர்களின் உதவி தேவைப்படுகிறது.

பல்வேறு வடிவங்களைப் பொருத்துவதற்கும் அவற்றை வெவ்வேறாக்குவதற்கும், வெட்டுவதற்கும் மீள ஒழுங்காக்குவதற்கும், அவற்றை இடம் மாற்றுவதற்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்திக் குழந்தைகளால் கற்றுக் கொள்ளமுடியும். கணித மற்றும் இடம் சம்பந்தமான எண்ணக் கருக்களைக் கற்றுக் கொள்வதற்கு இவ்வாறான செயற்பாடுகள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குழந்தைகள் பாவனை விளையாட்டில் தமது பூரணத்துவ மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர். நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட சித்திர மூலைகள், வெவ்வேறு பருமன், வடிவம், அமைப்பிலான பெட்டிகள், தாள்களைக் கொண்டிருந்தால் குழந்தைகளின் கற்றல் அனுபவங்கள் இலகுவில் சாத்தியமாகும். பாலர் பாடசாலைகளில் பிரச்சினை தீர்க்கும் கற்றல் திறன்கள், காட்டுருக்களை உருவாக்குவதற்குத் தேவையான உபாயங்கள், அடிப்படைத் திட்டங்கள், தொழில் நுட்பம் என்பன இருத்தல் பின்னர் நிகழும் கற்றலுக்கு அடிப்படையாக அமையும்.

காட்டுருக்களைப் பின்பற்றுதலில் உயர்திறன் காட்டுவோருக்கு பல்வகை மூலப் பொருட்கள் வழங்கப்படுவதோடு ஆசிரியர்களும் ஆலோசனைகள் வழங்கவேண்டும். குழந்தைகளுக்குச் சில நேரங்களில் பக்கத்தில் நிகழும் செயற்பாடுகளும் எடுத்துக்காட்டுகளாக அமையலாம். சித்திரக் கலைத்திட்டத்தைப் பொறுத்து குழந்தைகள் இறுதிப் பயனை அடைய உதவுதலும் அவசியமாகும். இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையான குழந்தைகளுக்கு அனைத்தும் செயல் ரீதியானதாகவேயிருத்தல் வேண்டும். அவர்கள் இறுதிப் பயனைக் கவனிப்பவர்கள் அல்லர். ஒரு பொருளை உருவாக்கும் நேரத்தின் முடிவில், தமது பெற்றோரைத் திருப்திப்படுத்தும் வகையில் குழந்தைகள் வீட்டுகளுக்கு ஏதாவது தயாரிப்பை எடுத்துச் செல்லவேண்டும் என்பதை வளர்ந்தோர் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

களிமண் மேசை இருக்குமிடம் குழப்பமான பகுதியின் மற்றொரு கூறாகும். இதற்குக் கூடிய செலவு ஏற்படுவதாகக் கூறிக்கொண்டு பாலர் பாடசாலைகளில் மிகச்சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களிலேயே இதனை ஏற்பாடு செய்கிறார்கள். 1977இல் முன்பள்ளிக் குழந்தைகளின் சமூகக் குறைபாடு, அறிகைத் தொழிற்பாடு சார்ந்த செயல் திட்டத்தின் ஒரு கூறாக அளவீடொன்று மேற்கொண்ட போது நிலைமை சற்று மாற்றமடைந்தது. இந்த ஆய்வின் மூலம் பாலர் பாடசாலைகளில் ஒருசில அளவிலேயே களிமண் பயன்பாட்டைக் காணக்கூடியதாகவிருந்தது.

பல பாலர் பாடசாலைகளில் முப்பரிமாண அனுபவங்களுக்காக களிமண்ணுக்குப் பதிலாக குழைத்தமாவைப் பயன்படுத்துகின்றனர். செலவு அதிகமானாலும் கூட களிமண்ணுடன் குழந்தைகள் விளையாடும் சந்தர்ப்பத்தை வழங்குதல் அவசியம்.

'குழப்பமான பகுதியில்' (Messy Area) தரை ஓடுகள் (மார்பிள்) பதிக்கப்பட்ட நிலத்தில் நீர்த்தொட்டி இருப்பதுபோல மரவேலை மேசையையும் வைத்திருத்தல் வேண்டும். இது விளையாட்டிடத்துக்கு அப்பால் தனியாக இருந்தால் நல்லது. இங்கே குழந்தைகள் உண்மையான கருவிகளையும் உண்மையான பலகைகளையும் பயன்படுத்துவதால் உண்மையான அனுபவங்கள் கிடைக்கும்; திறன்கள் விருத்தியாகும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக குழந்தைகள் கருவிகளைப் பயன்படுத்தும்போது ஆசிரியர்களின் கண்காணிப்பு மிக உன்னிப்பாயிருத்தல் வேண்டும். ஆசிரியர்களின் கவனமான மேற்பார்வை இருக்குமானால் கருவிகளால் ஏற்படும் ஆபத்துப் பற்றிப் பயம் கொள்ளத் தேவையில்லை. மாணவர்கள் கருவிகளைப் பயன்படுத்தும் ஆற்றல் உடையவர்களாக விரைவில் மாறுவார்கள். அதனால் கருவிகளைக் கவனமாக மேற்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரவேலை மேசை நன்றாக அமைக்கப்படல் வேண்டும். அங்கு பசை, இறப்பர் துண்டு, கம்பிச்சுருள், நிர்மாணச் சாதனங்கள் என்பன எளிதில் கிடைக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். கருவிகளைப் பயன்படுத்திய பின்னர் அவை இருக்கவேண்டிய இடத்தில் வைக்கப்படல் வேண்டும். குழந்தைகள் மரவேலையில் முன்னேறிச் செல்கையில் வளர்ந்தோரின் தலையீடும் தேவைப்படலாம். போதிய ஆளணியினர் இல்லையானால் பெற்றோரின் உதவியையும் இதைப் பொறுத்து ஆசிரியர்கள் நாடலாம்.

இன்று பாலர் பாடசாலைகளில் இடம்பெறும் ஒரு புதிய பகுதி கணினிப் பகுதியாகும். இளங்குழந்தைகள் கவர்ச்சியாகக் கற்கவும் அனுபவங்களைப் பெறவும் இது வாய்ப்பானது. இப்பயிற்சி மூலம் விசைப்பலகைத் (Key-board) திறன்களையும், கை-கண் இசைவாக்கத் திறன்களையும் பெறலாம். கணினிப் பயன்பாடு அறிகைத் திறன்களையும், கவனக் குவிப்பு, மனனம், ஞாபகம் போன்றவற்றிற்கும் தூண்டுதலளிக்கும். மேலும் குழந்தைகள் தமது முறை வரும் வரையும் பொறுமையாக இருக்கவும், ஒத்துழைப்புத் தரவும் இச்சந்தர்ப்பம் சாதகமாகிறது.

குழந்தைகளுக்கான தளபாடங்கள், மேசைகள், கதிரைகள் முதலியன பாலர் பாடசாலையின் உள்ளகச் சூழலாகும். இங்கு குழந்தைகள் புதிர்களை விடுவித்தல், விளையாட்டுகளில் ஈடுபடல், மேசையிலுள்ள பொருட்களைக் கையாண்டு மகிழ்தல் என்பனவற்றில் ஈடுபடலாம். குழந்தைகள் கம்பளம் விரிக்கப்பட்ட தளத்திலும் விளையாட்டுப் பொருள்களைப் பரப்பி வைத்தும் விளையாடலாம். பாலர் பாடசாலைச் சாதனங்கள் பற்றி கல்வியியலாளர்கள் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவை எழுப்பியுமுள்ளனர். ஆனால் சில்வா (Sylva), றோய் (Roy), பெயின்ரர் (Painter) ஆகியோர் 'புதிர்களும் செயற்பாடுகளும், அறிவாற்றல் சவால்களும் அதிகளவு குழந்தைகளின் கவனத்தைக் கவரக்கூடியனவாக இருத்தல் வேண்டும்' என்கின்றனர். குழந்தைகள் செயற்பாட்டில் ஈடுபடுவது மட்டுமல்ல, இறுதிப் பொருளொன்று கிடைக்கக் கூடியவாறு ஈடுபடுவதிலேயே மகிழ்ச்சியடைகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

அழகியல் சார்ந்த அம்சங்களைக் கொண்டதே வளமுள்ள கற்றலாகும். சிறந்த சூழலை உருவாக்குதல் மூலமே அழகியல் தரம் பேணப்படலாம் என்பது சிமித் என்பவரின் நம்பிக்கையாகும். அழகியல் வளத்தைப் பொறுத்து, சுத்தமான திரைச் சீலைகள், அறைச் சுத்தம் பேணல் என்பன குறிப்பிடக் கூடியன. ஆனால் இத்தகைய குழந்தைகளின் கற்றல் சூழல் கவனிக்கப்படாமல் அடிக்கடி விடப்படுவது விசனத்துக்குரியது.

விலங்குகளும் தாவரங்களும் இடம் பெறும் பிரதேசமானது ஒவ்வொரு பாலர் பாடசாலையிலும் நிரந்தரமாக இருக்கவேண்டும். இளங்குழந்தைகள் உயிர்வாழ்வனவற்றைப் பராமரித்தலும் அவை பற்றிய அனுபவம் பெறுதலும் வேண்டும். விலங்குகள் எவ்வாறு வளர்ச்சி மாற்றம் பெறுகின்றன என்ற இயல்புகளை அவர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். விலங்குகள் வகுப்பறையில் இருக்க வேண்டியதில்லை. மேற்கூறிய தனியிடத்தில் அவை இருக்கவேண்டும். பாலர் பாடசாலையில் செல்லப் பிராணிகளை வளர்த்தல், பாதுகாப்பற்ற, தைரியமற்ற குழந்தைகளைப் பொறுத்து அதிகம் ஊக்குவிக்கக் கூடியதல்ல. பொருத்தமறிந்து இவற்றை மேற்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்டவற்றைவிட, நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட கற்கும் சூழல் மேலும் சில அம்சங்களையும் கொண்டிருக்கும். அதில் ஒன்று விருப்புக்குரிய மேசைகளாகும். அதில் ஆசிரியரும் குழந்தைகளும் கொண்டுவரும் பொருட்களை வைக்கலாம். இவை, கலந்துரையாடலுக்கும் ஆய்வுக்குமான வாய்ப்புகளை வழங்கும். அவை ஒழுங்கான வகையில் மாற்றவும் படலாம். பழைய மணிக்கூடுகள், வானொலிப் பெட்டிகள் போன்றவற்றை வைப்பதற்கும் இன்னொரு மேசை இருக்கலாம். குழந்தைகள் அவை செயற்படுவதை நோக்கவேண்டும். ஏனைய மேசைகளில் குழந்தைகள் புரிந்து கொள்ளுமாறு, பொருட்களும் சாதனங்களும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

குழந்தைகள், பொருட்கள், சாதனங்களுடன் தேடலும், பரிசோதனைகளும் மேற்கொள்ளும் வாய்ப்பைக் கொடுக்கும். இது குழந்தைகளின் தொடக்க நிலைக் கற்றலில் மிக முக்கியத்துவம் பெறும்.

பாடசாலையின் இடப்பரப்பைப் பொறுத்ததாகவே இத்தகைய கண்டறிதல் (Discovery) மேசையின் தொகை அமையும். ஆரம்ப நிலையில் போதியளவு இடமில்லாமலிருக்கலாம். ஒரே நேரத்தில் இவற்றையெல்லாம் செயற்பட வைக்கவும் முடியாது. ஆகவே கிடைக்கக்கூடிய சாத்தியமான செயற்பாடுகளைத் தெரிவு செய்து அவற்றிற்கான சாதனங்களையும் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

குழந்தைகளின் பயன்படுத்தலை அவதானித்து அறைகளையோ, சாதனங்களையோ மாற்றவேண்டிய அவசியமும் ஏற்படலாம். ஒரு பகுதிச் சாதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படாமல் இருக்குமானால், மற்றொரு பகுதியில் அளவுக்கதிகமான சாதனங்கள் இருக்குமெனக் கண்டால் மாற்றங்களைச் செய்தல் அவசியமாகும்.

குழந்தைகள் ஒரே இடத்தில் எப்பொழுதுமிருந்து சாதனங்களுடன் பழக்கப்பட்டு விடுவது நல்லதாயினும் சிலவேளை அந்த நிலை அலுப்படையச் செய்யலாம். அந்த நிலையில் மாற்றம் அவசியமாகும். சில குழந்தைகளுக்கு இந்த மாற்றம் குழப்பத்தையும் ஏற்படுத்தலாம். ஆயினும் பெரும்பாலானவர்களுக்கு மாற்றமுறும் சூழல் சவால்களாக அமைவதுடன் தூண்டுதலளிக்கும் அனுபவங்களையும் வழங்கலாம். இந்த நிலையில் எவரேனும் குழப்பமடைந்தால் புதிய சூழலுக்கு அவர்கள் பொருத்தமுறுமாறு உதவிகள் தேவைப்படலாம். அதுவும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். மாற்றங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் குழந்தைள் ஈடுபட்டால், பொருட்கள், சாதனங்கள் மாற்றப்படுவது உண்மையாகவே அவர்களுக்கு உதவியாக அமையும். மேலும் அந்நிலையில் அவர்கள் புதிய சவால்களை ஏற்று மகிழ்ச்சியுமடைவர்.

**விளையாட்டிடம்**

எந்தப் பாலர் பாடசாலைக்கும் உட்புறப் பௌதீகச் சூழலும், வெளிப்புறச் சூழலும் முக்கியமானவை. இவையிரண்டும் சேர்ந்தே கற்கும் சூழலை உருவாக்குகின்றன. இந்த நிலை குழந்தைகளுக்கு ஆர்வமூட்டுவதுடன் விருத்திக்கேதுவான பொருள்களையும் வழங்குகின்றது. இந்த வயதில் விருத்தியாகின்ற திறன்களும் தேர்ச்சிகளும் வெளிப்புற இயற்கைச் சூழலிலிருந்தே கிடைக்கின்றன. தோட்டத்தில் நிலத்தைத் தோண்டுதல், பூச்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுக்களை அவதானித்தல் என்பன மூலம் படங்களைப் பார்த்தறியும் விடயங்களைவிட மேலதிகமான பலவற்றைக் குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள்.

நீண்ட காலமாக வெளிப்புற விளையாட்டிடம் பற்றிய முக்கியத்துவம் உணரப்பட்டு வந்தது. மார்க்கரட் மக்மிலன், சுசான்ஐசாக்ஸ் போன்றவர்கள் குழந்தைகள் தோண்டுவதற்கு இடம் இருக்கவேண்டும். பொருள்கள் வளர்ந்து மடிந்து போவதை அவதானிப்பதற்கும் இடம் இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளனர். வெளிப்புற விளையாட்டிடத்தின் தேவை பற்றி ஹேர்ட்வூட்டைச் சேர்ந்த லேடி அலன் என்பவரும் எடுத்துக் காட்டியுள்ளார். குழந்தைகள் நிலத்தில் தோண்டுவதை விரும்புவர். தடிகளால் குடிசைகள் கட்டுவர், உண்மைக் கருவிகளைக் கையாள்வர்.

நெருப்பு, நீர் என்பவற்றுடன் பரிசோதனையில் ஈடுபடுவர், ஆபத்துகளை எதிர்கொண்டு வெற்றி கொள்ளக் கற்றுக்கொள்வர்; மடுக்கள் தோண்டுவர். தோட்டம் அமைப்பர். செல்லப் பிராணிகளுடன் உலாவுவர், வீடுகளையும் குடிசைகளையும் கட்ட முயல்வர். நெருப்பு எரிப்பர், உணவு சமைப்பர், கழிவுப் பொருள்களுடன் விளையாடுவர், திட்டங்கள் தீட்டுவர். இவை சற்றுக் குழப்பமானவையாயினும் அவர்கள் பெரும்பாலும் நேர்த்தியான மனநிலையுடையோராகத் திட்டமிடுவோராயும், உள்ளவர்களை மகிழ்ச்சியற்றவராயும் ஆக்கிவிடக் கூடியவர்கள்.' இந்த நிலையில் குழந்தைகள் பலருக்கு வீட்டுச் சூழலில் கிடைக்கும் இடம் மட்டுப்படுத்தப்பட்டது என்பதால் பாலர் பாடசாலையில் கிடைக்கும் வெளிப்புற வசதிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையென்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டிடத்தில் இருக்க வேண்டியவை**

பாதுகாப்புள்ள போதிய இடம் குழந்தைகளுக்கு விளையாடுவதற்காக இருக்கவேண்டியது முதலாவது அம்சமாகும். அங்கு மரங்களும் புதர்களும் புல் நிலங்களும் இருக்கவேண்டியது விரும்பத்தக்கது. அங்கு குழந்தைகள் ஒளித்து விளையாடலாம். மண் விளையாட்டில் ஈடுபடலாம்.

பாலர் பாடசாலை ஆரம்பப் பாடசாலையுடன் இணைந்ததாகவிருந்தால் விளையாட்டிடம் தனியாக வேறுபடுத்தப்படல் வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் வளர்ந்த மாணவர்களின் அச்சுறுத்தலுக்கு உட்படாமல் சுதந்திரமாக நடமாடலாம். ஆரம்பப் பிள்ளை பருவக் கல்வியாளரின் கவனத்துக்குட்பட்ட அம்சம் தனிமைப்படுத்தப்பட்ட வெளிப்புற விளையாட்டிடமாகும்.

வெளிப்புறச் சாதனங்கள் குழந்தைகளில் உடல் அனுபவங்களுக்குப் பரந்தளவான வாய்ப்புகளைக் கொடுக்கும். மரம், பெட்டி, பிரம்பு, பலகை என்பனவற்றால் ஆர்வமூட்டும் அமைப்புகளை உருவாக்கலாம். கற்பனையும், திறமையும் கொண்ட மேலாளரின் உதவியுடன், பொருட்களுடன் குழந்தைகள் விளையாடலாம். மேலாளரின் ஆக்கத்திறன் உயர்மட்டத்தில் வெளிப்புற விளையாட்டுகளைத் தூண்ட முடியும்.

வெளிப்புறப் பகுதி, விளையாட்டு அனுபவங்கள் தவிர, இயற்கைச் சூழல் பற்றிக் குழந்தைகள் கற்க வாய்ப்பு வழங்கவேண்டும். தோட்டத்தில் குழந்தைகள் தோண்டலாம், விதைகளை நடலாம், அவை வளருவதை அவதானிக்கலாம். எனவே இது முக்கியமான ஒரு பகுதியாகும். இது நிலம் பண்படுத்தும் மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பையும் வழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூழல் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கவேண்டும். உள்ளேயும் வெளியேயும் குழந்தைகள் சுதந்திரமாக நடமாடப் போதிய இடவசதியிருக்க வேண்டும்.

மேலும் பெரியவர்களிடமிருந்து விலகியிருப்பதற்கும் வாய்ப்பு இருக்கவேண்டும். யாவற்றுக்கும் மேலாக அங்கு ஓய்வான, அமைதியான சூழ்நிலை நிலவவேண்டும். அங்கு குழந்தைகளின் வயதுக்கேற்ப, திறன்களையும் தேர்ச்சியையும் முழுமையாக விருத்தியாக்கவேண்டும்.

பாலர் பாடசாலை முன்னேற்பாடுகளுடன் பொருந்திய திறன்களையும் தேர்ச்சிகளையும் குழந்தைகள் பெற்றுக்கொள்ள உதவுதலில் உள்ள, வெளிப்புற பௌதிகச் சூழலை ஒழுங்குபடுத்துதல் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் கற்கும் சூழலில் மிகமுக்கிய அம்சமாக வளர்ந்தோர் காணப்படுகின்றனர். தற்காலப் பாடசாலைகளில் கிடைக்கும் பொருட்கள், சாதனங்கள் மூலம் குழந்தைகள் பெறும் முன்னேற்றத்துக்கு உதவுவதில் வளர்ந்தோரின் பங்கு பற்றி இனி ஆராயலாம்.

**வளர்ந்தோர் பங்கு**

பாலர் பாடசாலைகள் பெரும்பாலானவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட வளர்ந்தோர் இருப்பர். அங்குள்ளவர்களில் குறைந்தது ஒருவராவது தகைமை பெற்று பாலர் பாடசாலைத் தாதியாகவும் அல்லது உதவியாற்றும் பெற்றோராகவுமிருப்பர். கல்வியமைப்பில் குறைந்தது ஒரு ஆசிரியரும் தாதி ஒருவரும் இருப்பர். பெரிய பாடசாலைகளில் அதிகமானோர் இருக்கலாம். ஆரம்ப கால அமைப்பில், அவை கல்வி நிறுவனங்களாக இருந்தாலும் நாளாந்தச் செயற்பாடுகளில் சிறந்த திட்டமிடலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைப்புகளும் கோஷ்டி அணுகுமுறையிலேயே தங்கியிருக்கும்.

அங்குள்ள வளர்ந்தோர் தமது இலக்குகளை அமுல் செய்து சார்பாக ஓர் அணியாகக் கூடிக் கலந்துரையாடுவர். அங்கு வளர்ந்தோர் தமது பலத்தையும் திறன்களையும் வெளிப்படுத்துவர்.

ஆரம்ப வருடக் கல்வியூட்டுபவரின் பங்கு பரந்துபட்டதாகும். குழுத்தலைவர் என்ற ரீதியில் ஒவ்வொரு குழந்தையினதும் தேவையை நிறைவு செய்யும் வகையில் சுற்றாடல் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யவேண்டும். கல்வியூட்டுபவர் பாலர் பாடசாலையமைப்பில், திட்டத்தையும் ஒழுங்கமைப்பையும் தீர்மானிப்பதில், பாலர் பாடசாலை இலக்கு, நோக்கங்களை மட்டுமின்றி, குழந்தைகளின் கல்வியில் விருத்தி செய்யப்படவேண்டிய திறன்களிலும் தேர்ச்சிகளிலும் கவனம் செலுத்தவேண்டும்.

எல்லாக் குழந்தைகளுக்கும் பாலர் பாடசாலைக் கல்வி இலக்குகள் ஒன்றாகவிருந்தாலும், கற்கும் சூழலிற் காணப்படும் வலியுறுத்தல்கள் குழந்தைகளின் தேவைகளுக்குத் தக மாறுபடும். உதாரணமாக மாடி வீடுகளிலிருந்து வரும் குழந்தைகளுக்கு திட்டமிடப்பட்ட கற்கும் சூழல் முழுமையான இயக்கத் திறன்களை விருத்தி செய்வதில் பெரும் அழுத்தத்தைக் கொடுக்கும். உட்புறம், வெளிப்புறம் ஆகிய இரண்டு விளையாட்டிடங்களிலும் இடம்பெறும் கட்டுப்படுத்தப்படாத நடமாட்டங்களிலும் பார்க்க பெரிய தோட்டங்களிலும் இடங்களிலும் சுதந்திரமாக ஓடி விளையாடக்கூடிய வீடுகளிலிருந்து வரும் குழந்தைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒன்றைத் திட்டமிடலாம். குழந்தைகளுக்குப் பரந்த அளவிலான பல புலன்சார் பொருள்களும் செயற்பாடுகளும் வழங்கப்பட வேண்டும். குழந்தைகள் பெறுமதி வாய்ந்த கல்வி சம்பந்தமான அனுபவங்களைப் பெற வேண்டுமானால் அப்படியான பொருள்கள், சிந்தனைகள் திட்டமிடப்பட்டு வழங்கப்படல்வேண்டும். இது ஆசிரியர்களுக்கு முக்கிய பிரச்சனைக்குரிய அம்சமென மக்விக்கேர்ஸ் ஹன்ட் (Mc Vickers hunt) குறிப்பிட்டு, இது பொருந்துதல் சார்பான பிரச்சினையென்கிறார்.

குழந்தைகளின் தனியாள் வீறுகளுடன் செயற்பாடுகள் பொருந்த வேண்டியதில்லையானாலும் திறன்களையும் புரிந்துணர்வையும் விருத்தியாக்கும் வகையில் அவை அமைக்கப்படல் அவசியமாகும். குழந்தைகளின் ஆற்றல் விருத்தியை விரிவாக்கத் தூண்டும் வகையில் வளர்ந்தோரும் இலகுபடுத்துபவராகவும், இயலுமானவராகவும் அமைதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கற்பனை விளையாட்டில் இறங்கியிருக்கும் ஒரு குழந்தைக்கு அருகில் சாதனம் ஒன்றின் பகுதியை உபாய நோக்கில் வைக்கும்போது அந்த விளையாட்டில் நீடித்திருக்கவும் அதன் பரிமாணங்களை அறிமுகம் செய்யவும், கற்பனையாற்றலை அறிமுகம் செய்யவும் உறுதியேற்படுகிறது. அதுபோல, ஒரு காட்டுருவை உருவாக்கலில் பிரச்சினையை எதிர்நோக்கும் குழந்தைக்கு குறிப்பிட்ட சாதனத்தை எப்படிப் பயன்படுத்தலாமெனச் சில வகை ஆலோசனைகளை வழங்கியுதவலாம்.

கற்பிக்கும் ஒருவர் குழந்தைகள் சுயமாக ஆராய்வதற்கு ஊக்குவித்தல் மூலம் இலகுபடுத்துபவராகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படலாம். சிறந்த முன்பிள்ளைப் பருவக் கல்வியாளரான சுசான் ஐசாக்ஸ் இதற்கான எடுத்துக் காட்டொன்றைக் கூறியுள்ளார். இறந்துவிட்ட முயல் ஒன்றின் தோல், நகம் என்பவற்றிற்கு என்ன நிகழும் என அறிவதில் குழந்தைகளுக்கு ஆர்வம் ஏற்பட்டது.

குழந்தைகளின் ஆர்வத்தைத் திருப்தியாக்கும் வகையிலும் அடிப்படை விஞ்ஞான விசாரணையை முன் வைக்கும் நோக்கிலும் சாத்தியமான விடயம் ஒன்றைச் செய்யுமாறு ஐசாக்ஸ் ஊக்கமூட்டினார்.

குழந்தைகள் தமது சொந்த அனுபவம் வாயிலாகக் கற்க விரும்பும் அவர்களுக்குத் தாமாகவே விலங்குக்கு என்ன நடந்தது எனக் கண்டுபிடிக்க உதவினார். எனவே பாதுகாப்பான நிலைமையை ஏற்படுத்தும்போது அவர்களே தேடியறிவார்கள். விசாரணை செய்வர், வினாவெழுப்புவர். தமது தேடுதலால் ஏற்பட்ட உணர்வுகள் மூலம் களிப்படைவர்.

குழந்தைகள் நாளாந்தச் செயற்பாடுகளில் இறங்கும் பொழுது, கடந்த கால, எதிர்கால நிகழ்வுகளுக்கு இடையே அனுபவங்கள் விரிவுபடுத்தல், தொடர்புகளுக்கான பொருத்தமான உபாயங்களைத் திட்டமிட்டு வழிகாட்டல் உதவுதல் என்பன வளர்ந்தோரின் கடமையாகும். இவ்வாறான உதவி முக்கியத்துவமுடையது. இது 'ஹைஸ்கோப்' (High Scop) என்னும் நிகழ்ச்சித் திட்டத்தில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இது செயலாற்றல் மிக்கது. வழிகாட்டப்படும் விளையாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது.

குழந்தைகள் தமது செயல்களைத் திட்டமிட வளர்ந்தோர் உதவி செய்யும் போது, பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுகளையும் மீள்பார்வை செய்வதாகிறது. இவ்வாறு வளர்ந்தோர் அமைப்புச் சட்டகம் ஒன்றினை வழங்குவதாக புறூனர் (Brouner 1980) குறிப்பிடுகிறார்.

குழந்தைகள் தெரிவுகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்ள அங்கு வளர்ந்தோரின் ஈடுபாடு பெறுமதி வாய்ந்ததாக அமையும். அத்தோடு சந்தர்ப்பங்களின் போதெல்லாம் வளர்ந்தோரின் தலையீடு, கல்வி உள்ளடக்கச் செயற்பாட்டை அல்லது அனுபவத்தை விருத்தி செய்வதாக அமையும்.

குழந்தைகளுக்கேயுரிய, ஆர்வத்தேடல், பிரமிக்கும் இயல்பு என்பவற்றைக் கெடுத்துவிடாமல் இருப்பதானால் இத்தகைய தலையீடும், உணர்வுகளும் அவசியமாகின்றன.

வளர்ந்தோர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குழந்தைகளுக்கே அந்த நேரம் உரியது என்பதை ஒப்புக்கொள்ளல் வேண்டும். அது கல்விக்கானது என்பது பொருந்தாது.

ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் குழந்தைகள் நீண்ட நேரத்தைச் செலவிடலாம். ஆர்வத்தையும் கவனத்தையும் காட்டலாம். ஆயினும் பாடசாலை நாட்களில் வளர்ந்தோர் சுமத்தும் செயற்பாடுகளையும் புறக்கணிக்க முடியாது. அவை அவசியமானவை. குறிப்பிடத்தக்க திறன்களும் தேர்ச்சிகளும் அவற்றில் இருக்கலாம். அவற்றையும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யவேண்டும். புதிதாகப் பெற்றுக்கொண்ட திறன்களை விளையாட்டின்போது நிறைவாக்கிக் கொள்ள ஆசிரியர் தருணம் வழங்கவேண்டும். பிளௌடன் அறிக்கை குறிப்பிடுவது போல விளையாட்டு பிள்ளைப் பருவத்துக்குரியது... முன் பிள்ளைப்பருவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலுக்கும் விளையாட்டே அடிப்படையாகும். இதனை எதிர்ப்போர் பெரும்பாலும் இல்லை. ஆனால் விளையாட்டில் வளர்ந்தோர் தலையிட வேண்டுமா? தலையீட்டின் தாக்கங்கள் எவை? என்ற வினாக்களும் எழுகின்றன. சில்வா, ரோய், பெயின்ரர் (Silva, Roy, Painter-1980) ஆகியோர் தமது ஆய்வில், வளர்ந்தோருடன் விளையாடுதல் அறிவாற்றல் ரீதியாக ஏனைய பிள்ளைகளுடன் விளையாடுவதிலும் பார்க்க கூடுதலான தூண்டுதல் அளிப்பதாகக் காட்டியுள்ளனர்.

கொறினி ஹட் (Corinne Hutt) என்பவர், 'குழந்தைகளின் விளையாட்டுகளை, ஆராய்ச்சி விளையாட்டுகள், விநோத விளையாட்டுகள் என இரண்டு பிரிவாக வகுக்கலாம்' எனக் குறிப்பிடுகிறார். ஆராய்ச்சி விளையாட்டின் போது குழந்தைகள் கற்கிறார்கள். குழந்தை, ஆராய்ச்சி, பிரச்சினை தீர்த்தல் என்பனவற்றில் அனுபவங்களைச் சவால்களுடன் எதிர்கொள்ளும்போது அந்த அம்சம் பற்றிய உள்ளார்ந்த விளக்கத்தைப் பெற வளர்ந்தோரின் உதவி தேவைப்படலாம். சவாலுடன் குழந்தைகள், உடன்பாடடையும் பொழுது கருவிகளைக் கையாண்டு கற்பனை நிலைமைகளையும் உருவாக்குவர். ஹட் கூறுவதன்படி மிகச் சிறிதளவான மேலதிகக் கற்றலே இடம் பெறுகிறது. ஹட்டினால் வினோத விளையாட்டுகள் எனக் கூறப்பட்டவை சிறு நோக்கமுடைய கற்பனை விளையாட்டுகளாகும். அவரின் கருத்துப்படி வளர்ந்தோரின் தலையீடு குறைந்த துலங்கலையே தரும்.

பின்வரும் எடுத்துக்காட்டின்படி வளர்ந்த ஒருவரால் தொடங்கி வைக்கப்பட்ட சவாலுக்குரிய அனுபவம், நான்கு வயதுக் குழுவினரால் பிரச்சினை தீர்க்கும் நிலையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோத விளையாட்டாக மாற்றப்பட்ட பின், குழந்தைகள் சவாலில் புலமை பெற்றனர்.

ஐந்து மீட்டர் நீளமும் இரண்டு மீட்டர் அகலமும் அரை மீட்டர் ஆழமும் கொண்ட குழியொன்றின் அருகே கூடிய குழந்தைகளிடம், அது ஒரு ஆழமான நதியெனக் கற்பனை செய்யுமாறு கூறப்பட்டது. அதனைக் கடக்கவேண்டுமெனவும் சொல்லப்பட்டது. குழந்தைகள் அது பற்றிக் கலந்துரையாடவிடப்பட்டனர். கயிறுகள் பலகைத் துண்டுகள், டயர்கள் என்பன அங்கு வைக்கப்பட்டு, பிரச்சினை தீர்க்க அவை உதவலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. அடுத்து நாற்பது நிமிடங்களில் ஆற்றைக் கடக்கும் வழி குழந்தைகளால் தேடப்பட்டு, அவசியமான நேரத்தில் ஆசிரியருடனும் கலந்துரையாடப்பட்டது. குழந்தைகள் மனம் சோர்ந்து போகவிடாது, குழந்தைகள் தாமாக வழி கண்டுபிடிக்க வழிகாட்டல்களை வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டனர்.

படிப்படியாகக் குழந்தைகள் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டனர். உடற்குறைபாடுடைய குழந்தைகளின் சில்லு நாற்காலியின் கால்கள் வைக்கும் பலகைகள் இரண்டினைப் பயன்படுத்திப் பாலம் கட்டப்பட்டது. இரு பலகைகளும் ஆற்றின் அகலத்துக்குப் போதுமானதாயிருந்ததால் அவர்கள் அமைத்த பாலத்தின் மேலாக ஆற்றைக் கடந்து வெற்றிகரமாகக் கரையை அடைந்தனர்.

மேலே கூறப்பட்ட விடயம் கொறினிஹட் என்பவரின் கொள்கை பற்றிய விளக்கமாகும். இதில் பிரச்சினை தீர்க்கப்பட்ட போது, குழந்தைகள் பாதுகாப்பாக ஆற்றைக் கடந்தனர். அடுத்த விஞ்ஞான பூர்வமான மற்றொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்ட பின்னர், அந்தப் பாலம் ஒரு தோணியாக மாற்றப்பட்டது.

சில பலகைத்துண்டுகள் துடுப்பாக மாற்றப்பட்டன. குழந்தைகள் பாடியவண்ணம் ஆற்றைக் குதூகலமாகக் கடந்தனர். இப்புதிய செயற்பாடு குழந்தைகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியளித்தது. மொழிப் பயன்பாடு அதிகரித்தது. கணிசமான அளவில் வினோதமான விளையாட்டாகவும் மாறியது. இதனையடுத்து பல சந்தர்ப்பங்களில் தோணி கற்பனை விளையாட்டின் மையமாக அமைந்தது.

ஆசிரியரின் பங்களிப்பு மாணவர்களின் கற்றலில் எவ்வாறு அமைந்தது என இங்கு நோக்கலாம். முதலில் இவ்விளையாட்டுப் பற்றிய முழுச் சிந்தனைக்கும் பொறுப்பானவர், வளர்ந்தோரான ஆசிரியராவார். கதையில் வரும் ஆறு எனக் கற்பனையாகக் கருதப்பட்ட குழியும் கதையும் ஆசிரியரிடமிருந்து உருவானவை. குழந்தைகளும் ஆர்வம் காட்டினார்கள்.

இச்செயல் திட்டத்தைப் பொறுத்து ஆசிரியர் பின்னணியிலிருந்து வினாக்களுக்கு விடை பகர்ந்தும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் கலந்துரையாடலில் பங்கு கொண்டும் குழந்தைகளின் கற்பனைக்குத் தூண்டுதலானார். ஆசிரியரின் வகி பங்கு இங்கு இலகுபடுத்துபவராக (Faciliatator) இருந்தது.

ஆசிரியரின் இவ்வாறான பங்களிப்பு குழந்தைகளின் கவனத்தில் சாதகமான விளைவைக் கொணர்ந்தது. ஆசிரியர் கூட இருந்து பணியாற்றியதால் அவரின் பங்களிப்பின் பெறுமதியைக் குழந்தைகளாலும் உணர முடிந்தது. பாலம் கட்டப்பட்டபோது தமது வெற்றியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தோருடன் குழந்தைகள் பகிர்ந்து கொண்டனர். அதனை அடுத்து இடம் பெற்ற வினோதவிளையாட்டில் ஆசிரியரின் உதவியின்றிக் குழந்தைகள் தாமே செயற்பட்டு வெற்றி கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

மரபுரீதியான ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியியலாளர்கள் பிள்ளைகளின் வினோத விளையாட்டுகளில் தலையிடாக் கொள்கையை மேற்கொண்டனர். இப்பொழுதோ, விளையாட்டினூடாகக் கற்பித்தலில் வளர்ந்தோர் தலையிடுதல் பெறுமதிமிக்கதாக இருக்கும் என்று கருத்து முன் வைக்கப்படுகிறது. இதற்குச் சில சான்றுகளும் உள்ளன. சமூக ரீதியாகப் பின்தங்கிய குழந்தைகளுக்கு இது நன்மை பயக்கும். எனினும் தலையீட்டை மிகக் கவனமாக மேற்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் நாட்டில் சமூகரீதியாகப் பின்தங்கிய குழந்தைகளுடன் பணியாற்றிய 'சாரா சிமிலான்ஸ்கி' (Sara Smilansky - 1968) என்பவர், 'விளையாட்டுப் போதனை'க்கு (Play tutoring) ஆரம்பத்திலிருந்தே ஆதரவளித்த கல்வியறிஞராவார். இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களை ஒழுங்குபடுத்துதல், வினாக்கேட்டல், குழந்தைகளுடன் கலந்துரையாடுதல் போன்ற தலையிடும் உபாயங்களை விளக்கியிருந்தார்.

சமூக நாடக விளையாட்டுகள் பிற்காலத்தில் கற்கும் ஆற்றலில் நல்ல விளைவுகளை ஏற்படுத்துமெனக் கருத்து கொண்டிருந்தார். ஆனாலும் இஸ்ரவேல் நாட்டில் தமது கல்விப்பணிகளில் சாதகமான விளைவுகளைக் கண்டபோதும் விளையாட்டுகளில் தலையிடத் தயக்கம் காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போதனையானது ஆசிரியரின் வகிபங்கை 'இலகுபடுத்துபவர்' என்ற நிலையிலிருந்து பங்கேற்பவராக விரிவுபடுத்துகிறது. இலகுபடுத்துபவராக வளர்ந்தோர் இருக்கும் நிலையில் கற்பனையைத் தூண்டும் ரீதியில், பொருட்களையும் அனுபவங்களையும் வழங்கிச் சூழலை ஒழுங்கமைக்கிறார்கள்.

ஆனால் தலையிடும் வகி பங்கு எனும் போது ஆசிரியர் விளையாட்டுச் செயற்பாட்டில் ஒரு அங்கமாக மாறுகிறார். அவர் விளையாட்டு நடத்தை வகி பங்கையும் ஏற்று மாதிரியாகவும் இருக்கிறார். வினோத விளையாட்டுகளில் வளர்ந்தோர் நீண்ட நாளாகப் பங்கு பற்றி வந்துள்ளனர்.

ஆசிரியர், கவனமாக அவதானித்ததன் பின் விளையாட்டின் முக்கிய பகுதிகள் தவறவிடப் பட்டுள்ளனவெனக் கருதினால், அதனைத் தெளிவுபடுத்துதற்காகத் தலையிடலாம். விளையாட்டை விரிவுபடுத்தலாம். சமூக நாடக விளையாட்டின் கூறாக மாறுவதற்கு வளர்ந்தோர் ஒரு வகி பங்கையும் அந்த வகையான நடத்தை மாதிரியையும் ஏற்கவேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

வினோத விளையாட்டுகளில் தலையிடுதல் மொழிகற்றலுக்கும் பிரச்சினை தீர்த்தல் செயற்பாடுகளுக்கும் உதவலாம். இளங்குழந்தைகளின் அறிக்கைக் கூறுகளுக்கும் சமூக எழுச்சி சார் விருத்திக்கும் உதவலாம். இதற்காக, இளங்குழந்தைகளுக்குக் கல்வியூட்டுவோருக்கு விளையாட்டுப் பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும். அப்படியானால் குழ்ந்தைகளின் விளையாட்டுத்தரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுபூர்வமாக ஏற்படுத்த முடியும். அத்துடன் தலையீட்டு அணுகுமுறையை புலக்காட்சி, அனுதாபம், அகக்காட்சி என்பனவற்றுடனான புரிந்துணர்வுடன் மேற்கொள்ள வேண்டும்.

வளர்ந்தோர், பொருட்கள், கருத்துகள் வழங்குபவர் என்பதோடு மேலதிகமாக மற்றொரு வகி பங்கையும் வகிக்கவேண்டும். அது பேச்சு, சமூக மாதிரி என்பதாகும். வளர்ந்தோர் பேசுவதைக் கேட்பதால், குழந்தைகள், மொழியின் சரியான வாக்கிய ஒழுங்கமைப்பைக் கற்பது மாத்திரமின்றி, தேவையான சொற்களஞ்சியத்தையும் பெறுகிறார்கள். அத்துடன் குரலின் ஒலித்தல் வேறுபாடுகளை (ஏற்ற, இறக்கம்) அறிவதோடு அதன் முக்கியத்துவத்தையும் உணர்கிறார்கள். மேலும் பல்வேறு சமூக நிலைமைகளுடன் எவ்வாறு இணைந்து போகவேண்டும் என்பதையும் அறிகிறார்கள்.

வளர்ந்தோரின் புகழ்ச்சி, ஏற்றுக்கொள்ளல், விமர்சனங்கள் போன்றவற்றைச் செவிமடுக்கும் போது, பல்வேறு நிலைமைகளில் ஒழுகக்கூடிய நடத்தைகளையும் கற்றுக் கொள்கின்றனர்.

சுசான் ஐசாக்ஸ் கூறுவது போல, குழந்தைகளுக்கு, சரியான விளையாட்டுப் பொருள்களைத் தேடியெடுப்பதற்கான திறன்சார் உதவியும் தேவைப்படுகிறது. அதிலும் மேலாக, தம்மைச் சுற்றியுள்ள உலகைக் கற்கவும், விளங்கிக் கொள்ளவும் வேண்டிய தேவையுமுள்ளது. அத்தோடு தமது சமூக விரோதச் சக்திகளையும் சமாளித்து அடக்கவேண்டும்.

இளங்குழந்தைகள் தமது கோப உணர்வுகளின் வீறுகண்டு அடிக்கடி பயம் கொள்வதுமுண்டு. ‘அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரமானவை; கொடியவையல்ல' என வளர்ந்தோர் எடுத்துக்காட்டி உறுதிகூறவும் வேண்டியுள்ளது.

குழந்தைகள் தமது நாளாந்த வாழ்க்கையில் சந்திக்கும் பல்வேறு நிலைமைகளைச் சமாளித்துச் செல்ல வளர்ந்தோர் முன்மாதிரியாக இருந்து உதவுதல் வேண்டும். பாலர் பாடசாலை ஆளணியினரும் பெற்றோரும் குழந்தைகளைப் பொறுத்து முன்மாதிரியாகவும், சமூக நடத்தையில் தரம் பேணுபவராகவும் இருக்கவேண்டும். பாலர் பாடசாலையிலுள்ள வளர்ந்தோர் உறுதியான நடத்தையிலும் பேச்சிலும் எடுத்துக்காட்டாக இருப்பதோடு பிரச்சினைக்குரிய குழந்தைகள்கூட படிப்படியாக தமது எல்லைக்குள் நிற்பதோடு நடத்தைகளையும் சீராக்க முயல்வர்.

இளங்குழந்தைகள் கற்கும் சூழலில் வளர்ந்தவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும். இதே தசாப்தத்துக்கு முன்னரே பரி என்பாரும் ஆக்சர் என்பாரும் (Parry and Axcher) பின்வரும் அம்சத்தைக் குறிப்பிட்டுள்ளனர். அது அன்று போல இன்றும் உகந்ததாகவே காணப்படுகிறது.

இளங்குழந்தைகளின் ஆசிரியர்கள் சில குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். பிரச்சினைக்குரிய இயல்பு கொண்ட தமது பொறுப்புகளை அவர் எதிர்கொள்ள வேண்டும். உண்மையான மனிதத்துவமுடைய சிலர் அவருக்குத் தேவை. அவர் குழந்தைகளை விரும்புபவராக இருக்கவேண்டும். குழந்தைகளின் நன் மதிப்பைப் பெற்றவராக இருக்கவேண்டும். அத்தோடு குழந்தைகளால் நல்லது ஆகவேண்டும் என்ற உறுதியுமுடையவராக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சிறந்த கண்ணோட்டமும், உணர்வு பூர்வமான அனுதாபமும் கற்பனையுமுடையவராக இருக்கவேண்டும். ஆசிரியர் துறை சார் அறிவில், தனிப்பட்ட ரீதியிலும், தொழில் சார் ரீதியிலும் நன்கு புலமைத்துவ முடையவராக இருக்கவேண்டும். புரிந்துணர்வும், திறன்களும் கொண்டிருக்கவேண்டும். அவர்களது விருத்திக் கட்டங்களை குழந்தைகளுக்கு மறைமுகமாக எடுத்துச் சொல்லவேண்டும். அவ்விருத்திக் கட்டங்கள் குழந்தைகள் பற்றிய விளக்கம் பெறவும், குழந்தைகளைக் கையாள்வதற்கும், அதற்கான விறலை விருத்தியாக்குவதற்கும் அவசியமானது.

மேலே சொல்லப்பட்டவை பற்றித் திறனாய்வாளர்களுக்கிடையே முரண்பாடுகள் இருக்கலாம். ஆயினும் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வித்துறையில் பணிபுரிவோர் மேற்கூறப்பட்ட பண்புகளில் தகைமை பெறுதல் அவசியம் என்பதை ஒப்புதல் வேண்டும்.

குழந்தைகள் கற்கும் சூழல், ஒவ்வொருவரினதும் தேவையை நிறைவாக்க ஆயத்தமானதாக அமைதல் வேண்டும். ஆற்றலுள்ள குழந்தைகள் செயற்படுவதற்குத் தூண்டப்படுவதற்கான வாய்ப்புகள் போதிய சவாலுக்குரியனவாக இருத்தல் வேண்டும். அதேவேளை மிகப் பின்தங்கிய குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தியாக்க வல்ல போதிய பாதுகாப்பும் இருத்தல் அவசியமானது. வழிகாட்டப்படும் விளையாட்டுகளுக்கான தருணங்களும், சூழலையறிந்து அவைபற்றிப் பேசுவதற்கான காலமும் இடமும், குழந்தை எவ்வாறு கற்க வேண்டும் என்பதையறிய உதவும். தற்போதைய நிலையில் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியாளர்கள் குறிப்பிடப்பட்ட கற்றல் விளைவுகளை அடைதல் வேண்டும் என்பதற்கு அழுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படுகிறது. அதனால் குழந்தைகள் சாதாரண வழிமுறைகளை அணுகும்படி உந்தப்படுகிறார்கள். அப்படியான அணுகுமுறை அவசியமற்றதும் பொருத்தமற்றதுமாகும்.

குழந்தைகள் பலர் விளைவுகளையடையும் தருணத்தில் அவர்கள் சட்டபூர்வமாக பாடசாலைக்குப் போவார்கள். அங்கு குழந்தைகள் சுயமாகக் கற்பதற்கான வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டும். அங்கு கற்கும் செயல் முறைக்கே பெறுமானமளிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 4

# படைப்பாற்றல், அழகியல் திறன்கள்

'நீங்கள் வித்தியாசமானவர்களாக இருப்பதற்குத் துணிந்தால்தான், படைப்பாற்றலுடையவர்களாக ஆகமுடியும்' இந்தக் கூற்று கிளக்ஸ்ரன் (1984) என்பவரால் தரப்பட்டதாகும்.

படைப்பாற்றல், அழகியல் என்னும்போது இவற்றை முக்கியத்துவம் குறைந்தவையாகவோ, குறைந்த கவனம் செலுத்தப்பட வேண்டியவையாகவோ கருத வேண்டியதில்லை. ஆனால் இன்றைய நிலை இதற்கு நேர்மாறானதாகவும், விஞ்ஞானம், மருத்துவம், வர்த்தகம் முதலிய துறைகள் சிலாகித்துப் படுபவையாகவும் காணப்படுகின்றன.

மேலும் இன்றைய கணினித் துறையின் செல்வாக்கு குழந்தைகளின் படைப்பாற்றலையும் அழகியல் திறன்களையும் புறக்கணிக்கச் செய்யும் பேரபாயத்தையும் ஏற்படுத்திவிடக் கூடும் என்ற அச்சம் தோன்றச் செய்கிறது. இந்த நிலையில் கணினித்துறையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் படைப்பாற்றலானது புறக்கணிக்க முடியாத அளவு முக்கியத்துவமுடையதென்பது உணரப்படல் வேண்டும்.

குழந்தைகளிடம் படைப்பாற்றல், அழகியல், விழிப்பை விருத்தி செய்தல் என்பது, அவர்கள் தமது உணர்வுகளை இசையும் அசையும், சித்திரம், நாடகம், கதை சொல்லல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவை யூடாக ஏனையோருடன் தொடர்பு கொள்ளல் தெரியப்படுத்தல் ஆகிய செயல்கள் உள்ளடக்கப்பட்டதாக அவர்களைச் சூழவுள்ள உலகைப்பற்றிய யதார்த்த உணர்வறிவையும் விருத்தி செய்தல் என்ற அருத்தத்தோடேயே கருதப்படல் வேண்டும்.

இன்றையத் தொழில் நுட்பக் காலகட்டம், பிரச்சினைகளை நவீன நோக்கில் அணுகும் படைப்பாற்றல் சிந்தனையாளர்களையே அவாவி நிற்கிறது. அத்தோடு தம்மைச் சுற்றியுள்ள அழகு பற்றிய விழிப்புணர்வையும், உணர்திறனையும் கொண்ட மக்களையும் வேண்டி நிற்கிறது. அழகியல் உணர்திறன்களையும், சுய வெளிப்பாட்டுக்கான வழிமுறைகளையும் விருத்தி செய்ய வேண்டியது அடிப்படை முக்கியத்துவமுடையதாகும்.

மற்றவர்களின் அழகியற்சாதனைகளை விளங்கிக்கொண்டு அவற்றுக்குத் துலங்குதற்குக் கற்றுக் கொள்வதனூடாக நாம் உயர் கலையியல்புடன், படைத்தல், ஆற்றுதல், துலங்குதல் என்பவற்றைச் சாத்தியமாக்கிக் கொள்ளமுடியும். அதன் பயனாக எமது சூழல் பற்றிய முழுமை நோக்குடன் நடந்து கொள்ளவும் முடியும்.

படைப்பாற்றல்களையும், அழகியல் திறன்களையும் இளங்குழந்தைகளிடம் விருத்தியாக்க வேண்டிய பொறுப்பு, இவ்வாறான அணுகுமுறைகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, தம்மைச் சூழவுள்ள உலகின் அழகை நயக்கத் தெரிந்த ஆசிரியர்களையே அவாவி நிற்கிறது.

**சித்திரம் மூலம் தொடர்பாடல் விருத்தி**

கடதாசித்தாளில் எதையாவது கிறுக்குதல் அல்லது அடையாளமிடல் மூலம் சிறுவயதுக் குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைகின்றனர். இந்தக் கட்டத்தில் குழந்தை தனது கிறுக்கல் அல்லது அடையாளமிடல் மூலம் எதையாவது பிரதிபலிக்க முயல்வதாகத் தெரியவில்லை. குழந்தை தனது செயற்பாட்டில் ஈடுபடல் மூலம் நயக்கிறது. அல்லது வெறுமனே இரசனை பெறுகிறது. இவ்வாறு கிறுக்கல் அல்லது அடையாளமிடும் செயல் மூலம் குழந்தை இன்புறுகிறதா? அல்லது அக்கிறுக்கல்கள் குழந்தைகள் இன்புறக் காரணமாக இருக்கின்றனவா? என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

கிப்சனும் யோனசும் (Gibson Yonas - 1968) இரு வெவ்வேறு எழுதுகோல்களைக் குழந்தைகளிடம் கொடுத்தனர். ஒன்று எழுதக்கூடியது. மற்றது எழுத முடியாதது. எழுதமுடியாத எழுதுகோலைப் பெற்ற குழந்தைகள் தமது செயற்பாட்டை உடனே கைவிட்டுவிட்டனர். எழுதக்கூடிய எழுதுகோலைப் பெற்ற குழந்தைகள் கிறுக்கி மகிழ்தலில் ஈடுபட்டனர். எனவே கீறல் அடையாளத்தைக் கண்டு மகிழ்தலே குழந்தைகளுக்கு இன்பமானது என்ற முடிவுக்கு வரலாம்.

கீறும் செயல் இன்பத்துக்குக் காரணமல்ல. கீறும் செயலால் ஏற்படும் அடையாளமே குழந்தைகளின் இன்பத்துக்குக் காரணமாகும். நடை பழகும் குழந்தை கூட, தான் கண்டெடுப்பது மையில்லாத பேனாவானால் அதனைத் தூர வீசிவிடலாம்.

தாளில் அடையாளமிடலில் இன்பம் காணும் குழந்தைகள், தொடர்ந்து அதனையே மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும். அத்தோடு அக்கிறுக்கல்கள் ஓர் ஒழுங்கு வரிசையில் முன்னேறுவதையும் காணலாம். றோடா கெல்லொக் என்பவர், (Rhoda Kellag 1963) இரண்டு வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையுள்ள குழந்தைகளிடம் இருபது அடிப்படைக் கிறுக்கல் கோலங்களை அடையாளம் கண்டுள்ளார். அக்கோலங்கள் வட்டங்களையும் சதுரங்களையுமுடையனவாக விருந்தன. இவை பிற்காலப் பிரதிபலிப்புகளுக்கு அடிப்படையாகவு மிருந்தன. இவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளாது போகலாம். கொக்ஸ் (Cox-1997) என்பவர் தமது ஆய்வுகளின் அடிப்படையில், "எல்லாக் குழந்தைகளும் கிறுக்கல் செயற்பாட்டில் ஈடுபடமாட்டார்கள், கிறுக்கல், வரைதலின் ஓர் அவசியமான கட்டமல்ல" எனக் குறிப்பிடுகிறார். இத்தகு அனுபவங்களில்லாமை குழந்தைகளுக்குப் பிரச்சினையாக அமையாது எனவும் கூறுகிறார்.

கிறுக்குதல் அனுபவம் பெறாத குழந்தைகளும் எல்லாச் சமூகங்களிலும் உள்ளனர். ஆனால் அவர்களும் எழுது கருவிகள் கிடைத்தபோது, இனங்காணக் கூடிய உருவங்களை அரைமணி நேரத்துக்குள்ளாகவே கீறி முடித்தனர். மேற்குநாட்டுக் குழந்தைகளிடம் காணப்படும் வரைதல் விருத்தி ஏனைய சமூகக் குழந்தைகளிடம் காணப்பட்டன என்பதற்கும் ஆதாரமில்லை என்ற அலெக்சாண்டர் அலன்ட் (Alexander Alland-1983) என்பவரின் ஆய்வினை கொக்ஸ் குறிப்பிடுகிறார். வட்டங்களையோ, வட்ட உருவங்களையோ கிறுக்குவதில் உலகளாவிய ஒருமைப்பாடு காணப்படவில்லை என்பதும் அலண்டின் கூற்றாகும்.

பேனா முதலிய வரைதல் உபகரணங்கள் கிடைத்த சில குழந்தைகள் பிரதிநிதித்துவ வரைதலை மிகச் சிறிய வயதிலேயே ஆரம்பித்திருக்கலாம். ஆயினும் பிரதிநிதித்துவ வரைதலில் குழந்தைகளின் முதல் முயற்சி நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதளவிலேயே தோன்றுகிறது. பிரதிநிதித்துவக் கிறுக்கல்களை பெரியோரால் அடையாளம் காணமுடியாத போதும், அவர்களின் கிறுக்கல்கள் பிரதிநிதித்துவத் தன்மை கொண்டவையென மத்தியூஸ் (Mathews 1984) நம்புகிறார். முன் திரளமைப்புப் பருவமென லோ வன்பெல்ட் (Loowenfold) என்பவரால் அழைக்கப்பட்ட விருத்தியின் இந்த இரண்டாம் பருவமானது பொதுவாக ஏழு வயதுவரை நீடிக்கிறது. பியாஷேயின் முன் சிந்தனைப் பருவம் என்பதையும் இது ஒத்திருக்கிறது. ஏதாவதொன்றை எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தவேண்டுமென்பதை நன்கறிந்த பெரியவர்கள், குறியீட்டுப் பிரதிநிதித்துவம் சார்ந்த விழிப்புணர்வு குழந்தைகளிடம் விருத்தியாவதற்கு முன்பாகக் கற்பிக்க முயற்சித்தால் அவர்கள் விரக்தியடைய நேரிடும்.

இளங்குழந்தைகள், தாம் விரும்பியதைத் தம்மால் படைக்கமுடியுமென உணருவாரானால், அதற்காக அதிக நேரத்தைச் செலவிடுவதோடு அதற்கான வரைவுகளையும் உருவாக்குவர். அந்த வரைவின் பிரதிநிதித்துவம் பொருத்தமற்றதென மற்றவர்களுக்குத் தென்பட்டாலும் அது உண்மையான ஏதோ ஒன்றைக் குறிப்பதாக அவர்கள் அறிவர். முன் திரளமைப்புப் பருவமடையும் வரை தமது வரைபையிட்டுப் பேசக் குழந்தைகள் விரும்ப மாட்டார்கள்.

மேலும் தமது வரைவின் கீழ் ஏதாவதொன்றை எழுதுமாறும் பெரியவர்களைக் கேட்பர். அந்த வரைபுகள் தமது எண்ணத்தின் வெளிப்பாடெனக் குழந்தைகள் கருதுகின்றனர். இதனை மற்றவருக்கும் தெரிவிக்கின்றனர். தம்மைச் சூழவுள்ளனவற்றைக் குறியீட்டு வடிவத்தில் வெளியிடும் ஆற்றல் மிக முக்கியமான அடிப்படையாற்றலாகும். அத்துடன் அது குழந்தையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையில் காத்திரமான ஒரு முன்னோக்கிய அடிவைத்தலைக் காட்டுகிறது.

குழந்தைகளின் வரைபுகளில் முதியோர் குறுக்கிடாத மரபொன்று மேற்குலக நாடுகளில் ஆதி காலம் தொட்டே இருந்து வருகிறது. குழந்தைகளின் சித்திரத்தில் குறுக்கிடாது சுயமாக விருத்தியடைய விடவேண்டுமென பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்ஸ் சிசெக் (Franz Ciesk)கும் சகாக்களும் வலியுறுத்தியுள்ளனர். றொபின்சன் (Robinson 1982), எய்ஸ்னர் (Eisner 1972) ஆகியோர் இத்தலையிடாக் கொள்கையை வன்மையாக எதிர்த்துள்ளனர்.

சுயவெளிப்பாடு அல்லது படைப்பாற்றல் என்ற பெயரில் எதுவும் நடைபெற அனுமதிப்பதாக இச்செயல் இருக்கிறது என்ற கண்டனமும் நிலவுகிறது. வர்ணம் தீட்டுதலிலும் வரைதலிலும் குழந்தைகள் உயர் நிலையிலுள்ள சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குழந்தைகள் தமது கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்பாகவே அவசியமான திறன்களையும் நுட்பங்களையும் ஆசிரியர்கள் அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டுக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறார்கள். இதே போல பல்கேரியாவிலும், ஹங்கேரியிலும் பாலர் வகுப்புகளில், குழந்தைகளுடன் சேர்ந்து செயற்பட கலைஞர்கள் வரவழைக்கப்படுகிறார்கள்.

இவ்வாறான முன் பள்ளிகளும் காணப்படுகின்றன. வர்ணம் தீட்டுதல் பெறுமதிமிக்க பணியாகக் கருதப்படுகிறது. குழந்தைகளுடன் சேர்ந்து ஆசிரியர்களும் அதில் ஈடுபடுகின்றனர் என 'கொக்ஸ்' என்பவர் குறிப்பிடுகிறார். மூத்தோர் வாசிப்பு, எழுத்து என்பவற்றில் ஈடுபடுதலையும், வரைதலிலும் வர்ணம் தீட்டுதலிலும் ஈடுபடுதலையும் குழந்தைகள் காணவேண்டிய அவசியமும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் முப்பரிமாணப் பொருட்கள் ஈடுபாடு பல்வேறு விருத்திக் கட்டங்களூடாக நிகழ்கிறது. வரைதலுக்கு முன்னதாகக் குழந்தைகள் கிறுக்குதலில் அனுபவம் பெறுதல் போல, பிரதிநிதித்துவப் பொருட்களை உருவாக்குவதற்கு முன்னதாக, விரலால் வர்ணங்கள், பசை, களி என்பவற்றைத் தொடுதல், மொத்துதல், பிசைதல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். செயற்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. இச்செயற்பாட்டால் அவற்றைக் கொண்டு என்ன செய்யமுடியும் என்பதைக் குழந்தை கண்டறிந்து கொள்கிறது. இச்செயற்பாட்டின் போது குழந்தைகள் பொருட்களின் நிறங்கள், மெருகு அவற்றின் ஏனைய இயல்புகள் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

இவற்றினூடாக, அவர்கள் குறியீட்டுப் படிநிலையடைந்து, பொருட்களைக் குறிப்பான வடிவங்களாகப் படைக்க விரும்பும்போது தேவைப்படும் இன்றியமையாத திறனான நுண் தசைநார்ப் பயிற்சியையும் பெற்றுக் கொள்கின்றனர்.

பெரும்பாலான குழந்தைகள் கலைப்பொருட்கள் பலவற்றின் அமைப்புகள் பற்றி ஆராய்வதில் இன்பமடைகின்றனர். இதற்காக நீண்ட நேரத்தையும் செலவிடுகின்றனர். இதற்கான காரணங்களை மூன்றாகப் படுத்து, கொப்பிள், சீகல், சோன்டேஸ் (Cobble, Sigel Saundars - 1979) ஆகியோர் காட்டுகின்றனர். அவை பின்வருவன:

1. பெறுபேறுகளை உடனடியாகத் தரக்கூடிய விளைவுகளைப் பெறுதல், அடையாளங்களை ஏற்படுத்துதல், பொருட்களைப் படைத்தல் என்பவற்றில் களிப்படைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குறிப்பிட்ட அம்சத்தில் வித்துவம் பெறும்வரை அங்கு வெளிப்படும் ஆற்றல் சார் பணியை மேற்கொள்ளல்.

3. உலகியல் அம்சங்கள், அவை பற்றிய அனுபவம் என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்வதில் இயல்பான விருப்பமுடையராயிருத்தல்.

விமர்சனத்துக்குப் பயந்தோ அசுத்தமாக்கப்படுதலுக்கு அஞ்சியோ வகுப்பறையில் இவை சிலநேரம் புறக்கணிக்கப்படலாம். சித்திரத்தில் ஈடுபடுதல் மூலம் கிடைக்கும் இன்பத்தை அறிய வேண்டுமாயின் இக்குழந்தைகளுக்கு அவற்றை உணரவல்ல வளர்ந்தோர் ஒருவரின் உதவி தேவைப்படும்.

குழந்தைகள் தமது கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் இயல்பை சித்திரத்தினுடனான தொடர்பாடல் ஏற்படுத்துகிறது. தமது கருத்துகளைப் பிறருக்கு வெளிப்படுத்தும் வழிமுறையாகவும் இது இருக்கிறது. அதுமட்டுமின்றி தமது அனுபவங்களையும் வெளிப்படுத்த இது சாதனமாகிறது. குழந்தைகள் தாம் பார்த்து அனுபவித்தது பற்றி வரையும் படமானது, அவர்களது அனுபவம் பற்றிய வினாக்களுக்கு அவர்கள் கூறும் விடைகளை விடக் கூடுதலான அர்த்தமுள்ளதா யமைகிறது.

எனவே அவர்களது வரைவை அல்லது சித்திரத்தைப் பயனுள்ள ஒரு தொடர்பாடல் வடிவமாகக் கொள்ளலாம். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத குழந்தைகள், தமது தாய்மொழியில் கூடிய ஆற்றலுடையவர்களாக இருந்தபோதும், ஆங்கிலத்தில் தமது கருத்தை இலாவகமாக வெளிப்படுத்த முடியாது மன விரக்தியடையக்கூடும். ஆங்கில மொழி மூலம் வெளிப்படுத்த முடியாத உள்ளக் கிடக்கைகளை குழந்தைகள் சித்திரனூடாக வெளிப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரம் சிகிச்சைக்கும் உதவுகிறது. பெறுமதிமிக்க இச்சிகிச்சை நீண்ட காலமாகவே இடம்பெற்று வந்துள்ளது. மனவெழுச்சி அழுத்தத்தினால் துன்புறும் பிள்ளைகளின் மன அழுத்தங்களில் சிலவற்றைப் போக்குவதற்கு மிகச் சிறந்த வழிமுறையாக வர்ணம் தீட்டுதல் அல்லது பிளாஸ்ரிக் பொருள்களுடன் செயற்படல் அமைகின்றது.

**சித்திரம் மூலம் தொடர்பாடல்**

குழந்தைகள் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த உதவும் வகையில் சித்திரத்தைப் பயன்படுத்தலாம். அவ்வான சித்திர அனுபவங்களின் நான்கு பிரதான பரப்புகள் உள்ளன. அவை:

**வரைதல் :** கிறெயன்கள், வெண்கட்டிகள், பெல்ற் பேனாக்கள், பென்சில்கள் என்பனவற்றைப் பயன்படுத்துதல்.

**வர்ணம் தீட்டுதல் :** தூரிகைகள், விரல்கள், பாதங்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல்.

**மாதிரியுருக்கள் படைத்தல் :** களி, பசை, பிளாஸ்ரிக், சேற்றுமண் என்பவற்றைப் பயன்படுத்துதல்.

**ஒட்டுவேலை :** சீலைத்துண்டுகள், இலைகள், ஓடுகள், சிப்பிகள், விதைகள், பன்னாடை குச்சிகள், அரிசி, பருப்பு, பசை முதலானவற்றைப் பயன்படுத்துதல்.

இவ்வேலைகளில் தொடர்ந்து ஈடுபடும் போது இவற்றிற்கான நுட்பங்களில் தேர்ச்சி கிடைக்கும். தேர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் நிலையில் சுயநம்பிக்கையேற்படும். அதன் மூலம் மேலும் படைப்பாற்றல் மிக்கவர்களாக குழந்தைகள் வர முடியும். இச்சித்திரச் செயற்பாடுகள் குழுச் செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லும். குழந்தைகள் பொதுச் செயற்பாட்டில், ஏனையோருடன் சேர்ந்து செயற்படுவதற்குத் தயார் நிலையடைவர்.

ஒருங்கிணைந்து செயற்படுவது குழந்தைகளிடையே ஒத்துழைப்பை வளர்க்கும். அத்தோடு குறிப்பிட்ட செயற்பாட்டை எவ்வாறு திட்டமிட்டு ஒழுங்கமைப்பது என்பதற்கான கலந்துரையாடலிலும் ஈடுபடத் தூண்டும். அக்குழுக்கள் இரண்டு அல்லது மூவரைக் கொண்டிருப்பின் அதன் பேறு வியக்கத்தக்க தரத்தையுடையதாகவிருக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளைப் பொறுத்து கல்வியாளரின் வகிபங்கு மிக முக்கியத்துவம் பெறுகிறது. பெரியவர்களின் குறுக்கீடுகள், அமுத்தங்களிலிருந்து குழந்தைகள் தவிர்க்கப்படல் வேண்டும். குழந்தைகள் விரும்பினால் ஆசிரியருடன் தமது பணிகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

வளர்ந்தோரின் உதவியைக் குழந்தைகள் கோருமிடத்து வழங்குவதில் தவறில்லை. செயற்படும் சூழல் நெருக்கடியற்ற, பாதுகாப்பானதாக இருக்கவேண்டும். ஆசிரியர், மாணவர் தேவைகளை உணர்பவராகவும், விழிப்புணர்வு கொண்டவராகவும் இருப்பதன் மூலம் சித்திரனூடாகப் பயனுறுதியுள்ள தொடர்பாடல் சாத்தியமாகும்.

**சித்திரம் மூலம் படைப்பாற்றல், அழகியல் உணர்வு**

பெரும்பாலோர் கருதுவதுபோல அழகியல் விருத்தி என்பது சித்திரக்கல்வி மாத்திரமல்ல. இங்கு அழகு பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வானது, வேறு பிரித்தறிதல், சுவைத்தல் என்பன பற்றிய படிப்படியான விழிப்புணர்வு சார்ந்ததாகும். அழகியல் அனுபவங்கள், படைப்பாற்றலுடைய வெளிப்படுத்தல் தன்மையின் செயல் துடிப்பாக இருப்பதனை ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகள் படைப்பாற்றலும் அழகியல் விழிப்பும் உள்ளவர்களாக உருவாகவேண்டும். அவை, குழந்தைகள் கேட்கும், பார்க்கும், உணரும் பொருட்களின் அழகினை நயக்க உதவவேண்டும்.

இயல்பாகவே வரைவதற்கு விரும்புகின்ற குழந்தைகள், தமது கிறுக்கல்களிலிருந்து குறிப்பிடக்கூடிய உருவங்களைப் பெறும் வகையில் எவ்வாறு முன்னேறுகின்றனர் என்பது பற்றிய ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் சித்திரச் செயற்பாடுகளுக்கு குழந்தைகள் துலங்குமியல்பு பற்றிய ஆய்வுகள் மிகச் சிறிதளவே நிகழ்த்தப்பட்டுள்ளன.

பல்கோணிகள், வர்ணப் பிரதியாக்கங்கள், ஒளிப்படங்கள் போன்ற பார்வைத் தூண்டிகள், சித்திர வேலைகள், தெரிதல், இணைத்தல், பேசுதல் என்பவற்றின் போது இளங்குழந்தைகள் பிரகாசமான நிறவேறுபாடுகளில் புலன் கொள்கின்றனர். பரிச்சயமான பொருட்கள் மயக்கமில்லாத இடைவெளி ஒழுங்காக்கங்கள் என்பனவற்றுடன் இணைந்த சித்திரப் பொருட்களைக் குழந்தைகள் பெரிதும் விரும்பவர் என மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

வர்ண ஓவியங்கள், சித்திரப் பொருட்கள் பற்றி உரையாடுகையில், அவர்கள் தத்தம் சுபாவங்களுக்கேற்பத் துலங்கலாமென ஆய்வுகள் காட்டுகின்றன. இதற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் கவனக்குறைவோ, பொருத்தமான இயல்புகளைக் கண்டு கொள்ளாமையோ அல்ல, மொழியைத் திருப்திகரமாகப் பயன்படுத்த முடியாமையே எனக் கூறப்படுகிறது. வர்ணப் பிரதியாக்கங்களை விளக்க அவர்களால் முடிகின்றது. ஆனால் பொருத்தங்களுக்கான காரணங்களைத் தரக்கூடியவர்களாக அவர்கள் இல்லை என ரோன்ரன் (1984) குறிப்பிடுகிறார்.

குழந்தைகள் படங்கள், பொருட்கள் என்பவற்றின் அழகியல் தரங்கள் பற்றி உலைரயாடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டால், கோடு, நிறம், வடிவம் என்பவற்றைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான சொற்களஞ்சியமுடையவர்களாக விருந்தால், அவர்கள் தமது கலந்துரையாடல்களில் இவற்றைப் பயன்படுத்த முடியும் எனப் பல ஆய்வாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

குழந்தைகள் மிகச்சிறிய வயதிலேயே அழகியல் விழிப்புத் திறன்களைப் பெற்றுவிடுகின்றனர். ஆனால் தமது உணர்வுகளை - கருத்துகளை வெளிப்படுத்த முடியாதிருப்பதன் காரணம் மொழியாட்சித் திறன் குறைபாடாகும். மேலும் ஆசிரியர்கள் சித்திர நுட்பம் தெரிந்தவர்களாகவும், தாம் காண்பவற்றைக் குழந்தைகளுடன் கலந்துரையாடுபவர்களாகவும் இருப்பார்களானால் குழந்தைகளின் விழிப்புணர்வு மேலோங்க வாய்ப்புண்டு. அத்தோடு கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களின் பக்குவமான அம்சங்களை மனத்தால் காண்பதற்கு ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு ஊக்கம் கொடுத்தலும் வேண்டும். அழகான பொருட்களைப் பார்க்கும் குழந்தைகள் அவைபற்றிக் கலந்துரையாடவும், தமது விருப்பு- வெறுப்புகளைக் கூறுவதற்கும் பயின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதல் வேண்டும். இதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இவற்றின் மூலமாகத் தமது சொற்களஞ்சியத்தை அதிகரித்துக் கொள்வதோடு, கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுகிறார்கள்.

இளங்குழந்தைகளைப் பொறுத்து படைப்பாற்றல் என்பது என்னவென்பதைக் குறிப்பிடல் வேண்டும். படைப்பாற்றல் பற்றிய பொருத்தமான வரைவிலக்கணம், ஒரு முடிவுப் பொருள் இருப்பதைக் குறிப்பாக உணர்த்தும். இளங்குழந்தைகளின் செயல்களுள் ஒரு சிலவே இந்த வரைவிலக்கணத்துள் அடக்கப்படலாம். அத்துடன் புதிய ஒன்றை உருவாக்குதல் என்பதும் அதனுள் அடங்கும்.

அவ்வாறானால் கருத்தைப் புலப்படுத்தும் பொருட்களுடன் குழந்தை கற்பனை விளையாட்டில் ஈடுபடும் போது, செய்வனவற்றையும், பிரச்சினைக்குத் திர்வு காணலையும், பொருட்களைக் கையாளுதல் எப்படி என்ற கருத்துகளை உருவாக்குதலையும் உள்ளடக்கிய வரைவிலக்கணமாக அதைக் கொள்ளலாம்.

வெவ்வேறு வடிவங்களைக் கொண்ட மெருகுத் தன்மையுடைய, பல்வேறு பருமன்களைக் கொண்ட பொருட்களை ஆராய்வதில் குழந்தைகள் மகிழ்ச்சியடைகின்றனர். கட்புலக் கோலங்கள், படங்கள் என்பனவற்றை அவர்கள் உருவாக்கச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். கிறேயன்கள், வெண்கட்டிகள், பென்சில்கள், கரித்துண்டுகள், வர்ணக் கலவைகள் என்பனவற்றைக் குழந்தைகள் கையாளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுதல், ஒட்டுதல் என்பனவற்றோடு கடதாசித்தாள் துண்டுகள், சீலைத்துண்டுகள் முதலியனவற்றையும் பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும். படங்கள், கோலங்களில் முப்பரிமாணமும் அடங்கும்.

காட்போட் பெட்டிகள் முதலான கழிவுப் பொருட்களை மாத்திரமல்ல, களி, பலகை, பசை, பிளாஸ்ரிக் துண்டுகள் போன்றவற்றையும் பயன்படுத்திப் படைப்பு வேலைகளில் குழந்தைகளை ஈடுபடச் செய்யலாம்.

இதனால் இடைவெளி மற்றும் கணித எண்ணக்கருக்களையும் அவர்கள் அறிய ஆரம்பிப்பர். ஒரு சுவரைக் கட்டி விளையாடும் குழந்தை, உண்மைப் பொருளைப் பிரதியாக்கம் செய்கிறது. அத்தோடு அங்கு காணப்படும் சமச்சீர், அதன் அமைப்பு என்பவற்றையும் அறிந்து கொள்கிறது. மேலும் கணித விஞ்ஞான விழிப்புணர்வு, இயக்கத்திறன் பயன்பாடு, படைப்பாற்றல் விழிப்புணர்வு, பிரச்சினைத் தீர்வு என்பனவற்றையும் அறிந்து கொள்கிறது. நிரப்புதல், கணக்கிடல் என்பவற்றையும் உணரமுற்படுகிறது.

அழகியல் முயற்சிகளில், அழகான, கவர்ச்சியான பொருட்கள், படங்களைப் பார்த்தல் அவை பற்றிப் பேசுதல் என்பன அடங்கும். அவற்றோடு நாளாந்தம் காணும் பொருட்களைத் தொட்டுப் பார்க்கவும், மீள ஒழுங்கமைக்கவும் அனுமதிக்கவேண்டும். அழகான வர்ணப் படங்கள்; செதுக்கிய சீலைகள் பற்றி நேரடி அனுபவம் பெறவிட வேண்டும் என்பதை கிழக்கு ஐரோப்பியர் நன்கு அறிந்துள்ளனர். பொதுவுடைமைக் காலத்தில் அரசினால் நியமிக்கப்பட்ட கலைஞர்களும் கைவினைஞர்களும், குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்படைப்புகளைத் தொட்டுணர அனுமதித்தனர். இத்தகைய செயல்களை நாமும் மேற்கொள்ளல் அவசியமாகும்.

'மெருகினை நயத்தல்' என்பது நிறம், அமைப்பு என்பனவற்றின் விழிப்புணர்வுடன் நெருக்கமாக இணைந்த விடயமாகும். கம்பளி, வெல்வெட், ரிசுத்தாள் போன்ற வெவ்வேறு துணிகளாலான உடைகளைக் குழந்தைகள் கையாண்டு, அப்புலனுணர்வு வேறுபாடுகளை உணரவேண்டும். அத்தோடு அவ்வுணர்வுகள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டும். இவற்றை ஊக்குவிப்பதோடு அவற்றில் ஆசிரியர்களும் உதவலாம். இந்த உணர்வு அனுபவங்கள் குழந்தைகளின் அழகியல் விழிப்பை வளர்ப்பதோடு, பிற்காலக் கல்வியில் புலக்காட்சி வேறு பிரித்தறிதலுக்குப் பெரிதும் ஊக்கமளிக்கும்.

## இசை, அசைவு, நடனம் மூலம் தொடர்பாடல்

குழந்தைகள் மொழியைக் கற்குமுன்னரே சொல்சாரா வழியில் தொடர் பாடல் கொள்கின்றனர். முக பாவனை மூலம் தமது தேவைகளையும் உணர்வுகளையும் வெளியிடுகின்றனர். முதியவர்களுடன் தொடர் பாடல் கொள்கின்றனர். இவை மேலும் ஆரம்ப ஒலிகளூடாக நிகழ்கின்றன.

மூன்று வயதளவில் பாலர் பள்ளியில் சேரும்போது வளர்ந்தோரை யொத்த ஒலியமைப்பை அறிந்து கொள்கின்றனர். ஆயினும் அவர்களின் தொடர்பாடலின் பெரும்பகுதி சொல் சாராததாக இருக்கிறது. இப்பருவத்தில் குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடு சொல்சார் துலங்கலிலும் பார்க்க அதிகமாக இயக்கத்தன்மையானதாகயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நான்கு வயதுக் குழந்தைகள், துக்கம், கோபம் என்ற மனவெழுச்சிகளை வெளியிட்ட போதும் இவற்றிற்கிடையே வேறுபாடு காணும் ஆற்றலைக் கொண்டிருக்க மாட்டார்கள் என சீல்ட்ஸ், டுவீன் (Shields and Duveen) ஆகியோர் குறிப்பிடுகின்றனர். அவர்களின் ஆய்வுக்குட்பட்ட குழந்தைகளெல்லாம் மகிழ்ச்சி என்ற மனவெழுச்சியை இனம்காணும் ஆற்றல் பெற்றிருந்தனராம்.

குடும்பத்தைப் போல மிக நெருக்கமாக உறவு கொண்ட மக்கள் குழு ஒவ்வொன்றுமே சொல்சாரா தொடர்பாடல் அமைப்புகளைக் கொண்டுள்ளன. குழந்தைகளும் இதற்கு விதிவிலக்கல்லர். இன்று அம்மாவைக் காணக்கூடாது. அண்ணன் கதையொன்று சொல்ல விருப்பமாக உள்ளார் என்பன போன்றவற்றைச் சுட்டி நிற்கும் சொல்சாராச் சைகைகளுக்கு விளக்கமளிக்கக் குழந்தைகள் மிகச் சிறுவயதிலேயே கற்றுக்கொள்கின்றனர்.

குழந்தைகள் பாடசாலையில் சேர்ந்ததும் தமது சகபாடிகள் சார்ந்த சைகைகளை மட்டுமின்றி வளர்ந்தோர் சார்ந்த மற்றொரு தொகுதிச் சைகைகளையும் கற்கவேண்டியவராயுள்ளனர். ஆனால் இங்கு எதிர்கொள்ளும் முகபாவனைகளும் வெளிப்படுத்தல்களும்; அவர்கள் குடும்பத்தில் எதிர்கொண்டவற்றிலிருந்து வேறுபடுகின்றன.

மனவெழுச்சிகளை வெளிப்படுத்த நாம் பயன்படுத்தும் மிக நுட்பமான நடத்தை வேறுபாடுகளும், முகபாவனைகளும், சில சமயம் கையாள்கின்ற சொற்களும் பல்வேறு பற்றுணர்வுகளை வெளிப்படுத்தி, குழந்தைகள் அறியவேண்டிய, அசைவுகளை அடியாகக் கொண்ட விரிவான சொல்சாராத் தொகுதியின் ஒரு கூறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. ஆள்புலக் காட்சித்திறன்கள் பிள்ளைப் பருவத்தின் பிற்பகுதி வரை சரியாக விருத்தியடைவதில்லை. ஆனால் வளர்ந்தோரிடையே பரஸ்பரம் நிலவும் பல்வகை விடயங்களைத் தெரிவிக்கும் முகபாவனைகளைக் குழந்தைகள் விளங்கிக்கொள்ள ஆரம்பிப்பதற்குப் பாலர் பள்ளியில் குழந்தைகளின் வெளிப்பாட்டு அசைவுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் பெரிதும் உதவும்.

**அழகியல் படைப்பாற்றல் விழிப்பில் அசைவும் நடனமும்**

இசையும் அசைவும் நிகழ்வுகளின்போது சுயவெளிப்பாட்டுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளால் குழந்தைகள் இன்பமடைவர். இதன் காரணம் குழந்தைகளின் கற்பனையைத் தூண்டி விடுவதோடு மனவெழுச்சிகளை விடுவிப்பதற்கான பல வெளிக்கொணர்தல் களையும் அவை வழங்குவதாகும். இசைக்கேற்ப அசைதலானது, குழந்தையின் முழு உடலையும் இயங்கச் செய்வதோடு வேறு எந்தச் செயற்பாட்டாலும் பெற முடியாத திருப்தி தரும் மனவெழுச்சிகளையும் ஏற்படுத்துகிறது.

இசையிலும் அசைவிலும் ஈடுபடுதலில் அனேகமான குழந்தைகள் களிப்படைகின்றனர். ஆனாலும் நடனத்தை விரும்பாத கலாசாரப் பின்னணி கொண்ட குழந்தைகளும் இல்லாமலில்லை. எடுத்துக்காட்டாகச் சில சமயக் குழுக்களைக் குறிப்பிடலாம். இவ்வாறான குழந்தைகளைப் பொறுத்து அவர்களின் பெற்றோரின் விருப்பங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

அழகியல் விருத்தியில் அசைவென்பது முக்கிய பங்கை வகிப்பதன் காரணம், உலகைப்பற்றிய மனப்பதிவைக் குழந்தைகள் நிரப்பிக் கொள்வதற்கு அது ஒரு வழிமுறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதேயாகும். அசைவு என்ற படைப்பாற்றல், அபிநயம் நடனம் என்ற இரண்டையும் கொண்டது. அபிநயிப்பவன் உணர்வு, செயல் நிலைமை என்பவற்றை பார்வையாளர்களுக்குத் தெரிவிப்பதற்காக முகபாவங்களையும் உடல் அசைவுகளையும் பயன்படுத்துகிறான். ஏதோ ஒரு வகையில் பார்வையாளர் கருத்தை உணர்கின்றனர்.

நடனம் ஒரு செய்தியையோ, கதையையோ நிச்சயமாகத் தெரிவிக்கும் என்பது ஐயமே. சில சமயங்களில் இது இன்பத்துக்கு மட்டுமாகவேயிருக்கலாம். இளங்குழந்தைகளைப் பொறுத்து அசைவு என்பது மகிழ்ச்சி தரும் ஒரு அனுபவமாகும். குறிப்பாக இசைக்கு அசைதலானது, குழந்தையின் முழு உடலையும் உட்படுத்தித் திருப்திதரும் ஒரு மனவெழுச்சியாகும்.

இது மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளையும் தோற்றுவிக்கும். இசை நுண்மதியானது ஏனைய நுண்மதிகளிலும் பார்க்க முன்னதாகவே வெளிக்கிளம்புவதாக காடினர் (1983) குறிப்பிடுகிறார். குழந்தைகள் இரண்டு மூன்று மாதத்திலேயே இசைக்குத் துலங்கத் தொடங்கி விடுகின்றனர். அவர்களுக்கு இசை மீதான ஒரு விருப்பத்தைக் கொடுப்பது மூலம், வாழ்நாள் முழுக்க இன்பம் பெற உதவியவர்களாக நாம் இருக்கலாம்.

பல்வேறு கருத்துகளதும் எண்ணக் கருக்களதும் பொருளை விளங்கிக்கொள்ள உதவுவதில் இசை மிகப் பயனுடையது. விளங்கிக் கொள்ளக் கடினமான 'உயர்வு', 'தாழ்வு', 'பின்னால்', 'கீழே' போன்ற கருத்துகளைக் குழந்தை முழுமையாகப் பெறுவதற்கு அசைவானது உதவுவதோடு, உண்மையான விளக்கத்தைப் பெற்றுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளை இனங்காணவும், எவ்வெப்பிள்ளைகளுக்கு விளக்கமளித்தல் தேவை என்பதை கல்வியாளர் அறியவும் உதவுகின்றது. இதேபோல நித்திரை செய்தல், நித்திரையாக்குதல் போன்றவற்றைச் சரியாக விளங்கிக் கொள்ளவும் நடிப்பசைவுகள் உதவுகின்றன.

அசைவுகள், சுதந்திரமான நடிப்பு விளையாட்டுகளில் குழந்தை மற்றொருவராகப் பாவனை செய்யும் போது, பல்வேறு அறிவாற்றல் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பாவனை இயல்புகளைக் குழந்தை மிகக் கவனமாகச் சிந்தித்து, அதற்கேற்ப உடலை உருமாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணமாக, யானையைப் பாவனை செய்யவேண்டுமானால், யானை போன்று கால், கைகளை நான்கு கால்களாக மாற்றவேண்டும். யானையின் தோற்றத்தைக் குழந்தை சரியாகப் பற்றிக்கொண்டாலே இது சாத்தியமாகும். அத்தோடு யானையின் அசைவையும் காட்டல் வேண்டும்.

மனிதர்களைப் போல செய்வதிலும் பார்க்க மிருகங்களைப் போலச் செய்வது குழந்தையைப் பொறுத்துக் கடினமானதாகும். அங்கு குழந்தை கடினமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியுள்ளது. அவர்கள் பாவனை செய்து காட்டுவது எவ்வாறு தோற்றமளிக்கிறது, உணரப்படுகிறது, நயந்து கொள்கிறது என்பது போன்ற வினாக்களைக் குழந்தைகளிடம் கேட்பது மூலம், அசைவின் எந்தெந்த அம்சங்கள் மீது அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதில் ஆசிரியர்கள் உதவி புரியலாம்.

பாவனை செய்வதன் இயல்புகளை மேலும் அதிகரிப்பது மூலம் குழந்தைகள் இதில் மேலும் தேர்ச்சியும் பெறலாம். அசைவுடன் மிக நெருங்கியது நடனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பெரும்பாலான இளங்குழந்தைகள் மகிழ்ச்சியடைகின்றனர். சந்தத்துடன் கூடவே அசைவை மேற்கொள்ளும் சுயாதீனமான வெளிப்பாட்டு அசைவை நடனம் எனலாம். அல்லது ஒரு கதை, பாடல், அறிவுறுத்தல் காரணமான ஒரு தூண்டியின் பிரதிபலிப்பு அசைவாக இது அமையலாம்.

மரபு ரீதியான விளையாட்டுப் பாடல்கள் சுயவெளிப்பாட்டுத் திறன்களோடு சமூகத்திறன் விருத்திக்கான வாய்ப்புகளையும் தருகின்றன. பெரும்பாலான பாலர் பாடல்கள் படைப்பாற்றல் அசைவின் ஏதாவது பாங்கைக் கொண்டிருக்கும். கலந்துரையாடலின் போது அங்கு கிடைத்த வாய்ப்புகள், செயற்பாடுகள் என்பனவற்றின் பொருத்தப்பாடு பற்றி ஆசிரியர் குழந்தைகளுடன் உரையாடலாம்.

அசைவையும் நடனத்தையும் கொண்ட செயற்பாடுகள் இளங்குழந்தைகளுக்குப் பல்வேறு நன்மைகளைத் தரக்கூடியன. அவற்றுட்சில கீழே தரப்படுகின்றன.

1. தனியாள் திருப்தி - தமது உடலாற்றலை அறிந்து களிப்புறுதல்.
2. அசைவு சம்பந்தமான சொற்களஞ்சிய விருத்தி.
3. திடீர்ச் செயலாற்று தன்மையும் கவனக் குவிப்பும்.
4. பிரச்சினைகளை இனங்காணலும் தீர்வு காணலும்.
5. பிறருக்காகத் துலங்குதல்.
6. நினைவு கூர்தலும் மனனம் செய்தலும்.

சிறு - குழந்தைகள் கூட வித்தியாசமான சந்தங்களுக்குத் துலங்குகின்றனர். 12-15 மாதக் குழந்தை கூடச் சந்தத்திற்கேற்ப உடலை அசைக்கிறது. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது சொந்த வேகத்துக்கமைவாக இருக்கும். நடை பயிலும் குழந்தைகள் சீர்ப்பிரமாண இசைக்கேற்ப உடலைக்குலுக்குவர். இவ்வாறான குலுக்கல், அசைவு, இசை, அடி, தாளலயக் கைதட்டல் என்பனவற்றுக்கிடையே ஒரு தொடர்பு விருத்தியாக உதவுகிறது.

நான்கு வயதுக் குழந்தைகள் விளையாட்டுப் பாடல், எளிய நடனம், இசை, அசைவுக் கோலங்களைக் கற்றல் என்பனவூடாக செய்து காட்டல், நடித்துக் காட்டல் என்பனவற்றில் நாட்டம் கொள்கின்றனர். ஐந்து வயதளவில் இசை சார்ந்த அடியை இனங்காணவும் வெளிக்காட்டவும் கூடியவர்களாகின்றனர். இது வேகம், அடி, கோலம், அளவை என்பன பற்றிய விளக்கம் பெற உதவுகிறது. இசையென்பது இன, கலாசாரச் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தும் தொடர்பாடல் ஊடகமாகும். பாரம்பரிய நடனங்கள், கிராமிய நடனங்களைக் கற்கும் முதிர்ச்சி, பாலர்களுக்கில்லையெனப் பிரித்தானியாவில் ஒரு பொதுக் கருத்துள்ளது.

இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தாது. தென்னமரிக்கா, கிழக்கைரோப்பா, சீனா ஆகிய நாடுகளில் சிக்கலான நாட்டிய ஒழுங்குமுறைகளை மேற்கொள்கின்றனர். பல்வேறு இசை வகைகளைக் கேட்பதற்கும், கிழக்கு, மேற்குச் சந்தப் பாடல்களை உணர்வதற்கும் வயது தடையாயிருக்க முடியாது. இந்திய, பாகிஸ்தானிய பழைய நடனங்கள், யப்பான் கபுகி இசை, ஐரிஸ் நாட்டு ஜிக்ஸ், ஆப்பிரிக்க இசை ஆகியவற்றைக் கேட்டுணரும் வாய்ப்புகளை குழந்தைகள் பெறுவது பயனுளதாகும்.

இசை, குழந்தைகளைப் பொறுத்தது. ஒரு பாடமாகவன்றி, ஓர் அனுபவமாக நோக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைஜீரியாவில் இசையின் வரைவிலக்கணத்தை 'எகுனு' என்பர். 'எகுனு' என்பது இசைக்கு அப்பாலும் பலவற்றை உள்ளடக்கியது. அவை ஒப்பனை, உடையலங்காரம், நடனம், நாடகம், சடங்கு முதலானவை இணைந்த ஒரு தொகுதியாகும். குழந்தை இசைக்கு மட்டும் செவி கொடுத்தால் போதாது, அவர்களே இசையை உருவாக்கவேண்டும். அப்போதுதான் இசைக் கருவிகளுடன் ஈடுபட்டு சிறந்த அனுபவங்களைப் பெறுவார்கள். ஓசை, சந்தம் என்பவற்றுடன் குழந்தை பெறும் அனுபவம் வேறு பிரித்தறியும் செவிப்புலப் பயிற்சியாக அமையும். இது வேறு கற்றல் துறைகளுக்கு நிகரான பெறுமதியுடையது.

**இசை மூலம் அழகியல், படைப்பாற்றல் விழிப்பு**

மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு பிரதான ஊடகம் இசையாகும். சித்திரச் செயற்பாடுகளைப் போன்று அனைத்துப் பாலர் பள்ளிகளிலும் இசை, கலைத்திட்டத்தில் வலுவான இயல்புடன் காணப்படவில்லை. பாலர் பாடல்கள் இங்கு இடம்பெறலாம். இசை இடம் பெறுவதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவேயுள்ளன.

சித்திரத்தில் குழந்தைகள் தாமாகவே படங்கள், கோலங்களை உருவாக்குகின்றனர். அதுபோல இசையிலும் பல்வேறு ஒலிக்கோலங்களை உருவாக்கவும், பல்வேறு மெட்டுகளைச் செவிமடுக்கவும் சந்தர்ப்பங்கள் அவசியம்.

சில அடிப்படை இசைத்திறன்களில் பயிற்சி பெற்ற பின்னரே இசையை உருவாக்கவோ, இரசிக்கவோ முடியும். இளங்குழந்தைகள் இயல்பாக, இசைசார் ஆற்றல்களைக் கொண்டவரல்லர். ஒரு பரிமாண அடிப்படையில் ஒலிகளை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் இவர்களுக்குண்டு. வேகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக, உரத்த, மென்மையான, உயர்ந்த, தாழ்ந்த என்றவாறு ஒலி மட்டங்களைப் பிரித்தறியும் ஆற்றல் உண்டு. இவை சம்பந்தமாக பாலர் வகுப்பு ஆசிரியர்கள் கவனத்தைச் செலுத்தலாம்.

பாடுவதற்கு விருப்பமுடைய குழந்தைகள் பெரும்பாலானோர் உள்ளனர். அவர்களிடம் பரந்த அளவிலான சுரங்களும், தொனிகளும் குரல்வளமும் காணப்படுகின்றன. பாடவோ, இசைக்கருவியைப் பயன்படுத்தவோ மிகப் பொருத்தமான முதிர்ச்சி இருப்பதாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக மூன்று வயதுக் குழந்தை தான் முதன்முதலாகச் செவிமடுத்துக் கற்றுக்கொண்ட அதே சுருதி, சுரங்களுடன் பாட முடிகின்றமையைக் குறிப்பிடலாம்.

இக்கருத்து ஆசிரியர் பாடிக் காட்டவேண்டியதையும் குழந்தைகள் அவருடன் இணைந்து பாடுவதையும் உற்சாகப்படுத்துவதாக உள்ளது. பாடுவதற்குக் கற்றுக் கொள்ளவும், கவனத்துடன் செவிமடுக்கவும் பொருத்தமான இசைக்கருவிகளை மீட்டவும் இசைக்கேற்ப படைப்பாற்றல் அசைவில் ஈடுபடவும் மூன்று நான்கு வயதுக் குழந்தைகளால் முடியும் என்பதற்கு ஆய்வுச் சான்றுகள் உள்ளன.

இளங்குழந்தைகளுக்கான இசைக்கலைத் திட்டம் மாணவர் மையமாகவும் தனியாளின் ஈடுபாட்டை வலியுறுத்துவதாகவும் அமைய வேண்டும். செவிமடுத்தல், ஆற்றுதல், இசைப்படைப்பு ஆகிய அடிப்படை அனுபவங்களில் பங்கு பற்றுவது மூலமே இளங்குழந்தைகள் இசை பற்றிய எண்ணக் கருக்களை விருத்தி செய்ய ஆரம்பிப்பர்.

குழந்தைகள் விளையாடும்போதே திடீரெனப் பாடத் தொடங்கி விடுவதைக் காணலாம். இந்தச் சந்தர்ப்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் அனுபவித்த ஓசைகளைப் போல ஒலியெழுப்பியும் பாடல்களை அல்லது மெட்டுகளை உருவாக்கியும் கொள்கின்றனர். பொம்மை வைத்து விளையாடும் போது, பொம்மையின் பெயரே மெட்டுக்கு ஆரம்பமாயும் அமைந்துவிடும். பல குழந்தைகள் கீதமிசைப்பதில் இன்பமடைகின்றனர். தாம் கேள்வியுற்ற சொற்களுக்கும் மெட்டமைப்பர்.

சிலர் நாகரீக கோலங்களை மீட்பதில் ஈடுபடுவர். தொனியோசைகளைப் பரீட்சிப்பர். வளர்ந்தோருடன் இசைபற்றிய உரையாடல்களில் ஈடுபடுதலில் இன்புறுவர்.

இசைக்குக் காது கொடுக்கும் போது, சாஸ்திரிய இசையிலும் பார்க்க, வலிதான அடியுடன் பிரபலமாகக் காணப்படும் உருப்படிகள் கொண்ட பொப்பிசை போன்றனவற்றிற்குத் தெளிவான விருப்பினைக் காட்டுகிறார்கள்.

பொருத்தமான கேட்டல் அனுபவங்களையுடைய மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள், வயலின், கிளாரினட், கொம்பு, புல்லாங்குழல், மேளம் போன்ற தனித்தனிக் கருவிகளில் இனங்காண்பர். இசை பற்றிய பல்வேறு உரையாடல்களைக் கேட்பதன் காரணமாக, இக்கருவிகளால் உருவாக்கக் கூடிய விடயங்களை நயக்கக் கூடியவராயுமிருப்பர்.

பாரம்பரியப் பாலர் இசையமைப்புகள், பாடல்கள் என்பவற்றைப் போல இசைக்கதைகளையும் குழந்தைகளால் விளங்கிக் கொள்ளமுடியும்.

## இசைச்சூழல் அமைப்பில் ஆசிரியர்

தம்மை வெளிக்காட்டுதலில் நம்பிக்கையையும், திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்குப் போதுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களைக் குழந்தைகளுக்கு வழங்கவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். இதைப் பலவழிகளூடாக நிறைவேற்றலாம். இசை, அசைவு நாடகம் என்பவையூடாகக் குழந்தைகள் தமது சிந்தனைகள், மனவெழுச்சிகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றைப் பிறருக்குத் தெரியப்படுத்தலாம்.

குழுவாகப் பாடுதலுக்கும், கேட்பதற்கும் பொருத்தமான இசை உருப்படிகளை வழங்குவதால் குழந்தைகளை இசை விழிப்புடையவர்களாக ஆக்கலாம். இசை கேட்டல் அனுபவம், வெவ்வேறு அசைவு வேகம், தொனிகள், பண்புகள், சந்தங்கள் என்பன பொருந்திய எல்லாவகை ஒலிகளையும் கொண்டதாக இருக்கவேண்டும். கேட்ட இசை பற்றி விவாதிக்கவும் ஏற்புடைத்தான இசைச் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளவும் குழந்தைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இது இசை பற்றிய விபரிப்புக்கு உதவும். குழுவாகச் சேர்ந்து பாடுதல் சிறந்த இன்பகரமான அனுபவமாகக் குழந்தைகளுக்கு அமைய வேண்டும். இது இசைத்திறன்களை விருத்தியாக்கவும் மீள வலியுறுத்தவும் உதவும்.

குழந்தைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒலிபற்றி ஆய்வு செய்யக்கூடியதாக இசைக்கருவிகளை அல்லது சாதனங்களை வழங்குதல் மூலமும் இசை விழிப்பை உருவாக்கலாம். பல்வேறு ஒலிகளை உண்டாக்கும் ஊடகங்களாக இசைக் கருவிகள் மாத்திரமின்றி, மரப் பொருட்களும் உலோகப் பொருட்களும் குழந்தைகளுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக பொத்தான்கள் அல்லது தானியங்கள் கொண்ட சாடிகளைக் குறிப்பிடலாம். குழந்தைகள் இலகுவாக ஆய்வு செய்வதற்கும், பல்வேறு இசை அம்சங்கள் பற்றிக் கற்பதற்கும் இவை இயல்பாகவே வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு ஒலிகளை உண்டாக்கும் சாதனங்கள் குழந்தைகளுக்கு இசை சார் கருத்துகளை விருத்தியடையச் செய்ய உதவுகின்றன. அவை இசை விழிப்புணர்வு வளர்ச்சிக்கும் பங்காற்றுகின்றன. எனினும் வெவ்வேறு அளவுகளில் நீர்நிரப்பப்பட்ட சாடிகள், வெவ்வேறு ஆழமும் விட்டமுமுடைய முரசுகள் போன்றன தொனி, சுரம் என்பவற்றின் இயல்புகளைக் குழந்தைகள் விளங்கிக் கொள்ள அதிகளவு பயன்படுகின்றன.

பாடசாலை நாளில் குழந்தைகள் விரும்பும் எந்த நேரத்திலும் இசையை அனுபவிக்கும் வாய்ப்பைக் கொடுத்தல் மூலம் குழந்தைகளிடம் இசை விழிப்பை ஏற்படுத்த முடியும். குறிப்பிட்ட ஒரு சில நேரத்தில் மாத்திரம் இந்த வாய்ப்பையளிப்பதால், இசை விழிப்புணர்ச்சி வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

குழந்தைகள் அமைதியாகவிருந்து, தமது மனோநிலைக்கேற்பத் தம்மால் தெரிவு செய்யப்பட்ட இசையை அனுபவிக்கக் கூடிய வகையில் செவிப்புலன் கருவிகளையும் ஒலிநாடாப் பதிவு கருவி முதலானவற்றையும் பாலர் பள்ளிகளுக்கு வழங்குதல் பயன்தரும்.

குழந்தைப் பருவத்தில் அதன் செயலாற்றலை விருத்தியாக்கக் கூடிய செழிப்பான இசை வளங்கள் இல்லாவிட்டால், குழந்தையின் செயலாற்றல் நிறைவேற்றப்படாது; அத்துடன் குறித்த திறன்களையோ, எண்ணக் கருக்களையோ குழந்தை கற்கவும் முடியாது என, சிம்மர்மன் (Zimmerman 1975) குறிப்பிடுகிறார்.

இசைத் தூண்டில்களுக்கும் அனுபவங்களுக்கும் பிள்ளை உட்படுத்தப்பட்டால் மட்டும் போதாது எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான இசைவல்லுனர்கள் கருதுகின்றனர். குழந்தை, கேட்டல், ஆற்றுதல் என்ற இருதிறன்களையும் மேம்படுத்த வேண்டுமானால் நன்றாகப் பயிற்றுவிக்கவும் வேண்டும். பயிற்சி செய்தலும் வேண்டும். இசையைக் கேட்பதிலும் இசையை ஆக்குதலிலும் இளங்குழந்தைகள் களிப்படைகிறார்கள்.

குழந்தையின் இசை விழிப்புணர்வுத் திறன்களை வளர்த்தெடுப்பதில் அதிகளவு செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள், உண்மையாகவே ஆசிரியரின் சொந்த இசையுணர்வு திறனும் அவரைச் சுற்றியுள்ள கவர்ச்சிமிக்க அழகிய நிகழ்ச்சிகளுமேதான்.

நாடகமானது, இசை, அசைவு என்பனவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. நன்றாக அறிந்த ஒரு கதையையோ அல்லது பாரம்பரியப் பாலர் பாடலையோ நடித்துக்காட்டத் துணிதல் குழந்தைகளைப் பொறுத்து மிகப் பொருத்தமானதாகும். ஆயினும் பாலர் கலைத்திட்டத்தில் அது நாடக விளையாட்டு வடிவத்தைக் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகள் சமூக நாடக விளையாட்டு மூலம், சமூகத்திலுள்ள ஆட்களின் வெவ்வேறு வகி பங்குகளை அல்லது பாத்திரங்களை வகிக்கின்றனர். என்பதைக் கற்றுக் கொள்கின்றனர். மேலும் குழந்தைகள் நாடகமூலம் வளர்ந்தோருக்குத் தெரியாமலே பல்வேறு திறன்களையும் தகைமைகளையும் பெறுவதோடு அவற்றில் தேர்ச்சியும் பெறுகின்றனர்.

**கதை, செய்யுள் தொடரிசை மூலம்**
**அழகியல் உணர்வு**

கதைகளும் செய்யுள்களும், முன்பள்ளிக் குழந்தைகள், தம்மைச் சுற்றியுள்ள உலகை விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள உதவுவதில் பெரும்பங்கு கொள்கின்றன. குழந்தைகளுக்காக உரைநடையையும் பாட்டையும் தெரிவு செய்வதில், நல்லன - தீயன என்பவற்றை குழந்தைகள் வேறுபடுத்தியறிய உதவுவதையே பெரியவர்கள் நோக்கமாகக் கொள்கின்றனர்.

நல்ல - தீய இலக்கியங்களை வேறுபடுத்தியறியக் கூடியவர்கள் குழந்தைகள். நல்ல கதையொன்றைக் குழந்தைகள் செவிமடுத்துக் கொண்டிருக்கும் போது அவர்களின் முகங்களை நோக்கினாலே இதனை உணர்ந்து கொள்ளலாம். மூன்று நான்கு வயதுக் குழந்தைகளுக்கான கதைகளைத் தெரிவு செய்யும்போது, அவை குழந்தைகளின் நாட்டம், கற்பனை என்பவற்றைத் தூண்டுவதாயும் சுயநம்பிக்கை, பாதுகாப்பு சார்பான உணர்வுகளை வளர்ப்பனவாயும் இருக்கவேண்டும் என்பதை ஆசிரியர்கள் மறந்து விடக்கூடாது.

இரண்டரை, மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கவனவீச்சு குறுகியது என்பதால், பாலர் நிலைய வயது கூடிய குழந்தைகளுக்குப் பொருத்தமான கதைகள், இவர்களுக்கு அமைதியின்மையை ஏற்படுத்தலாம். இளம் குழந்தைகள், கதைகளைத் திரும்பத் திரும்பக் கேட்பதில் விருப்பமுடையவர்கள். கதைகளை அப்படியே மீளவாசிப்பதையும், மீளச் சொல்லப்படுவதையும் அடிக்கடி வலியுறுத்துவர்.

நான்கு வயதுக்குழந்தை, நீண்ட, சிக்கல் நிறைந்த கதைகளைக் கேட்டு மகிழ்வது மூலம் யதார்த்த நிலை குறித்த தனது புரிந்துணர்வை விரிவுபடுத்திக் கொள்கிறது. சொற்களை அறியும் நாட்டத்தின் காரணமாக, சந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள்களிலும் கதைகளிலும் செய்யுள்களிலுள்ள நகைச்சுவையிலும் மகிழ்ச்சியடையவர். இந்த வயதில் பொருத்தமற்ற மொழிநடையில் கதைகளையும் நாடகங்களையும் படைக்க விரும்புவர். அத்தோடு பூர்த்தியாகாத, முடித்து வைக்கவென விடப்பட்ட கதைகளையும் மகிழ்வோடு அனுபவிப்பர்.

நன்கு அறியப்பட்ட கதைகளை, செய்யுள்களை நாடகமாகவுருவமைத்தலும் கூடும். இதில் மூலக்கதையின் சில பங்குக் கூறுகள் பேணப்படலாம். குறித்த பாத்திரத்திற்கான இயல்புகளும் ஆளுக்காள் வேறுபடலாம். படைக்கப்படும் நாடகத்துடன் சமாளித்துப் போகமுடியாத சில குழந்தைகளுக்கு கூத்தாட்டுப் பொம்மைகள் உகந்தவை. இத்தருணங்களில் கூச்சமின்றியும், தடுமாற்றமின்றியும் பல பாத்திரங்களைக் குழந்தை ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

ஆசிரியர் இறுக்கக் குணமற்றும் தானாகவே கவர்ச்சியான கதைகளை உருவாக்கக் கூடியவராகவும் இருந்தால் மூன்று நான்கு வயதுக் குழந்தைகளும் தமது எண்ணங்களுக்கேற்பக் கதைகளைப் படைக்கமுடியும். இவை ஒலிப்பதிவு நாடாவிலோ, புத்தகத்திலோ பதிவு செய்யப்படலாம். இவ்வகையான செயற்பாடுகளுக்கு பாலர் பள்ளி நிலையங்களில் ஊக்கமளிக்கப்படவேண்டும்.

குழந்தைகள் செவிமடுக்கும் கதைகள், பாடல்களின் பேறாக ஏனைய படைப்பாற்றல் செயற்பாடுகளையும் தூண்டலாம். வரைதல், வர்ணம் தீட்டுதல், பிசைந்த மாவில் அல்லது களியில் உருவங்கள் செய்தல் என்பன ஊக்குவிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கதை அல்லது பாடலுக்கான படைப்பாக்கல் துலங்கலானது சமூக நாடகம் சார்ந்த விளையாட்டில் காணப்படும் விளையாட்டு படைப்பாற்றலை வளர்க்கக்கூடிய ஒரு நேர்வழியாகும். "எவராலும் கற்பிக்க முடியாத குழந்தை மட்டுமே கற்றுக் கொள்ளக்கூடியது விளையாட்டாகும்" என, ஹாட்லி (1971) குறிப்பிடுகிறார்.

விளையாட்டானது குழந்தையின் படைப்பாற்றலை வளப்படுத்துகிறது. வளர்ந்தோரின் வழிகாட்டலின்றி, பொருட்களையும் மனிதர்களையும் இனங்காண்பதற்கு விளையாட்டு உதவுகிறது.

பாலர் பருவத்து இறுதியில், தமது நடிபங்கை நிலைநாட்டக்கூடிய வகையில், நாடகம் சார்ந்த விளையாட்டு குழந்தையுடன் இசைவாக்கம் பெறக்கூடியதாகும்.

ஆயினும் நாடகம் சார்ந்த விளையாட்டு எப்போதும் குழுக்களுடன் ஆனதாக இருக்கவேண்டியதில்லை. குழந்தைகள் தனியே தமது எண்ணங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பங்கள் அவசியமாகும். தனித்த விளையாட்டில் ஈடுபட்ட நான்கு வயதுக்குழந்தை நன்கு முதிர்ச்சி மட்டத்தை அடைந்து கொண்டிருக்கலாம். தனித்த விளையாட்டில் பல்வேறு மட்டங்களில் கலப்புகளும் இடம்பெறலாம் எனவும் அதில் சில பெருமளவு கதை சொல்லலையும் நாடகப்பாணி விளையாட்டையும் உள்ளடக்கியதாக அமையலாம் எனவும் ரூபின் (Rubin 1977) என்பவர் கருதுகிறார்.

உதாரணமாக பண்ணையொன்றில் விளையாடும் நான்கு வயதுக் குழந்தை, பண்ணையாளர், அவரின் உதவியாளர் என்ற பாத்திரங்களையமைத்து அவர்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சையும் உருவாக்கி பண்ணையின் நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு கதையை கட்டியெழுப்பலாம்.

கற்பனையுடன் கூடிய விளையாட்டானது நல்ல மனவெழுச்சி விருத்திக்கு அவசியமாகும். அத்தோடு விரிசிந்தனை விருத்திக்கும் ஊக்கமளிக்கும். இதற்கான ஆதாரங்கள் ஆய்வுகள் மூலம் கிடைத்துள்ளன. ஒத்த விளையாட்டுகளில் ஈடுபடும்போது செயலாற்றக்கூடிய மாற்றுவழிகளை விருத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. அத்தோடு சில நேரங்களில் ஆசிரியர் படைப்பாக்க விளையாட்டின் சற்றுக் குழப்பமான பண்புக் கூறைப் பெற்றுக் கொள்ள வேண்டியும் நேரலாம். ஆயினும் அது குழந்தைகள் பிரச்சினை விடுவிக்கும் உபாயங்களைப் பெற்றுக்கொள்ள உதவும். அத்தோடு தம்மைச் சுற்றியுள்ள உலகுபற்றி சிந்திக்கவும் அது வாய்ப்பாகும்.

நாடக விளையாட்டு, வளம் கொண்ட குறியீடு செயற்பாட்டைக் கொண்டது. அது குழந்தையை, பொருட்களை, சூழ்நிலையை, கற்பனையான பாத்திரங்களையும் கொண்டது. சமூக நாடக விளையாட்டில் குழந்தைகள் ஈடுபடும்போது அவர்கள் அறிவு பூர்வமான சிக்கலான நடத்தைகளில் சம்பந்தப்படுகிறார்கள். விளையாட்டுக் கோலங்கள் நன்றாக ஒழுங்கமைக்கப்படுகின்றன.

கருப்பொருள் பேணப்படும், கையாளலும் கருத்துகள் நிகழ்வுகளும் அமைகின்றன. குழந்தைகள் கற்பனை விளையாட்டுக்களில் ஈடுபட அதிக நேரமும் சுதந்திரமும், நல்ல சாதனங்களும் அவசியமாகும். இந்த விடயத்தைப் பொறுத்து ஆசிரியர் முக்கியத்துவமான செயற்பாட்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒரு செயற்பாட்டிலிருந்து அடுத்த செயற்பாட்டுக்குச் செல்வதற்கு குழந்தைகளுக்குச் சுவாதீனம் இருக்கவேண்டும். பரந்த செயலாற்றலுக்குரிய சாதனங்கள் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இவற்றை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

குழந்தைகளின் சமூக நாடக விளையாட்டானது பல சமயங்களில் தற்செயலாக இடம் பெறுகிறது. இது எப்போதும் இருக்க வேண்டுவதில்லை. கற்பனையைத் தூண்டும் கதையொன்றின் அறிமுகம், விளையாட்டுக்கு ஆதாரமான பொருட்களின் தயாரிப்பு, விரும்பும் ஓரிடத்துக்கான பயணம் என்பன சமூக நாடக விளையாட்டுக்கு ஊக்கமளிக்கக் கூடியன. இவ்வாறான சந்தர்ப்பங்கள் சமூகம் சார்ந்த மொழி சார்ந்த, உணவு சார்ந்த, திறன்களை வளர்ப்பதற்கு உந்துதல் அளிப்பனவாகும். இவ்வாறான பயனுறுதியான நடவடிக்கைகள் ஆரம்ப வருடங்களுக்கான கலைத்திட்டத்தில் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் பயன்பாடு ஆசிரியர் கொள்ளும் ஈடுபாட்டிலேயே தங்கியிருக்கிறது.

சமூக நாடக விளையாட்டின் பயன்பாடு குறித்த தமது கருத்துகளுக்கு ஆதரவாக செபன்றியாவும் சிமிலன்ஸ்கியும் (Shefntya & Similansky 1990) ஆறு முக்கிய மூலகங்கள் இருக்கவேண்டுமெனக் கருதுகின்றனர். அவை:

**1. போலியான பாத்திரமேற்று நடித்தல் :**

குழந்தை பாத்திரமொன்றை ஏற்று போலியான செயல், / சொல்லாடல் மூலம் பாத்திரப் பண்பை வெளிப்படுத்தல்.

**2. பொம்மைகளோடு பாசாங்கு செய்தல் :**

அசைவுகள், சொல் சார்ந்த அறிவிப்புகளும் பொருளுக்கான பிரதியீட்டு உருவமல்லாத சாதனங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மைகளும் உண்மைப் பொருளுக்காக இங்கு பிரதியீடு செய்யப்படலாம்.

**3. செயல்கள், நிலைமைகள் தொடர்பான சொல்சார்ந்த பாசாங்கு :**

செயல்கள், நிலைமைகளுக்கான சொல்சார் விவரிப்புகள், அறிவிப்புகள் இங்கு பிரதியீடு செய்யப்படலாம்.

**4. விடாப்பிடியாகப் பாத்திரமேற்று நடித்தல் :**

நடிப்பில் ஈடுபட்டுத் தொடர்ந்து ஈடுபடல்.

**5. இடைவினையாற்றல் :**

ஆகக் குறைந்தது இருவராவது நடிப்பு நிகழ்வைத் தொடர்ந்து இடைவினையாற்றுதல்.

**6. சொல்சார் தொடர்பாடல் :**

சொல்சார்ந்த இடைவினைகள் நடிப்பு நிகழ்வு தொடர்பாகக் காணப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 5

# பகுத்தாயும், பிரச்சினை தீர்க்கும் திறன்கள்

டீ போனோ (De Bono-1972) என்பவர், "புத்திக் கூர்மையுடன் சிந்திப்பவர்களாக விளங்கும் குழந்தைகள், சிந்திப்பதால் மகிழ்ச்சியடைகின்றனர். விளையாட்டால் மகிழ்வது போலவே தமது உள்ளத்தைப் பிரயோகிப்பதிலும் களிப்புறுகின்றனர். குழந்தைகளால் நன்றாகச் சிந்திக்க முடியுமானால், நீண்ட வருடங்கள் இடம்பெறும் கல்வியும் இவ்வாற்றலை உயர் மட்டத்துக்கு உயர்த்தவேண்டும். அவ்வாறில்லாமல் கல்வியின் பூர்த்தியின்போதும் சிந்திக்கும் திறனில் முன்னேற்றம் இல்லையாயின், அங்கே ஏதாவது சீர்கேடு நேர்ந்திருக்க வேண்டும்" எனக் கருதுகிறார்.

இச்சீர்கேடு நிகழ்வதன் காரணத்தை அறிய வேண்டுமானால், முன்பள்ளிக் காலத்தில் குழந்தைகள் விருத்தி செய்து கொள்ளவேண்டிய ஆற்றல்களைப் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். அத்தோடு மட்டுமன்றி, பிரச்சினை தீர்க்கும் திறன்களின் விருத்திக்கு உதவக்கூடிய பருப்பொருள் சார்ந்த அனுபவங்களின் வகைகள் குறித்தும் ஆராயவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரும் குழந்தைகளில் சிலர் இன்னும் புலனியக்கமட்டத்தில் தொழிற்பட்டாலும், பெரும்பாலானோர் பியாஷே குறிப்பிடும் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தை யடைந்திருப்பர். இந்த வகையில் முன்பள்ளிப் பருவமானது குழந்தைகளின் அறிகை விருத்தியில் உணர்வைத் தட்டியெழுப்பும் காலப் பகுதியாகும்.

இவ்விருத்திக்கட்டம், இரண்டு அல்லது இரண்டரை வயதிலிருந்து சுமார் ஏழு வயது வரையுள்ள காலப்பகுதியைக் கொண்டது (பாலர் பருவம் முதல் பாடசாலைக் கல்வியின் முதனிலை ஒன்று வரையான காலப்பகுதி இந்த வயதுப் பருவக் குழந்தைகளின் இயல்புகளுக்கான பயனுள்ள வழிகாட்டலை பியாஷே மேலும் விளங்குகிறார்.

**தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவத்தினரின் சிந்தனை இயல்புகள்**

- குழந்தைகளின் சிந்தனை, புலக்காட்சியால் வரையறையப்படுத்தப்பட்டது. அவர்கள் தாம் காண்பதை நம்புகிறார்கள். அத்தோடு ஒரு குறித்த நேரத்தில் ஒரு பொருளின் ஒரேயொரு பண்பு மீதே கவனம் செலுத்த முடிகின்றது. இதை 'நடுமைப்படுத்தல்' என பியாஷே குறிப்பிடுகிறார். ஒரே நேரத்தில் ஒரு பொருளின் ஏனைய இயல்புகளை அவதானிக்க முடியாமல் இந்த 'நடுமைப்படுத்தல்' பண்பு தடுக்கின்றது. ஆயினும் அப்பொருளைப் பற்றிய பௌதிக அறிவைப் பெற்றுக்கொள்ள அது உதவுகின்றது. பௌதிக அறிவு என்பது தருக்க சிந்தனை விருத்திக்கான ஒரு முன்தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தைகளின் 'சிந்தனை செய்தல்' என்பது பின்திரும்பக் கூடியதல்ல. இந்த விருத்திக் கட்டத்திலுள்ள குழந்தைகள், உருமாற்றத்தின் மீதன்றி உருமாற்றத்தின் ஆரம்ப நிலையில் அல்லது இறுதி நிலையில் மட்டுமே கவனத்தைக் குவிக்கக் கூடியவர்களாவர். எடுத்துக்காட்டு: ஒரு குழந்தை தனது தங்கையைவிட தான் வயதில் மூத்தவள் என விளங்கிக் கொள்ளமுடியும். ஆயினும் தனது தங்கை தன்னைவிட இளையவள் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதிருக்கலாம்.

- குழந்தைகள் காப்புச் சிந்தனை கொண்டிருக்க மாட்டார்கள். அதனால் குறித்த எண்ணிக்கையுள்ள பொருட் கூட்டத்தின் இட ஒழுங்கமைப்பை மாற்றியமைக்கும்போது, அந்த எண்ணிக்கையின் மாறின்மையை உணர்ந்து கொள்ளமாட்டார்கள். நீளம், அகலம் என்பன போன்ற பரிமாணங்களில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து சரிப்படுத்தக் கூடியவர்களுமல்லர். திண்மம், திரவம் ஆகியனவற்றின் கனவளவு, பரப்பளவு, நிறை என்பன சார்ந்த மாறின்மையையும் இவர்கள் முற்றாக விளங்கிக் கொள்ளமாட்டார்கள். இவ்வகையான விளக்கங்களைப் பின்னர் பெறக்கூடிய வகையில் ஆரம்ப அனுபவங்களை இவர்களுக்கு வழங்கவேண்டியது அவசியம். பிறயன்ற் (Bryant), புறூனர் (Bruner) ஆகிய இருவரும் இளங்குழந்தைகளிடம் காப்புச் சிந்தனை இல்லாமை பற்றிய பியாஷேயின் கருத்துக்களைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். குழந்தைகளுக்கு உதவியளிக்கும் பட்சத்தில், சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் சிறிய அளவிலேனும் எண்காப்புச் செய்யமுடியுமென வாதிடுகின்றனர்.

- 'குழந்தைகளின் சிந்தனைச் செயற்பாடு அகத்தை மையமாகக் கொண்டது. அவர்கள் உலகைத் தமது இயல்புக்கேற்பவே நோக்குவர். அதனால் தமது நிலை தவிர்ந்த ஏனைய நிலைகளில், ஒரு பொருளையோ, காட்சியையோ நோக்கும்போது, எவ்வாறு இருக்குமெனக் கற்பனை செய்வது அவர்களுக்குக் கடினமாகவிருக்கும்' என பியாஷே வாதிக்கிறார். "குழந்தைகளின் 'அகத்தை மையமாகக் கொண்ட இயல்பு' இயற்கைத் தோற்றங்களைத் தவறாக விளக்குவதற்கும் வழியேற்படுத்தலாம்" எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

டொனால்ட்சன் (Donaldsan), அவரின் சகாக்கள் ஆகியோரின் ஆய்வு, பியாஷேயின் கருத்துக்கள் பற்றி வினாவெழுப்பியது. மேலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே சுசான் ஐசாக்ஸ், பியாஷே கருதிய அளவுக்குத் தர்க்கரீதியாகச் சிந்திக்க முடியாமையைக் குழந்தைகள் புலப்படுத்தியுள்ளார்களா என வினாவெழுப்பியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விருத்திக் கட்டத்தில் குழந்தைகளின் சிந்தனைச் செயற்பாட்டைப் பொறுத்து, கருத்திற் கொள்ளக்கூடிய இரு அம்சங்கள் உள்ளன.

1. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தினர், தருக்கரீதியாகச் சிந்தனை செய்ய முடியாதவர்களாயினும் அவர்கள் குறைபாடுள்ள சிந்தனையாளர்கள் என அர்த்தப்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் தருக்கரீதியாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பதற்கான ஆற்றலை வளர்ப்பதற்கான அடிப்படை உத்திகளான தேடிக்கண்டறிதல், வினாவுதல், ஒப்பிடுதல், வேறுபாடு காணல், பெயரிடல், உளப் பிரதிமைகளைத் தோற்றுவித்தல் போன்ற செயல்களில் மும்முரமாக ஈடுபட்டிருப்பர்.

2. தனியாள் வேறுபாடுகள் பரந்த அளவில் காணப்படுவதால் இந்தப் பண்பு பற்றிய விபரிப்பு ஒரு வழிகாட்டற்குறிப்பாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். குழந்தைகளின் அனைத்து அம்சங்களினதும் விருத்தி பற்றி ஈடுபாடு கொள்ளும்போது, இந்தத் தனியாள் வேறுபாடுகளை விளங்கிக்கொள்ளல் அவசியமாகும்.

பகுத்தாயும் திறன்களையும் பிரச்சினை தீர்க்கும் திறன்களையும் விருத்தியாக்குவதற்கு உதவியளிப்பதில் இது சிக்கலானதுமாகும். தூல சிந்தனைக்கு முற்பட்ட உபபருவத்தின் முக்கிய அம்சம், குழந்தையின் குறியீட்டுப் பிரதிநிதித்துவப் பாவனைக்கான வளர்ச்சியுறும் திறனாகும். இந்தத் திறனின் வளர்ச்சியே குழந்தையின் தருக்கநிலைச் சிந்தனைக்கு உயிராயமையும்.

பிரச்சினை என்ற எண்ணக்கரு பற்றிய உண்மையான விளக்கத்தைக் குழந்தைகள் கொண்டிருக்கிறார்களா என நாம் உணர்தல் வேண்டும். ஒரு செயல் நிலை வரைவிலக்கணமாக எதிர்பார்ப்பு அல்லது விருப்பு என்பதற்கும், விளைவுக்குமிடையே இசைவின்மையுள்ள போது பிரச்சினையொன்று இருப்பதாகச் சொல்லப்படலாம். எடுத்துக்காட்டாக, உலோகம் போலக் காணப்படும் சில பொருட்களைக் காந்தம் கவர்வதில்லை. ஆனால் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை இந்த வகையில் ஒரு பிரச்சினையை விளங்கிக் கொள்ளும் சாத்தியமுள்ளதா?

ஏதோ தொழிற்பாடு நிகழவில்லையென குழந்தை உணரலாம். ஆனால் இயலக்கூடிய தீர்வுகள் சார்ந்த அனுபவங்களைக் குழந்தை பெற்றிருக்காதவரை, புதிய சோதனைகளைக் கூறமுடியாததாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு வருணம் தீட்டும் குழந்தை, வருணம் அதிகமாக வடிவதைக் கண்டாலும் அதை நிறுத்துதற்குவேண்டிய தீர்வை வழங்கமுடியாததாக இருக்கும். இதன் காரணம் குறித்த வகையான பிரச்சினை பற்றிய முன் அனுபவம் குழந்தைக்கு இல்லாமையேயாகும்.

இவ்வனுபவம் இல்லாதபோது, இசைவின்மை அங்குள்ளது என்பதைக் கூடக் குழந்தை அறியாதிருக்கலாம். இந்த நிலையில் குழந்தையின் கவனம் இசைவின்மையால் ஈர்க்கப்படவேண்டும். பிரச்சினையைத் தீர்த்தலானது ஆராயும் உள்ளத்தையும் இயல்பான அறியும் ஆர்வத்தையும் வேண்டுவதாகும். இந்த வகையில் குழந்தைகள் இயற்கையாகவே பிரச்சினைத் தீர்வாளர்களுமாவர். இவற்றை விருத்தியாக்கக்கூடிய கல்வியனுபவங்களை, ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும்.

**குழந்தைகள் தருக்க சிந்தனையாளர்களாகத் தேவையானவை :**

**உற்றுநோக்கும் திறன்**

குழந்தைகளுக்கு உற்று நோக்கும் திறன்கள் அவசியம் என்பது கல்வியாளர்களால் உணரப்பட்டுள்ளது. விபரிப்பதற்குத் தேவையான நெருக்கமான கவனத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே வேறுபாடுகள், ஒற்றுமைகள், இசைவின்மைகள், முரண்பாடுகள் என்பன பற்றிய விழிப்புணர்வு பெறமுடியும். இருபரிமாண, முப்பரிமாணப் பொருட்களை அவதானிப்பதற்கு வேண்டிய பயிற்சியைக் குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். 'எவ்வாறு அவதானமாக நோக்குவது' எனக் குழந்தைகள் கற்பிக்கப்பட வேண்டும். குறித்த ஒரு பொருளின் மீதான உற்று நோக்கலை மையமாகக் கொண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும். இவற்றால், உடன்பாடான, மாறுபாடான கருத்துகளை உணரமுடியும். அத்தோடு உற்று நோக்கப்படும்.

பொருள் பற்றிய வெவ்வேறு அம்சங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படும். அதன் மூலமாக நாம் எல்லோரும் ஒரே அம்சத்தைக் காண்பதில்லை; தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப அவை இருக்கும் என்பது குழந்தைகளால் அறிந்து கொள்ளப்படும்.

**வகைப்படுத்தும் திறன்**

குழந்தைகள் முதன்முதல் பொருட்களைத் தொகுதியாகப் பிரிக்க ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக இருப்பது, பியாஷே குறிப்பிடும் 'வரையுருவத் திரட்டுகள்' (Graphic Collection) ஆகும். இந்த வரையுருவத் திரட்டுகளை உருவாக்குதல் மூலமே குழந்தைகள் பொருட்களை வகைப்படுத்த ஆரம்பிக்கிறார்கள். வரையுருவத் திரட்டுகள் என்பவை, குழந்தைகளுக்கு மட்டுமே கருத்துடையதான ஒருமுறையில் ஒழுங்கமைக்கப்பட்ட பொருட்களாகும். வற்றிடையேயுள்ள ஒற்றுமைகளோ வேற்றுமைகளோ இங்கு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. மாறாக, தேர்வுமுறைத் தத்துவத்திற்கமைய, குழந்தைகள் தொகுதியாக்க எடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் முயற்சியானது, ஒவ்வொரு பரிமாணத்திலும் சரியாக ஒரே மாதிரியான உருப்படிகளைப் பொருத்துவதாகவே அமையும்.

ஆனாலும் ஐந்தாம் வயது முடிவில் பல குழந்தைகள் தெரிவுக்கான தமது சொந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்தக் கூடியவர்களாகிவிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, பொம்மைகள், வீட்டுத் தளபாடங்கள் என்பவற்றை அவற்றின் செயற்கூறுகளுக்கேற்ப அறைகளில் ஒழுங்காக வைக்கின்றனர்; ஒரு தொகுதிச் சாதனங்களை அவற்றின் மேற்புறக் கட்டமைப்பு அமைதிக்கேற்ப வகைப்படுத்துகின்றனர். அத்தோடு தெரிவுக்கான காரணங்களையும் விளங்கிக் கொள்கின்றனர்.

இப்பிந்திய விருத்தி ஒரு பெரிய முன்னேற்றப் படியாகும். இதன் காரணம், ஆசிரியரின் கோரிக்கைக்கேற்ப வகைப்படுத்துவதைவிட, ஒரு திட்டவட்டமான பாணியில் வகைப்படுத்துவதற்காகக் குழந்தை தெரிந்தெடுத்த அடிப்படைத் தத்துவத்தை நியாயப்படுத்துவது மிகவும் கடினமானதாகும்.

குழந்தைகளின் பூரணமான எண்ணக்கரு விருத்திக்கு இவ்வகைப்படுத்தல் திறன்களின் முக்கியத்துவத்தைப் புறூனர் வலியுறுத்தியுள்ளார். 'வகைப்படுத்தல் மூலமாக சூழலின் சிக்கலில்லாத தன்மையைக் குழந்தைகள் இனங்காண முடியும். தம்மைச் சுற்றியுள்ள பொருட்களையும் அவர்களால் உணர்ந்துகொள்ளமுடியும்' என புறூனர் கருதுகிறார். வகைப்படுத்தும் திறனைக் குழந்தைகள் விருத்தி செய்து கொள்ள உதவுதல் மூலம், ஆசிரியர், அவர்கள் தமது பிந்திய அறிவின் அடிப்படையில் ஒழுங்கமைப்புக்களைக் கட்டியெழுப்ப உதவுபவர் ஆவார். அத்தோடு தொடரும் மீள் கற்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியத்தையும் குழந்தைகள் குறைத்துக்கொள்வர். வகைப்படுத்துவதற்குப் பின்வருமாறு உதவலாம்:

1. பருமன், வடிவம், தொழிற்பாடு, மணம், ஒலி, உணர்ச்சி, சுவை என்பவற்றில் வேறுபட்ட பல்வேறு பொருட்களின் இயல்புகளைக் கண்டறிவதற்கும், அவற்றை ஏனையோருக்கு விபரிப்பதற்கும் குழந்தைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தல்.

2. எவ்வெவ்வகைகளில் பொருட்கள் ஒத்தனவாயும் வேறுபட்டனவாயும் உள்ளன என விபரிப்பதற்குக் குழந்தைகளுக்கு ஆர்வமூட்டுதல். 'ஒத்தன', 'வேறுபட்டன' என்ற சொற்களை குழந்தைகள் விளங்கிக் கொள்ளவேண்டும். அதற்கு வகைப்படுத்தல், பொருத்துதல் என்பனவற்றில் அதிக அனுபவங்கள் வேண்டும்.

   ஒற்றுமைகள் பற்றிப் பேசுவது, குழந்தைகளுக்கு இலகுவானது. ஆயினும் 'ஒத்தன' என்ற பதம் பற்றிய ஐயப்பாட்டால், (சரியாக ஒத்தது, இயல்பொத்தது என்ற வேறுபாட்டால்) பலர் குழப்பமடையலாம். இப்பதங்களைப் பொறுத்துக் குழப்பமுறுவோர் பிற்காலத்தில் கணித விருத்தியில் இடர்ப்படலாம்.

3. தாமாகவே தொகைப்படுத்தும் வகைகளைத் தீர்மானிப்பதற்குக் குழந்தைகளை உற்சாகப்படுத்தல். பொருட்கள் வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்படலாம், விபரிக்கப்படலாம் என்பதைக் குழந்தைகள் உணர்ந்திருக்கலாம். இத்திறனை விருத்தி செய்கையில், பொருட்கள், பல்வேறு பண்புகளைக் கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அவை தனிப்பட்ட ஒரே வகுப்பைச் சாராதிருக்கும் என்பதையும் உணரவேண்டும். (எடுத்துக்காட்டாக; பையன் அவனது பெற்றோருக்கு மகன் மட்டுமல்ல, மற்றோருக்கு சகோதரனாக, மைத்துனனாக, நண்பனாக அமையலாம்) இவற்றை உணர்ந்து கொள்ளும்போது அவர்கள் தமது அடுத்த விருத்திக் கட்டத்துக்கான அத்திவாரத்தை இடுகின்றனர்.

4. குழந்தைகள், 'சில', 'எல்லாம்' என்பவற்றிற்கிடையே யுள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்ள உதவுதல். இதற்கு உதவுதற்கு முன்னர் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதற்கும், பொருத்தமான தருணங்களில் இச்சொற்கள் பயன்படுத்தப்படுவதைக் கேட்பதற்கும் சந்தர்ப்பம் தேவை. ஏதாவதொன்றின் பகுதிக்கும் அதன் முழுமைக்குமிடையேயுள்ள வேறுபாட்டை விளங்கிக்கொள்வதற்கும், 'சில', 'எல்லாம்' என்ற எண்ணக் கருக்களைத் தெளிந்து கொள்வதற்கும் உதவுதல் வேண்டும்.

மேலும் 'நிறைவு', 'வெறுமை' என்பனவற்றையும் குழந்தை விளங்கிக்கொள்ள, குழந்தைகளுக்குக் கால அவகாசம் தேவை என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

5. தொடர்புகள் பற்றிய கணித எண்ணக் கருக்களை விளங்கிக்கொள்ள உதவுதல். இதனைக் குழந்தைகள் பிடித்துக்கொள்ள முடியாமைக்குக் காரணம், அடிக்கடி கணித எண்ணக்கருக்கள் கடினமாயமைவதாகும். எவ்வாறு பொருட்கள் இணைக்கப்பட்டுள்ளன என்பதைக் குழந்தைகள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எடுத்துக்காட்டாக: சகோதரர், சகோதரிகள்; அம்மா, அப்பா; மாமா, மாமி போன்ற குடும்ப உறவு முறைகள்). அத்தோடு, எண்களுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் குழந்தைகள் விளங்கிக்கொள்ளவேண்டும். (எடுத்துக்காட்டு: ஒன்று இரண்டைவிடச் சிறியது என்பதில் 1, 2 ஆகிய எண்கள் 'விடச் சிறியது' என்ற சொற்றொடர் மூலம் இணைக்கப்பட்டுள்ளன) மூத்தோர்களுடன் ஆன கலந்துரையாடல்களின் போதும், குழந்தைகளின் விளையாட்டுக்களின்போதும் இவ்வாறான கணித எண்ணக் கருக்களைக் குழந்தைகள் விளங்கிக்கொள்ள ஆரம்பிக்கின்றனர். 'அதிகமாக', 'குறைவாக'; 'அடுத்து', 'மேலே', 'கீழே', 'அருகே' போன்ற கணிதச் சொற்களஞ்சியத்தைக் கற்றுக்கொள்ளச் சந்தர்ப்பத்தை விளையாட்டுக்கள் வழங்குகின்றன.

**வரிசை ஒழுங்குபடுத்தும் திறன்கள்**

நிறை, வயது, உயரம் போன்ற சில பரிமாணங்களின் வழியே பொருட்களைத் தருக்கரீதியாக ஓர் ஒழுங்கில் ஒழுங்குபடுத்துதலைக் கொண்டதே 'வரிசை ஒழுங்குபடுத்தல்' ஆகும். வகைப்படுத்தல் போன்றதே இதுவுமாகும். பாலர் பருவத்தின் பின்னர் சில காலம் வரை, பூரணமாக வித்துவம் பெற்றுக்கொள்ளப்படாத பொதுவான ஓர் அறிகைத்திறன் இதுவாகும்.

சிறப்பான வகையில் வரிசை ஒழுங்குபடுத்தக் கூடியதாகக் குழந்தை இருப்பதானால், குழந்தை 'அடுத்து என்ன வரும்?' என்ற வினாவுக்கு விடையளிக்கக் கூடியதாகவிருக்கவேண்டும். இவ்வினா ஒப்புமை காணலை உள்ளடக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் வேறுபாடுகளைப் பகுத்துணரக் கற்றுக்கொள்ளும் வகையில் பல்வேறு பொருட்களையும் சாதனங்களையும் ஒப்பிடுவதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும்.

## 'வரிசை ஒழுங்குபடுத்தல்' திறன்விருத்தி அனுபவங்கள்

1. பொருட்களை வரிசையாக ஒழுங்குபடுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல் - குழந்தைகளின் கலந்துரையாடல்களின்போது, உயரமானது, மற்றையதைவிட உயரமானது; பெரியது, மற்றையதைவிடப் பெரியது போன்ற பொருத்தமான சொற்களஞ்சியத்தைக் கையாள்வதற்கு உற்சாகமளிக்கலாம்.

   பொருட்களின் பருமனுக்கேற்ப அவற்றைத் தரம்பிரிக்க உதவலாம். மேலும் அவற்றின் பண்பு, தொனி என்பவற்றிற்கு அமைவாகத் தரம் பிரிப்பதற்கு ஊக்குவிக்கலாம். சொரசொரப்பானதிலிருந்து அழுத்தமானது வரை தரப்படுத்தலுக்கு வெவ்வேறு தரங்களிலுள்ள அரத்தாள்களை வழங்கலாம். உயர்வானதிலிருந்து தாழ்வானது வரையான மணிகளை ஒழுங்குபடுத்தவிடலாம். இனிப்பானது முதல் புளிப்பானது வரையுள்ள நறுமணச் சுவையூட்டிகளை வழங்கலாம். நிறத்தின் கடுமையை இனங்காண்பதற்காக நிறத்துணிகளைப் பயன்படுத்தலாம்.

2. விளையாடும்போது, பொருட்களை ஒப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் - பொருட்களின் பல்வேறு பண்புகள் பற்றி உண்மையான விளக்கத்தை விருத்தி செய்யக்கூடிய வழிமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவாகும். அதனால் ஒப்பீடுகள் செய்யும்போது குழந்தைகள் தமது புலனுணர்வுகள் யாவற்றையும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வயதுக் குழந்தைகள், நுட்பமான ஒப்பீடுகளைச் செய்யமுடியாதவர்களாதலால் பொருட்கள் வித்தியாசமானவையாக இருத்தல்வேண்டும்.

3. வரிசைப்படுத்தப்பட்ட பொருள் தொகுதியொன்றை மற்றொரு தொகுதியுடன் பொருத்துவதற்கான தருணம், ஒரு தனித்தொடரில் பொருட்களை ஒழுங்கு செய்வதைவிட அதிக சிக்கலான கருமமாகும். காரணம், இரு தொகுதிப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதையும், பின்னர் இரண்டு தொடர்களிலும் தொடர்பு காண்பதையும் இக்காரியம் உள்ளடக்கியுள்ளமையாகும்.

வெவ்வேறு அளவுகள் கொண்ட சமையற் பாத்திரங்களையும், அவற்றின் மூடிகளையும் பொருத்த முயல்வதன் மூலமோ, வெவ்வேறு அளவுகளிலுள்ள சுரைகளையும் சுரையாணிகளையும் பொருத்துவதன் மூலமோ பொதுவாகக் குழந்தைகள் இந்த அனுபவத்தைப் பெறக் கூடும். ஆயினும் பியாஷே தனது பரிசோதனைகளில் பயன்படுத்திய பொருத்தும் பாவைகளும் கட்டில்களும் இதற்கான முதல்தர எடுத்துக்காட்டுகளாகும்.

## எண் சார்ந்த திறன்கள்

அண்மைக்காலங்களில் குழந்தைகள் எவ்வாறு எண் சார்ந்த எண்ணக்கருக்களை விருத்தி செய்து கொள்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பற்றிய கலந்துரையாடல்கள் பல நிகழ்ந்துள்ளன. எண் பற்றிய விளக்கம் பெறப்படுவதற்கு முன்னர், எண்ணுதல், பொருத்துதல், தொகுதியாக்கல், ஒப்பிடல் போன்றன சார்பான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பியாஷேயின் கருத்துப்படி கணிதச் செய்கையின் எந்த ஒரு அம்சத்தையும் விளங்கிக் கொள்வதற்கு முன்னர், குழந்தைகள் ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பையும் காப்பு நிலையையும் கிரகித்துக் கொள்ளவேண்டும்.

முன்பள்ளிப் பருவக் குழந்தைகள் எண் காப்பை விளங்கிக்கொள்ள முடியாதபோதும், ஒன்றிற்கொன்றுள்ள தொடர்பு சார்ந்த விளக்கங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள் - படிப்படியாக இருவகையான பொருட்களை ஒன்றிற்கொன்று பொருத்தலாமென உணர்ந்து கொள்கிறார்கள். (எடுத்துக்காட்டு: ஒரு கத்தியை ஒரு முள்ளுக்கரண்டியுடன் பொருத்தலாம்). ஆயினும், ஒரே வகையான - சம நீளமுள்ள இரு நேர்கோடுகளில் ஒழுங்கு செய்யும் வரை சம எண்ணிக்கையான கத்திகளும் முள்ளுக்கரண்டிகளும் உள்ளன என்பதை விளங்கிக்கொள்ள மாட்டார்கள். மதிய உணவுக்காக மேசையொன்றைக் குழந்தை ஒழுங்குபடுத்துதலை அவதானித்தால் இதைக் கண்டுகொள்ளலாம்.

**எண்சார் எண்ணக்கருவிருத்திக்கான வழிவகைகள்**

1. எண்ணுதற்கான சந்தர்ப்பம் வழங்குதல் - எண்ணவும், எண்களைப் பாடலில் இசைத்துக்கூறவும் மூன்று நான்கு வயதுக் குழந்தைகள் விருப்புக் காட்டுபவர்களாவர். ஆனால் வயது வந்தவர்களுக்கு எண்ணுதல் கொடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தைக் குழந்தைகள் பெறவேண்டியவரல்லர். எண்களைச் சொல்வதில் கிடைக்கும் மகிழ்ச்சிக்காக அவர்கள் எண்களை மீண்டும் மீண்டும் சொல்லக்கூடும். அவ்வாறு சொல்லும் போது சிலவேளை தவறான ஒழுங்கில் எண்ணவும் கூடும்.

பெரும்பாலான முன்பள்ளிக் குழந்தைகள் எண் காப்புச் செய்யவோ, தொடர்வரிசைப்படுத்தவோ முடியாதவர்களாவர். இந்த நிலையில் குழந்தையின் வரிசைப்படுத்தலை பெரியவர்கள் ஏற்றுக்கொள்வதோடு எண்களைச் சரியாக எண்ணிக் காட்டுதலும் பயனுடையதாகும். அவ்வாறு சரியாக எண்ணும்போது குழந்தை அதனைப் பாவனை செய்யவும் சரியான வரிசை ஒழுங்கை அறிந்து மேற்கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும்.

2. ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பை விருத்தியாக்குவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் - ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக, மேசையில் குளிர்பானப் போத்தல்களை வைத்து, ஒவ்வொரு போத்தலிலும் ஒவ்வொரு உறிஞ்சு குழாயை இடுமாறு செய்யலாம். வர்ணச்சாடிகளை வைத்து ஒவ்வொரு சாடியிலும் ஒவ்வொரு தூரிகையை வைக்கச் செய்யலாம்; இச்செயற்பாடுகள் மூலம் இக்கடினமான எண்ணக் கருக்களுடன் அனுபவமுறும் வாய்ப்புக்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கும்.

3. அளவுகளை ஒப்பிடச் சந்தர்ப்பமளித்தல் - ‘அதிகம்’, ‘குறைவு’ ஆகிய சொற்களின் கருத்துக்களைக் குழந்தைகள் விளங்கிக் கொள்வதற்கு மேலும் ஒரு வருடமோ, அதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான காலமோ ஆகலாம். ஆயினும் தொடர்ச்சியானதும் தொடர்ச்சியற்றதுமான கணியங்களின் அளவுகளைக் குழந்தைகள் ஒப்பிடுவதற்கு உதவக்கூடிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. தொடர்ச்சியான பொருட்கள் என்பது, ஒரு கொள்கலனிலிருந்து மற்றொரு கொள்கலத்தினுள் ஊற்றப்படவோ அல்லது கொட்டப்படவோ கூடியவை எனலாம். எடுத்துக்காட்டாக, நீர், மணல், மா என்பனவற்றைக் குறிப்பிடலாம். தொடர்ச்சியற்ற பொருட்கள் என்பன வெவ்வேறாக எண்ணப்படக் கூடியன. எடுத்துக்காட்டாக மணிகள், இனிப்புக்கள், கார்கள் முதலியனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகைப் பொருட்களையும் ஒப்பிடுவதற்கு குழந்தைகளுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

4. எண் சார்பான பல்வேறு தொழிற்பாடுகளுக்கு வழிப்படுத்தல் - குழந்தைகள் கட்டாயக்கல்வி வயதையடையும் போது, ஒப்பீடு செய்யவும், வகைப்படுத்தவும் பொருத்தவும், தொடர் வரிசைப்படுத்தி நாளாந்தப் பொருட்களை எண்ணவும். பத்து வரையான எண்களை உணர்ந்து பயன்படுத்தவும், நாளாந்த வாழ்வில் பெரிய எண்களுடன் பழக்கப்படுத்திக் கொள்ளவும் குழந்தைகளால் முடியும். எண்களை விளங்கிக்கொள்ள, பதிவு செய்து கொள்ள, கூட்டல், கழித்தல் போன்ற எண் செய்கைகள் சார்ந்த விழிப்புணர்வைக் காட்டத் தொடங்க குழந்தைகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

**இடவெளித் தொடர்புசார் திறன்கள்**

அண்மை, சேய்மை என்பன பற்றிக் குழந்தைகள் விளங்கிக்கொள்ள வேண்டும். பொருட்கள், எவ்வளவு அருகாக உள்ளன என்பதைக் குறிக்கும் ‘அண்மை’ பற்றியும், பொருட்கள் எவ்வளவு தூரம் வேறாகப் பிரிந்துள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் காட்டும் 'வேறாக்கம்' பற்றியும் குழந்தைகள் விளங்கிக் கொள்ளவேண்டும். பொருட்களைத் தூரத்தூர வைத்தும், அவற்றை நெருக்கமாக வைத்தும் இடைவெளியை அவர்கள் கண்டறிந்து கொள்கிறார்கள். மூடிய இடைவெளி பற்றி அனுபவ வாயிலாக அறிய ஆரம்பிப்பதோடு, முழுமையான திருத்தமில்லாவிடினும் உள்ளே, வெளியே ஆகிய சொற்களையும் கையாள ஆரம்பிக்கிறார்கள்.

பியாஷே, இன்கெல்டர் ஆகியோர் (Piget & Inhelder-1969), துவாரங்கள் உள்ள, துவாரங்கள் இல்லாத பொருட்களை வேறுபடுத்தி அறியவும், அதேபோல தடத்தினுள் பொருட்களைக் கொண்ட மூடிய நூலிளைத் தடம், தடத்திற்கு வெளியே பொருட்களைக் கொண்ட மூடிய நூலிளைத்தடம் என்பவற்றை வேறுபடுத்தியறியவும் குழந்தைகளால் முடியுமெனக் கண்டுகொண்டனர். ஆயினும் பல இடைவெளித் தொடர்களுடன் மேலும் நன்றாக ஈடுபடுவதற்கு குழந்தைகளுக்கு நீண்ட காலம் எடுக்கலாம்.

**இடைவெளித் தொடர்புசார் திறன் விருத்திக்கான வழிவகைகள் :**

1. பொருட்களைப் பொருத்தவும் வேறாக்கவும் தாராளமாகச் சந்தர்ப்பங்களை வழங்குதல் - இச்செயற்பாடுகளால் பொருட்கள் ஒன்றோடொன்று பொருந்தக் கூடிய வழிகள் பற்றியும், (எடுத்துக்காட்டு: திருகாணி, இணைப்பு, ஊக்கு) அதேவேளை எவ்வாறு சில பொருட்கள் எளிதாக ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்றன என்பது பற்றியும், சிலவற்றைப் பொருத்துவதற்குக் குறிப்பான அடையாளம் அவசியம் என்பது பற்றியும் குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். இச்செயற்பாடுகள் நுண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசைநார்க் கட்டுப்பாட்டை மேம்படுத்திக் கொள்ளவும் துணையாகின்றன.

2. குழந்தைகள், பொருட்கள், சாதனங்களை மீள ஒழுங்கமைக்கவும், மீள வடிவமைக்கவும் ஊக்கமளித்தல் - இவ்வயதினர், அவர்களது புலக்காட்சிகளால் வழிநடத்தப்படுவார்கள் என்பதால், தாம் மீள ஒழுங்கமைத்த, மீள வடிவமைத்த பொருட்கள் முன் இருந்தவாறேயுள்ளன என்பதை நம்புவதில் இடர்ப்படலாம்.

எடுத்துக்காட்டாக, கோட்டை ஒன்றைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய அதே எண்ணிக்கையான மரத்துண்டுகள், பாலர் நிலையத்துக்குக் குறுக்காக ஒரு நீண்ட சங்கிலித் தொடரை உருவாக்கப் போதியன என்பதைக் கட்டாயமாக உணர்ந்து கொள்ளாவிட்டாலும், திரும்பத் திரும்ப ஏற்படும் உருமாற்றத்தின் பின்பும், பொருட்கள் தமது சிறப்பம்சங்களை இழப்பதில்லை என உணர்ந்துகொள்ள ஆரம்பிப்பர்.

3. குழந்தைகள் வெவ்வேறு இடங்களிலிருந்து பொருட்களைக் காண்பதற்கு ஊக்கமளித்தல் - இளங்குழந்தைகள் வழமைக்கு மாறான உடலமைவுகளில் தாம் காட்சி தருவதில் மகிழ்பவர்களாவர். அக்காட்சிக் கோலத்தில் உலகு எவ்வாறு காணப்படுமென உரையாடுவது சுவாரஸ்யமாகவும், பயனுள்ளதாயுமமையும். இவ்வாறான உரையாடல்களின்போது, கை வண்டி அல்லது சக்கர வண்டியிலுள்ள ஒருவருக்கு உலகு எவ்வாறு தோன்றும் என குழந்தைகள் விளங்கிக்கொள்ள உதவலாம். உயரே, கீழே, மேலே, அப்பால், அருகே, இடையே என்பன போன்ற இடவெளித் தானங்கள் சார்ந்த சொற்களஞ்சியத்தை அறிமுகம் செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவை கடினமான எண்ணக் கருக்கலாதலால், குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் அர்த்தங்களை விளங்கிக் கொள்ளுவதற்கான தருணங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் அவசியம்.

4. குழந்தைகள் அவர்களது உடல் பற்றியும் தாம் இயங்கக்கூடிய பல்வேறு முறைகள் பற்றியும் தெரிந்துகொள்ள உதவுதல் –

5. படங்கள் பிரதிபலிப்பனவற்றை யதார்த்தமாக ஒப்பிட்டு நோக்கக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல் – இதற்காக சித்திரங்கள், புகைப்படங்கள், பல்வேறு வகைப் படங்களைப் பார்ப்பதற்கும், அவைபற்றிக் கலந்துரையாடுவதற்கும் ஊக்கமளிக்கலாம்.

**காலக்கிரமம்சார் விழிப்புணர்வு**

'காலக்கிரம வரிசைப்படுத்தல்' என்பது நிகழ்வுகளின் நிரலை அவை நிகழும் நேர ஒழுங்கின்படி மீட்டுப் பார்த்தல் அல்லது எதிர்பார்த்தலுக்கான ஆற்றல் எனலாம். இது இளங்குழந்தைகளிடம் ஆரம்ப வடிவில் காணப்படும்.

இரண்டு வயதுக் குழந்தை தனது வாழ்வில் இடம்பெறும் கருமக்கிரமத்தை நன்கு அறிந்திருக்கும். நான்கு வயதாகும் வரை பெரும்பாலான குழந்தைகள் நேரம் என்பது ஒரு தொடர் நிகழ்வென்பதை உணர்ந்து கொள்ள மாட்டார்கள்; அல்லது தற்போதிருக்கும் பொருட்கள் பின்னரும் தொடர்ந்திருக்குமென்பதை விளங்கிக் கொள்ளமாட்டார்கள். நான்கு வயதுக்குப் பின்பும் கூட நேரம் கழிவது பற்றிய உண்மையான கருத்தை இளங்குழந்தைகள் கொண்டிருக்க மாட்டார்கள்.

மேலும், நேரத்தை எவ்வாறு அளக்கலாம் என்பது பற்றியும் குறைவான விளக்கத்தோடேயே இருப்பர். வரையறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட ஒரு நேரத்தில் நிகழ்ச்சி ஒன்றுக்காகக் குழந்தைகள் குழுவொன்றைத் தயார் செய்ய முற்படுகையில், இளம் குழந்தைகளிடம் காலக்கிரமம் குறித்த விளக்கமின்மை இருப்பது அவர்களுடன் செயற்படும் அனுபவமற்ற ஆசிரியர்களுக்கு விரக்தியையேற்படுத்தும். பாலர் பருவத்தின் முன்பு நேரம் பற்றிய உண்மைக் கருத்துக்களை விருத்தியாக்கிக் கொள்ளும் காலம் வரை அதிக காலம் இருப்பினும், காலக்கிரமம் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தக்கூடிய வசதிகள் சில பின்வருவனவற்றில் அடங்கக் காணலாம்.

1. குழந்தைகள் கடந்தகால நிகழ்வுகளை விபரிக்கவும் எதிர்கால நிகழ்வுகளை எதிர்வு கூறவும் ஊக்கமளிக்கும் வகையிலான செயற்பாடுகளைத் தொடர் நிரற்படுத்தல்.

2. குழந்தைகளின் வாழ்நாட்களில் இடம்பெறும் பிரதானமான நிகழ்வுகளைக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்தல். எடுத்துக்காட்டாக, பிறந்த தினங்கள், விடுமுறை நாட்கள், நத்தார் தினம், தீபாவளி, ரம்ழான் போன்றவை.

3. பருவகால மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாட வாய்ப்பளித்தல்.

4. பின்வருவனவற்றின் நேரக்கணிப்புகள் பற்றியும் பயன்பாடுகள் பற்றியும், ஆராய்தலும், கால இடைகளின் தொடக்கம் - முடிவு என்பனவற்றில் இவற்றினோடு நிகழ்த்தக்கூடிய பல செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதலும். சாதனங்கள்; அலார மணிக்கூடுகள், முட்டை நேரக் கணிச்சிகள், தாளப்பொறிகள் போன்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குழந்தைகள் ஈடுபட்டிருக்கும் செயற்பாட்டை நிறுத்தி, ஒரு குறித்த நேரத்துள் (ஐந்து அல்லது பத்து நிமிடத்துள்) மற்றொரு நிகழ்ச்சிக்குத் தயாராகுமாறு அவர்களை வழிப்படுத்துதல்.

**எளிய காரண-காரியத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளல்**

பிரச்சினை தீர்த்தல், பகுத்தாயும் திறன்களுடன் நெருக்கமான தொடர்புடையதே. எளிய காரண-காரியத் தொடர்பை விளங்கிக் கொள்ளலாகும். பியாஷே (1930), 'இன்னும் சில காலம் வரை பௌதிக ரீதியிலான காரண - காரியத் தொடர்புகள் பற்றிய தெளிவான கருத்துக்களைக் குழந்தைகள் விருத்தி செய்து கொள்ளமாட்டார்கள்' எனக் கூறியபோதும் பாலர் பருவத்தில் இந்த எண்ணக் கருக்களைக் குழந்தைகள் பெற்றுக்கொள்ள ஆரம்பித்துவிடுகின்றனர். எடுத்துக்காட்டாக நீரைத் தவறி மேசையில் ஊற்றிவிட்ட குழந்தை அதைத் துடைக்க வேண்டுமென அறிந்து கொள்கிறது.

'அவ்வாறானால் என்ன நடக்கும்?' 'ஏன் அப்படி நினைக்கிறாய்?' என்பன போன்ற வினாக்களை நான்கு வயதளவிலேயே குழந்தைகள் கேட்கத் தொடங்கி விடுகின்றனர். சுசான் ஐசாக்ஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்களில் இளங்குழந்தைகளின் பௌதிக காரண - காரியத் தொடர்பு சார்ந்த விளக்கத்திற்கான சில சிறந்த எடுத்துக்காட்டுக்கள் கிடைத்தன. பொருட்கள் ஏன், எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை அறியவேண்டுமென்பதால்; பொருட்களை ஒப்பிடவும், மதிப்பிடவும், பிரச்சினை தீர்க்கவும், வெவ்வேறு வகையான அமைப்புத்தன்மை கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களைப் பயன்படுத்த குழந்தைகளுக்கு வாய்ப்புக்கள் தரப்படவேண்டும் என்பது முக்கியத்துவம் பெற்றது.

அதன்பின்னர் குழந்தைகள் தாமாகவே அனேகமான வினாக்களை விடுப்பர். அனுபவமுள்ள மூத்த ஒருவரின் உதவியுடன் விடை தேடுவர். சிலவற்றிற்கு விடைகளைப் பெற்றுக் கொள்ளவும் கூடும்.

**திரளமைப்புக்களின் பங்களிப்பு**

குழந்தைகள் திரளமைப்பைப் பயன்படுத்தியே பல அம்சங்களைக் கற்றுக் கொள்கின்றனர். கணித விஞ்ஞானக் கருத்துக்களின் வளர்ச்சிக்குத் திரளமைப்புக்கள் பங்களிக்கும் வழிகள் பற்றிய பெருமளவிலான நாட்டம், ஆதே (Athey) என்பவரின் 'இளங்குழந்தைகளின் விரிவுபெறும் சிந்தனை' என்ற நூல் வெளிவந்த பின்பே அதிகரித்தது. இளங்குழந்தைகள் உயிர்ப்போடு இயங்கும் வகையில் கற்றுக்கொள்ளத் துணைபுரிகின்ற சுழற்சி, உபாயம், கொள்ளளவு, வருணக்கட்டொழுங்கு, இடைவெளியொழுங்கு என்பன பற்றிய கருத்துக்களை வளர்த்துக்கொள்வதற்கு திரளமைப்பைக் குழந்தைகள் பயன்படுத்துகின்ற வழிவகைகள் பற்றிய பல எடுத்துக்காட்டுக்களை நற்பிறவுன் (Nutbrown-1994) என்பவரும் குறிப்பிட்டுள்ளார்.

தேடிக்கண்டறியும் விளையாட்டு மூலம் அவதானித்துப் பதிவு செய்தல், கோலங்களை இனங்காணல், கருதுகோள்களை வளர்த்தல், கண்டறிதலும் சோதித்தலும் 'போன்ற பல விஞ்ஞானத் திறன்களும் எண்ணக் கருக்களும் கற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த அடிப்படையில் 'குழந்தைகள் எவற்றைக் கற்றுக்கொண்டார்கள்?' என்பது சார்பாக உரையாடவும், குழந்தைகளின் கருத்துகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிப்பதற்குத் துணையாகக் கூடிய வளர்ந்த ஒருவரின் உதவியுடன் விஞ்ஞான நாட்டங்களை வளர்த்தெடுக்கவும் முற்படல் வேண்டும். எளிய - காரண காரியத் தொடர்பை விளங்கிக் கொள்ள ஊக்கமளிப்பவை, இளங் குழந்தைகளுக்குப் பொருத்தமான விஞ்ஞான அடிப்படையிலமைந்த பல்வேறு நடவடிக்கைகளாகும்.

பிரச்சினை தீர்க்கும் திறன்களையும், பகுத்தாயும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் குழந்தையின் ஆரம்ப வருடங்களிலும் அதன் பின்னரும், இயற்கையானதும் மனிதனால் ஆனதுமான உலகின் அம்சங்களையும் சூழலையும் குழந்தைகள் விளங்கிக் கொள்கிறார்கள். பல்வேறு பாடங்களும் இத்திறன்களை வளர்க்கின்றன. எல்லாக் குழந்தைகளும் தமது உண்மையான திறன்களை உணர்ந்துகொள்ளத் துணை செய்வதற்கு, குழந்தைகள் தமது வியப்பும் ஆர்வமும் சார்ந்த உணர்வைப் பேணக் கூடியதாக, பிரச்சினைகளுக்கான தீர்வை உள்ளடக்கியதாக கற்றற்சூழலை நாம் ஒழுங்கமைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 6

# தனியாள், சமூகத் தேர்ச்சிகள்

சுதந்திரமான தன்னாதிக்கமுடைய முதியவர்களாக வளர்வதற்கு உதவுதல் முன்பள்ளிக் கல்வியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். இங்கே, ஒருவர் தன்னையும் பிறரையும் விளங்கிக் கொள்வது உட்பட தனியாள் விருத்திக்கும் சமூக விருத்திக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. அத்தோடு கற்றல் செயற்பாட்டில் நம்பிக்கை, தனியாள் சமூக கலாசாரத் தேவைகளில் விழிப்புணர்வு என்பன பிள்ளை விருத்தியின் ஓர் அடிப்படைக் கூறாய் அமைகிறது. இவ்வம்சங்கள் இங்கே நோக்கப்படுகின்றன.

## தனியாள் பற்றிய விழிப்புணர்வு

தன்னைப்பற்றிக் குழந்தை கொண்டுள்ள கருத்தும், சூழலுடன் ஒத்துப்போகும் ஆற்றலும் பாலர் பருவத்திலும் அதற்கப்பாலும் அதனால் கற்கப்படும் திறன்கள், தேர்ச்சிகளில் பாரதூரமான விளைவுகளையேற்படுத்தும்; தான், தன் ஆற்றல் என்பன பற்றி நேர் உணர்வுகளை விருத்தி செய்யும் குழந்தை, போதாமை, தோல்வியேற்படும் என்ற பயம் என்ற உணர்வுகளைக் கொண்ட பிள்ளைகளைவிடக் கூடுதலளவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பார்வமுடையதாயும் கற்றலுக்கான ஊக்கமுடையதாயும் காணப்படுதற்கான வாய்ப்பினை அதிகம் கொண்டிருக்கும்.

இளங்குழந்தை உள்ளார்ந்த நேர் உணர்வுகள், உடல் சார் விழிப்புணர்வு, புலன் உணர்வுகள் என்பனவற்றை விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

உடற்றொழிற்பாட்டுக் கட்டுப்பாட்டினைப் படிப்படியாக விருத்தி செய்யும்போது, தமது உடலால் எவற்றையும் தாம் செய்யமுடியும் என்ற விழிப்புணர்வைப் பெறுதல் அதிகரிக்கிறது. அவர்கள் தாம் எவ்வாறு தோற்றம் தருகின்றனர், உணர்கின்றனர், ஓசையெழுப்புகின்றனர், மோப்பம் பிடிக்கின்றனர் காலத்தோடு தமது உடலில் ஏற்படும் மாற்றங்களை எவ்வாறு நயக்கின்றனர் என்பவை பற்றிய கருத்துக்களை மொழிக்கூடாக வெளிப்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

மிகச் சிறிய வயதிலேயே தம்மைக் கண்ணாடியில் பார்த்து, தம்மைத் தனியாட்களாக இனங்காண முற்படுகின்றனர். ஆனாலும், மூன்று வயதுக் குழந்தைகளில் அதிகமானோர் பள்ளிகளில் சேரும்போது, தமது உடலின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் பற்றி மிகக் குறைந்தளவு விளக்கத்துடனேயே உள்ளனர். இது பல ஆசிரியர்களுக்கு ஆச்சரியமாக உள்ளது.

உதாரணமாக ஒரு பெரிய பாலர் பள்ளியின் மூன்றரை வயதுப் பெண் குழந்தை, தலை, கழுத்து, தோள்கள் முதலிய சொற்களை அறிந்திருந்தபோதும், அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளை அறவே அறிந்திருக்கவில்லை என்பதைக் குறிப்பிடலாம். இரண்டு தொடக்கம் ஐந்து வயது வரையான குழந்தை அக பௌதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி எனும் எண்ணக்கரு பற்றிச் சிறிதளவு விளக்கத்தையே பெற்றிருக்கிறது. அக்குழந்தைகளின் கருத்துக்கள் பெரும்பாலும் கலப்பாகவும், குழப்பமாகவும் இருக்கின்றன. சருமம் உலர்வாயுள்ள நிலையில், தனக்கு ஒரு கீறல் ஏற்பட்டபோது, இரத்தம் வெளிவந்தமை வினோதமானது என ஒரு நாலரை வயதுப் பையன் தன் ஆசிரியரிடம் கூறினான். இதன் மூலம் ஏதோ ஒரு வகையில் விளக்கம் பெறும் நிலைநோக்கி அவன் முன்னேறியுள்ளதை நாம் உணரலாம்.

குழந்தைகள் இரண்டு வயதளவில், சிறுவன், சிறுமி போன்ற பால் தொடர்பான சொற்களின் பொருத்தமான பயன்பாட்டைக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றனர். ஆண், பெண் பிள்ளைகளை அடையாளம் காணும் ஆற்றலைக் குழந்தைகளிடம் நிலைநிறுத்த முனைதல் ஆசிரியரின் முக்கிய பணியாகும். இங்கு பால் என்பது உயிரியல் சார்பானதே தவிர ஆண், பெண் தன்மையைக் குறிக்கும் கலாசார வரைவிலக்கணம் சார்ந்ததல்ல. நான்கு தொடக்கம் ஆறு வயது வரையிலான பிள்ளைகளைப் பொறுத்து தலைமயிரின் நீளமும் உடற்கட்டமைப்புமே பாலைத் தீர்மானிக்கும் அறிகுறிகளாகும்.

சில சந்தர்ப்பங்களில் நான்கு அல்லது ஐந்து வயது வரை பிள்ளைகளிடம் பால் வேறுபாடு பற்றிய விழிப்புணர்வு முழுமையாக ஏற்படாமையை உணர்வோம். உதாரணமாக, எந்நேரமும் உடையணியும் நான்கு வயதுச் சிறுமி, நீளக்காற்சட்டையணிந்தால் தான் ஒரு சிறுவனாக மாறலாம் எனக் கூறக்கூடும். இங்கு உடைமாற்றம் பால்மாற்றமா? என்ற உறுதியற்ற நிலையை நாம் காணலாம்.

பால் பற்றிய தீர்மானங்களைக் குழந்தை மேற்கொண்டதும், எவ்வகையான வகிபங்கைத் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கவேண்டும் என்பதை விரைவில் கற்றுக்கொள்கிறது. மூன்று வயதளவிலேயே தமது பால் வகிபங்குகள் பற்றிய ஒரு திடமான கருத்தினைக் குழந்தைகள் ஏற்படுத்த முயல்வதைக் காணலாம். இரண்டு முதல் மூன்று வயதுள்ள பெண் குழந்தைகள், தமது பாலாரிடம் நேர் அம்சங்களும் (அழகான தோற்றம்), எதிர்ப்பாலாரிடம் எதிர் அம்சங்களும் (சண்டையிடல்) இருப்பதாகக் கொள்கின்றனர். இதே வயது ஆண் குழந்தைகள் இதற்கு நேர் எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பெண் குழந்தை அழுதல், ஆண் குழந்தை கடின வேலை செய்தல் என்பதனை குன் (Kuhn), நாஸ் (Nash), புறுகன் (Brucken) என்போரது ஆய்வுகள் (1978) காட்டுகின்றன. நடத்தையின் எல்லா இயல்புகளும் இவ்வாறான (பால்) வார்ப்புத் தன்மையைக் காட்டவில்லை யென்பதையும் இதே ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. வலிமையாயிருப்பது பால் வேறுபாட்டாலல்ல.

உலகு இரு பால்களாக வகுக்கப்பட்டுள்ளது; ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான நடத்தைகள் உள்ளன என்ற விளக்கம் சமூக எதிர்பார்க்கையின் விளைவால் ஏற்பட்டதாகும்.

சிறுவர் சிறுமியரின் அவாக்கள், பொருத்தமான நடத்தைகளைப் பொறுத்து இருபாலாருக்கும் வேறுபாடுகளின்றி தம் பிள்ளைகளை வளர்க்க முற்படும் பெற்றோரை இன்று மேற்குலக சமூகத்தில் காண்கிறோம்.

கூட்டாளிகள், மூத்தோர் ஊடகங்களால் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தகவல்கள் இவர்களது முயற்சிக்கு வேறுபட்டதாக அமைவதால் இப்பணியானது இலகுவானதாக அமையவில்லை. பால்சாரா முறையில் பிள்ளைகளை வளர்க்க முயன்ற பெற்றோரை ஸ்ரதம் (Statham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986) என்பவர் செவ்வி கண்டபோது அப்பெற்றோர் தமது பிள்ளைகளைப் பொறுத்து ஒத்த நோக்கங்களைக் கொண்டிருந்தனராயினும் ஆண்குழந்தைகளின் பெற்றோரைவிடப் பெண்குழந்தைகளின் பெற்றோர் பாரம்பரியப் பால் வார்ப்புக்களில் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்பதை அறிந்துகொண்டார்.

தமது குழந்தைகள் சுதந்திரமாகவும் தம்மைத்தாமே கவனிப்பவராகவும், சம தொழில் வாய்ப்புக்களைக் கொண்டவராகவும் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இருசாராரும் ஒத்திருந்தனராயினும், பாரம்பரியமல்லாத வகிபங்குகளை உருவாக்குதலைப் பொறுத்து பெண் பிள்ளைகளைவிடக் குறைந்த அளவிலேயே ஆண் பிள்ளைகளுக்கு அது பொருத்தமானது என இப்பெற்றோர் கருதினர்.

அத்தோடு ஒரு சமூகத்திலுள்ள மனப்பாங்குகளை மாற்றுதல் கடினம் எனவும், தமது முயற்சியைத் தொடர வேண்டுமெனவும் நம்பினர்.

சில கலாசாரங்களில் ஆண், பெண் என்ற இருபாலாரையும் கையாளும் முறையில் பலத்த வேறுபாடுகளைக் காணமுடிகிறது. விற்றிங் (Whiting), போப் எட்வர்ட்ஸ் (Pope-Edward) ஆகியோர் உலகளாவிய ரீதியில் குழந்தைகள் மீது ஆய்வொன்றை (1988) மேற்கொண்டனர். அதில் உடை, முதியோர் பணிகளில் குழந்தைகளின் உதவி பற்றிய மனப்பாங்கு என்பன பல சமூகங்களில் பால் பற்றிய மிகத்தெளிவான குறியீடுகளாக உள்ளதை அறிய முடிந்தது. இதற்கு உதாரணமாக மெக்சிக்கோ நகரொன்றில் எல்லாச் சிறுமிகளுக்கும் பிறந்த சில வாரங்களுக்குள்ளேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுச்சோணைகள் துவாரமிடப்படுவதையும், காதணி அணியப்படுவதையும் குறிப்பிடலாம். அதேபோல சிறிய பையன்கள் தமது தந்தையருக்கு உதவிபுரிய விரும்புகிறார்களே தவிர தாய்மாருக்கல்ல. ஐக்கிய இராச்சியத்திலும் பல்வேறு சமூகங்களிலும் இவ்வாறான வேறுபாடுகளைக் காணலாம்.

குழந்தைகள் பள்ளியில் சேர்வதற்கு அதிக காலத்தின் முன்பே சமூகமயமாக்கல் செயற்பாடுகள் ஆரம்பித்துவிடுகின்றன. ஆண், பெண் குழந்தைகளுக்கு பொம்மைகளுடனும் உபகரணங்களுடனும் விளையாட சமவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம், பால் வகிபங்குகளிலும் பார்க்க, ஆளைப் பின்பற்றுதலுக்கு ஊக்குவிக்கலாம் என்பதை இங்கு குறிப்பிடலாம்.

குழந்தையின் சுயவிருப்பம், தன்னைப்பற்றிய உணர்வுகள் என்பன ஆசிரியர் கொள்ளும் கருத்துக்களாலும் தாக்கத்துக்குள்ளாகின்றன. குழந்தையைப் புகழுதல், அதன் உடை, நடை என்பன பற்றிய நேர் கருத்துக்களை வழங்குதல் என்பன குழந்தையின் சுய எண்ணக்கருவை மேம்படுத்துகின்றன. அதேநேரம் ஆசிரியர் இவ்வாறான செயலைச் செய்யாதுவிடுதல் காரணமாக குழந்தை எதிர் உணர்வுகளையும் பெறக்கூடும்.

கவர்ச்சித்தன்மையின் வார்ப்புருவானது முன்பள்ளிப் பருவத்திலேயே வெளிப்படுவதாகத் தோன்றுகிறது. இந்த நிலையில் சமூக விரோதிகள் என முத்திரை குத்தப்படுகின்ற குழந்தைகள் கவர்ச்சியற்றோராகப் புலக்காட்சி பெறும்போது, கவர்ச்சியான குழந்தைகள் அதிக சுய நிறைவும் சுதந்திர இயல்பும் கொண்டோராகத் தோன்றுகின்றனர். முன்பள்ளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவக் குழந்தைகள் எவ்வாறு தமது கவர்ச்சித் தன்மையை மதிப்பிடுகின்றனர் என்பதை நாம் அறியாவிடினும், கவர்ச்சியற்ற குழந்தைகளின் படங்களைவிட கவர்ச்சியான குழந்தைகளின் படங்களைத் தெரிவு செய்யும் ஆற்றல் குழந்தையிடம் மூன்று வயதிலே காணப்படுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. ஆகவே, கவர்ச்சியான குழந்தைகள், கவர்ச்சியற்ற குழந்தைகளைவிட மூத்தோர் தொடர்புகளைப் பொறுத்து ஓர் உயர்சாதக நிலையுடன் செயற்படுகின்றனர் எனத் தோன்றுகிறது.

இதன் விளைவுகளை ஆசிரியர் உணர்ந்துகொள்ளல் அவசியமாகும். ஏனென்றால் குழந்தைகள் சமமாக நடத்தப்பட்டாலும்கூட, நான்கு வயதளவிலேயே கவர்ச்சி குறைந்த குழந்தை தன் சகபாடிகளிலும் பார்க்க தான் கவர்ச்சி குறைந்தவர் என்பதை அறிந்துகொண்டு, எதிர் - சுய எண்ணக்கருவை உருவாக்க ஆரம்பிக்கின்றது. இனவாத இழிவுக் குறிப்புக்களை எதிர்கொள்ளும் குழந்தைகளிடத்தே எதிர் - சுய எண்ணக்கரு உருவாக்கம் பெறுதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பதை இங்கு குறிப்பிடலாம்.

பாலர் பள்ளி வயதுக் குழந்தைகளிடம் கறுப்பினக் குழந்தைகள் பற்றிய எதிர்மனைப்பாங்கு உள்ளதற்கான ஆதாரம் இல்லையெனக் கூறப்பட்டாலும், இரண்டு அல்லது மூன்று வயதளவிலேயே குழந்தைகள் தோல் நிறவேறுபாடுகளைக் கண்டு கொள்கின்றனர் என்பதற்கு ஆதாரம் உண்டு.

குட்மன் (Goodman 1952) என்பவர், இளங்குழந்தைகள் இனவேறுபாடுகளைக் கண்டுகொள்கின்றனர். இளம்பருவத்திலேயே ஒரு சாய்வான மனப்பாங்குகள் உருவாகக் கூடும் எனக் கண்டறிந்து வெளியிட்டார். காட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Katz-1982) என்பவர், தோலின் நிறம், உரோமம், முக இயல்புகள் போன்ற இனக்குறிகளை, குழந்தைகள் மூன்று வயதையடையுமுன்னரே அவதானித்து விடுகின்றனர் எனவும், அது பல்வேறு இனக் குழுக்கள் பற்றிய அடிப்படை எண்ணக் கருக்கள் உருவாக வழி செய்வதாகவும் அபிப்பிராயப்படுகிறார்.

புஸ்கின் (Pushkin 1967) என்பவர், இந்த வயது வீச்சுள்ள வெள்ளையினக் குழந்தைகள் தமது குழுக்களைத் தெரிவு செய்கின்றமையைத் தமது ஆய்வுகள் மூலம் கண்டறிந்தார். ஆறு வயதளவில் சில பிள்ளைகள் இனரீதியான ஆவேச எதிர்ப்பைக் காட்டுவதையும், இவ்வாறானவர்களின் தாய்மாரும் இவ்வகை ஆவேச எதிர்ப்புணர்வுடன் காணப்படுவதாகவும் கண்டுகொண்டார்.

இனமுறுகல் நிலை காணப்படும் பகுதிகளிலிருந்து வரும் பிள்ளைகளிடமும் தாய்மாரிடமும் இவ்வகை எதிர்ப்புணர்வு அதிகம் காணப்படுகிறது. இனமுறுகல் நிலை காணப்படாத இடங்களிலுள்ள முன்பள்ளிகளை ஆய்வு செய்த லைஸ்லே (Laishley 1971) அங்குள்ள பிள்ளைகள் தோல் நிற வேறுபாடுகளை அறிந்திருக்கவில்லையெனக் கண்டார். இது முன்னர் நாம் கண்ட ஆய்வுக்கு நேர்மாறானதாகும். மிகக்குறைந்த வயதினையுடைய குழந்தைகளை லைஸ்லே ஆராய்ந்திருக்கக் கூடும். கூடிய வயதுக் குழந்தைகள் வேறுவகைத் துலங்கலைக் காட்டியிருக்கக் கூடும்.

மில்னர் (Milner 1983) என்பவர், பிள்ளைகள் மிகக் குறைந்த வயதிலேயே இனக்குழுக்கள் பற்றி நேர், எதிர் உணர்வுகளைக் கற்றுவிடுகின்றனர் என்கிறார். மக்சைம் (Maxime 1991) என்பவரும் இதையே சுட்டிக்காட்டுகிறார். மூத்தோர் உளச்சாய்வுக்கேற்ப இது அமைகிறது என்பது மில்னரின் கருத்தாகும். இவ்வகையான இன அடையாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் முழு விருத்தியையும் கற்றலையும் பாதிக்கக்கூடும்.

எனவே, கல்வியியலாளர் இதுபற்றிக் கவனமாகத் தொழிற்படவேண்டும். றைற் (Wright 1992) என்பவர் முன்பள்ளி, ஆரம்பப் பள்ளிகளில் கறுப்பினப் பிள்ளைகளின் அனுபவம் பற்றி ஆராய்ந்தார். அங்கு பிள்ளைகள் மட்டுமல்ல, அவர்களின் ஆசிரியர்களும் அவ்வாறே நடந்துகொள்கின்றனர். இந்த மனப்பாங்கு கறுப்பினக் குழந்தைகளின் ஆரம்பப் பள்ளிக்காலங்களில் அக்குழந்தைகளுக்குப் பாதகமாக அமைந்தன என்பதை அந்த ஆசிரியர்கள் உணரவில்லை என 'றைற்' தமது ஆய்வு மூலம் கண்டுகொண்டார்.

மேற்கண்ட கருத்துக்கள் மூலம், சில குழந்தைகள் முன்பள்ளிக் காலங்களிலேயே கறுப்பு வெள்ளை என்ற எதிர்மனப் பாங்குகளைக் கற்றுக்கொள்கின்றனர் எனலாம்.

குழந்தைகள் இரண்டு வயதளவில் உடல் இயலாமை பற்றி அவதானிக்க முற்படுவர். அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் தமது இயல்புகளின் மாற்றம் பற்றி வினவத் தொடங்கிவிடுவர். இவை மட்டுமல்ல, தோல் நிறமாற்றம், தமது உடற்குறைபாடு தமது நண்பனுக்கு ஏற்படுமா என்பன பற்றிய வினாக்களையும் தொடுக்கத் தொடங்குகின்றனர். அதே நேரம் தமது உடற்குறைபாடு காலப்போக்கில் மறைந்துவிடும் எனவும் நம்புகின்றனர்.

இவ்வாறான திடமின்மை சகவகுப்பு மாணவர்க்குத் துன்பம் தரவும் கூடும். சில குழந்தைகள் உடற்குறைபாடுடையோரிடம் ஒன்றிவிடவும் கூடும். ஆயினும் நியம நிலையினின்றும் வேறுபட்டுக் காணப்படும் குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர்க்கு இடைஞ்சலாகவும் இருக்கலாம். புறம் தள்ளப்படவும் கூடும். இவ்வாறான குழந்தைகள் நேரான சுயஎண்ணக்கருக்களை விருத்தி செய்து கொள்வதற்கு கல்வியியலாளர்கள் கடின பணியாற்றவேண்டும்.

குழந்தைகளால் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு அம்சம். 'வயதுடன் உடல் மாற்றமடைகிறது' என்பதாகும். வயது குறைந்த சகோதரங்களையுடைய பிள்ளைகள், அக்குழந்தைகள், சிறுவர் சிறுமிகளாக வளர்வார்கள் என்பதை ஏற்றுக்கொண்டாலும், தமது தாய், ஆசிரியர் என்போர் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்திருப்பர் என்பதை விளங்கிக் கொள்வதில் சிரமமுறுவர்.

குழந்தைகளைப் பொறுத்து, வளர்ச்சி, உயிர்வாழ்வு, இறப்பு என்ற எண்ணக்கருக்கள் மிக மெதுவாகவே விருத்தியடைகின்றன. முன்பள்ளி வயதுக் குழந்தைகள் இவ்வாறு சிக்கலான அம்சங்களுடன் ஈடுபடும்போது இவற்றை மிக எளிமையான சொற்களாகக் குறுக்கிவிடுகின்றனர். இதற்கு உதாரணமாக இறப்பு என்பதை அசையாமையுடன் தொடர்புபடுத்துவதைக் குறிப்பிடலாம். இதனால் படுக்கை நேரத்தைப் பயத்துடன் எதிர்நோக்கலாம்.

குழந்தை சுயவிழிப்புப் பெறும் சில பொதுவான வழிமுறைகள், இவ்விருத்தியுடன் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றி இதுவரை அறிந்தோம். இனி மூன்று, நான்கு வயதுக் குழந்தைகளுடன் கலந்துரையாடக்கூடிய உடல் விழிப்பு அறிவை இனங்காணல் பற்றி நோக்கலாம்.

குழந்தை மனிதனாவதற்கு உதவும் உடல் விழிப்பு, விருத்தியை ஊக்குவித்தால் மட்டும் போதாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களை விளங்கிக் கொள்வதற்கான மொழி, அறிவு விளக்கம் என்பவற்றைப் பெறுதலையும் உறுதிப்படுத்தல் வேண்டும். முன்பிள்ளைப் பருவத்தில் அறிகின்ற திறன்கள், எண்ணக்கருக்களின் எல்லா விளைவுகளையும் குழந்தை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு நீண்ட காலம் செல்லலாம். ஆயினும் விருத்தியுறும் இப்பருவத்தில் இவற்றை அறிமுகம் செய்ய இது தடையாக இருக்கக்கூடாது.

முன்பள்ளிக் காலத்தில் குழந்தை விருத்தி செய்யக்கூடிய, உடல் விழிப்புணர்வு, புலன்சார் விழிப்புணர்வு தொடர்பான முக்கிய திறன்களும் எண்ணக்கருக்களும் கீழே தரப்படுகின்றன.

- உடலின் பல்வேறு பகுதிகள், உறுப்புக்களின் பெயர்கள் பற்றிய அறிவு.
- உடலின் செயற்பாடுகளை இனங்காணும் திறன் - உண்ணுதல், கழிவகற்றல் போன்ற எல்லா உயிர் வாழ்வனவற்றிற்கும் பொதுவான செயற்பாடுகள் பற்றிய உணர்வு.
- தோற்ற வேறுபாடுகள் தனியாட்களைப் பொறுத்துக் காணப்படினும் எல்லாரிடத்திலும் பொதுவான தன்மைகள் இருப்பதை விளங்கிக் கொள்ளல். (வெவ்வேறு நிறமான உரோமம், கண்கள் வெவ்வேறு உயரம் என்பன).
- செயற்பாட்டிற்கான எல்லைகள் எல்லாருக்கும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல் (மனிதர் நடப்பர், குதிப்பர். ஆனால் பறக்கமாட்டார். இப்பருவத்தினர் இவ்வரையறையை விளங்குதல் கடினம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடல் தொடர்ந்து மாற்றமடைந்து கொண்டிக்கிறது, உடல் வளர்ச்சி ஒரு தொடக்கத்தையும் முடிவையுமுடையது (பிறப்பு, இறப்பு) என்பதையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல். (நித்திரை செய்தல், விழித்தல் என்பதை விளங்கிக் கொள்ளல். இவற்றின் அவசியத்தை உணர்தல்).

- புலன் சார் விழிப்புணர்வு பற்றிய அறிவு பெறல். (கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிதல் பற்றிக் கலந்துரையாடுதற்கான சொற்களஞ்சியம் பெறல், தூல அனுபவங்கள் பெறல்.)

- உடலின் மட்டுப்பாடுகளை விளங்கிக் கொள்ளல். (உடல் களைப்படைதல், நோய்கள் ஏற்படல்).

உடல் சார்ந்த புலன்சார்ந்த விழிப்புணர்வை விருத்தி செய்தலுக்கும் அப்பாற்பட்டதே சுயவிழிப்புணர்வு ஆகும். இதைவிட மனஎழுச்சிகளுடனும் அக அனுபவங்களுடனும் தொடர்புடைய மற்றுமொரு அம்சமும் உண்டு. பியாஷேயின் கண்டறிதலுக்கேற்ப இளங்குழந்தைகள் 'ஈகோ' மயமானவர்களென்றும் அதனால் மற்றொருவரின் நோக்குகளைக் கருத்திற்கொள்ளமாட்டார்களென்றும் மிக நீண்ட காலமாகக் கருதப்பட்டது. இதை மறுப்பதாகப் பிற்கால ஆய்வுகள் அமைந்துள்ளன.

ஏனைய குழந்தைகளுடனும் மூத்தோருடனும் உளரீதியாக ஒன்றிவிடும் உணர்வையும் விளக்கத்தையும் மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் பெற்றுவிடுகின்றனர் என இளங்குழந்தைகளை ஆராய்ந்த பலரின் கருத்துக்களை உறுதி செய்வதாக இந்த அணுகுமுறை அமைகிறது. குழந்தைகளின் ஆசிரியருக்குச் சுகக்குறைவு என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் கூறும்போது, மிகத் துடிப்பாக இயங்கும் முன்பள்ளிக் குழந்தைகள் கூடச் சற்று நேரம் அமைதியாக இருப்பதை அவதானிக்கலாம்.

வெற்றிகரமான கற்றலுக்கு நலமான மனவெழுச்சி அவசியமாகும். தமது உணர்வுகளை ஆராய்வதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் குழந்தைகளுக்கு உதவுவது மூலம், அவர்கள் தம்மையும் பிறரையும் விளங்கிக் கொள்வதற்கு உதவமுடியும். ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பொறுத்து மக்கள் வெவ்வேறு துலங்கல்களைக் காட்டுகிறார்கள். இதற்கான காரணம் என்ன? அவர்கள் ஒவ்வொருவரும் தமது இயல்புக்கேற்ப வெவ்வேறு முறையில் விளக்கம் பெறுகிறார்கள் என்பதேயாகும். இதனைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

எலிக்குப் பயப்படும் சிலர் அலறலாம். வேறு சிலர் உயரத்தில் ஏறலாம். இவ்வகைத் துலங்கலால் அவர்கள் தமது மனநிலையைப் புலப்படுத்துகிறார்கள். இவ்வாறான நிலைமைகளில் அவர்கள் மற்றவர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கோ அல்லது வெவ்வேறு நிலைமைகளில் அவர்களின் சொந்தப் பங்களிப்புத் துலங்கல்களை விளங்கிக் கொள்வதற்கோ குழந்தைகளுக்கு உதவுதல் வேண்டும். குழந்தைகள் தமது சொந்த மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும், விபரிக்கவும் உதவுகின்ற ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு நேர்நிலைச் சுய எண்ணக் கருவைக் கட்டியெழுப்பத் துணைபுரிபவராவர்.

ஏனையோரின் மனஎழுச்சியை அறிந்து கொள்ளவேண்டிய தேவையும் குழந்தைகளுக்கு உண்டு. ஒரு முதியவரின் கோபம் தம்மீதா அல்லது குடும்பத்து ஏனைய அங்கத்தவர் மீதா என்பதை விளங்கிக்கொள்ள வேண்டிய தேவையும் குழந்தைகளுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் (Broke - 1971) என்பவர், மூன்று வயதளவில் குழந்தைகள் மற்றவரின் உணர்வுகளை விளங்கிக் கொள்வர் எனவும், மற்றவரின் கருத்தைப் பகிர்ந்து கொள்வர் எனவும் குறிப்பிடுகிறார். சங்கடமான நிலைமைகளிலுள்ள குழந்தைகளினதும், பெரியவரினதும் படங்களை 5 வயதுக் குழந்தைகளிடம் காட்டும்போது, மற்றவரின் உளநிலையைத் தமது விருப்பு வெறுப்புக்கேற்ப எவ்வாறு பிரதிபலிக்கின்றனர் என்பதைத் தெரிவிக்கும் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பாவனை விளையாட்டின் பெறுமதி பற்றி ஆய்வு செய்த ஹரிஸ் (Harris - 1989) இன்னொருவரின் போக்குகளைக் கருத்திலெடுப்பதற்கும், வலுவான மனவெழுச்சிகளுக்கு ஈடு கொடுப்பதற்கும் அது எவ்வாறு ஊக்குவிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உதாரணமாக இளவரசி ஒருத்தியின் பாத்திரத்தை ஏற்று நடித்த ஒரு குழந்தை, படிகளில் இடறிவிழுந்து முழங்கையில் காயம்பட்டபோதும் அழவில்லை. காரணம், இளவரசிகள் அழுவதில்லை. ஆசிரியர்கள் பாலர் பருவத்தின் போது குழந்தைகளிடம் உருவாக்கி விருத்தியாக்க முயற்சியெடுக்கவேண்டிய மனவெழுச்சித் திறன்கள் பின் வருவனவாகும்.

- மனவெழுச்சிகள் அல்லது உணர்ச்சிகளை (சந்தோசம், துக்கம், கோபம், வியப்பு முதலியன) இனங்காண்பதற்கும், ஏற்பதற்கும் அவை பற்றிப் பேசுவதற்குமான ஆற்றல், (மிக இளம் குழந்தைகளாலேயே உணர்வுகளை இனங்காணவும் விபரிக்கவும் முடியுமென சீல்ஸ் (Shields - 1985) என்பவர் கூறுகிறார். மற்றவர்களின் கோபம், எரிச்சல் போன்றனவற்றை ஏற்கப் பழகிக்கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் மனவெழுச்சி விருத்திக்கு அவசியமாகும்).

- மனவெழுச்சிகளுக்கும் நடத்தைகளுக்குமிடையே தொடர்பு உள்ளது என்ற விழிப்புணர்வு. (குழந்தை, தம்மைக் கோபப்படுத்தியவரை அடிப்பது தனிப்பட்ட உணர்வுகளைத் தற்காலிகமாகத் தவிர்க்க உதவுமானாலும், இச்செயல் திருப்பித் தாக்குவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது என்பதைக் குழந்தை தெரிந்துகொள்ள வேண்டும்.)
- தனது மனவெழுச்சி சார்ந்த நடவடிக்கைகளைப் பிறர் பாதிக்கப்படாத வகையில் மேற்கொள்ளும் ஆற்றல். (தொலைக்காட்சியில் அச்சத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சியொன்று இடம்பெறும்போது அதை நிறுத்திவிடுதல். உதவி செய்யக்கூடிய பெரியவர்கள் எவரும் பக்கத்தில் இல்லையானால் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய செயல்களைத் தவிர்த்துக் கொள்ளல்.)
- பிறரின் தேவைகள் உணர்வுகளை இலகுவில் உணர்ந்து கொள்ளும் ஆற்றல்.

ஆசிரியர்கள், குழந்தைகளுக்கும் பிரச்சினைகள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் அவர்களும் வலுவான எதிர்ப்பைக் காட்டுதல் இயல்பே என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் மனவெழுச்சி விருத்திக்கு ஆசிரியர்களால் பெருமளவில் உதவமுடியும். குழந்தைகளும், ஆசிரியர், துக்கமாகவோ, சந்தோசமாகவோ சில சந்தர்ப்பங்களில் இருக்கக் கூடும் என்பதை உணர்ந்து கொள்வது பயனுள்ளதாக அமையலாம். ஆசிரியர்கள் குழந்தைகளுடன் உரையாடுதல் மூலமாக, சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நிலைமைகளில் எவ்வாறு மனவெழுச்சி பெறுகின்றனர், அதனால் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பதை அறியமுடியும். அவ்வாறு அறிந்துகொண்டால், ஏனையோரின் உணர்வுகளைக் குழந்தைகள் உணர்ந்து கொள்ளவும், அவ்வுணர்வுகளை அவர்கள் ஏற்பதற்கும் மதிப்பதற்கும் அவர்களை வழிநடாத்த முடியும். உதாரணமாக, குழந்தையொன்று ஓர் இராட்சதன் போன்று வேடமேற்றுத் தத்ரூபமாக நடிக்கிறது என வைத்துக் கொள்வோம். குழந்தையின் சகபாடி இதனால் பயந்து அழுது எதிர்ப்பைக் காட்டக் கூடும்.

இந்த நிலைமையில் ஆசிரியர் குறுக்கிட்டு, அந்தச் செயல், சகபாடிக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை குழந்தை விளங்கக்கூடிய வகையில் எடுத்துக் கூறவேண்டிய அவசியம் ஏற்படலாம். அல்லது இராட்சதனாக நடிக்கும் குழந்தையை பதனமான, அன்பான இயல்புகளைக் காட்டி விளையாட்டைத் தொடருமாறு வழிப்படுத்தலாம். அல்லது விளையாட்டை நிறுத்துமாறோ அல்லது வேறு குழந்தையுடன் விளையாடுமாறோ ஆலோசனை கூறலாம்.

இதனால் குழந்தையின் நடத்தை அதன் சகபாடிக்கு வருந்தத்தக்க எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதைக் குழந்தை உணர வழியேற்படுகிறது.

இவ்வாறாக மனவெழுச்சிசார் விழிப்புணர்வு உடையவராவதற்கான சந்தர்ப்பங்கள் நாள் முழுவதும் ஏற்படுகின்றன. தம்மைப்பற்றியும் பிறர்மீது தம்மால் ஏற்படுத்தப்படக்கூடிய விளைவுகள் பற்றியும் குழந்தைகள் விளக்கம் பெறுவதற்கு உதவக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதனை ஆசிரியர்கள் அறிந்து ஒழுகுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகத் திறன்கள்**

சமூகமயமாக்கல் செயற்பாடு பிறந்ததிலிருந்தே ஆரம்பித்துவிடுகிறது எனலாம். குழந்தைகள் மூன்று அல்லது நான்கு வயதடைகையில் பெற்றோர், சகோதர சகோதரர், குடும்ப அங்கத்தவர் ஆகியோரிடமிருந்து பல அம்சங்களைக் கற்றுக் கொள்கின்றனர்.

இவை நிறுவன ரீதியிலிருந்து வேறுபட்டனவாக வுள்ளன. இவை குடும்பத்தோடு தொடர்பான - பொருத்தமானவையாக அமைகின்றன. இதைவிடக் குழந்தைகள் சமூக நோக்கம் சார்ந்த திறன்களை விளையாட்டுக்களின்போது விருத்தி செய்கின்றனர். ஆனால் சமூகம் சார் தேர்ச்சியை குழந்தை அடைவதற்கு, பல்வேறு சமூக நிலைமைகளுக்கேற்பத் தனது சமூக நடத்தைகளைப் பொருத்திக்கொள்ளவேண்டும்.

அத்தோடு சமூகத்தில் உள்ளவர்களின் வயது, பால் என்பனவற்றையும் கருத்திற் கொள்ளவேண்டும். வயதையும் பாலையும் கவனத்திலெடுக்கும் இந்தத் திறன் மிக முக்கியமானதாகும்.

மேலும் இத்திறன், பல்வேறு வயதுப்பிள்ளைகள் கலந்து காணப்படும் குழுக்களோடு சேர்ந்து விளையாட்டில் ஈடுபடுவதனை உற்சாகப்படுத்துவதாகவும் அமைகிறது.

குழந்தைகள் தாம் வளரும் சூழலிலுள்ள முதியவர்களை அவதானிப்பது மூலம் சமூகத்துக்கு உகப்பானது எது என்பதை மட்டும் கற்றுக் கொள்வதில்லை. குடும்பத்துக்கு அப்பாலுள்ள மூத்தோருடன் செயலாற்றலோடு தொடர்புறும் வழிமுறைகளையும் கற்றுக்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட முக்கிய அம்சம், பாலர் பள்ளியானது குழந்தையின் வாழ்க்கையில் முதல் தடவையாக சகபாடிக் குழுவினருடன் பழகுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாகும். இங்கே குழந்தைகள் ஒத்த வயதுக் குழந்தைகளுடன் தாம் வாழும் உலகம் பற்றிய பல விடயங்களை அறியவும் விவாதிக்கவும் வாய்ப்புக் கிட்டுகிறது.

குழந்தைகள் மூத்தோர் எவரினதும் குறுக்கீடின்றிச் சுதந்திரமாக ஒன்றுகூடி விளையாடுவதற்கான வாய்ப்புக்கள் மிக அவசியமாகும். அவ்வாறான நிலைமைகளில் குழந்தைகள் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்கின்றனர்; சலுகைகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்; தம்மை நிலைப்படுத்தப் பயிலுகின்றனர்; குழுத் தொடர்பாடல்களின் செயலியல்பை நயக்க விரும்புகின்றனர்.

குறுகிய ஆயுளைக் கொண்ட நட்புக் கோலங்களையுடைய இந்த இளம்பருவத்தில் அங்கு நிகழும் செயல்களுடன் ஒத்துப்போவதைப் பொறுத்து இவர்கள் ஒரு குழுவிலிருந்து மற்றொரு குழுவுக்கு இடம் மாறிக் கொள்கின்றனர். இரண்டு வயதையுடைய குழந்தைகள் தம்மிலும் மூத்த வயதுப் பிள்ளைகளை அவதானிப்பதிலேயே பெரிதும் ஈடுபடுகின்றனர்.

மூத்த சகோதரர்களையுடைய குழந்தைகள் பல்வேறு விளையாட்டுக்களிலும் பங்குபற்ற விரும்புகின்றனர். சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும். முதியோர் ஆதிக்க உலகின் ஒழுங்கமைக்கப்பட்ட இறுதி அதிகார வடிவங்களாகக் காணப்படும் முதியோர் தொடர்புகளுடன் ஒப்பிடுகையில் இவை பலமான வேறுபாடுகளைக் கொண்டனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக சகபாடிக் குழுக்களே சமூகத்திறன்களை விருத்தி செய்யும் வாய்ப்புக்களைக் குழந்தைகளுக்கு வழங்குகின்றன. இதுவே மேலும் சுயவிளக்கத்துக்கு வழி கோலுகின்றது. சமவயதுக் குழுவினருடனான தொடர்புகள் ஒருவருக்கொருவர் கொடுக்கும் மதிப்பிலும் ஒத்துழைப்பிலும் தங்கியுள்ளன. குழந்தைகள் ஒரே மனவெழுச்சி அல்லது உணர்ச்சிகளையும், பிரச்சினைகளையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். ஒருவரையொருவர் புரிந்து கொள்கின்றனர்.

இந்த நிலையில், தமது வயதையுடையவருடனான தொடர்பின் மூலம் குழந்தைகள் விருத்தி செய்து பின்பற்றவேண்டிய திறன்கள் எவையென நாம் நோக்குதல் அவசியம். பொதுவாகச் சமூகத்திறன் எனக் குறிப்பிடும்போது, ஏதாவது சமூக இடைவினையை ஆரம்பித்து அதைப் பேண முயலுகையில் பயன்படுத்தப்படும் பல்வகையான உபாயங்களையே நாம் மனம் கொள்கிறோம். குறிப்பாகக் கூறுவதானால் சமூகத் திறன் மூன்று பிரதான பரப்புகளுக்குள் அடங்குவதை அவதானிக்கலாம். அவை:

1. சமூக இடைவினை அடிப்படை விளக்கத்தினைக் கொண்ட சமூக இணைப்பு.
2. ஒத்துழைப்பும் முரண்பாடுகளின் தீர்வும்.
3. அன்பும், கவனிப்பும், பிரியமும் என்பனவாகும். இவற்றை விரிவாக இனி நோக்கலாம்.

**இணைப்பு**

உயர் சமூகமயமாக்கப்பட்ட நமது சமூகத்தில் அதிகம் தேவைப்படுவது பிறருடன் ஒத்துழைத்துச் செயலாற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாகும். குழந்தைகள் இத்திறன்களை வளர்த்துக்கொள்வதில் முதியவர்கள் மிக முக்கிய பங்கை வகிக்கிறார்கள். ஆயினும் இக்கற்றலில் கூடிய பகுதி சம வயதுக்குழுவினரூடாகவே நிறைவெய்துகிறது.

சமூகத்தால் ஏற்கப்படக்கூடிய நடத்தைகள், ஏற்கப்படமுடியாத நடத்தைகள் என்னும் இவற்றை இனம் காணும் ஆற்றலை குழந்தைகள் வளர்த்துக்கொள்ளல், இவ்வாறான நடத்தைகளின் இயல்புகளை விளங்கிக் கொள்ளல் ஆகிய இரண்டும் இணைப்பு என்ற திறனுள் அடங்குகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, தன் சமய வயதுக்காரரிடமிருந்து விளையாட்டுப் பொருட்களைத் தொடர்ந்து பறித்தெடுக்க முற்படும் நான்கு வயதுப்பிள்ளை, தனது செயலானது, சமூகத்தின் தனிமைப்படுத்தலில் போய் முடியும் என உணர்வதைக் குறிப்பிடலாம்.

பாலர் பள்ளியிலுள்ள ஒரு குழந்தை, ஏற்கனவே ஒரு செயலில் ஈடுபட்டுள்ள மற்றொரு குழந்தையுடன் இணையத் தீர்மானிக்கும் தருணத்தில்,

- எவ்வாறு அந்நிலையினுள் உள்நுழையவேண்டும் என்பதனை அறிந்திருக்க வேண்டும்.
- உள்நுழைகையில் அந்தச் செயற்பாட்டைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும்.
- பொருத்தமான ஒருவகையில் அந்தச் செயற்பாட்டிலிருந்து விடுபட்டுக் கொள்ளல் எவ்வாறு என அறிந்திருக்க வேண்டும். இந்த மூன்றையும் நாம் சமூக அறிவு எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவ்ப்மென் (Coffman-1972) என்பவர், நிகழ்ந்து கொண்டிருக்கும் விளையாட்டு நிலைமையினுள் உள் நுழைவதற்காக பிள்ளைகள் பயன்படுத்தும் 'உட்புகும் உத்திகள்' ஆய்வொன்றை மேற்கொண்டார். பிள்ளைகள், புன்னகையை வெளிக்காட்டுதல்; சொல்சாரா முகபாவனையைப் பயன்படுத்துதல்; சமாந்தரச் செயற்பாட்டில் முதலில் ஈடுபட்டு, பின்னர் அவ்விளையாட்டில் படிப்படியாக இணைந்துகொள்ளல்; என்பன மூலம் இணைப்பைச் சாதித்துக் கொள்கின்றனர் என்பதை அவதானித்தார். துடிப்புள்ள ஒரு பிள்ளை 'நானும் வரட்டுமா?' எனக் கேட்க முயலலாம். ஆனால் 2½ - 4 வயதுப் பிள்ளைகளிடம் இந்த அணுகுமுறை அரிதாயுள்ளது. குழப்பும் வகையில் அடாத்தாக நுழையும் பிள்ளைகள் தமது சமவயதுச் சகபாடிகளின் துலங்கல்கள் மூலம் தமது நடத்தை பொருத்தமானதல்ல என்ற படிப்பினையைப் பெறுகிறது.

இவ்வாறு அடாத்தாக உட்புகுந்து வெற்றியடைந்த பிள்ளை தன்னால் அதைத் தக்க வைக்க முடியாமையை விரைவில் உணருகிறது. பாலர் வகுப்பில் மற்றவர்களிலும் வயது குறைந்த பிள்ளைகள் தமக்குப் பொருந்தாதவர், தமது விளையாட்டின் போது உட்புகுதலை விரும்புவதாக இல்லை.

புதிதாக உள் நுழைந்தவர் தொந்தரவாளராகவே கருதப்படுகிறார். உட்புகுதலில் வெற்றியடைந்த பிள்ளை தொடர்ந்து அதை நிலைநிறுத்த வேண்டுமானால், விளையாட்டில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த பிள்ளைகளின் நிபந்தனைகளை அனுசரித்தாக வேண்டும், விதிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

இந்த இடைவினைகள் வெற்றியடையுமானால் இருசாராருக்கும் அது ஓர் இன்ப அனுபவமாக அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நிகழும் கூட்டுறவு விளையாட்டானது சொல்சார், சொல்சாராச் சமூக இடைவினைகளைக் கொண்டதாக இருக்கும்.

மேலும் தமது சகபாடிகளுடன் விளையாட்டில் சுமுகமான முறையில் ஈடுபடும் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல நிலைமைகளை அடைந்து விடுகின்றனர். இவ்வாறான நடைமுறைகளைப் பயின்றுகொள்ளாத பிள்ளைகள் மிக இலகுவில் சமூகத்தால் தனிமைப்படுத்தப்பட்டவராக ஆகிவிடுகின்றனர். இவர்களைப் பொறுத்து முதியவர்களின் உதவி அத்தியாவசியமாகி விடுகிறது.

அடுத்து குழந்தைகளிடம் சமூகத்திறன்களை விருத்தியாக்குதலில் முதியோரின் பங்களிப்புப் பற்றிச் சிந்திக்கலாம். விளையாட்டு வேளைகளில் குழந்தைகளிடையே ஏற்படும் மோதல்களைத் தீர்ப்பதில் சில சந்தர்ப்பங்களில் முதியோரின் உதவி தேவைப்படலாம். ஆயினும் முடியுமானவரை தமது பிரச்சினைகளைத் தாமே எதிர்கொள்வதற்கு குழந்தைகளுக்குச் சந்தர்ப்பமளித்தல் வேண்டும்.

இதன் மூலம் சிறந்த சமரசம் காணும் திறன்களை குழந்தைகளிடம் விருத்தியாக்கலாம். இதற்காக, ஒரு குழந்தை தனிமைப்படுத்தப்பட்டும் சந்தோசமின்றியும் இருப்பதைக் கண்டும், எதுவுமே செய்யாது விலகி நிற்கவேண்டுமென்பதில்லை. ஆனால் முதியோரின் அளவற்ற ஈடுபாடானது அக்குழந்தையைச் சகபாடிகளிடமிருந்து முழுமையாகத் தனிமைப்படுத்திவிடலாம்.

குழந்தைகளிடையே உடல், உள, மொழித் திறன்களைப் பொறுத்து தனியாள் வேறுபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதுபோல, சமூக உறவாடல்களிலும் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில குழந்தைகள் நல்ல முறையில் சமூக இசைவாக்கம் பெறலாம். வேறு சிலர் அவ்வாறு இல்லாமலிருக்கலாம்.

நல்ல பொருத்தப்பாடடைந்த குழந்தை பெரிய குழுக்களிலோ சகபாடிக் குழுக்களிலோ தொடர்ந்து ஈடுபாடு காட்டாதிருக்கலாம். சகபாடிகளுடன் கொள்ளும் ஈடுபாட்டிலும் கூட நாளுக்கு நாள் அவர்களிடம் வேறுபாடுகள் காணப்படலாம். உயர்ந்த சமூகச் சார்புடைய குழந்தைகள் கூட சில சமயங்களில் பின்னால் நின்று நிலைமையை வெறுமனே அவதானிக்க நேரலாம்.

தமது குழந்தைகளைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால், அவர்களுடைய நடத்தைகளை முதியவர்கள் அவதானித்தல் வேண்டும். தமது சகபாடிகளோடு குழந்தைகள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர்; எவ்வாறு இணைந்து செயற்படுகின்றனர், ஒத்தாசை - உதவி புரிகின்றனர் என்பதை அறிவதன் மூலம் அவர்களது சமூகத்திறன்களை மேம்படுத்த உதவலாம். குழந்தைகளுடன் உரையாடுதல் நண்பர்களின் மனவெழுச்சிகள் பற்றியறியத் தூண்டுதல், குழந்தைகள் மற்றவர்கள் சார்பாக எப்படி நடந்து கொள்கின்றனர், மற்றவர்கள் குழந்தைகள் சார்பாக எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பனவற்றைக் குழந்தைகள் உணரவைத்தல் என்பன மூலம் சமூக விருத்திக்கு ஆசிரியரும் பெற்றோரும் குழந்தைகளை வழிநடாத்தலாம்.

குழந்தைகள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவும் அவர்களது அவாக்கள், விருப்பு வெறுப்புக்கள் முதலானவற்றை அறிந்து கொள்வதற்குமான சந்தர்ப்பங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொடுத்தல் மூலம் அவர்கள் இவ்வாறான விளக்கங்களைப் பெற ஊக்குவிக்கலாம்.

தமது சகபாடிக் குழுக்களால் நிராகரிக்கப்படும், அல்லது வன்மையான எதிர்ப்புக்குட்படும் பிள்ளைகளை நாம் அடிக்கடி சந்திக்க நேரும். இவ்வாறான பிள்ளைகளை ஆசிரியர் விளங்கிக்கொண்டு ஆதரவு காட்டவேண்டும்.

கார்ட்டப் (Hartup - 1979) என்பவர் சமூக ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்ட குழந்தைகள் பற்றி ஆராய்ந்தார். இவ்வாறான குழந்தைகள் தம்மிலும் இளமையான குழந்தைகளுடன் ஒன்றுக்கு ஒன்று என்ற ஒழுங்கு முறையிலான விளையாட்டுக்களில் ஈடுபடுவது மூலம் பயனடைகின்றனர் எனக் கண்டுகொண்டார். இக்குழந்தைகள் அதன்பின்னர் தமது வயதுக் குழந்தைகளுடன் விளையாட வந்தபோது அவர்களிடம் சமூகத் திறன்கள் மேலோங்கியிருப்பதைக் காண முடிந்தது.

இது குறிப்பாக சமூக மனவெழுச்சி முதிர்ச்சியின்மை காரணமாக பொருத்தமற்ற நடத்தைகளையுடைய குழந்தைகளின் மேம்பாட்டைப் பொறுத்து, ஆசிரியர்களுக்கான நுட்பமாக அமையலாம். இதைப்போல தேனீர் வேளை, உணவு வேளைக் கலந்துரையாடல்கள், கதை கூறுதல் போன்ற பாரம்பரியச் செயல்களும் குழு இணைப்புக்கான சிறந்த வாய்ப்புக்களைத் தருகின்றன. சமூகத் தொடர்புகளை உற்சாகப்படுத்தும் விளையாட்டுக்களைக் கண்டுபிடித்து, அல்லது தெரிந்தெடுத்து ஆசிரியர்கள் இதற்காகப் பயன்படுத்தலாம்.

குழந்தைகள் நட்பின் அடிப்படைகளையும், சமூகத் தொடர்புகளை மேம்படுத்தும் வழிமுறைகளையும் விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும். அத்தோடு குடும்ப வாழ்வு எனும் எண்ணக்கருவையும் விளங்கிக்கொள்ளல் அவசியமாகும்.

பாடசாலையில் சேரும் வயதையடையும்போது குழந்தைகள் தமது குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வையும் தனியாள் என்ற ரீதியில் குடும்பத்தில் தமது முக்கியத்துவம் பற்றியும் விளக்கம் பெறுகின்றனர். ஆயினும் அனைத்துக் குடும்பங்களும் தமது குடும்பம் போல இருப்பதில்லை யென்பதை உணர்ந்த குழந்தைகள் ஒரு சிலரேயிருப்பர்.

இந்த நிலையில் வீடுகளுக்கும் குடும்ப இயல்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளை அறிந்து கொள்கின்றதானது, குழந்தைகள் எமது கலாசார வேறுபாடுகளை இலகுவாக ஏற்றுக்கொள்வதற்கு வழியமைக்கும்.

**ஒத்துழைப்பும் முரண்பாட்டுத் தீர்வும்**

குழந்தைகள் தாம் ஒரு குழுவின் பங்காளியாக வரமுடியும் என்பதையும் அக்குழுவில் இணைவதற்குத் தேவையான திறன்களைப் பெற்றுக்கொண்டுள்ளமையையும் உணர்ந்துவிட்ட நிலையில் மற்றவர்களின் நடத்தைகளில் தாம் செல்வாக்குச் செலுத்த விரும்புவர். தமது வாழ்விலும் மற்றவர்களின் வாழ்விலும் தாம் ஆதிக்கம் பெற்றுள்ளதான ஓர் உணர்வைப்பெற இச்செல்வாக்கு உதவுகிறது.

அவர்களின் சொற்களை ஏனையோர் கேட்பர் எனவும், அவர்களின் அபிப்பிராயங்களை ஏனையோர் கோரி நிற்பர் எனவும், தீர்மானமெடுக்கும் காரியங்களில் தம்மை ஈடுபடுத்துவர் எனவும், சமூகம் தொடர்பான தேர்ச்சி பெற்று குறித்த நிலைமையைத் தன் கட்டுப்பாட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதாகவும் உணரும் நிலையில் உள்ள குழந்தை தன்னை வழிநடத்தும் வகிபங்கையும், பிறர் தலைமையில் தான் மேற்கொள்ளும் வகிபங்கையும் ஏற்கும் ஆற்றலைப் பெற்றிருக்கும். ஆயினும் தேர்ச்சி போதாது, வாழ்க்கை நிலைமை கட்டுக்கடங்காமல் உள்ளது என்ற உணர்வைக் கொண்டுள்ள குழந்தையினால், தீர்மானங்களை எடுக்கவோ ஏனையோரின் தீர்மானங்களை ஏற்கவோ முடியாது.

அத்தோடு ஏனைய குழந்தைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் முகமாக வன்செயல் நடத்தைகளை நாடுவர். இவ்வாறான மாறான நடத்தை காரணமாக மற்றவர் மீதான இக்குழந்தைகளின் செல்வாக்கு மேலும் கீழான நிலையையடையும். அத்தோடு, தேர்ச்சியடையவில்லை என்ற உணர்வு மேலும் அதிகரிக்கும் நிலையையடைவர்.

மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்த எடுக்கும் முயற்சி கடைசியில் முரண்பாட்டையடைகிறது. சகபாடிகளுடன் ஏற்படும் முரண்பாடு, குழந்தையின் தன்மையச் சிந்தனையைத் தாழ்வடையச் செய்யும் ஒரு காரணியாகுமென பியாஷே கருதுகிறார். சினேகிதர்களிடமும் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

அவற்றைத் தீர்ப்பதற்கு ஒத்துழைத்தலும், இயைந்து போதலும் உதவும் என்பதைக் குழந்தைகள் கற்றுக் கொள்ளவேண்டும். பெரும்பாலான குழந்தைகள், நிலைமையிலிருந்து பின்வாங்குதலை அல்லது உடல் வலிமையைப் பயன்படுத்துவதை முரண்பாடு தீர்க்கும் நுட்பமாக மேற்கொள்கின்றனர். ஆசிரியர்கள் பிரச்சினைத் தீர்வுக்கு பல்வேறுபட்ட மாற்று வழிகள் உள்ளன என்பதை குழந்தைகள் ஏற்றுக்கொள்ளுமாறு உதவி புரிதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறுபட்ட உத்திகள் உள்ளன என்பதை அறிந்துகொண்ட குழந்தை பிரச்சினைகளைத் தீர்த்தலுக்கான அதிக ஆற்றலைக் கொண்டிருக்கும் என்பதைப் பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இவ்வயதுக் குழந்தைகள் ஒருவர் வெற்றி பெறுகின்றபோது மற்றவர் தோல்வியடைவர் என்ற நிலைப்பாட்டை இலகுவில் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளச் செய்வது கடினமானதாகும்.

எனவே, எவரும் வெற்றியோ அல்லது தோல்வியோ அடையவில்லை, எனும் நிலைமையை ஏற்படுத்துதலே சில சமயங்களில் முரண்பாடுகளின் தீர்வாக அமையலாம்.

முரண்பாடுகளுக்குத் தீர்வு காணல், ஒத்துழைப்புத் திறன் ஆகியவற்றை குழந்தைகளிடம் விருத்தியாக்குதலுக்கு முதியவர்கள் பின்வரும் வழிகளில் உதவி செய்ய முடியும்.

- குழந்தைகளின் நடத்தை சார்பான விதிகள், விதிமுறைகள், கட்டுப்பாடுகள் என்பன இருக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை அவர்கள் விளங்கிக் கொள்வதற்கு உதவுதல். (வீட்டு மூலையில் விளையாடுவதற்கு ஒரே நேரத்தில் நால்வர் மட்டுமே இருக்கவேண்டும் என்பதற்கான காரணம்).
- முரண்பாட்டுக்கான காரணங்களை இனம் காணல், மாற்றுச் செயல்களை விபரித்தல், அவற்றின் பின் விளைவுகளைக் கருத்திற்கொள்ளல் என்பனவற்றிற்கு உதவுதல் (பகிர்ந்து கொள்ளல், இணக்கத்திற்கு வரல் வன்முறையை நாடுதலால் ஏற்படும் எதிர் விளைவுகள் என்பனபற்றிக் கலந்துரையாடல்)
- கூட்டுறவு என்ற எண்ணக் கரு பற்றிப் பிள்ளை விளங்கிக் கொண்டதா என்பதை உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொள்ளல் (பிரச்சினைத் தீர்வுக்கோ, ஒரு பணியைப் பூர்த்தியாக்குதலுக்கோ ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து கருமமாற்றலின் பயனுடைமைபற்றி எடுத்துக்காட்டல்).

- மற்றவர்களுக்கு உதவவும் அவர்களிடமிருந்து உதவிகளைப் பெறவும் குழந்தைகளை ஊக்குவித்தல்.
- விழுந்து புரளும் முரட்டுத்தனமான விளையாட்டுக்களுக்குப் பொருத்தமறிந்து வாய்ப்பளிக்கும் அதேவேளை கூட்டுறவு அரவணைப்பு, பகிர்தல் என்பனவற்றையும் குழந்தைகளிடம் வலியுறுத்துதல் (இவை கூட்டுறவுக்கு வழிகோலும் தனது வலிமையை வெளிக்காட்டும் சந்தர்ப்பமும் பிறரின் வலிமையை அனுபவிக்கும் வாய்ப்பும் பரஸ்பரம் மதிப்பளிக்கும் நிலைமையைத் தோற்றுவிக்கும் என அல்டிஸ் (Aldis-1975) குறிப்பிடுகிறார்.

மூர்க்க நடத்தையை வெளிக்காட்டச் சந்தர்ப்பமளிக்காவிட்டால் குழந்தைகளிடத்தே வன்செயற் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்தவராவோம் என ஹார்ட்ரப் (Hartup-1976) கருதுகிறார்.

**அன்பும் பண்பும்**

சூட்ஸ் (Schuz-1979) என்பவரின் கருத்துப்படி, அன்பென்பது எமது பெறுமதியில் எமக்கிருக்கும் நம்பிக்கையினாலேயே ஏற்படுகிறது. ஒத்துணர்வு, கவனிப்பு, பிரியம் என்பவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் சமூகத் திறன்களின் விருத்திக்கு உதவுகிறது. சமூகப் பழக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரால் மதிக்கப்படுபவராயும் மனக்காட்சி பெறும் குழந்தைகள் தம்மை ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள்.

பிறருக்குக் கொடுக்கத் தம்மிடம் எதுவுமில்லை எனக் கருதும் குழந்தைகளைவிட இவர்கள் வளர்த்தெடுக்கும் இயல்பு, ஒத்தாசை என்பவற்றை அதிகமாக வெளிப்படுத்துவர். அன்புடைமையும் ஆதரவு காட்டலும் ஆகிய பண்புகள் உதாரணங்கள் மூலமாகவே குழந்தைகளால் கற்கப்படுகின்றன. உதவியும் ஒத்தாசையும் முதியோரால் வழங்கப்படும் சூழலில் வாழும் குழந்தைகள் பிறர்க்கு ஆதரவு காட்டும் மனப்பாங்கினையுடையோராகின்றனர்.

பரஸ்பரம் உதவவேண்டிய தேவையைக் குழந்தைகள் உணர்ந்தாலும் அவற்றை அவர்கள் திறம்படக் கையாளமுடியாத நிலையை எதிர்கொள்கின்றனர். ஒரு குழந்தை தனது தாயார் உடல்நலமில்லாதிருப்பதை உணரலாம். உதவி செய்யவும் தீர்மானிக்கலாம். அதன்பின் தான் அதில் தலையிடுவது பொருத்தமானதாவெனச் சிந்திக்க வேண்டும். இறுதியாக முடிவெடுக்கும் நிலையில் பல்வேறு பிரச்சினை விடுவிக்கும் திறன்களைக் கொண்ட ஏராளமான தீர்மானங்களை எடுத்திருக்கும்.

சிலவேளைகளில் குழந்தையின் கவனிப்பு உத்திகள் பொருத்தமற்றவையாக இருக்கலாம். இங்கு மிக முக்கிய அம்சம் துன்ப நிலைபற்றிய தனது உணர்வை வெளிப்படுத்தும்போது குழந்தை வழங்கிய உதவி பொருத்தமற்றதாகக் காணப்படினும் அதனுடைய உதவியும் பரிவும் ஏற்கப்படுகின்றன.

பகிர்தலுக்கும் தயாளத்தன்மைக்குமிடையிலுள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்வதில் குழந்தைகள் அடிக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்ப்படுதலுண்டு. இந்த் இரண்டையும் பொறுத்து குழந்தைக்கு மயக்கத்தையேற்படுத்தும் கைங்கர்யத்தை முதியவர்களே புரிகின்றனர். 'இனிப்பைப் பகிர்ந்துகொள்', 'பொம்மைகளைப் பகிர்ந்து கொள்' என்ற இவ்விரு தொடர்களிலும் முதலாவது தொடர் பங்கிட்டுக் கொடுக்கும் தாராளத் தன்மையும் இரண்டாவது தொடர் தற்காலிகமாக இரவல் கொடுக்கும் ஒத்துப்போதலையும் குறிக்கிறது.

பிறருக்குத் தன் கவனிப்பையும் பரிவையும் காட்டும் செயலில் நாம் குழந்தைக்கு உதவுகையில் உண்மையான அன்புடைமையானது ஓர் உண்மையான மனவெழுச்சி யென்பதைக் குழந்தை கற்றுக்கொள்ள வேண்டுமென்பது மிக முக்கியமாகும். சொல்லின் உண்மைக்கருத்தைக் குழந்தை விளங்கிக்கொள்ளாதபோது 'மன்னிக்கவும்' எனச் சொல்லுமாறு குழந்தையை வற்புறுத்துவோமானால், அது போலியான அன்புடைமையைக் காட்ட உற்சாகப்படுத்துகிறோம்.

இவ்வாறான செயற்பாட்டின் காரணமாக ஒவ்வொரு தடவையும் 'மன்னிக்கவும்' என்று கூறும்போதும் எல்லை மீறிய செயல்கள் யாவும் மன்னிக்கப்படலாம் என்ற நிலைக்கு குழந்தை நிபந்தனைப்படுத்தப்படுகிறது.

குழந்தைகள் விளங்கிக்கொள்ளச் சிரமப்படும் கருத்துநிலை எண்ணக்கருக்கள், அன்புடைமை, பரிவு, கொடூரம் ஆகியனவாகும். ஆயினும் பிறருக்கு தாராளத்தன்மை, மதிப்பு, ஆதரவு என்பன காட்டப்படும் சூழலில் இவை இலகுவாகக் கற்கப்படுகின்றன. அச்சூழலிலுள்ள முதியவர்களிடமிருந்து தாம் கற்றுக்கொள்ள வேண்டுமென குழந்தை கருதுகிறது. எனவே, பிறரால் பின்பற்றப்பட வேண்டிய, பிறர்க்காக வாழும் மாதிரிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்க வேண்டிய முதியவர்கள் காணப்படவேண்டியது குழந்தைகளைப் பொறுத்து அவசியமாகும்.

அன்புடைமை, பரிவு என்பனவற்றைக் குழந்தைகள் அவதானித்தால் மாத்திரம் போதாது. அவர்கள் பரஸ்பரம் அன்புகாட்டுவதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்படல் வேண்டும். ஆகவே, பாலர் பள்ளிச் சூழலானது ஒருவரையொருவர் மதித்தலை வளர்ப்பதாகவும், பாராட்டு வழியிலான சமூக மீளவலியுறுத்தலை வழங்குவதாகவும், இவை யாவற்றுக்கும் மேலாக குழந்தைகள் பரஸ்பரம் அன்பு காட்டக் கூடிய சந்தர்ப்பங்களை நல்குவதாகவும் அமைய வேண்டும்.

குழந்தைகளிடம் அறநெறி விருத்தியையும் நாம் எதிர்பார்க்கிறோம். இதனை விளையாட்டினூடாக, குழந்தைகள் தமது சமூகத் திறன்களையும் மற்றவரின் உணர்வுகள் சார்ந்த விழிப்புணர்வையும் விருத்தியாக்குவதற்கு உதவுவதனூடாக ஊக்குவிக்கலாம். வெகுமதி, தண்டனை, மாதிரிச் செயற்பாடு முதலியனவற்றின் மூலம் அறநெறி நடத்தைகளை மேற்கொள்ளுவதற்குப் பழக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

எனினும் விளையாட்டு விதிகளைக் கற்பதனூடாகவும் அவற்றையுணர்ந்து ஏற்பதனூடாகவுமே குழந்தைகள் அறநெறி பற்றிய ஆரம்ப அம்சங்களை விளங்கிக் கொள்ள முடியும் என்னும் பியாஷேயின் கருத்தினை அதிகளவிலான குழந்தைப் பள்ளி ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

டேமன் (Damon - 1997) என்பவர் அறநெறி வளர்ச்சியைப் பொறுத்து மேடைக் கொள்கை அணுகுமுறையை ஆதரிப்பவராவார். அவர், நேரான நீதி என்னும் எண்ணக்கரு விருத்தியே அறநெறி இயல்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையம் என அழுத்திக் கூறுகிறார். நான்கு வயதுக்கும் எட்டுவயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் 'ஒவ்வொருவருக்கும் நீதியான பங்கு' என்ற கோட்பாட்டைப் படிப்படியாக விளங்கிக் கொள்கின்றனர்.

குறித்த நிலைமையில் அமைந்துள்ள குறித்த செயல்களைக் கற்பிப்பதிலும் பார்க்க, கோட்பாடு, காரணங்களைக் குழந்தைகள் விளங்கிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பது அறநெறி வளர்ச்சியை இலகுபடுத்துகிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. நீதியென்பது ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பதற்கு சம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற வழியிலான முறையில் பாலர் பள்ளிகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். வில்சன், வில்லியம்ஸ், சுகர்மன் (Wilson, Williams and Sugarman - 1967) ஆகியோர், நன்றாக வடிவமைக்கப்பட்ட பாலர் பள்ளிகளின் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளனர். 'விழுமியங்களைக் கட்டாயப்படுத்தித் திணித்தல் அறநெறியாயிருக்க முடியாது. ஆனால் தமது விழுமியங்களை மக்கள் தெரிந்தெடுப்பதற்கான ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்தத் தவறுதலும் தவறானதே' என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

குழந்தைப் பருவத்தினருக்கு அறிமுகப்படுத்தப்படும் விதிகள் அனைத்துக் குழந்தைகளதும் அனைத்து முதியவர்களினதும் தேவைகளைக் கருதும் சரியான காரணங்களைக் கொண்டமைய வேண்டும். எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்மானங்கள் அமைந்துள்ளனவோ, அந்தக் கோட்பாடுகளை விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக் கூடியதாக அக்காரணங்கள் பற்றிக் குழந்தைகள் கலந்துரையாட வேண்டும். சரியான பேச்சுவார்த்தை, மூன்று நான்கு வயதுக் குழந்தைகளுக்கு அப்பாற்பட்டதானாலும், சமரசம், கிரகிப்பு என்பனவற்றின் அடிப்படைகள் முன்பள்ளிப் பருவத்திலேயே வளர்க்கப்படலாம்.

சில பாலர்பள்ளிகளில் இத்திறன்கள் விருத்தியாக்கப்படுதற்கான நிலைமைகள் உள்ளன. மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயல், விதி, கூற்றுடனும் அறநெறி விழுமியங்கள் கற்கப்படுகின்றன என்பதை கல்வியாளர்கள் உறுதிசெய்து கொள்ளலாம்.

**கலாசார விழிப்பு**

முன்பள்ளிக் கல்வியின் ஒரு முக்கிய இயல்பு, தமது கலாசாரத்தில் குழந்தைகள் எவ்வாறு பங்கு பற்ற வேண்டும் என்பதை உணர்த்துதலாகும். குழந்தைதான் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் என்பதை மாத்திரம் கற்றுக்கொண்டாற் போதாது, தான் பரந்த சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். பல்வேறுபட்ட கலாசாரம், உபகலாசாரங்களைக் கொண்ட ஒரு சமூகத்தில் நாம் வாழ்கிறோம். ஆனால் அதிகமான எமது குழந்தைகள் பல்வேறுபட்ட இன, சமயங்களைச் சார்ந்த மக்களும் வாழ்கின்றதைத் தெரியாமலே இருக்கின்றனர். நமது குழந்தைகள் இவ்வாறான சமூகத்திறன்களைக் கற்கின்றபோதே தமக்கும் தாம் வாழும் சூழலுக்குமிடையேயுள்ள இடைத்தொடர்புகள் பற்றியும் கற்க வேண்டும்.

பல்வேறு நாடுகளையோ, அந்நாடுகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் பற்றிய எண்ணக் கருக்களையோ, அந்நாடுகளின் கலாசாரங்கள் பற்றியோ சிறு குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொள்ள மாட்டார்கள் என வாதிடும் தனிக்கலாசாரப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், எதிர் இனவாத கலாசாரப் பாடவிதானத்தை அறிமுகப்படுத்த இயலாதிருப்பதாக உணர்கின்றனர்.

இளம் குழந்தைகளின் மனப்பாங்குகள், ஆரம்பத்தில் 'தன்மையம்' கொண்டனவாக இருப்பதைக் குறிப்பிடும் பியாஷே, வெயில் (Piaget, Weil - 1951) ஆகியோர் ஆறுவயதையடையுமுன்னர் பிள்ளைகள், பட்டினம், தேசம், நாடு முதலான எண்ணக்கருக்களைத் தொடர்புபடுத்த இயலாதவர்களாக இருப்பரெனக் கண்டறிந்தனர். இவ்வாறான தொடர்புகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாவிட்டாலும், பல்வேறு இனங்கள், சமயக்குழுக்கள் பற்றிய விளக்கத்தை ஓரளவாவது அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இரண்டு அல்லது மூன்று வயதிலேயே குழந்தைகள் எதிரிடையான அமைப்புக் கருத்துக்களை வளர்த்துக்கொள்ள ஆரம்பிக்கின்றனர்.

ஆகவே, இனவாதக் கோணலற்ற அணுகுமுறையைப் பொதுக்கலைத் திட்டத்துடன் ஒன்றிணைப்பதை, பல்கலாசார, தனிக்கலாசாரப் பிரதேசத்து ஆசிரியர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

சமூகத்தில் பல்வேறுபட்ட இனக்குழுக்கள் உள்ளன என்பதை ஒப்புக் கொள்ளுதலைவிட, பல்கலாசார சமூகத்தின் ஓர் உறுப்பாளராக இருக்கக் கற்றுக்கொள்ளுதல் மேலானதாகும். டெமன்ஸ்பார்க் (Demon - Spark - 1989) 'சுற்றுலாக் கலைத்திட்டம்' என ஓர் அணுகுமுறையை எடுத்துரைத்துள்ளார். அது ஒருவரின் குடும்பத்தையும் நண்பர்களையும் கொண்ட பல்வேறுபட்ட குழுக்களிடையே ஒத்த இயல்புகளும் வேறுபாடுகளும் நிலவுகின்றன என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக் கொள்ளுதலைப் பொறுத்த ஒன்றாகும். இதிலே பால், இனம், பலவகை உடலாற்றல்கள் என்பன அடங்கும். குடும்பத்து எல்லா அங்கத்தவராலும் ஒப்பப்படும் வகிபங்குகளையும் குடும்பங்களெல்லாம் ஒரேவகையானவையல்ல என்ற யதார்த்தத்தையும் ஒப்புக் கொள்ளும் நிலையைக் குழந்தை முதலில் பெற வேண்டும்

குடும்ப உறவுநிலையைக் குழந்தை உணர்ந்து கொள்ளுமாறு ஒவ்வொரு குழந்தையும் தாய் தகப்பனின் வீடு, தனியாகத் தாயாரின் வீடு, பாதுகாப்பாளரின் வீடு முதலியவற்றில் வாழ்வதை அறிந்துகொள்ள உதவி செய்தல் வேண்டும். மேலும், பேரன், பேத்தி, மாமா, மாமி முதலான எண்ணக்கருக்களையும் குழந்தைகள் விளங்கிக்கொள்ள வழிவகை செய்தல் வேண்டும்.

தற்கால நிலையில் பல மைல்களுக்கப்பால் வாழும் உறவினருடன் குழந்தைகள் நெருங்கிய தொடர்பற்றவர்களாக இருக்கிறார்கள்.

குழந்தைகள் சமூகத்திலுள்ள பல்வேறு உறுப்பினர் பற்றி அறிந்துகொள்ளுவதற்கான சிறந்த வழி, தனிமனிதரிடையேயுள்ள பல வேறுபாடுகள் பற்றிச் சுதந்திரமாக வினவவும். கருத்துக்களைக் கூறவும் கூடிய சூழலில் குழந்தை வாழுதலாகும். சமூகத்திலுள்ள தொழில்கள், வளங்கள், தொழிலாளர் பற்றிக் குழந்தை அறிந்திருத்தலும் சமூகத்தைக் கற்றுக் கொள்ளுதலில் அடங்கும். எனவே ஆசிரியர்கள் இவை பற்றிக் குழந்தைகள் அறிந்து கொள்ள உதவுதல் வேண்டும்.

உதாரணமாக, தபாற்காரன், சுத்திகரிப் போன்பாற்காரன், காவல்துறையினர், வியாபாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானோரைக் குழந்தைகள் கண்டுணர வாய்ப்புக்கள் வழங்குவதைக் குறிப்பிடலாம். இவைபோல் வன குழந்தைகள் சமூகத்தைக் கற்றறிய உகந்தவையாகும். வைத்தியர்கள், தாதிமார்கள், விமானமோட்டிகள் போன்ற பல்வேறு துறையினர்பற்றி, தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் குழந்தைகள் அறிந்திருந்தாலும், அவர்கள் பெற்ற விளக்கங்கள் வரையறைப்பட்டனவாகவேயிருக்கும்.

எனவே, பல்வேறு பணித்துறை சார்ந்தோரையும் பாலர் நிலையத்துக்கு வரவழைத்து அவர்களோடு குழந்தைகள் உரையாட வாய்ப்பளித்தல் மூலம், சமூகம் பற்றிய அறிவையூட்ட முடியும்.

பட்டினங்களில் வாழும் குழந்தைகள் பல மைல் தொலைவில் வாழும் கிராமப்புறக் குழந்தைகளிலிருந்து வேறுபட்ட கலாசாரப் பின்னணியைக் கொண்டவர்களாவர். சில குழந்தைகள் இவ்விரு வாழ்க்கைக்குமிடையிலான வேறுபாடுகளை ஓரளவு அறிந்திருந்தாலும் நகரப்புறங்களில் வாழும் பெரும்பாலான குழந்தைகள் எந்த, வசதியுமற்ற கிராமங்களின் வாழ்க்கை எவ்வாறிருக்கும் என்பது பற்றி அறியாதவர்களாகவேயிருப்பர். இதேபோல கிராமப்புறக் குழந்தைகள் நகரவாழ்க்கையின் சத்தம், சலசலப்புப் பற்றி வியப்படையவும் கூடும்.

நகரத்தினதும் கிராமத்தினதும் வாழ்க்கையியல் பற்றி குழந்தைகள் சிறிய விளக்கத்தைப் பெற்றிருக்கக் கூடுமெனினும், இரு கலாசாரங்களும் பற்றிய உண்மையான பார்வையை அவர்கள் பெறவேண்டியது அவசியமாகும். நகரவீதிகளெல்லாம் பளிங்கு பதிக்கப்பட்டவையென்பதோ, கிராம வாழ்க்கை இன்பம் கொழிப்பது என்பதோ யதார்த்த நிலையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடித் தரிசிப்புகள், புத்தகங்களைப் பார்வையிடல் கலந்துரையாடல்கள் முதலியனவூடாக நகரம் பற்றியும், கிராமம் பற்றியும் உண்மையான வாழ்க்கை அனுபவங்களைக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும்.

பொருளாதாரச் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டுமென்பது அவசியமானாலுங்கூட வேறு சுற்றாடலுக்கான சுற்றுலாக்களைப் பாடசாலைகள் ஒழுங்குபடுத்த வேண்டும். இவற்றின் மூலமே குழந்தைகள் பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள் சார்ந்த எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்ப ஆரம்பிக்கின்றனர்.

பாலர்பள்ளிப் பருவத்தைக் குழந்தைகள் அடையும்போது அவர்கள், குடும்பம், தாம் வாழும் சமூகம் என்பனவற்றின் அங்கத்தினர் மாத்திரமின்றி பரந்த உலகின் அங்கமாகவும் தம்மைப் பற்றிய எண்ணக்கருக்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.

பல்கலாசார சமுதாயத்தில் வளரும் குழந்தை வேறு இனத்தவரின் பேச்சுத் தொடர்பு இல்லாவிடினும் பார்வைத் தொடர்பையாவது பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் தனிக்கலாசாரப் பிரதேசங்களில் இவ்வாறான அனுபவத்தைப் பெறும் வாய்ப்பு குழந்தைக்குக் கிடைக்க முடியாது.

**பல்கலாசார விழிப்புணர்வு**

பொருட்கள் பாலர்நிலையத்தின் ஒழுங்கமைப்பு, பெற்றோரின் வகிபங்கு, கலைத்திட்ட அணுகுமுறை என்பன சார்பாக எடுக்கப்படும் தீர்மானம் ஒவ்வொன்றும் கலாசார மனப்பாங்குகளைப் பிரதிபலிக்கிறது.

கல்வியியலாளரின் மனப்பாங்குகள், ஆற்றல்கள், அறிவு என்பவை கலாசாரக் கோடலுக்கெதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையை விருத்தி செய்வதிலுள்ள பிரதான காரணிகளாகும் முதியோர், கலாசாரப் பின்னணிகள், சமுதாயத் தொடர்புகள், ஏனையோர் பற்றிய மனப்பாங்குகளை உளசுத்தியுடன் மீள்பார்வை செய்தல் என்பது வரவேற்புக்குரிய ஒரு அனுபவமாகும்.

கல்வியிலாளர்கள், குழந்தைகளிடம் பொருத்தமான மனப்பாங்குகளை விருத்தி செய்வதானால், அவர்கள் தமது பக்கச் சார்பு நிலையை இனங்கண்டு கொள்வது மிக முக்கியமாகும்.

குழந்தைகள் கலாசார விழிப்புடையவர்களாக வளர்வதை ஊக்குவிக்குமுகமாக கல்வியாளர்கள் செய்ய வேண்டியவை இதன் கீழ் தரப்படுகின்றன.

- குழந்தைகள் ஒவ்வொருவரினதும் உணர்வுகளையும், தேர்ச்சிகளையும் சார்ந்த சுயவிழிப்புணர்வையும் நயத்தலையும் மேம்படுத்தவல்ல செயல்களை ஊக்குவித்தல்,

- குழந்தைகளின் வாழ்க்கை நிலைகள் ஒத்தனவாயும், அதே தருணம் வேறுபாடானதாகவும் காணப்படுகிறது என்பது சார்பான கலந்துரையாடலுக்கு அவர்களை ஊக்குவித்தல் - இவ்வாறான செயற்பாடுகளால் அவர்கள் தமது கலாசாரம் பற்றியும் ஏனையோரின் கலாசாரம் பற்றியும் உணர்வர்.

  மேலும் இவை ஏனைய இனக்குழுக்கள் பற்றிய எதிர்மாறான அமைப்புகள் உருவாவதைத் தடுக்கின்றன.

- குழந்தைகளின் கருத்துக்கள், உணர்வுகளிலிருந்து வேறுபட்ட கருத்துக்கள், உணர்வுகளை பிற இன மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கலாம் என்பதை அறிய ஊக்குவித்தல். முன்னர் கருதப்பட்டது போல குழந்தைகள் தன்மையானவர்களல்லர் என்பதற்குச் சான்றுகள் இன்றுள்ளன. இந்த அம்சம் இன்று கற்பிப்பதற்கு உகந்தது.

- பல்வேறு வகையான உடை, நடை, பேச்சு, இசை, உணவு முதலானவை பற்றிய கலந்துரையாடல் முதலியனவற்றிற்கு இடமளிக்கும் வகையில் கலைத்திட்டத்தில் கலாசார அடிப்படையை விசாரித்தல். பல்வேறு இன, மத பாரம்பரிய விழா, கொண்டாட்டங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தலாம்.

  சிறுபான்மை இன மக்கள் காணப்படாத இடங்களுக்கும் இது பொருந்தும். பல்வேறு இன கலாசாரங்களின் உடை முதலியனவற்றின் வேறுபாடுகளைக் காணவும், இசை முதலியனவற்றைக் கேட்கவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அது பல்கலாசார விழிப்புணர்வுக்குப் பெரிதும் உதவும்.

- பெரும்பான்மை இனக்குழுக்கள் சிறுபான்மை இனக் குழுக்களில் இருக்கும் ஊழியர்கள், குடும்பங்கள், குழந்தைகள் ஆகியவற்றின் படங்களை உள்ளடக்கிய காட்சிக்கான சூழலை உருவாக்கி அவற்றை அவதானிக்க ஊக்குவித்தல். இது பல்லின சமுதாயக் கலாசார விழிப்புணர்வுக்குப் பெரிதும் துணை செய்யும்.

இளம் குழந்தைகள், பல்வேறு நாடுகள், இனங்கள் பற்றிய ஒரு வரையறைக்குள்ளான விளக்கத்தையே கொண்டிருப்பர். ஆயினும் பரந்த வேறுபாடான கலாசார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களுக்கு வழியமைக்கக்கூடிய உண்மையான பொருள் பொதிந்த வழிமுறைகளும் உள்ளன. இளங்குழந்தைகளைப் பெறுத்து பல்கலாசாரக் கல்வியின் நோக்கம், வேறு இனக் குழந்தைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து வந்தனர் என்பதை அறிவதல்ல, அல்லது அத்தகைய புள்ளிவிபரங்களைக் கற்பிப்பதற்காகவல்ல. அந்தச் சிறுபான்மை இனக் குழந்தைகளும் சமூகத்தின் பெறுமதி மிக்க அங்கத்தவர் என்பதனையும் அவர்கள் தமது நிலையில் ஏனையவர்களுக்கு மதிப்பளிப்பர் என்பதனையும் குழந்தைகள் விளங்கிக்கொள்ள உதவுவதற்குமேயாகும்.

உண்மையான கலாசார விழிப்புணர்வு விருத்தியென்பது, சாதி, இன, மதம், வகுப்பு என்னும் பேதமின்றி மற்றவர்க்கும் மதிப்பு வழங்குதல் என்னும் அர்த்தப்படும். பல்லினக் கலாசாரத் தன்மை கொண்ட பாலர் பருவக் குழந்தைகள் இதனை யதார்த்தமாகவே அனுபவிப்பர். தனிக்கலாசாரமுள்ள சூழலில் இந்த எண்ணக்கருக்களைக் குழந்தைகள் விளங்கிக் கொள்ளச் செய்தல் மிகக் கடினமாகும்.

ஆயினும் குழந்தைகள் தமது வாழ்நாள் முழுக்க எடுத்துச் செல்லக்கூடியதாக சகிப்புத்தன்மை, திறந்த மனப்பாங்கு முதலியவற்றை உருவாக்க முடியும். குழந்தைகள் கற்கும் முறையைக் கற்றுக்கொள்வதற்கும் தமது முழுமையான செயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கும் உயர்சுயகணிப்பும், நேர் சுயஎண்ணக்கருவும் மிக அவசியமாகும். இந்த வகையில் குழந்தைகள் தமது சமூக, சுய மற்றும் தனியாள் திறன்களை விருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்குவதில் கல்விச் செயற்பாட்டாளர்கள் மிக முக்கிய பங்களிப்பை வழங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 7

# தொடர்பாடல் திறன்கள்

சாதாரணமாக நாம் ஏனையவருடன் தொடர் பாடல் கொள்ளும் ஊடகம் பேச்சு மொழியேயாகும். இதன் மூலம் எமது சிந்தனை, உணர்வு கருத்து, செய்தி, எச்சரிக்கை போன்றனவற்றை வெளிப்படுத்துகிறோம்.

நாம் பயன்படுத்தும் சொல்சாராச் செயல்கள், முகபாவனைகள் போல இசை, அசைவு நாடகம், கவிதை, நடனம் முதலியனவும் ஒருவருடனொருவர் தொடர்பாடல் கொள்ளும் வழிமுறைகளாகும். இங்கு கதை, நாடகம், பாடல், தாளலயம், உரையாடல் என்பன மூலம் எவ்வாறு மொழித்திறன்களை விருத்தியாக்க முடியும் என்பதை நோக்குவோம்.

### மொழி எழுத்தறிவூடாகத் தொடர்பாடல்

மொழியில்லாமல் சிந்திக்க முடியாது. மொழி சிந்தித்தலுக்கான ஒரு கருவி. குழந்தைகளோ பேசப்பழகாத பருவத்திலேயே தாய் முதலியோருடன் முகபாவனை, ஓசைகள் என்பனவூடாகத் தொடர்பாடலை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். குழந்தை தன் வாழ்வின் முதல் சில வாரங்களிலிருந்தே முதியவர்களின் ஈடுபாட்டுக்குப் பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாட்டைக் காட்டுதலுண்டு என பவர் (Bower - 1977) முதலானோர் கருதுகின்றனர்.

பாலர் பள்ளிக்கு வரும் குழந்தைகளில் பெரும்பாலானோர் எளிமையான அறிவுறுத்தல்களை விளங்கிக் கொள்கின்றனர். ஒரு குழந்தை தனது முதல் மூன்று வயதுக் காலத்தில் கற்றுக்கொள்ளும் மொழியின் அளவு மிகக் கணிசமானதாகும்.

குழந்தைகள் முன் பள்ளிக்கு வரும்போதே பல்வாறான அனுபங்களையும் அறிவையும் உடன் கொண்டு வருகின்றனர்.

அத்தோடு கருத்துக்களையும் விளக்கங்களையும் மேம்படுத்திக் கொள்கின்றனர். ஆனாலும் எதிர்கொள்ளும் பல வருடங்களுக்கு அவர்களைப் பொறுத்து மொழி வளர்ந்து கொண்டேயிருக்கிறது. கரோல் சொம்ஸ்கி (Carol Chomsky - 1969) குறிப்பிடுவது போல ஒன்பது வயதிற்கூட சில பிள்ளைகள் சிலவகை வசன அமைப்புக்களில் இடருறுகின்றனர்.

பெரும்பாலான பாலப் பருவத்தினர் சொல்சாரா முகபாவங்களையே மேற்கொள்கின்றனர். அப்போது அவர்கள் தமது கருத்துக்களைச் சொற்கள் மூலம் வெளிப்படுத்த முயல்வதைத் தவிர்த்து சுட்டிக்காட்டியோ அல்லது முதியவர்களை நாடியோ நிற்கின்றனர். இவர்களது பேச்சு முதிர்ச்சியற்றிருக்கும்.

சொற்புணர்ச்சி தெளிவற்றிருக்கலாம். பேசும்போது, ஓசைகளைப் பிரதியீடு செய்யலாம். ‘கார்’ என்பதைத் ‘தார்’ எனக் கூறலாம். ‘நான் இதைச் செய்வேன்’ என்பதை ‘எனக்கு இதைச் செய்வேன்’ எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த கால வினைச் சொல்லைப் பயன்படுத்த வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்திருந்தாலும் எதிர்கால வினைச் சொல்லைப் பயன்படுத்துதல் குறைவாகவேயிருக்கும்.

இலக்கண விதிகள் மிகைப் பொதுமையாக்கலுக்குட்படும் தன்மை காணப்படும். இதனால் பொருத்தமற்ற வினைச் சொற்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. அவர்களது சொற் சேகரிப்பினுள் பிரதிப்பெயர், முன் இடைச் சொல், வினையுரிச் சொல் என்பனவற்றின் அறிமுகத்துடன் பேச்சு முதிர்ச்சித்தன்மை பெறத் தொடங்கும்.

பெண்குழந்தைகள் பரந்த சொற்களஞ்சியத்தை லாவகமாகப் பயன்படுத்துவர். ஆனபோதும் குழந்தைகள் தாம் செவிமடுக்கும் 'பின்னால்' 'மேல்' 'கீழ்' போன்ற சொற்களை வெறுமனே போலச் செய்யாமலிருப்பதனையும், இச்சொற்களின் உண்மையான பொருள் விளக்கத்தைப் பெற்றுள்ளனர் என்பதையும் ஆசிரியர்கள் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சொற்களை இவர்கள் பயன்படுத்துவதாகத் தென்பட்டாலும், அவற்றின் அடிப்படை எண்ணக் கருக்களை உண்மையாக விளங்கிக் கொள்ளாமலிருக்கலாம். அவை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

குழந்தைகளிடம் முதிர்ச்சியின்மை காணப்பட்டாலும் பல நான்கு வயதுக் குழந்தைகளால் சொற்றொடர்களைப் பயன்படுத்தவும், வினைச்சொற்களின் காலங்களை மாற்றவும், தெரிவு செய்யவும் முடியும். இதன் பயனாக, பாலர் பள்ளிகளில் குழந்தைகளின் காலம் பூர்த்தியாகும் பருவத்தில், கலந்துரையாடலின்போது உரையாடல்களை ஆரம்பிக்கவும், தொடரவும் முடிவதுடன் பிழையான விளக்கம் ஏற்படுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கூறவும் முடிகிறது.

சில கல்வியாளர்களால் பாலர் பள்ளிக் குழந்தைகளின் பேச்சானது அகமையமானது எனக் கூறப்படுவதுடன் அவர்களால் கேட்போரின் கருத்தியல்பைக் கவனிக்க முடிவதில்லை என நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆயினும் முழுமையாகச் சாதிக்க முடியாவிட்டாலும் கூட கேட்போரின் உளநோக்கின் அடிப்படையில் குழந்தைகள் தமது மொழியை வடிவமைக்க முயல்கின்றனர் என்பது வகுப்பிலுள்ளோர்க்குத் தெரியவருகின்றது.

பீற்றர்சன் (Menig-Peterson - 1983) என்பவர், விபரிக்கப்பட்ட நிலைமை பற்றிய கேட்போரின் அறிவை, சில மூன்று நான்கு வயதுக் குழந்தைகள் கருத்தில் கொள்கின்றனர் என எடுத்துக் காட்டியுள்ளார். அது மாத்திரமன்றி, பேசுபவரதும் கேட்போரினதும் உள இயல்புகளுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன என்பதையும் பாலர்பள்ளி முடிவுக்காலப் பிள்ளைகள் சிலர் உணர்ந்து கொள்கின்றனர் எனவும் தெரிகிறது.

பேசுதலிலும் செவிமடுத்தலிலும் குழந்தை பெறுகின்ற பயிற்சியின் அளவிலேயே மொழிவிருத்தி தங்கியுள்ளது. மொழியறிவை விருத்தியாக்குவதற்கும் சொந்த அனுபவங்களைச் சிந்தித்து விளக்கமளிப்பதற்கும் சிறந்த முதியோருடன் இடைவினையாற்றல் அவசியமாகும்.

குழந்தை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட மொழியனுபவப் பின்னணியோடேயே பள்ளிக்கு வருகிறது. ஆயினும் வகுப்பறையில் மொழியைக் கையாளுவதற்கு வேண்டிய நம்பிக்கைக் குறைவோடும், அதற்கான திறன்கள் குன்றியும் சில குழந்தைகள் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் தெளிவாகப் பேசமுடியாது இடருறும் குழந்தைகள் மொழியாட்சியில் தாம் கொண்டுள்ள திறனைப் புலப்படுத்தும் உரையாடல்களில் வீட்டிலுள்ளபோதே ஈடுபட முடியுமென கோர்டன் வெல்ஸ் (gordon wells - 1987) பிரிஸ்டலில் நடாத்திய ஆய்வு மூலம் கண்டறிந்தார்.

இதேபோல பாலர் பள்ளியில் இடம் பெறுவதாகக் கருதப்படுவதிலும் பார்க்க கூடுதலளவான உரையாடலும் கற்றலும் வீட்டில் நடைபெறுவதாக, முப்பது குழந்தைகள் மேல் மேற்கொண்ட ஆய்வின் மூலம் கியூயெஸ் (Hughes - 1984) என்பவரும் கண்டறிந்தார்.

குழந்தை இரைச்சல் நிறைந்த வகுப்பறையைவிட. உளச்சலனமற்ற வீட்டுச் சூழலில் அதிக சுதந்திரத்தோடு கதைக்க முடிகிறது. ஆயினும் மிகக் குறைவான மொழியாற்றலுடன் பாலர் பள்ளியில் சேர வரும் பல குழந்தைகள் இன்னும் உள்ளனர். இவ்வாறான குழந்தைகளுக்கு வகுப்பறை முதியோர் முக்கிய பங்களிப்பினை வழங்க முடியும்.

குழந்தைகளின் கற்றலுக்கு தாங்குதளம் ஒன்றை வழங்குவதில் மூத்தோரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புறூனர் (Bruner), வைகொட்ஸ்கி (Vyotsky) போன்றோர் தெளிவாகக் காட்டியுள்ளனர். இதே விடயத்தை ஹியூயெஸ் (Hughes - 1997) என்பவரின் ஆய்வும் தெளிவாகக் காட்டுகிறது.

இவ்வாய்வின் போது விவாதத்தில் பங்குபற்றுமாறு குழந்தைகள் அழைக்கப்பட்ட நிலையில், கருத்துள்ள கலந்துரையாடல்கள் உருவாகியதைக் கண்ணுற்றார் வகுப்பறையாசிரியர்களின் இடைவினையியல்புகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாளர், பெற்றோர் போன்ற ஏனைய முதியவர்களின் இடைவினை யியல்புகளுக்குமிடையே கணிசமான வேறுபாடுகள் காணப்பட்டதையும் கண்டார். குழந்தைகள் சுயமாகக் கற்றலில் செயல்துடிப்போடு பங்குபற்றுகின்றனர். ஆயினும் அக்கறையுள்ள ஒரு முதியவரின் உதவியால் இது மேலும் மேம்படலாம்.

குழந்தைகள் மீது ஆசிரியர்கள் அக்கறை காட்டினால் நெறிப்படுத்திய பேச்சு மீது அவர்களின் கவனம் குவியுமென ஹயூயெஸ்ஸின் ஆய்வு காட்டியது. பாலர் நிலையத் தாதியர்கள் குழந்தைகளுக்கு அதிக பயன்தரும் 'தாங்குதளத்தை' வழங்கியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழி விருத்தியை ஊக்குவிப்பதைப் பொறுத்து செவிமடுத்தல் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- கேட்டலின் உடல்சார் அம்சம்
- கற்பவரின் கவனம்
- கேள்விசார் தகவலை சொற்களில் அமைக்கும் ஆற்றல்

பேசுதல் என்னும் மொழித்திறன் வெளிப்பாட்டுப் பகுதியில் ஒன்றாகும். இதன் அடுத்த அம்சம் எழுத்தாகும். பேச்சில் பின்வருவன அடங்குகின்றன.

- பேச்சொலிகளின் உருவமைப்பு
- ஒழுங்கான கருத்துள்ள வாக்கியங்களை உருவாக்குதலில் இலக்கணப் பயன்பாட்டு ஆற்றல்
- பல்வேறு தேவைகளுக்காக பேச்சைப் பயன்படுத்தும் திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கலைத்திட்டம், மொழி, எழுத்தறிவு ஆகியவற்றிற்கு வழிப்படுத்தும் குழந்தைகளின் கற்றலின் விருப்புக்குரிய புலப்பாடுகள் என்பனவற்றிலிருந்து செவி மடுத்தல், பேசுதல் ஆகிய இரண்டினதும் அவசியத்தைத் தெளிந்து கொள்ளலாம்.

ஆரம்பப் பிள்ளைப் பருவம் பாடசாலைத் தொடர்பாடல் திறன் செயற்றிட்டத்தின் ஒரு பங்காளரான ஜோன் டவ்ப் (John Tough - 1977) என்பவர் குழந்தைகளுடனான தமது இடைவினைகளின்போது ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படக் கூடிய உரையாடல் உபாயத்தின் பல்வேறு வகைகளை இனங்கண்டுள்ளார். அவை பின்வருவன:

- **திசைகோட்படுத்தல்** (இவை குழந்தைகளின் கவனத்தைக் குறித்த ஒரு தலைப்பை நோக்கிச் சிந்திக்கத் தூண்டுவன. உதாரணம் : எதிர்வு கூறல், காரணங்காணல், கற்பனை செய்தல் - சொற்கள், வினாக்கள் கருத்துக்கள் - என்பன.)

- **இயலுமாக்கல்** (குழந்தையை மேலும் கலந்துரையாடல் பக்கம் நகர்த்துதற்கு உதவும் கருத்துக்கள். இவை பின்தொடர் உபாயங்கள், குவியும் உபாயங்கள், செவ்வை பார்க்கும் உபாயங்கள் என்பனவாக அமையலாம்.)

- **செவிமடுத்தல்** (திசை கோட்படுத்தல், இயலுமாக்கல் உபாயங்கள் குழந்தைக்கு சில சிந்தனைகளைக் கொடுக்க உதவும்போது, இவ்வகை உபாயங்கள் அவர்களுக்குத் தகவல்களை, கருத்துக்களை வழங்குகின்றன.)

- **பேணுதல்** (குழந்தைகள் தொடர்ந்து பேசுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படும் கருத்துக்கள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான தருணங்களில் இவை சிரித்தல் அல்லது தலையையாட்டுதல் போன்ற சொல்சாராதவையாக அமையலாம்.)

- நிறைவு செய்தல் (குழந்தைகள் இறுதியில் உளத்திருப்தியுற வேண்டும் என்பதனால் உரையாடலை முடிவுக்குக் கொணரவேண்டிய, ஆயினும் பின்புமொரு உரையாடலுக்கான வழிக்கு இடமளிப்பதாக இது அமைய வேண்டும்.)

குழந்தைப் பருவத்தினருடனான தொடர்புகளில் இந்த உபாயங்கள் கணிசமான வகையில் உதவி புரிகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து உரையாடல்களும் ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்டனவாக இருக்கக்கூடாது. குழந்தைகளால் ஆரம்பிக்கப்பட்ட முதியவர்களுடனான உரையாடல்களின்போது அதிக அளவான பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றமை பல ஆரம்ப கால ஆய்வுகளால் அறியப்பட்டுள்ளன.

இதே வேளை தொடர்ந்து நீடிக்கும் பயன்மிக்க உரையாடல்கள் சோடியாகச் சேர்ந்து விளையாடுகின்ற குழந்தைகளிடமே காணப்படுகின்றனவென புறூனர் (1980) கண்டறிந்தார்.

வளர்ந்தோரைவிடச் சிக்கலான பிரச்சினைகளைத் திருப்திகரமாகத் தமது சகாக்கள் விளங்கிக்கொள்ளும் ஆற்றலுடையவர்களாகவிருத்தலால் குழந்தைகள் சிறந்த ஆசிரியர்களாகிவிடுகின்றனர் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

பெரும்பாலும் மொழிவிருத்தியை ஊக்குவிக்கும் முக்கிய காரணி வகுப்பறைச் சூழலாகும். முதியோர் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தவர் எனக் கருதும் போதனைக்கான அணுகுமுறையிலும் பார்க்க முதியவருடன் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும் வகுப்பறைச் சூழல் சுதந்திரமாக விளையாடுவதற்கு அதிக வாய்ப்புத் தரும். இவ்வாறு குழந்தைகள் தமது மொழிப் பிரயோகத்தில் நம்பிக்கையையும் தேர்ச்சியையும் விருத்தியாக்குவதற்கேற்ற வழிமுறைகள் ஏராளமாக உள்ளன.

**குழந்தைகளின் பேச்சு**

முதியவர் ஒருவரின் கவனத்தைத் தம்பால் திருப்புவதற்காகப் பெரும்பாலான குழந்தைகள் போட்டியிடுகின்றனர் என்பது வீட்டுக்கும் பாடசாலைக்கு மிடையிலான வேறுபாடுகளில் மிகப்பிரதானமான அம்சமாகும். எனவே முதியவர்களுடனான தமது தொடர்புகளின் போது, குழந்தைகள் பேச்சில் ஈடுபடுவதிலும் பார்க்க செவிமடுத்தலிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர்.

என்னவானபோதும் தான் பேசுவதை ஏனையவர்கள் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையெனக் குழந்தை உணருமானால், ஆசிரியர் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள் எனச் சொல்லும்போது மூன்று, நான்கு வயதினருக்கு அது மனவிரக்தியை ஏற்படுத்தலாம்.

குழந்தைகளின் பேச்சு தெளிவற்றதாகவும், அதன் பொருள் மயக்கமானதாகவும் இருக்கும் நிலையில், ஒரு சுறுசுறுப்பான வகுப்பறையில், தனித்தனிக் குழந்தைகளின் பேச்சுக்குக் காதுகொடுப்பதில் நேரத்தைக் கண்டுபிடிப்பது ஆசிரியருக்குக் கடினமாகவிருக்கலாம். என்னவானாலும் குழந்தைகளின் பேச்சைச் செவிமடுப்பதற்கு நேரத்தை ஒதுக்குகின்றவரும் குழந்தை சொல்வதைத் தெளிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொள்கின்றவருமான ஆசிரியர், தனது பங்களிப்பு பெறுமதிமிக்கதென குழந்தையால் உணரப்படுபவராவார்.

குழந்தை உரையாடலை ஆரம்பிக்கும்போது மட்டுமன்றி, முதியோர் ஒரு திறந்தவகை வினாவை வினவும்போதும், குழந்தை சொல்வதைக் கவனத்திலெடுத்தல் பொருத்தமானதும் முக்கியமானதுமாகும். முதியோரின் வினாவுக்கான விடை சிக்கலான கருத்துவெளிப்படுத்தலைக் கொண்டிருக்குமாயின் குழந்தைகள் விடையளிப்பதற்குக் கூடுதலான நேரத்தையெடுக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசரப்படும் ஆசிரியர்கள் காத்திருக்காதது மட்டுமன்றித் தாமே விடையைக் கூறிவிடுகின்றனர், அல்லது குழந்தைகளின் குழப்பத்தை மேலும் அதிகரிக்கக் கூடிய மேலதிக கூற்றுக்களைத் தெரிவித்துவிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளைக் குழந்தைகள் பன்முறை எதிர்கொள்வார்களாயின் அவர்கள் அச்செயற்பாட்டிலிருந்து விலகிக்கொள்வர். அல்லது தமது மனதில் தோன்றுவதைக் கூறிவிடுவர். இவ்வாறான எந்தத் துலங்கலும் குழந்தையின் மொழிவிருத்திக்கு உகந்ததாயமையாது.

**குழந்தை பேசுவதற்கான பொருள்**

குழந்தைகளின் மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான முக்கிய வழிமுறைகள், வினாக்கேட்டல், விடையளித்தல், அனுபவங்களைப் பகிர்தல், எதிர்வு கூறல், பழைய நிகழ்வுகளை மீட்டுப் பார்த்தல் முதலியனவாகும். என்ன நடக்கிறது, நடந்தது, நடக்கும் என்பன சார்ந்த எண்ணக் கருக்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்கு குழந்தைகள் சொற்களைக் கையாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென நாம் விரும்பினால் அவர்கள் அதனைப் பற்றிப் பேசுவதற்கு எதனையாவது அவர்களுக்கு நாம் வழங்க வேண்டும். அதனைக் குழந்தை பேசுவதற்கான தலைப்பு, அல்லது பொருள் எனக் குறிப்பிடலாம்.

கலந்துரையாடல்கள் குழந்தைகளின் அனுபவங்களுடன் பொருந்திச் செல்வதாக அமைய வேண்டும். குழந்தைகள் மொழி வளர்ச்சியையும் அறிவாற்றல் தகைமைகளையும் பெறுவதற்கு சலனமற்ற ஒரு சூழலில் கவர்ச்சியான விடயங்களை வழங்கிவிட்டால் போதும் எனக் கருதுவது இன்று பொருத்தமானதாகக் கொள்ளப்படுவதில்லை.

குறிப்பிட்ட பொருளில் குழந்தைகளின் கவனம் குவிக்கப்படல் வேண்டும். பொருட்களின் மீது கவனம் திருப்பப்படுவதுடன், மிகக் கவனமாக வினவுதல் மூலம் கலந்துரையாடலையும் விளக்கத்தையும் ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் குழந்தைகள் உலக அறிவைப் பெறுவதோடு சொற்களஞ்சியத்தையும் பெருக்கிக் கொள்ளலாம்.

கலந்துரையாடல்களுக்கான மிகச்சிறந்த தூண்டற் பொருள்களாகப் படங்கள் அமைகின்றன. படத்தின் மையக்கருத்தைக் கருத்து நிலையிற் பெற்று அதனை வெளிப்படுத்துவதற்குக் குழந்தைகளை ஊக்குவித்தல் ஒரு முக்கிய அம்சமாகும். இச்செயற்பாடு கருத்துக்கள மைத்தலையும், ஏனைய மக்களின் உணர்வுகளுள் பிரவேசிப்பதற்கு மொழியைப் பயன்படுத்துதலையும் உள்ளடக்கிய மொழியியல் திறன்களைக் கணிசமான அளவு ஏற்படுத்தவும் உதவும். மேலும் கற்பனையைத் தூண்டுதலுக்குப் படங்களைப் பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடலுக்கான பயனுள்ள விடயங்களைத் தரக்கூடியவை பாலர் பள்ளிகளுக்கு வெளியே கவர்ச்சியான இடங்களுக்கு மேற்கொள்ளப்படும் தரிசனங்களாகும்.

வெளி உலாக்களுக்குப் புறப்படுமுன்னர் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள், உலா நிகழ்வின் போதோ, அதன் இறுதியிலோ மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலை விடப் பயன் குன்றியவையாகும்.

குழந்தைகள் தாம் பார்த்து அனுபவித்தவற்றைப் பிறருக்கு விபரித்துச் சொல்வதானது, இலாவகமாகவும் ஒன்றிணைத்தும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், கால ஒழுங்கு பற்றிய விளக்கத்தை வெளிக்காட்டுவதற்கும் குழந்தைகளுக்கு உதவுகின்ற உன்னத வழிமுறையாகும்.

நிகழ்வுகளைக் கால ஒழுங்குமுறைப்படி எடுத்துக் கூறுவது குழந்தைகளைப் பொறுத்து ஒரு சவாலாக இருப்பதோடு, அது அவர்களால் வளர்த்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கிய திறனுமாகும்.

ஏனென்றால் இது குழந்தைகளினது தர்க்க சிந்தனையினதும், காரணம் காண் சிந்தனையினதும் ஒரு முக்கிய கூறாகவும் உள்ளது. சமூக நாடக விளையாட்டின் ஏதாவது ஒரு வடிவத்துடன் இந்த வெளியுலாக்கள் தொடர்புபடுத்தப்படுமானால் குழந்தையின் மொழி விருத்தி மேலும் சிறப்படையும்.

அமைப்புக் கலந்துரையாடல்களாவன மொழி விருத்தியை ஊக்குவிக்கும் மற்றொரு பயன்மிகுந்த வழிமுறையாகும். எடுத்துக்கரட்டாக ‘மிதத்தல்’, ‘அமிழுதல்’ என்ற சொற்களை எடுத்துக் கொள்வோம். கல்லானது நேராக நீரின் அடிக்குப் போகிறது. தக்கையோ நீரின் மேற்பரப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அலைகிறது. இதை அவதானிக்கும் குழந்தை அமிழ்தல், மிதத்தல் என்ற சொற்களின் கருத்தை இலகுவாகப் பிடித்துக் கொள்ளும்.

செயல்களையும் சொற்களையும் இணைத்தலானது, கருத்துக்களையும் எண்ணக் கருக்களையும் உருவாக்குதலுக்குக் குழந்தையை ஊக்குவிக்கக்கூடிய அதிசிறப்பான உத்தியாகும்.

புறூணர் (1956) இதனை 'செயல்துடிப்பான சொல்லாக்கம்' எனக் குறிப்பிடுகிறார். தனியே செயல்களையோ, சொற்களையோ பயன்படுத்தலிலும் பார்க்க, செயல்களையும் சொற்களையும் இணைத்துக் கொள்ளுதல் சிறந்ததென அவர் கருதுகிறார்.

**உரையாடல்**

சிறுவர்களும் முதியவர்களைப் போல பேசுவதற்கு அதிகளவில் ஊக்குவிக்கப்படுவதானால் உண்மையான வாழ்க்கையனுபவங்களுடன் தொடர்புபட்டதாக உரையாடல் அமைய வேண்டும்.

பயனுள்ள அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படக்கூடியதாக விருப்பதாலேயே சிறுவர்கள் வீட்டில் அதிகமாகக் கதைக்கிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கூடிய விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படும்போது, அவர்கள் சஞ்சலமற்ற நிலையில் கருத்துக்களையும் உணர்வுகளையும் இலாவகமாக வெளிப்படுத்துகிறார்கள். (உதாரணம் : குழந்தையின் பிறப்பு, வீட்டுச் செல்லப்பிராணிகள், புதிய உடைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையான உரையாடல்கள் பல குழந்தைகளால் தொடங்கப்படுகின்றன. இங்கு ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினை 'போதனையாளர்' என்ற நிலையிலிருந்து அனுபவங்களைப் பகிர்பவர் என்ற நிலைக்குக் கீழிறங்குதலாகும். ஆசிரியர் கூறும் பதிலில் ஏற்படும் தடை அல்லது விமர்சனமானது மேற்கொண்டு உரையாடல் தொடர்வதை உடனடியாக நிறுத்திவிடக் கூடும். உரையாடலை நீடிக்க வேண்டுமானால், உரையாடல் எனும் பந்தை முன்னும் பின்னும் தள்ளும் ஆற்றலை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். தேநீர் வேளை, பகற்போசன வேளை என்பன உரையாடல்களில் ஈடுபட உகந்த சந்தர்ப்பங்களாகும்.

இவ்வாறான அமைதியான தருணங்களில்தான் சிறுவர்கள் சுதந்திரமாகக் கதைக்கின்றனர்; சமூக உரையாடல்கள் இன்பமான பொழுதுபோக்குகள் என்ற உணர்வைப் பெறுகின்றனர். முதியோர் உடனிருக்கும் வேளையிலேதான் சிறந்த மொழிச் செயல்கள் இடம் பெறுவதில்லை. முதியோர் இல்லாத நிலையில் குழந்தைகள் சோடிகளாகவோ, குழுக்களாகவோ சேர்ந்து தொழிற்படுகின்றனர். அந்நிலையில் ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்கக் கற்றுக் கொள்ளும் வகையிலான கலந்துரையாடல்கள் நிகழ்கின்றன. உடையணிதல், நாடகங்களில் ஈடுபடுதல், சிறுவர் உலக விளையாட்டு போன்ற நிலைமைகளில் இவ்வகை உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

ஜனரஞ்சகமான இசைப்பாடல்கள், தம்மால் உருவாக்கப்பட்ட புதிய நிகழ்வுகள் என்பவை மூலம் சிறுவர்கள் ஒலிகளையும் சொற்களையும் பரீட்சிக்க விரும்புகின்றனர். இவை அதிகமாக அவர்களின் நகைச்சுவை, வேடிக்கையுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல பேச்சுக் கோலங்கள், உலோக அதிர்வோசைகள் என்பனவற்றையும் பாவனை செய்கின்றனர். மேலும் புதிய புதிய வெளிப்படுத்தல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனாற் போலும் அந்நியமொழி அறிமுகத்துக்குப் பாலர் பருவமே மிகப்பொருத்தமானது என வாதிடப்படுகின்றது.

இப்பருவத்திலேதான் சிறுவர்கள் எவ்வித உளத்தடையுமின்றி புதிய கோலங்களையும் ஓசைகளையும் திருப்பிக் கூறுகின்றனர். இவ்வயதினர் மொழிக்கு நன்றாகக் காது கொடுப்பர் என்பதால், மற்றவர்களின் பேச்சுக் கோலங்களையும் தொனிகளையும் அவர்கள் பின்பற்றுதலைக் காண முடிகிறது.

**செவிமடுத்தல் சந்தர்ப்பங்கள்**

ஒரு குழந்தை பயனுள்ள தொடர்பாடலில் ஈடுபடுவதானால், ஒலிகளுக்கும் சொற்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் கேட்டறியும் வகையில் மிகக் கவனமாகச் செவி மடுக்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். பல வீடுகளில் பேச்சொலி மட்டம் உயர்வாகவிருப்பதால் அங்குள்ள குழந்தைகள் செவிமடுப்பதில் இடர்ப்படுகின்றனர். இவ்வாறான பிள்ளைகள் செவிமடுப்பதில் மாத்திரமின்றி மௌனமா யிருப்பதன் பெறுமதியையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கான வழி, ஆசிரியர் நாள்தோறும் குறித்த ஒரு நேரத்தில் பிள்ளைகளோடு தாமும் எழுந்து அமைதியாக நின்று அவர்களைச் சுற்றியுள்ள ஒலிகளைச் செவிமடுக்கச் செய்வதாகும். இச்செயலால் அமைதி என்பதன் பொருளைக் குழந்தைகள் நன்றாக உணர்வர்.

இவ்வேளையில் அமைதியை நீங்கள் காதால் கேட்கலாம் என்று ஒரு குழந்தை ஆசிரியரிடமே கூறக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவற்ற குடிசனப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளைவிட, சந்தடி நிறைந்த நகரப்பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு இது புதிய வினோத அனுபவமாயிருக்கும்.

பற்பல வழிமுறைகளைச் செவி மடுத்தல் திறன்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ள முடியும். இவற்றில் பிரதானமானவ, பாலர் பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றைக் கேட்டலாகும். குழந்தைகள் இவற்றைத் திரும்பத் திரும்பக் கேட்பதில் இன்பமுறுவர்.

மேலும் செவிமடுத்தலை ஊக்குவிக்க வேண்டுமானால், இவற்றைச் சொல்லும்போது ஆசிரியர் வேண்டுமென்றே தவறுகள் விட வேண்டும். ஆசிரியர் விடும் தவறுகளைக் குழந்தைகள் கண்டுபிடிக்கும்போது ஏற்படும் இன்பத்துக்கு அளவேயில்லை. மேலும் குழந்தைகளின் கவனக்குவிப்பு வீச்சும் இச்செயற்பாட்டால் அதிகரிக்கிறது.

குழந்தைகள் கதைகளைச் செவிமடுக்கும்போது கவனத்தைக் குவிப்பதை மாத்திரம் கற்கவில்லை, சிறந்த இலக்கியத்தைக் கேட்பதனால் பெறக்கூடிய இன்பத்தையும் அனுபவிக்கின்றனர். இலக்கியமானது சிறுவர்களுக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் நல்கவேண்டும்.

நாம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கான இலக்கியங்கள் (கதைகள், பாடல்கள், நாடகங்கள்) அவற்றில் சித்திரிக்கப்படும் பாத்திரங்கள் மூலமாக, எமது சமூகத்தின் விழுமியங்கள், மனப்பாங்குகளையும் கூடக் கையளிக்க வேண்டும்.

**விளங்கிக் கொள்ளல்**

சிந்தனை செய்வதற்கு மொழி அவசியம். மொழி இல்லாமல் சிந்தனை இல்லை. மொழியும் சிந்தனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவை. ஆசிரியரின் பிரதான பணிகளில் ஒன்று, குழந்தைகள் செய்வனவற்றையும் சொல்வனவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதலாகும்.

குழந்தைகள் கலந்துரையாடும்போது பொருத்தமான சொற்களைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பது போலத் தோன்றும். ஆனால் எண்ணக்கருக்களிலோ, கருத்துக்களிலோ முழுமையான விளக்கம் அவர்களுக்கு இல்லை என்பதை அவர்களின் மூலமாகத்தான் கண்டறியலாம்.

குறிப்பாக இட வெளித் தொடர்புகளுடன் சார்ந்த சொற்களின் பயன்பாட்டின்போது இதனைக் கண்டறிய முடியும். வீட்டுக்கு அப்பால் நிகழும் செயற்பாடுகளிலும், அசைவு தொடர்பான செயலமர்வுகளின்போதும் இதில் குழந்தைகளுக்கிருக்கும் தடுமாற்றம் வெளிக்காட்டப்படுகிறது.

குழந்தைகளின் நியமஞ்சாரா விளையாட்டு வேளைகளில் ஒட்டுக் கேட்போமாயின், விளக்கக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டும் வகையில் தமது சகபாடிக்கு எதையேனும் குழந்தை விளக்கிக் கூறிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

உடனடியாக இவ்விடயத்தில் குறுக்கிடல் பொருத்தமற்றதாகும். ஆயினும் பிறிதொரு நிலைமையில் தவறான விளக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம்.

வகுப்பறையில் மேற்கொள்ளும் ஆதார மொழியை இவர்களால் விளங்கிக்கொள்ள முடிகிறதா என்பதைக் காட்டக்கூடிய வகையில் அறிவுறுத்தல்களை அல்லது நெறிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை நாளாந்தம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பள்ளியிலுள்ள ஒரு குறிப்பிட்ட முதியவருக்கு ஒரு செய்தியைக் கூறுமாறு வேண்டுதலும்கூட குழந்தைகளின் விளக்கம் பெறும் மட்டத்தை அறிந்துகொள்வதற்கான வழிமுறையாகும். காரணம், இச்செயலானது நாம் சொன்னதைச் செவிமடுப்பதை மட்டும் கொண்டிருக்கவில்லை; அச்செய்திக்குச் சரியான விளக்கம் கொடுத்தலையும், செய்தி பெறுபவருக்கு அதனைத் தெரியப்படுத்துதலையும் கூடக் கொண்டுள்ளது.

செவிமடுத்தல் திறன்கள் குறைவாக இருப்பதோ, விளக்கக் குறைபாடோ, இவையிரண்டுமே காரணமாக விருப்பதோகூட, ஒரு செய்தி திருத்தமாக வழங்கப்படாமைக்கு ஏதுவாக இருக்கலாம். இவை மாத்திரமின்றி குழந்தை செய்தியின் விபரங்களை மறந்து விட்டமையும் காரணமாகவிருக்கலாம்.

பிள்ளைகள் சிறந்த ஞாபகசக்தியைக் கொண்டிருப்பார்களாயினும், தகவல்களைத் திருத்தமாக ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு உதவும் பொருத்தமான உபாயங்களை விருத்தி செய்யாமலிருக்கலாம். இப்பருவத்தினர் தாம் செவிமடுத்தவற்றை மனதில் வைத்திருக்கவும், தேவையானபோது மீட்டுணரவும் கூடியவர்களெனக் கருதப்படுகின்றனர்.

எளிமையான குறியீட்டு உபாயங்களைக் கற்பித்தல், தகவல்களை ஞாபகத்திலிருத்தும் குழந்தையின் ஆற்றலில் நேரான தாக்கத்தை ஏற்படுத்துமென சில கல்வியாளர்கள் கருதுகின்றனர். செய்தியொன்றை அவர்கள் பெறுவோனிடம் தெரிவிக்குமாறு கேட்கப்படுவதற்கு முதல் அதனைப் பல தடவைகள் திருப்பிச் சொல்ல வைத்தலோ, அல்லது அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெட்டுருச் செய்ய வைத்தலோ பயனற்ற செயற்பாடாகும். ஆயினும் செய்தியின் முக்கிய அம்சத்தைக் குழந்தை விளங்கிக் கொள்ளுமானால், அதன் பிரதான இயல்புகளை மனனம் செய்ய உதவுதல் பயனுள்ளதாயமையும். இதுவும் பாலர் பள்ளியின் நிறைவின்போதே பொருத்தமானதாகும்.

**எழுத்தறிவின் வெளிப்பாடு**

எழுதப்பட்ட சொற்கள், சிறுவயதிலேயே கருத்துக்களையும் எண்ணக் கருக்களையும் குழந்தைக்குத் தெரிவிக்கின்றன. குழந்தை அச்சுப் பதிப்பின் பல்வகை அமைப்புக்களையும், தானே வாசிக்கத் தொடங்குவதற்கு முன்னரேயே அறிந்து கொள்கிறது. வாசிப்பு, எழுத்து என்பவற்றினைப் பிள்ளை ஆரம்பித்தலை 'வெளிக்கிளம்பிய எழுத்தறிவு' என அழைக்கலாம். வாசிப்பு, எழுத்து என்பனவற்றிற்கான முதிர்ச்சிப் பருவம் எனக் கருதப்படுவதற்கு அதிக காலத்துக்கு முன்னதாகவே இது ஆரம்பித்து விடுகிறதென்பது இன்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. குட்மன் (Goodman - 1984) என்பவரின் கருத்துப்படி எழுத்தறிவின் வேர்கள் அவரால் குறிப்பிடப்படுகின்ற 'தொழிற்படு எழுத்தறிவு' (Functional literacy) என்பதில் காணப்படுகிறது. தொழிற்படு எழுத்தறிவு, உண்மை வாழ்க்கை நிலைமைகளில் காணப்படுவதுடன், உண்மையான ஒரு நோக்கத்தினையும் நிறைவு செய்கிறது. எடுத்துக்காட்டாக, செய்தித்தாள், சமையற்குறிப்பு, நூல்கள், கடிதங்கள் முதலானவற்றை நாம் வாசிக்கும்போது அவற்றைக் குழந்தைகள் காண்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் குழந்தைகளின் எழுத்தறிவு விருத்திக்கு உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு, எழுத்து என்பவை சார்ந்த ஆற்றல்கள் படிப்படியாகவும், எவ்வித நியமக் கற்பித்தலின்றியும் வெளிக்கிளம்புகின்றன. சமூகத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளினதும் எழுத்தறிவு சார்ந்த கற்றலானது குழந்தையின் மிகச்சிறிய வயதிலேயே ஆரம்பித்து விடுகிறதென்பதைக் கடந்த காலத்து ஆய்வுகள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. இது பெரும்பாலும் முதியவர்களுக்குத் தெரியாமலே நிகழ்கிறது. 'பிஸ்கட்' உண்ணும் குழந்தை அதிலுள்ள எழுத்தைப் பார்த்து அது என்னவெனக் கேட்பது அப்பிள்ளையின் எழுத்துப்பதிவு பற்றிய விழிப்புணர்வைப் புலப்படுத்துகிறது.

குடும்பச் சூழலில் உருவாகின்ற ஆரம்ப வாசிப்பு, எழுத்து என்பனவற்றின் அளவானது குடும்பத்து எழுத்தறிவு மட்டங்களில் தங்கியுள்ளது. அச்சுப் பிரசுரங்களில் அக்கறையற்ற குடும்பத்துக் குழந்தைகளுடன் ஒப்பு நோக்குகையில், வாசிப்பில் ஈடுபடும் பெற்றோரைக் கொண்ட குடும்பத்துக் குழந்தை அதிக நன்மை பெறுகிறது. குடும்பத்தின் வாசிப்புப் பழக்கத்தின் செல்வாக்கு நீண்டு நிலைக்கக் கூடியது. மூன்று வயதுக்கு முன்பிருந்தே கதை கேட்பதில் ஈடுபாடு கொள்ளும் குழந்தை பதின்மூன்று வயதில் சிறந்த செவிமடுப்பாளனாக வரமுடியும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கதை சொல்லல் எவ்வாறு பயிற்சியுடன் விருத்தியாகிறதோ, அதேபோலவே செவிமடுத்தலும் விருத்தியாகிறது.

இன்றைய குழந்தைகள் பிரசுரங்கள் நிறைந்த உலகிலே வாழ்கிறார்கள். மொழி வளம் இல்லாத சூழலில் வாழும் குழந்தை பாலர் நிலையங்களில் வாசிப்பில் ஈடுபடும் முதியோரைக் காணவேண்டியது அவசியமாகும். அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வாசிப்பு என்பது ஒரு பயனுள்ள பணி என்பதைக் குழந்தை அறியமுடியும். தொலைபேசி விபரக் கொத்து, நூற்பட்டியல், செய்தித்தாள்கள், குழந்தைக் கதை, கவிதை, நாடக நூல்கள் ஆகியன யாவுமே குழந்தைகளின் வாசிப்பில் அக்கறையை விருத்தி செய்யக் கூடிய சாதனங்களாகும்.

குழந்தைகள் வாசிப்பதற்கு ஆயத்தம் பெறும் காலம் திடீரெனத் தோன்றுமென எண்ணிக்கொண்டு அந்த ஆயத்தம் ஏற்படும்வரை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் நிலையை 'எழுத்தறிவானது ஒரு நீண்ட காலப்பகுதியில் மிக ஆறுதலாகவே வெளிக் கிளம்புகிறது' என்ற கூற்று ஏற்படுத்திவிடக் கூடாது. வாசிப்புச் சோதனைகளின் பெறுபேற்று அடிப்படையில் குழந்தைகளுக்கு நூல்களை வழங்கிய காலம் மலையேறிவிட்டது. இச்சாதனைகளில் திறமைகாட்டிய பிள்ளைகள் இன்னும் வாசிக்க ஆரம்பிக்காதிருக்க, சோதனைகளில் மிகக்குறைவாகத் திறமைகாட்டிய பிள்ளைகள் வாசிப்பில் ஈடுபடக் கூடியவர்களாக இருப்பதை நாம் அறிவோம். இருந்தபோதும் இச்சரியீட்டுப் பட்டியல்களில் உள்ள சில உருப்படிகள், பிற்கால வாசிப்பு அடைவுடன் தொடர்புடையன. எடுத்துக்காட்டாக, எதுகை மோனை, ஒத்த ஓசை முதலெழுத்துக்கள், எழுத்தொலிகளும் பெயர்களும் என்பனபற்றி அறிந்திருக்கும் பிள்ளைகள் வாசிப்பில் முன்னேற்றம் காட்டுகின்றனர் என்பதற்கு ஆதாரமாக அடம்ஸ் (Adams - 1990), கொஸ்வானி, பிறையன்ட் (Goswani and Bryant - 1990) ஆகியோரின் ஆய்வுகள் உள்ளன. எவ்வாறாயினும், வீட்டிலும் பாலர் நிலையங்களிலும் குழந்தைகளுக்குக் கிடைக்கும் முறை சாரா அனுபவங்கள் கற்றலுக்கு உதவியிருக்கும் என்பது உண்மையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாசிப்பையும் எழுத்தையும் வெவ்வேறு திறன்களாகப் பார்க்கிறோம். ஆனால் பெரயிரோ (Ferreiro - 1984) என்பவர் எல்லாக் கூறுகளையும் ஒரே நேரத்தில், ஒரே ஆழத்தில் பகுத்து நோக்கல் கடினமானது எனக் கருதுகிறார். அவர் ''சில கூறுகளை ஏனையவற்றிலிருந்து தனிமைப்படுத்துதல் மூலம் விருத்திக்கான எழுத்தறிவை விளங்கிக் கொள்ள முடியாது'' எனச் சுட்டிக் காட்டுகிறார்.

கதை சொல்லல் என்பது எழுத்து வடிவத்தில் உள்ளனவற்றைக் குழந்தைகள் நயப்பதற்கும், பிற்காலத்தில் தாமே வாசிப்பில் ஈடுபடுவதற்கும் ஊக்குவிக்கும் முக்கியமான வழிமுறையாகும். குழந்தைகள் உயிரோட்டமான கற்பனையாற்றல் கொண்டவர்கள். கதைகள், குழந்தைகளுக்கு பாசாங்கோடு கூடிய மாயா ஜால உலகைக் காட்டுகின்றன. எனவே சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட காட்சிக்கு இதமான வகையில் புத்தக மூலைகள் அமைக்கப்படல் வேண்டும். நூல்களை இலகுவாகக் குழந்தைகள் அங்கு கையாளல் வேண்டும். இவ்வாறு புத்தகங்களோடு தொடர்பு கொள்வதன் மூலம் அச்சிடப்பட்ட எழுத்துக்கள் தொடர்பான அடிப்படை எண்ணக் கருக்களைக் கற்றுக் கொள்கின்றனர்.

நாம் புத்தகங்களின் பக்கங்களை இடமிருந்து வலமாகப் பார்க்கிறோம். இடதுபக்க மேல் மூலையிலிருந்து ஆரம்பித்து மேலிருந்து கீழ்நோக்கி வருகிறோம். ஆனால் வேறு சில கலாசாரப் பிள்ளைகள், வலமிருந்து இடமாகவோ, கீழிருந்து மேல் நோக்கியோ வாசிப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். வேறு சில குழந்தைகளுக்கு வீட்டில் எழுதும் முறைமை பாடசாலையிலிருந்து வேறுபட்டதானால், இவ்விரு முறைகளையும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தறிவு பற்றிய குழந்தையின் கற்றல் குழந்தைக்குக் குழந்தை வேறுபடும். அவர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்களால் இது தாக்கமுறுகிறது என்பதை ரீல, சுல்பி (Teale and Sulyzby - 1986) என்போர் குறிப்பிடுகின்றனர். கொஸ்வாமி (Goswami - 1994) என்பவர், பேச்சுவழக்குச் சொற்களின் ஒலிகளைக் கண்டுபிடிப்பதற்கும் கையாளுவதற்குமான ஆற்றலுக்கும் குழந்தைகளின் வாசிப்பு விருத்திக்குமிடையே ஒரு பலமான இணைப்பு இருப்பதை வலியுறுத்துகிறார். பிறையன்ட், பிறாட்லி (Bryant and Bradly - 1985) ஆகியோர் "முன்பள்ளிக் குழந்தைகளின் ஒலியியல் ஆற்றல், அவர்களின் பிற்கால வாசிப்புத்திறன் விருத்திக்குக் கட்டியம் கூறும் ஒரு முக்கிய அம்சம்" என்கின்றனர்.

வாசிப்புத்திறனில் வித்துவம் பெறுவதற்கு வேறு சில குழந்தைகள் நீண்ட காலம் எடுக்கின்றனர். அதே நேரம் சில குழந்தைகள் இயல்பாகவே வாசிப்போராகவும், ஆசிரியரின் உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வாசிக்கக் கற்றுக் கொள்பவராகவும் இருக்கிறார்களே, இது ஏன்? இவ்விடயம் பற்றி செபீல்ட் ஆரம்ப எழுத்துத்திறன் மன்றம் (Sheffield Early Literacy Association - weinberger - 1996) ஆராய்ந்து, இயல்பான வாசிப்பவர் ஆவதற்கு உதவும் சில பொதுவான இயல்புகளை இனம் கண்டது. அவை :

- மொழியிலும் பிரசுரங்களிலும் சிறுவயதிலேயே அமிழ்ந்துவிடல்.
- முதியோருடனான நேர்இடைவினையும் நூல்களைப் பகிர்ந்து கொள்ளலும்.
- விருப்பமான கதைகளை மீண்டும் மீண்டும் வாசித்தல்.
- புத்தகத்தைப் போலப் பேசுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கதையை மனனம் செய்தல். (வாசிப்பில் ஏற்படும் இடர்களுக்கு முக்கிய காரணி கதையின் அமைப்பு பற்றிய அறிவு குழந்தைகளிடம் இல்லாமை)
- வாசிப்பை ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள குழந்தைகளை ஊக்குவித்தல்.
- தனிப்பட்ட நூலக வசதிகளையேற்படுத்தல்.
- வாசிப்பில் தேர்ச்சிபெறும்வரை மட்டுமின்றி அதற்கப்பாலும் உரத்து வாசிக்க வைத்தல். எழுத்தறிவு விளக்க விருத்திக்கு ஊக்குவித்தலில் இவை அவசியமாயின், தமது குழந்தைகளின் வாசிப்பு விருத்தியில் அக்கறை கொள்ளும் பெற்றோருடன் இவை பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

**வெளிக்கிளரும் எழுத்து**

சுல்ஸ்பி (1990) என்பவர், 'வெளிக்கிளரும் எழுத்தை,' ''வழமையாகக் காணப்படும் எழுத்தறிவாக இந்த நடத்தைகள் விருத்தியடைவதற்கு முன்பாகக் குழந்தைகளிடம் காணப்படும் வாசிப்பு, எழுத்துக்கான நடத்தைகள்'' என வரைவிலக்கணப்படுத்துகிறார். வெளிக்கிளரும் எழுத்து உருவாகுதல் மிக ஆறுதலாகவே நிகழ்கிறது. சுல்ஸ்பி இதனை,

- வழமையான எழுத்தறிவுடையவர் வழமை இயல்பில் வாசிக்கக் கூடிய எழுத்து,
- குழந்தை தானே வழமை இயல்பில் வாசிக்கக்கூடிய எழுத்து - எனக் குறிப்பிடுகிறார்.

குழந்தை எழுத முதிர்ச்சி பெறும் பருவத்துக்கு முன்னரே எழுதத் தொடங்குதல் வழமை நிலையை அடைவதற்கு முன் பல வடிவங்களை எடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறுக்கல்கள், வரைதல்கள், சொல் ஒலிசாரா வரிவடிவக் கோவைகள், வழமையான வரிவடிவங்களிலுள்ள எழுத்துக்களைப் பிரதிபண்ணுதல், கண்டுபிடித்த எழுத்துக்கூட்டல், சுருக்கங்கள், எழுத்துக்களின் வினோத அமைப்புக்கள் என்பன இந்த வடிவங்களாகும். பன்னிரண்டு மாதமளவில் குழந்தைகள் திரும்பத் திரும்ப ஏற்படுத்தும் அடையாளங்களைக் கிறுக்க ஆரம்பிக்கின்றனர். இது பெரும்பாலும் சுவர்களிலும் எதிர்ப்பட்ட தளபாடங்களிலும் இடம் பெறும். முதலில் இது வேறுபடுத்தப்படாத கிறுக்கலாக இருக்கும். ஆனால் இது படிப்படியாக வரைதலுக்கான கிறுக்கலாகவும் எழுத்துக்கான கிறுக்கலாகவும் விருத்தியடையும் சில குழந்தைகள் எழுத்தைக் குறிப்பதற்கு மேல் கீழான கோடுகளையும், வட்ட வடிக் கோலங்களையும் கீறுகின்றனர்.

ஹார்ஸ்ரே (Harste 1948) யும் சகாக்களும் இந்தக் கிறுக்கல்கள் எழுந்தமானமானவையல்ல எனக் கருதுகின்றனர். 'ப' போன்ற நேர்கோட்டு எழுத்துடன் தொடங்கும் பெயரைக் கொண்ட குழந்தை, எழுத்துக்காக நேர்கோட்டு அடையாளங்களைப் பயன்படுத்துகிறது. 'ல' என்னும் எழுத்துடன் தொடங்கும் பெயரைக் கொண்ட குழந்தை ஒரு வட்டக் கோலத்தைப் பயன்படுத்துகிறது. குழந்தைகள் அதே அடையாளத்தை வெவ்வேறு பொருட்களுக்குப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, கடை வைத்து விளையாடலில் ஒரு குழந்தை கடதாசியில் சில கிறுக்கல் அடையாளங்களை இடலாம். நிச்சயமாக அது வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியலாகவேயிருக்கும். என்னவானாலும் முதியோர்களது அடையாளங்கள் போலக் காணப்படுபவை வரைதல், கோலங்களைப் பிரதியீடு செய்வதாகக் கருதப்படலாம். இந்நிலையில் குழந்தையின் கிறுக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்கள் கருத்தைப் புலப்படுத்துகின்றன என்னும் முக்கியமான ஒரு கோட்பாட்டைக் குழந்தை பிடித்துக் கொண்டது என்பதை நாம் நினைவில் கொள்ளலாம்.

எழுத்துப் போன்ற இயல்புகள் பொதுவாக குழந்தையின் மூன்று வயதை நெருங்கிய பருவத்திலேயே தோன்றத் தொடங்குகின்றன. அதேநேரம் குழந்தைகள் சில எழுத்துக்களை இனங்காணவும் பெயர்களைக் கூறுவதற்கும், எழுத்துக்கள், ஒலிகள், சொற்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காண்பதற்கும் கற்றுக் கொள்கின்றனர். இந்த வயதுக் குழந்தைகள் பலரால் கலாசாரங்களுக்கிடையில் இடம்மாறிக் காணவும், இரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளுக்கிடையிலான வேறுபாடுகளை நயக்கவும் முடிகின்றது.

ஒரு சொல்லை ஆக்குவதற்கான எழுத்துக்களை ஒன்று சேர்க்கும் ஆரம்பத்தின்போது குழந்தையின் பெயரின் முதல் எழுத்து இடம்பெறுகிறது. குழந்தை பல தருணங்களில் தனது பெயரைக் கூறுவதற்கு, தனது பெயரின் முதலெழுத்தையே கூறத் தொடங்குகிறது. எடுத்துக்காட்டாக 'கமலா' என்ற பெயர் கொண்ட குழந்தை 'க' என்னும் எழுத்தைக் கையாள்கிறது. சிலகாலம் கழிந்தபின்னே தனது பெயரைச் சொல்வதற்கு 'க' என்பது மட்டும் போதாது என்பதை உணர்ந்து கொள்கிறது. இரண்டு மாதங்களின் பின்னரே தனது பெயரைச் சொல்வதற்கு மூன்று எழுத்துக்களைக் கையாளத் தொடங்குகிறது. நான்கு வயது முடிந்த கையோடேயே குழந்தைகள் கதைகளைக் கூறுவதற்காக எழுத்துக்களைத் தொடுப்பாக வரைவர். அவர்கள் சொல்ல விரும்பும் விடயத்துடன் இந்த எழுத்துக்கள் எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கமாட்டா. ஆயினும் குழந்தையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரை 'எழுதுதலே'யாகும். குழந்தைகள் வழமையான எழுத்துக்களை நோக்கி படிப்படியாகவே முன்னேறுகின்றனர். இதற்காகக் கீழ்க் கூறப்படும் உபாயங்களைக் கையாளுகின்றனர்.

- அச்சொல் ஒலிக்கும் பாங்கில் எழுத்துக் கூட்டல்
- அச்சொல் தோன்றும் பாங்கில் எழுத்துக் கூட்டல்
- அச்சொல் கொண்டுள்ள கருத்தின் பாங்கில் எழுத்துக் கூட்டல்

இந்த உபாயங்களை இனங்கண்டவர்கள் ஹார்ஸ்ரேயும் சகாக்களும் (1984) ஆவர். இந்த உபாயங்கள் படிப்படியாகவே உருப்பெறுகின்றன. மூன்று வயதின் முடிவிலும், நான்குவயதின் ஆரம்பத்திலும் சில குழந்தைகள் பூனை போன்ற சில சொற்களை வழமையாக எழுத்துக்கூட்டுவது போல கூறக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும் பள்ளிக்குச் செல்லும் நியம வயதுப்பருவத்துக்கு முன்பாகவே சரியாக எழுத்துக் கூட்டவும் எழுதவும் தெரிந்துகொண்ட குழந்தைகளும் காணப்படுகின்றன. ஆனாலும் சொற்களைப் பார்த்தெழுதும் பணியில் கணிசமான நேரத்தைப் போக்கும் சில குழந்தைகளும் இருக்கின்றனர். இப்பணியானது எழுதும் குழந்தையின் எழுத்துமுறைமை பற்றிய விளக்கத்தையும் அறிவையும் வளர்த்துக் கொள்ளத் துணையாகிறது.

**எழுத்துக் கிளர்தல் மட்டங்கள்**

குழந்தைகள் எழுதும் திறன் விருத்திக்குத் துணையாகக் கூடிய பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்துகின்றனர். இதன்போது எழுத்துத் தொடுப்புக்கள், கிறுக்கல்கள் வழக்கமான எழுத்துக் கூட்டல் என்பவற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கையாள்வதில் இன்பமடைகின்றனர். இப்பணியின் போது குழந்தைகள் ஐந்து மட்டங்களினூடாகச் செல்கின்றனர் எனவும், இது நிகழும்வரை அவர்களை எழுதத் தெரிந்தவர்களாகக் கருத முடியாது எனவும் பெறெய்யோ (Ferreiro) வாதிடுகிறார்.

எழுதத் தெரிந்தவர்களாக அவர்கள் முன்வருகையில் குழந்தைகள் கையாள்கின்ற முதன்மைக் கோட்பாடுகள் ஆறினை கிளே (Clay - 1975) இனம் கண்டுள்ளார். அவை கீழே தரப்படுகின்றன.

1. **மீளும் கோட்பாடு** - ஒரு விடயத்தைத் தெரிவிப்பதற்கு அதே அடிப்படை அமைப்பைக் குழந்தை கையாளுதல். எடுத்துக்காட்டு : அதைத் தெரிவிப்பதற்காக ஒரு எழுத்தைச் சங்கிலித் தொடராகப் பயன்படுத்துதல்.

2. **திசைக்கோட்பாடு** - இக்கோட்பாட்டைக் குழந்தை விளங்கிக் கொள்ளும்வரை, எழுத்துக்களையும், குறியீடுகளையும் பக்கத்தில் எங்கெல்லாமோ வரையும். கிளே என்பவர் இதற்கு பின்வருவனவற்றில் தேர்ச்சி பெற வேண்டுமென நம்புகிறார்.

- இடது மேற்பக்கத்தில் ஆரம்பித்தல்
- வலப்புறத்திலிருந்து இடப்புறத்துக்கு சொல்லினூடாக நகர்தல்
- கீழே இடப்பக்கத்துக்கு மீண்டு, அடுத்த தொடக்கப் புள்ளியைக் குறித்தல்.

**3. நெகிழ்ச்சிக் கோட்பாடு**

பெற்றோர் பலரின் எதிர்பார்க்கைக்கு மாறாக கோடுகளையும் எழுத்துக்களையும் எதிர்ப்பக்கம் திருப்புதல். எடுத்துக்காட்டு Pயும் Bயும் Mஉம் Wஉம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. பிறப்பிக்கும் கோட்பாடு

குழந்தை அறிந்துவைத்திருக்கும் குறியீட்டுத் தொகுதியைப் பயன்படுத்தி நீண்ட எழுத்துக்களை உருவாக்குதல்.

### 5. பதிவேட்டுக் கோட்பாடு

குழந்தை தனது சொந்தக் கற்றலைக் கணக்கிட்டு தனக்குத் தெரிந்த எல்லாச் சொற்களினதும் பட்டியலை எழுதுதல்.

### 6. வேறுபடுத்தும் கோட்பாடு

வடிவங்கள், எழுத்துக்கள், சொற்களின் கருத்துக்கள் ஆகியவற்றை வேறுபடுத்தி ஒப்பிடுகையில் இக்கோட்பாட்டைக் கையாள்வதாகக் கிளே குறிப்பிடுகிறார்.

எழுதுவதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது என்பதைக் குழந்தைகள் உணர்தல் அவசியமானது. இதனை அவர்களது விளையாட்டில் காணலாம். ஹார்ஸ்ரேயும் சகாக்களும் (1984) ''வழமையாக எழுதுவதற்குப் பேனாக்கள், வரைவதற்குக் 'கிறயோன்கள்' என்பது மூன்று வயதுக் குழந்தைகளுக்குத் தெரியும்'' எனத் தெரிவிக்கின்றனர். வழமையான பாவனை விளையாட்டு வேளையில் எழுதுதலில் பயிற்சி பெறக் கூடிய பல தருணங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. குழந்தைகள் விளையாடும் இடங்கள் எழுத்துப் பதிவுக்கான சாதனங்களாக முறையாக அமைக்கப்பட்டால், எழுத்துப் பதிவின் செயற்பாடு சார்ந்த அவர்களது நாட்டத்தையும் விளக்கத்தையும் வெளிக்கொணரும் வகையில் தமது ஆராய்வுச் செயல்களில் ஈடுபடுவர். எழுதுகருவிகள், நாட்குறிப்பேடு, தொலைபேசி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவேடுகள், நூல்கள், நூற்பட்டியல்கள், அச்சுப் பொருட்கள் என்பன நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட வீட்டு மூலைகள் குழந்தைகளின் எழுத்துத்திறன் வளர்ச்சிக்கு மிக் அவசியமானவையாகும். எழுதக் கற்கும் வேளையில் பேச்சுணர்வுகள், அச்சத்திலிருந்து விலகுதல் வேண்டும் என்பதையும், சொற்களுக்குப் பதிலாக, சொற்களின் விம்பங்களை கருத்திலெடுக்க வேண்டும் என்பதையும் இவ்வாறான விளையாட்டு அமர்வுகளில் குழந்தைகள் விளங்கிக் கொள்கின்றனர் என்பது வயொட்ஸ்கி (Vyotsky - 1978)யின் கருத்தாகும்.

விளையாட்டுச் சார்பான வெளிக்கிளரும் எழுத்து என்னும் உபாயத்தின் மூலம் மொழிப் பயன்பாட்டில், படைப்பாற்றல் உடையோரையும் தீரச் செயற்பாடுடையோரையும் உருவாக்கலாம். பாலர் நிலையங்களை விட்டு வெளியேறுகையில் பெரும்பாலான குழந்தைகள் முதியோருடனும் வேறு குழந்தைகளுடனும் செயலாற்றல் மிக்க தொடர்பாடல்களுக்காக மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். தெளிவான பேச்சாற்றல் மிக்க குழந்தைகள் முழுமையான வாக்கியங்களைப் பேசவும், நிபந்தனைக் கூற்றுக்களைப் பயன்படுத்தவும், உரிச்சொற்கள், வினையுரிச் சொற்கள், உருபிடைச் சொற்கள் ஆகியவற்றைத் தமது பேச்சில் கையாளவும் தெரிந்திருப்பர். இவர்களில் பல குழந்தைகள் வாசிப்புத் திறனுடையோராயும், எழுத்தாற்றல் கொண்டோராகவும் உருவாகின்ற நிலைமையிலிருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 8

# உடல் தேர்ச்சி

## முழுமையான நுண்ணியமான இயக்கத்திறன்கள்

முழுமையான இயக்கத் திறன்களிலும் நுண்ணிய இயக்கத் திறன்களிலும் முன்பள்ளி நிறுவனங்கள் நீண்ட காலமாகக் கவனம் செலுத்தி வந்தன. ஆனால் எண், எழுத்து, வாசிப்புத்திறன் என்பவற்றில் மாணவர் தேர்ச்சி பெற வேண்டுமென்ற பெற்றோரின் அழுத்தம் காரணமாக இன்று குழந்தைகள் மேசையிலமர்ந்து படிப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இன்றோ இளங்குழந்தைக்கான கணணி விளையாட்டுக்கள் நகரப் பகுதிகளில் மலிந்து வருகின்றன, அத்தோடு வீடுகளில் குழந்தைகள் உட்பட, தாய்மார்கள் பலரைத் தொலைக்காட்சிகள் கவர்ந்திழுக்கின்றன. இந்நிலையில் குழந்தைகளின் உடலியக்க வளர்ச்சிக்குப் போதுமான இடவசதியோ, சந்தர்ப்பமோ கிடைக்குமா? என்ற சந்தேகம் எழுகிறது. ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் உடல்தொழிற்பாடுகள் பற்றி ஆராய்ந்த இன்ப உள்ளச் செயற்றிட்டம் (Happy Heart Project) என்னும் அமைப்பானது, முழுக்குழந்தைகளுமே மிகக் குறைந்தளவு உடலியக்கச் செயற்பாட்டிலேயே ஈடுபடுகின்றனர் எனும் கவலைக்கிடமான பெறுபேற்றைத் தந்துள்ளது. (Sleep & Warburton - 1994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் முதிர்ச்சி காரணமாகத் தாமாகவே இயக்கத் திறன்களை வளர்க்கின்றனர் எனப் பல பெற்றோரும் கல்வியாளர்களுங்கூடக் கருதுகின்றனர். கலகியூ (Gallahue 1982) என்பவர் கருதுவது போல இது ஒரு கவலைக்கிடமான கருத்தாகும். குழந்தைகள் தமது இயக்கத் திறன்களை முதிர்ச்சிக்கியைய விருத்தி செய்ய வேண்டுமானால், ஒழுங்கானதும் படிமுறையானதுமான தரமான பயிற்சியும் மேற்பார்வையும் அவசியமாகும். உடல்நலம், உடலியற்கல்வி, பொழுதுபோக்கு, நடனம் சார்பான அமெரிக்கக் கூட்டமைப்பினால் (AAHPERD) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அணுகுமுறையானது, குழந்தைகள் துடிப்புடனிருப்பது அவசியமெனவும், ஓரிரு குழந்தைகள் மட்டும் ஒரே நேரத்தில் இயங்கக்கூடிய வட்ட விளையாட்டில், குழந்தை தனக்குரிய நேரம் வரும்வரை நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருப்பது பொருத்தமானதல்ல எனவும் குறிப்பிடுகின்றது. மிகக் குறைந்த இடவசதி கொண்ட இடங்களில் பணியாற்றும் கல்வியாளர்களால் சிறந்த உடலியக்க விருத்திக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது போகலாம். கவனமாகத் திட்டமிடப்பட்ட சிறந்த சூழலினுள் குழந்தைகள் தமது உடலின் இயலுமையை ஆராய்ந்தறிவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் அவசியம்.

உடலின் பல்வேறு பகுதிகளைப் பயன்படுத்துதலில் கவனம் செலுத்துதல், அசைவின் கதியையும் திசையையும் மாற்றுதல் போன்ற சவால்களைக் கொடுத்தல் மூலம் குழந்தைகள் தமது உடலைக் கட்டுப்படுத்தும் திறனை ஊக்குவிக்கலாம்.

இருவகைகளாக இயக்க அசைவுகளை வகுக்கலாம்.

1. முழுமையான இயக்க அசைவுகள் - இவை உடலின் தசைநார் அசைவுகளோடு, நடத்தல், ஓடுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிறடித்தல், சமநிலைபேணல் போன்ற திறன்களைக் கொண்டன.

2. நுண்ணிய இயக்க அசைவுகள் - இவை உடலின் தனித்தனிப் பகுதிகளின் திட்பமான அசைவுகளைச் செய்வதால், கைகளின், விரல்களின் வரையறுக்கப்பட்ட செயற்பாட்டைக் கொண்டவை. இவற்றில் வெட்டுதல், ஒட்டுதல், எழுதுதல் போன்ற திறன்களும் இடம்பெறும். கண்களின் பயன்பாட்டுக்கும் கைகள், விரல்கள், பாதங்களின் பயன்பாட்டுக்கும் இடையே மிக நெருக்கமான தொழிற்பாட்டுத் தொடர்பொன்றை இது உள்ளடக்கியமைதான் நுண்ணிய இயக்கக் கட்டுப்படுத்தலின் பிரதான இயல்பாகும்.

பாலர் பள்ளியில் சேரும் காலத்திலேயே இயக்கத்திறன் விருத்திக்கு மூலாதாரமான, நிற்றல், நடத்தல், பிடித்தல் ஆகிய அசையும் திறன்களில் குழந்தைகள் நல்ல தேர்ச்சியுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இத்திறன் பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம் என்பவற்றினூடாக வரையறை செய்யப்படுவதுடன் விரிவாக்கமும் செய்யப்படுகின்றது.

**பாலர்பள்ளிக் காலத்தில் உருவாக்கப்பட வேண்டிய அடிப்படை இயக்கத் திறன்கள்**

**இடம் பெயர்தல் திறன்கள்**

**1. நடத்தல்** (Walking)

மூன்று வயதுக்கும் நான்கு வயதுக்குமிடையில் முதிர் நடைக் கோலத்தைக் குழந்தைகள் பெறுகின்றனர். இவ்வயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் வெவ்வேறு திசைகளில் நடக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக பின்பக்கமாகவும் பக்கப்பாட்டிலும் நடை வேகத்தை மாற்றி நடக்க முடியும். விளையாடுகையில், விரல் நுனியால் நடத்தல், கோட்டின் வழியே நடத்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட முடியும்.

## 2. ஏறுதல் (Climbing)

தனியாக எழுந்து நிற்பதற்கு முன்னர் குழந்தைகள் மாடிப்படிகளால் மேலே போக முயல்வர். மற்றவரின் உதவியின்றி நடக்கும் நிலையையடையும்போது, நிமிர்ந்த படியே படிகளில் ஏறுவர், இப்போது பெரியோரின் உதவியோ கைபிடிச் சட்டமோ அவர்களுக்குக் கிடைக்கிறது. ஏறும் இந்த முதல் முயல்வின்போது ஒவ்வொரு படியிலும் ஒரே காலையே முன்வைப்பர். இந்த நிலை பல மாதங்களுக்கு நீடிக்கும். இதன்பின்னர் ஒன்று மாறி ஒருகால் எனும் கோலம் ஆரம்பிக்கும். குழந்தை கீழே இறங்கும் கோலம் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படும். குழந்தைகள் படிக்கட்டுவழியே கீழிறங்கும் முயற்சியின்போது வழமையாக பின்பக்கமாகத் தவழ்ந்து இறங்குவர். நான்கு அல்லது ஐந்து வயதாகும் வரை கீழே இறங்குதலில் முதிர்கோலம் காணப்பட மாட்டாது. பாலர் நிலையங்களிலுள்ள ஏறுதல் கருவி இத்திறன் வளர்ச்சிக்கு சிறப்பான பயிற்சிக்கு உதவும்.

## 3. ஓடுதல் (Running)

நடக்க ஆரம்பித்த சில காலத்துள்ளேயே குழந்தைகள் ஓட ஆரம்பித்து விடுகின்றனர். பெரும்பாலானோர் ஐந்து வயதளவிலேயே ஓடக்கூடியவராகவிருப்பர். ஓடுதல் என்பது குழந்தைகள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான திறனாகும். குழந்தைகளிடம் சிறந்த ஓடுதல் கோலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் அவர்களது சகாக்கள் இன்புறும் பல உடலியல் தொழிற்பாடுகளில் பங்குபற்ற முடியாமற் போய்விடும்.

**4. பாய்தல்** (Jumping)

குழந்தைகளிடம் மிகச் சிறுவயதிலேயே உருவாகி விடுகின்ற இயக்கத்திறன்கள் நிலைக்குத்தாய்ப் பாய்தலும், நின்ற நிலையில் நீளம் பாய்தலுமாகும். ஆறுவயதுக்கு முன்பாகவே, முதிர்ச்சி பெற்ற நின்ற நிலையிலான கிடைப்பாய்ச்சலில் திறமை பெற மாட்டார்களாயினும் பெரும்பாலான குழந்தைகள் ஐந்து வயதளவிலேயே நிலைக்குத்தான பாய்ச்சலில் தேர்ச்சி பெற்றுவிடுகின்றனர். ஹால்வேர்சனும் சகாக்களும் (1958) மேற்கொண்ட ஆய்வு, முதிர்ந்த பாய்ச்சற் கோலத்தின் விருத்திக்கு பயிற்சி அவசியமென்பதைக் காட்டுகிறது. மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் கோடுகள் மீதோ, உயரம் குறைந்த தடைகள் மீதோ பாய்தலில் மாத்திரமின்றி வெவ்வேறு உயரமான துண்டங்கள் மீதும் நின்று கீழே பாய்தலில் இன்புறுகின்றனர்.

**5. கெந்துதல்** (Hopping)

கெந்துதல் என்பது இளங்குழந்தைகளுக்கு ஒரு கடினமான செயற்பாடாகும். ஏனெனின் நிலத்திலிருந்து மேலே பாய்ந்தபின் ஒரு காலில் சமநிலையை மீளப் பெற வேண்டியிருப்பதாலாகும். பெரும்பாலான குழந்தைகள் மூன்றரை வயதளவில் ஒன்றுமுதல் மூன்று தடவைகள் கெந்தக் கூடியவராகவிருப்பர். இந்த வகையில் பாலர் வகுப்புக் குழந்தைகள் ஏதாவது ஒரு காலால் கெந்துவதற்கும், கால்மாறிக் கெந்துவதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் காரணம், குழந்தைப் பள்ளிக் காலத்தின் பின்னொரு பருவத்தில், இதுதான் குதித்தோடல் திறனுக்கான பயிற்சியசைவாயிருப்பதாலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. பாய்ந்தோடல்** (Galloping)

பாய்ந்தோடல் என்பது நடத்தல், தாவுதல் ஆகிய இரண்டு திறன்களினதும் சேர்மானமேயாகும். இதனைக் குழந்தைகள் ஐந்துவயதின் நிறைவளவில் நியாயமான வகையில் கற்றுவிடுகின்றனர். இத்தருணத்தில் அனேகமான குழந்தைகள் பாய்ந்தோடலில் தேர்ச்சி பெற்று விடுகின்றனர். அத்தோடு, பின்னோக்கியும் பக்கவாட்டிலும் பாய்தல் போன்ற சில கோலங்களையும் தமது செயற்பாட்டில் புகுத்தத் தொடங்கி விடுகின்றனர்.

7. **குதித்தோடல்** (Skipping)

குதித்தோடல் என்பது குழந்தைகளிடம் இறுதியாக ஆரம்பிக்கும் இடம்பெயரும் திறன்களுள் ஒன்றாகும். அதனால் பாலர்களுள் ஒருசிலராலேயே குதித்தோடல் சாத்தியமாகின்றது. மூன்று வயதளவிலேயே நடத்தலும் ஓடுதலும் கலந்த ஓர் அசைவையொத்த, கால்களைத் தேய்த்து நடக்கும் முறையைக் குழந்தைகள் மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். குழந்தைகள் குதித்தோடலில் தேர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அதிகமான நான்கு வயதினர் தமக்கே உரித்தான குலுக்கலும் சந்தமற்றதுமான அசைவுகளில் ஈடுபடுகின்றனர். ஆயினும் மிதித்தல் – கெந்துதல் – மிதித்தல் – அரைக் குதித்தோடல் என்பவற்றை அவர்களிடம் காணமுடியும். முதிர்ச்சியான குதித்தோடல் கோலம் உருவாவதற்கு குறைந்தபட்சம் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் செல்லலாம்.

**சமநிலைத் திறன்கள்**

இடம் பெயரும் திறன்களை மேற்கொள்ளும் ஆற்றல் சமநிலை ஆக்கத்திலும் அதைப் பேணுதலிலும் தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிலையில் இயங்குதல் வயது அதிகரிப்பதுடன் மேம்பாடடைகிறது என்பதில் உடன்பாடு காணப்பட்டாலும், சமநிலை விருத்தி தனியே முதிர்ச்சியின் விளைவில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது பயிற்சிக்கூடாக மேம்பாடடையலாம். சமநிலையில் இரு பிரதான இயல்புகள் காணப்படுகின்றன. நிலைப்பண்பு, இயக்கப்பண்பு என்பன அவையாகும். அசையாது எழுந்து நிற்கும்போது சமநிலை பேணுதலை வேண்டி நிற்பது நிலைச் சமநிலையாகும். உடல் அசைந்து கொண்டிருக்கும் வேளையில் சமநிலை பேணுதலை வேண்டி நிற்பது இயக்கச் சமநிலையாகும்.

நிலைச் சமநிலை, 1. விரல் நுனிகளில் நிற்றல்; 2. ஒரு காலில் சமநிலையில் நிற்றல், அடுத்து மறுகாலில் நிற்றல் என குறுகிய நேரத்தில் சமநிலை பேணல் என்பனவாக அமையும்.

குழந்தைகளின் சமநிலை பேணலில் பார்வை முக்கிய பங்கு வகிக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு ஒற்றைக்காலில் சமநிலையில் நிற்றல் ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இயலாததொன்றாகும் என கிறற்றி, மாட்டின் (Cratty & Martin -1969) என்போர் கண்டறிந்துள்ளார்.

இயக்கச் சமநிலை மூன்று நிலைகளைக் கொண்டது:

1. வளைச் சட்ட நடை (Beam Walk) முன் பாதம் வழிகாட்ட, அடுத்த கால் பின் தொடர மூன்று நான்கு வயதுக் குழந்தைகளால் இரண்டு அங்குல அகல வளைவட்டம் மீது நடந்து செல்ல முடியும். ஆனால் ஆறு வயது முடியுமுன் பெரும்பாலான குழந்தைகளால் ஒன்று விட்டு ஒரு காலைப் பதித்து நடப்பதற்கோ நடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைச்சட்டம் தவிர அதற்கப்பால் பார்வையைக் குவிக்கவோ முடிவதில்லை.

2. பொருளொன்றுடன் சமநிலை பேணல் (Balance using an object) இவ்வயதுக் குழந்தைகள், சிறிய பொதிகளை முதுகு, கை, தலை போன்றனவற்றில் வைத்துக் கொண்டு நடப்பதில் மகிழ்வர். பயிற்சியால் இத்தகு திறன்களில் அவர்கள் உயர் நிலை பெற முடியும்.

3. உடல் புரளுதல் (Body rolling) இது முன்னோக்கியோ, பக்கப்பாட்டிலோ, பின்னோக்கியோ உடல் புரளுதலைக் கொண்ட இடம்பெயர்தலாக அமைகிறது. ஆயினும் இச்செயலை மேற்கொள்ள சமநிலைக் கட்டுப்பாடு பெருமளவில் தேவையென்பதால் இதுவும் சமநிலையுள் இடம் பெறுகிறது.

சமநிலையிலும் ஏனைய இடம்பெயர் அசைவுகள் போல ஒரு விருத்தியொழுங்கு நிலையுள்ளது. குழந்தைப் பள்ளிகளில் கணிசமான காலத்தின் பின்னரே இது முதிர்ச்சி மட்டத்தையடைகிறது. தள்ளுதல், இழுத்தல், தூங்குதல் போன்ற செயற்பாடுகளும் குழந்தைகளின் சமநிலைத் திறன்களின் ஒத்துழைப்பை அவாவி நிற்கின்றன.

**கையாளும் திறன்கள்**

கையாளும் திறன்களில் இருவகைகள் உள்ளன :

1. பொருத்தமான பயிற்சிகளுடன் பாலர் பள்ளிக் குழந்தைகளால் சிறப்பாற்றல் பெறக்கூடிய முழு இயக்க அசைவுகளை உள்ளடக்கிய கையாளும் திறன்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கைகளிலும் விரல்களிலும் உள்ள சிறிய தசை நார்களை உள்ளடக்கிய நுண்ணியக்கக் கையாளும் திறன்கள்.

**எறிதல்**

மிகச் சின்ன வயதிலிருந்தே குழந்தைகள் எறியத் தொடங்கிவிடுகின்றனர். ஆனால் அவ்வெறிகை குறித்த திசை நோக்கியதாக இராது, மேல்நோக்கியதாகவேயிருக்கும். இதைக் கை மேலாக எறிதல் எனலாம். தமது தள்ளுவண்டியிலிருந்தே 6-8 மாதக் குழந்தைகள் கூட எறிவதைக் காணலாம். ஆயினும் மேலும் பல வருடங்களின் பின்னரே திசைக் கட்டுப்பாட்டுடன் கூடிய எறிதலில் முதிர்ச்சியையடைவர். நடத்தல், ஓடுதல் போன்ற அடிப்படை இடம்பெயர் திறன்களில் ஓரளவு தேர்ச்சியடையும் வரை நின்ற நிலையில் ஒரு பொருளை எறிவதற்கான சமநிலையையும் உடற்கட்டுப்பாட்டையும் அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை.

**பிடித்தல்**

வீசப்பட்ட பொருளை நிறுத்துவதற்குக் கைகளைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய ஓர் அடிப்படை இயக்கத்திறனே பிடித்தலாகும். இதுவும் ஓடுதல் போன்று குழந்தைகள் தேர்ச்சி பெறவேண்டிய முக்கிய திறனாகும். பல விளையாட்டுச் செயல்களினதும் அடிப்படையாகப் பிடித்தல் அமைந்துள்ளது. மூன்று வயதளவில் மேலே எறியப்பட்ட பந்தைப் பிடிப்பதற்கான முதல் முயற்சி நிகழ்கிறது. இந்தத் தருணத்தில் குழந்தைகள், பந்து கைகளையும் புயங்களையும் தொடும்போது அதை உடலின் பக்கம் இழுத்தெடுக்கும் நோக்கில் விறைப்பாக நின்றபடி கைகளை நீட்டுகின்றனர். ஒத்திசைவு, சரியான நேரத்தில் கைகளை நீட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றில் திறமை குறைவாயிருப்பது காரணமாக பெரும்பாலும் பந்து பிடிபடாமல் போய்விடுகிறது. இப்பருவக் குழந்தைகளின் வெற்றியானது எறிபவரின் திறனிலேயே அதிகம் தங்கியுள்ளது.

ஐந்து வயதின் நிறைவையடுத்து குழந்தைகள் முதிர்ச்சி, பயிற்சி என்பவற்றின் அதிகரிப்பால் நுட்பமான தேர்ச்சி நிலையை ஓரளவு பெற்றுவிடுகின்றனர். பந்தின் பருமனானது, பிடித்தல் தேர்ச்சியில் தாக்கத்தையேற்படுத்துகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் சிறிய பந்தைவிட பெரிய பந்தைப் பிடிப்பதிலேயே அதிகளவு வெற்றி பெறுகின்றனர் என்பது வெல்மன் (Wellman 1937) என்பவரின் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் முதிர்ச்சியான பிடித்தற் செயற்பாட்டுக்குச் சிறிய பந்தே சிறந்தது என்பதையும் இவ்வாய்வு குறிப்பிடுகிறது. குழந்தைகளின் பிடிக்கும் திறனில் தாக்கத்தையேற்படுத்தும் அடுத்த காரணி, பந்து எறியப்படும் கதியாகும். விரைவாக எறியப்படும் பந்தைப் பிடிப்பதற்கான உடல் அசைவுகளை ஏற்படுத்துதற்கான புலக்காட்சித் தீர்வினை குழந்தைகள் மேற்கொள்ள முடியாதிருக்கின்றனர். இதேபோல பந்தைக் குழந்தைக்கு நேராக எறியாமல் நிலத்திற்பட்டுத் தெறிக்கக் கூடியதாக எறிந்தால் பிடிக்கும் திறனில் குழந்தை அதிக தேர்ச்சி பெறமுடியும். எறிதல், பிடித்தல் என்பனவற்றில் பெரியவர்களின் வழிகாட்டலும் அக்கறையுமிருந்தால் குழந்தைகள் வெற்றியடைவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

**அடித்தல்**

கருவியொன்றால் ஒரு பொருளை அடித்தல் என்பது குழந்தையைப் பொறுத்துப் பிரச்சினைக்குரியது. இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் உடலசைவை மட்டும் கருத்திற் கொள்ளாது கருவியையசைத்தலின் ஒத்திசைவையும் கருத்திற் கொள்ள வேண்டும். பொருள் குழந்தையை நோக்கி வீசப்பட்டால், அடித்தல் சரியான நேரத்தில் இடம் பெறுவதற்காக, பறந்துவரும் பொருளின் வேகம் உட்படப் பலவிடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஐந்து வயதுக் குழந்தைகள் நிலையாக இருக்கும் பந்தை அடிக்கக் கூடியவராகவிருந்தாலும், அடித்தல் என்பது சிக்கலான ஒரு திறனாகும். அடித்தலில் பூரண தேர்ச்சி பெறப் பல ஆண்டுகள் செல்லலாம். மென்மையான கம்பளியால் ஆக்கப்பட்ட பந்து மேல்முகட்டிலிருந்து தொங்கவிடப்பட்டிருந்தால், அடிக்கும் திறனில் குழந்தைகள் பயிற்சிபெறப் பெரிதும் உதவும்.

**உதைத்தல்**

உதைத்தல் திறனுக்கான அடிப்படை நிலையான உதைத்தலேயாகும். உதைத்தலில் குழந்தைகள் ஓரளவு தேர்ச்சியடையும் வரை பந்தை உதைக்கும் நிலையை அடையமாட்டார்கள். ஏனெனில் பந்தை உதைப்பதற்கு மேலதிக புலக்காட்சி இயல்புகள் தேவைப்படுகின்றன. உருண்டுவரும் பந்தை உதைப்பதற்கு முற்படுகையில் உதைத்தல் செயலோடு வேகமும் திசையும் ஒருங்கு இசைவு பெறல் வேண்டும். பாலர் நிலையக் குழந்தைகள் சிலர் உதைத்தலில் உயர்மட்டத்திறனைப் புலப்படுத்தக் கூடுமாயினும் குழந்தைப் பள்ளிப்பருவம் வரை நிலையாக உள்ள பந்தை உதைத்தலில் உயர்திறனைப் புலப்படுத்தும் நிலையிலிருக்க மாட்டார்கள். அசையும் பந்தை அடிக்கும் திறன் மேலும் பல வருடங்கள் கழியும் வரை அடையப் படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளப்புதல்**

பந்து மேலே கிளம்பும் வகையில் விழவிடப்படும் போது, பந்தைக் கிளம்பச் செய்யும் திறன் ஏற்படுகிறதென எஸ்பென்சொட், எக்கோட் (Espenschod & Eckhort - 1980) ஆகியோர் கருதுகின்றனர். ஆயினும் இக்கிளப்புதல் திறன் பற்றி இன்னும் அதிகம் அறியப்படவில்லை. இச்செயலை மீளச் செய்யும் முயற்சியில் குழந்தை பந்தை மீண்டும் தட்டுகிறது. ஒரு கையால் பந்தைத் தட்டுவதற்கு முன்னேறுதற்கு முன்பாக, பெரிய பந்தொன்றைக் கைகள் இரண்டாலும் தட்டிப் பயிற்சி பெறல் குழந்தைக்கு இலகுவாயிருக்கிறது. பந்து தட்டும் நிலையைப் பேணும் திறனில் தேர்ச்சி பெற்றதும், ஒருவருக்கொருவர் பந்தைக் கிளப்பித் தட்டுதல் மூலமாக பந்தைக் கிளப்பும் திறன் மேலும் விருத்தி செய்யப்படும்.

**நுண்ணியக்கக் கட்டுப்பாட்டுத் திறன்**

நுண்ணியக்கக் கட்டுப்பாட்டுத்திறன் விருத்தியென்பது மூன்று நான்கு வயதுக் குழந்தைகள் அதிக முன்னேற்றம் பெறும் துறைகளுள் ஒன்றாகும். இத்திறனை நுட்பமான இயைபாக்க அசைவுகளை மேற்கொள்ளும் கண்கள், கைகளினதும் செயல்களை ஒன்றிணைக்கும் ஆற்றலென வரையறை செய்யலாம். இத்திறனின் ஆரம்பவிருத்தியில் நான்கு பிரதான படிநிலைகள் இருக்கின்றன. அவைகள் – நிலையான பார்வை ஆராய்வு; துடிப்பான பார்வை ஆராய்வு, நுண்ணியக்கக் கட்டுப்பாட்டை நெறிப்படுத்தலில் பார்வையைப் பயன்படுத்துதல், முதிர்ச்சியடைந்த கண் – கை ஒன்றிணைவு நடத்தை என்பனவாகும். இவை யாவும் அனேகமாக இரண்டு வயது நிறைவளவில் நிலைநாட்டப்பட்டுவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான செயல்கள் இருகைகள், அவயவங்கள் ஒத்திசைவுடன் பயன்படுத்துதலை அவாவி நிற்பதுடன் அதிக பயிற்சியையும் வேண்டி நிற்கின்றன. இது 'இருபக்க இயக்க ஒன்றிணைவு' எனக் கூறப்படுகிறது. இத்தொகுதி பாலர்பள்ளிக் காலங்களில் விரைவாக முதிர்ச்சி பெறுகின்றது என்பதைத் தெரிவிக்கும் ஒரு விருத்திக் கோலத்தைப் பின்பற்றுகின்றது.

குழந்தைகளிடம் (2½ - 5 வயது) விருத்தியாக்கப் படவேண்டிய நுண்ணியக்கத் திறன்கள் சில கீழே தரப்படுகின்றன.

- உடையணிதல், கழற்றுதல், பல்துலக்குதல், தாமே உணவுண்ணல்.
- சிறிய துண்டங்களால் கோபுரம், பாதை, படிக்கட்டுகள் போன்றவற்றை உருவாக்கல்.
- கண் - காது ஒன்றிணைவையும் இடவெளித் திறனையும் ஊக்குவிப்பதற்கான கோணல் துண்டங்களைப் பொருத்தும் செயற்பாடுகள்.
- சமையல், மரவேலை என்பனவற்றில் கருவிகளைப் பயன்படுத்துதல், உணவு சமைத்தல், பரிமாறுதல், மேசை ஒழுங்குபடுத்தல்.
- பென்சில், பேனாக்கள், தூரிகைகள், கத்தரிக்கோல்கள், ஊசிகள் என்பவற்றைப் பயன்படுத்துதல்.
- சிறிய பிராணிகளைப் பொருத்தமாகக் கையாளல்.
- நிலைக்குத்தான, கிடையான கோடுகள் வரைதல், வட்டங்கள், சதுரங்கள் முக்கோணிகள் போன்ற வடிவங்களைப் பிரதிபண்ணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊசியில் நூல்கோத்தல், தைத்தல்.
- கணணிகள், கணிப்பான்களைப் பயன்படுத்துதல்.

**பார்வைப்புலன்**

மரியான் புறோஸ்டிங் (Mariane Frosting - 1966) என்பவர், இளங்குழந்தைகள் பார்வைப் புலக்காட்சி பற்றிய ஆய்வுகளில் முன்னின்றவராவார். இவர் ஆரம்பப் பார்வைப் புலக்காட்சி விருத்தியின் ஐந்து பரப்புக்களை இனங்கண்டுள்ளார். அவை.

1. கண் - இயக்க ஒத்திணைபு : கைகளினதும் கண்ணினதும் ஒத்திணைபைத் திறனாக மேற்கொள்ளும் ஆற்றல்.
2. உருவம் - பின்னணி புலக்காட்சி : மிகத் தெளிவாக வரையறுக்கப்படாத பின்னணியிலிருந்தும் ஏனையவற்றிலிருந்தும் விழிப்பான ஓர் உருவத்தைத் தெரிந்தெடுக்கும் ஆற்றல்.
3. அமைப்பு மாறின்மை : குறித்த ஒரு வடிவம் அது பார்வையிடப்படும் தருணம் கருத்திலெடுக்கப்படாது அதே வடிவமாகக் காணும் ஆற்றல்.
4. இடவெளியில் குறிப்பிடம் : இடவெளியில் அமைப்புக்களது நிலைகளின் வேறுபாடுகளைக் கண்டு கொள்ளும் ஆற்றல்.
5. இடவெளித் தொடர்புகள் : இடவெளியில் காணப்படும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய பொருட்களுக்கு இடையிலான தொடர்புகளைக் கண்டு கொள்ளல்.

இந்த ஐந்து செயற்பாடுகளும் உண்மையில் பார்வைப் புலக்காட்சியின் தனித்தனிப் பரப்புக்களா? என்ற வினாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளது. ஆனால் பாலர் பள்ளிக் குழந்தைகள் கண்ணியக்க ஒத்தணைபு, உருவம் - பின்னணிப் புலக்காட்சி, அமைப்பு மாறின்மை என்பவற்றுடன் தொடர்புள்ள பார்வைப் புலக்காட்சித் திறன்களின் துரித விருத்தியைக் குறிக்கின்றன என புறூஸ்டிக்கின் ஆய்வுக் கருத்துக்கள் காட்டுகின்றன. நுண்ணியக்கக் கட்டுப்பாட்டில் மிக உயர்ந்த விருத்தியைக் குழந்தைகள் பாலர் பள்ளிப் பருவத்தில் பெற்றபோதும் பலத்த தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நுண்ணியக்கச் செயல்களில் அதிக நேரத்தைச் செலவிடக் கூடாது. காரணம், இச்செயல்கள் குழந்தைகளின் கவனக்குறைப்பையும் கட்டுப்படுத்தலையும் அதிகளவில் நாடி நிற்கின்றன. அந்த நிலை, குறிப்பாக மூன்று வயதுக் குழந்தைகளை மனமுறிவுக்குக் கொண்டு செல்லலாம்.

**புலக்காட்சி இயக்கத்திறன்**

குழந்தைகளின் அறிதல் செயற்பாட்டில் புலக்காட்சி விருத்தி முக்கியமானது என்பது பொதுவாக ஏற்கப்பட்டதொன்றாகும். இந்த ஆற்றல்களின் மிக அதிகமான வளர்ச்சி முன்பள்ளிக் காலத்திலும் ஆரம்பப்பள்ளிக் காலத்திலும் ஏற்படுகின்றது. அசைவு இளங்குழந்தைகளிடம் புலக்காட்சி விருத்தியை எளிதாக்குகிறது. அதனால் இதைப் புலக்காட்சி - இயக்கத் திறன்கள் என்கிறோம். எமக்குப் புறத்தே என்ன நடைபெறுகின்றது என்பதை நாம் உடனடியாக உணர வைக்கும் எச் செயலும் புலக்காட்சியைக் குறிப்பதாகும் என பவர் (Bower - 1977) என்பவர் கருதுகிறார்.

உலகைப் பற்றிய தகவல்களை, (கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிதல் ஆகிய) புலன்கள் மூலம் பெறுகிறோம். இடவெளி பற்றிய புலக்காட்சி குழந்தைகளிடம் 3-4 வயதுக்கிடையே ஆரம்பிப்பதாக தெரிகிறது. இது 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது 9 வயதுவரை படிப்படியாக முன்னேறுகிறது. பாலர் பள்ளிக் குழந்தைகள் அடி, முடி, மேல், கீழ், உயர்வு, தாழ்வு இடைவெளி எதிர் நிலைகளை உணரத் தொடங்குவதுடன், நிலைக்குத்துக்களுக்கும் கிடைநிலைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை உடனுக்குடன் அறிந்துகொள்கின்றனர். அடுத்த படிநிலையில் கிடைக்கோடுகளுக்கும் சாய்கோடுகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் காணும் ஆற்றலைப் பெறுவர். இத்திறனை எல்லாக் குழந்தைகளும் பெறுவதில்லை; ஒரு சிலரே பெறுவர்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சினை, உடல் எவ்வளவு இடத்தைப் பிடிக்கும் என்பது பற்றிய அறிவு பெறலாகும். இடவெளி சார்பான பயனுள்ள நிலைப்பாட்டைப் பெறுமுன்னர், இடவெளி விழிப்புத்திறனை விருத்தியாக்குவதற்கான பல வாய்ப்புக்கள் குழந்தைகளுக்குத் தேவைப்படுகின்றன.

குழந்தைகளின் பிற்காலப் பாடசாலைக் கற்றலில், திசைசார் விழிப்பு என்னும் திறன்மிக முக்கிய ஈடுபாட்டைக் கொண்டது, பாலர் பள்ளிக் குழந்தைகள் இடம், வலம் என்னும் உடற்பரிமாணங்களைப் பெயர்க்குறித்துக் கூற முடியாதவர்களாக விருப்பர். ஆயினும் நான்கு வயதளவில், உடல் இருபக்கங்களைக் கொண்டது என்பதை அறிந்து கொள்வர். மேலும் உடலின் இருபக்கங்களுக்கிடையிலான அசைவுகளை ஒத்திணைக்கவும் கூடியவர்களாயிருப்பர். பக்கப்பாட்டுத் தன்மை பற்றி போதியளவு உணர்ந்தபின்னரே குழந்தைகள் திசைத் தன்மை பற்றி விளக்கமடைவர். திசைத் தன்மை என்பது, இடம், வலம் என்ற பரிமாணத்தின் விரிவாக்கமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைத்தன்மை அல்லது திசைமுகம் பற்றிய ஒரு முழுமையற்ற விளக்கம், பல்வேறு அரிச்சுவடி எழுத்துக்களைப் பிரித்தறிதல் பற்றிய பிரச்சினைகளுக்குக் குழந்தைகளை இட்டுச் செல்லும். இது வாசிப்பு, எழுத்துச் சார்ந்த பிரச்சினைகளை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. எவ்வாறாயினும் நான்கு, ஐந்து வயதுக் குழந்தைகள் திசை பற்றிய மனக் குழப்பத்தை அனுபவித்தல் வழமையானதேயாகும். ஆரம்ப வயதுகளிலே நியமமுறையில் எழுதுதலை அறிமுகம் செய்யாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். தூரம், அசைவு ஆகிய இரண்டும் சார்ந்த புலக்காட்சி தோன்றுதல் வயதுடன் விருத்தியாவதாகத் தெரிகிறது. ஆயினும் குழந்தைகள் தமது நடத்தைப் பொருத்தப்பாடு காணலைப் பொறுத்து, இயங்கு பொருட்களுக்கு விளக்கம் தரமுடியாதிருப்பர்.

இயங்கு பொருட்கள் வேகமாக இயங்குவதை அறிந்து கொள்கிறார்கள் போலத் தோன்றினாலும் அவர்கள் தமது எதிர்விளைவைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பர். குழந்தைகளின் இயக்க விருத்தி பற்றிய இந்த அம்சம் அவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான முதியவர்களுக்குப் பயனுடையதாயிருக்கும். பார்வைப் புலக்காட்சி, இயக்கத் திறன் விருத்தியில் முக்கிய பங்கு வகிப்பதாக மட்டும் தோன்றவில்லை, குழந்தைகளின் அறிதல் விருத்திக்கும் பார்வைப் புலக்காட்சிக்குமிடையே பொருட்பொதிவுள்ள தொடர்பு இருப்பதாகவும் ஆய்வுகள் காட்டுகின்றன. ஆயினும் ஆறுவயதையடைகையில் இத்தொடர்பு குறைவடைகின்றதென பெல்க், விற்றனிஸ் (Belk Wittanis - 1979) ஆகியோரின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டல்புலன்தொகுதி, புலன்தொகுதிகள் யாவற்றுள்ளும் மிகச் சிக்கலானதாகும். கேட்டல் திறன் விருத்தி பற்றி மிகச் சிறியளவே அறியப்பட்டுள்ளது. கேட்டல் இசைவாக்க விருத்தியின் தன்மை பற்றிப் பெரிதும் அறியப்படவில்லை. மூன்று வயதளவில் ஒலிவந்த திசையை இனங்கண்டுகொள்ளக் குழந்தைகளால் முடியும். எளிமையான கேட்டல்சார் வேறுபடுத்தல் செயற்பாடுகளை மூன்று, நான்கு வயதுக் குழந்தைகளால் மேற்கொள்ள முடியும். இத்திறன்கள் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதடையும் வரை விருத்தியாகிக் கொண்டேயிருக்கும்.

**உற்றறிதல் இயங்கல்திறன்**

தொடுதல் அல்லது உற்றறிதல் அனுபவங்கள் குழந்தைகளின் வாழ்வில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. இதுவும் அதிகம் அறியப்படாத ஒரு துறையாகும். ஐந்து வயதளவில் குழந்தைகளிடம் தொனிப்பிரித்தறிகை நன்கு விருத்தியடைந்து காணப்படுமென நாமறிவோம். தொடுகைத் தூண்டியொன்று (பென்சில்முனை) முன்புயத்தில் வைக்கப்பட்டால் எந்த இடத்தில் தொடப்பட்டதெனக் குழந்தையால் சரியாகக் கூறமுடியும். தொடுகைப் பிரித்தறிதிறன் விருத்திக்கும், சிக்கலான இயக்கச் செயல்களையாற்றும் ஆற்றலுக்குமிடையே உயர் இணைபு இருப்பதாக அயர்ஸ் (Ayres - 1978) சுட்டிக் காட்டியுள்ளார்.

கேட்டல், தொடுதல் என்பவற்றிலுள்ளதை விட இன்னும் மிகக் குறைவாகவே சுவை, மணம் என்பவற்றின் புலக்காட்சி விருத்தி பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. எவ்வாறாயினும் குழந்தைகள் மூன்று வயதளவிலேயே சுவை, மணம் என்பவற்றினை நன்கு உணர்ந்து கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பற்றிய பலமான தெரிவுகளையும் விருத்தியாக்கிக் கொள்கின்றனர்.

**புலக்காட்சி இயக்க விருத்தி**

இதுவரை நாம் கவனித்த இயக்கத்திறன்கள் யாவுமே திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதை அவாவி நிற்பவையாகும். புலக்காட்சி இயக்க விருத்தியை ஆசிரியர்கள் இரு பிரதான வழிகளில் மேம்படுத்தலாம்.

1. குறித்த திறன்களின் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை அதிகமாக வழங்குதல்.

2. படைப்பாற்றல் பணிகள் மூலம் சுயவெளிப்பாடு மூலமாகவும் புலக்காட்சி இயக்க விருத்தியை ஊக்குவித்தல்.

புலன் அனுபவங்கள், புலக்காட்சி இயக்கத்திறன் விருத்தியென்பன அதிகம் வலியுறுத்தப்படாதவையாகும். புலக்காட்சி - இயக்கப் பயிற்சி, கல்வியடைவை மேம்படுத்தும் என்பதற்குப் போதுமான ஆதாரம் இல்லை. ஆயினும் இத்துறைகளிலான தேர்ச்சி குழந்தைகளின் சுயமதிப்பு, சுயநம்பிக்கை என்பவற்றை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

குழந்தைகளின் உடல்சார்ந்த விளையாட்டுக்கள் பாதுகாப்பாகவும் சவாலாகவும், உற்சாகமூட்டுவதாகவும் இருக்கவேண்டும். அத்துடன் குழந்தைகள் துணிச்சலாகவும் விவேகமாகவும் இருப்பதற்குச் சந்தர்ப்பமளிப்பதாகவும் இருக்க வேண்டும். உடல் விருத்திக்கென நன்கு திட்டமிடப்பட்ட செயலொழுங்குகள், உள்ளகச் செயல்கள், வெளியகச் செயல்கள், மணல், நீர், பசை, களி ஆகிய பொருட்களுடன் செயற்படுதல் போன்ற புலன் அனுபவங்களை வழங்குதலையும் கொண்டிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பெண் பால் வேறுபாட்டை வலியுறுத்தாத வகையில் பெரியவர்கள் கலந்துரையாடுவதைக் குழந்தைகள் செவிமடுக்கலாம். ஆண் குழந்தைகளைப் போல பெண்குழந்தைகளும் பெரிய பொருட்களுடன் விளையாடுவதற்கு உற்சாகப்படுத்துதல் வேண்டும். தைத்தல், நூல் கோத்தல் போன்ற நுண்ணியக்க விருத்திக்கான வாய்ப்புக்கள் ஆண்குழந்தைகளுக்கும் வழங்குதல் வேண்டும். அசைதலுக்குமான செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். புலக்காட்சி விருத்தி, இயக்க விருத்தி ஆகியவற்றுக்கு உதவும் எல்லாத் திறன்களிலும் பயிற்சி பெறச் சந்தர்ப்பங்கள் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரப்படல் அவசியமாகும்.



UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 SEP 2006
LIBRARY

அத்தியாயம் 9

# கணிப்பீடும் பதிவுகள் பேணலும்

பிள்ளைகளின் கற்றலை மதிப்பீடு செய்தல் நமது கல்விமுறையில் ஒரு முக்கிய அம்சமாகும். இது ஆசிரியர் பணியிலும் ஒரு முக்கிய பகுதியாகும். பிள்ளைகள் உரிய வயதில் பாடசாலையில் சேருமுன்னர் மேற்கொள்ளப்படும் சாதாரண காப்பீடுகள் இன்று வழமையாகிவிட்டன. அத்தோடு கட்டாயக்கல்வி பெறும் வயதெல்லைக்கு முற்பட்ட குழந்தைகளுக்குக் கற்பிப்பவர்களும் அக்குழந்தைகளின் முன்னேற்றம் கருதிக் கணிப்பீட்டைச் செய்தாக வேண்டியுள்ளது. கணிப்பீடென்பது புதிய சிந்தனையல்ல. முன்பிள்ளைக் பருவக் கல்வியில் கணிப்பீடு எப்போதுமே இருந்து வந்துள்ளது. பாலர் பாடசாலைகளும் பகல்நேரக் குழந்தைகளும் பதிவுகளைப் பேணிவந்துள்ளன. பதிவுகளில் பெரும்பகுதி, குழந்தைகளின் ஆரோக்கியம், உடல்வளர்ச்சி பற்றியும், ஏனையவை இன்றுள்ள சிக்கலான விடயங்கள் பற்றியுமிருந்தன.

கீல் (Keele) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்ரிபன் ரெய்லர் (1976) "கீல் முன்பள்ளிக் கணிப்பீட்டு வழிகாட்டி"யை உருவாக்கினார். 1975 - 1978 காலப்பகுதியில் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கான தேசிய அமைப்பின் ஆய்வாளர்கள் ஒன்றிணைந்து "பாலர்கல்விக் கணிப்பீட்டுக் கையேடு" ஒன்றை உருவாக்கினர். இவ்வாறு கணிப்பீடுகளும் பதிவேடுகளும் இன்றுவரை இடம் பெற்று வருகின்றன. முன்பள்ளிக் குழந்தைகளின் கணிப்பீடு, பதிவேடு பற்றி நோக்குமுன் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பல அம்சங்கள்: கணிப்பீடு, மதிப்பீடு பற்றிய எண்ணக்கரு; 2-5 வயதுக்குழந்தைகளுக்கான பதிவேடுகளைப் பேணுதல் பற்றிய அம்சங்களை முதலில் நோக்குதல் வேண்டும்.

'கணிப்பீடு' (assessment) என்ற சொல் பொதுவாக மதிப்பீட்டைக் (evaluation) குறிக்கின்றது. ஆயினும் வரியோடு தொடர்புறும் பணம் என்னும் அம்சத்தையும் 'கணிப்பீடு' குறிக்கின்றது. பெரும்பாலான ஆசிரியர்களுக்கு இக்கருத்தே பிரதானமாகப்படுகிறது. அவர்கள் கணிப்பீட்டைப் பொறுப்புக் கூறுவதுடன் இணைத்து நோக்குகின்றனர். பொறுப்புக் கூறல் என்ற எண்ணக்கரு, குழந்தைகளின் கற்றல் பற்றிச் சரியாக - திருப்தியாக முடிவு செய்யலாம் என்பதையும் குறித்து நிற்கிறது. இச்சிந்தனையின் அடிப்படையிலே 19ஆம் நூற்றாண்டில் பாடசாலைகளுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்டது (Payment by Result). ஆசிரியர்கள் தமது பணிகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், இளம்பிள்ளைகளைக் கணிப்பீடு செய்யும்போது, பல விஷேட பிரச்னைகளும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கணிப்பீடு, குழந்தைகளின் அறிவைச் சரியாக வெளிப்படுத்த உதவவேண்டும்.

கற்பித்தலோடு இணைந்த அம்சமே கணிப்பீடாகும். கணிப்பீடு, ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான பின்னூட்டலுக்கு வழிசெய்கிறது. குழந்தைகளின் கற்றல் செயற்பாட்டில் கருத்துள்ள அம்சமாக கணிப்பீடு இருக்கிறது என கணிப்பீடு / பரீட்சைச் செயற்குழு தனது அறிக்கையில் கூறுகிறது (DDS and SCAA 1988). கற்றல் செயற்பாட்டில் அக்கறை செலுத்தவேண்டிய அம்சங்கள் எவை? அவை எவ்வாறு அளவிடப்பட வேண்டும்? என்னும் இவை 3-5 வயதுக் குழந்தைகளைப் பொறுத்து, அதிக அளவில் சிக்கல் நிறைந்தவை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

**கணிப்பீடு எதற்காக?**

எந்த வயதுக் குழந்தையானாலும் ஆசிரியர்கள் அவர்களை மதிப்பீடு செய்வதற்கான காரணங்கள் பலவுள்ளன. அக்காரணங்கள், பாடசாலை, வெளி நிறுவனங்கள், குழந்தைகள் என்பவை பெறும் நலன்களுடன் தொடர்புடையன. அவற்றைக் கீழே காணலாம்.

1. ஆய்ந்தறிதல் - குழந்தை கற்கிறது என்ற வகையில், அதன் தற்போதைய நிலைமை என்ன? குழந்தையின் பலம் எது, பலவீனம் எது? குழந்தை, தான் ஈடுபட வேண்டிய பணியோடு எவ்வாறு இயைந்து போகிறது? அவ்வாறு பணியுடன் இயைந்து போக முடியாவிடின், குழந்தையின் வெற்றி காணாமைக்கான காரணிகள் யாவை? என்பவற்றை ஆராய்ந்து காணுதல்.

2. குழந்தையின் விருத்தியுடன் கற்றல் வாய்ப்புக்களை இணைத்து நோக்குதல் - விஷேட தேவைகளையுடைய குழந்தைகள், மீத்திறனுடைய குழந்தைகள் ஆகியோரை இனங்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான கற்றற் செயற்பாடுகளை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குறித்த கற்கை நெறி/ கற்றற் செயற்பாட்டிலிருந்து குழந்தைகள் பெற்றுக்கொண்ட நன்மைகளை அறிந்து கொள்ளல் - வகுப்பறையில் ஆசிரியர்கள் அறிமுகப்படுத்திய பல்வேறு புதிய கற்பித்தல் முறைகளையும் உபாயங்களையும் பொறுத்து, அங்கு ஏற்பட்ட மாற்றங்கள் எந்தளவு செயற்றிறன் உடையனவென்பதை அறியவிரும்புவர். அதற்கான செலவுகள் அதிகமாயிருக்கலாம். இந்த நிலையில் மதிப்பீடு அவசியமாகிறது. அவற்றின் வெற்றி தோல்விகளைக் கண்டறிய அது உதவும்.

4. கலைத் திட்டத்தில் சகல பிரிவுகயையும் பொறுத்து ஒரு சமச்சீர் நிலையை ஏற்படுத்தவும் இது உதவும்.

5. ஆசிரியர், தலைமையாசிரியருக்கும் பெற்றோர்களுக்கும், கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கும், முகாமையாளர்களுக்கும் பொறுப்புக் கூறும் வகையில், பிள்ளைகளின் முன்னேற்றம், வகுப்பறை விளைவு என்பனவற்றை மதிப்பீடு செய்யவேண்டிய தேவையிருக்கிறது.

6. ஆசிரியர் தமது பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஏனைய பாடசாலை ஆசிரியர்களுக்கும் தகவல்களை வழங்க மதிப்பீடு தேவை. மேலும் முன்பள்ளிக் குழந்தைகள் வேறு பாடசாலைகளில் சேர்வதற்கும் இந்த மதிப்பீடு தேவைப்படும். இவ்வாறான தகவல்கள் அந்தப் பாடசாலைக்கு வழங்கப்பட்டால் குழந்தைகளுக்கான கற்றல் சாதனங்களைப் பெற முடியும். ஏற்கனவே பயின்ற பாடக்கூறுகளை அக்குழந்தைகள் திரும்பவும் கற்காமலிருக்கவும், மேலும் கற்றல் கற்பித்தலைத் தொடரவும் இந்த மதிப்பீட்டு ஆவணங்கள் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் கல்வியில் ஒரு தொடர்ச்சியை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொள்ளவும் இந்த மதிப்பீட்டுத் தொடர்நிலை ஆவணங்கள் தேவைப்படுகின்றன.

7. ஆசிரியர்களின் தொழில் மேம்பாட்டுக்கு உதவுதல் -

கீல், முன்பள்ளிக் கணிப்பீட்டு வழிகாட்டி (Keele PSAG) ஆவணத்தில் குறிப்பிட்டபடி, மாணவர்களின் மதிப்பீட்டு ஆவணங்களை வைத்துக்கொண்டு, ஆசிரியர்கள் தம்மைச் சுயமாக மதிப்பீடு செய்து கொள்ளலாம். அதனால் அவர்கள் தமது கற்பித்தலில் சீர்ப்பாடுகளை, மாற்றங்களைச் செய்து கற்றல் கற்பித்தலில் ஈடுபடலாம். பாலர் பள்ளியாசிரியர்கள் புதிய முறைகளை, புதிய சாதனங்களைப் பயன்படுத்துவார்களானால் அவற்றின் தாக்கத்தைக் கணிப்பிடவும் இவ்வாவணங்கள் உதவும்.

கணிப்பீடுகள் யாவும் ஒரு காலகட்டத்தில் செய்யப்படல் வேண்டும். குழந்தைகளுக்கான ஏற்பாடுகள், வசதிகள் என்பவற்றை மதிப்பீடு செய்யவும் இக்கணிப்பீடுகள் தேவைப்படும். பின்னர் மேற்கொள்ளவுள்ள ஏனைய கணிப்பீடுகளுக்கான அடிப்படையாகவும் இக்கணிப்பீடுகள் அமையும். நியமப் பாடசாலைகளில் அனுமதி பெறுமுன்னர் செய்யப்படும் கணிப்பீடும், ஆவணத் தயாரிப்பும் பிரச்சினைகளையாராய்ந்தறியவும் கலைத்திட்டத்தைத் திட்டமிடவும், தொடர்ச்சியைப் பேணவும், ஆசிரியரின் தொழில் மேம்பாட்டுக்கும் தேவையானவை.

**எதனைக் கணிப்பீடு செய்வது?**

எதனைக் கணிப்பீடு செய்ய வேண்டும்? ஆவணங்களில் இடம் பெற வேண்டிய தகவல்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வினாக்களுக்கு விடைகாணுமுன் ஆரம்பக்கட்ட ஆசிரியர், ஒரு குழந்தை கட்டாயக் கல்வி வயதையடையுமுன்னர் கற்றிருக்க வேண்டிய திறன்களும் எண்ணக் கருக்களும் எவை என்பதைத் தீர்மானிக்க வேண்டும். கட்டாயக் கல்வி வயது என்பது ஐந்தாம் பிறந்ததினத்தின் பின்வரும் முதலாம் தவணையாகும். ஆரம்பக்கட்டக் கல்விப் பணியாளர்கள், குழந்தைகளின் நடத்தை, செயலாற்றல் சார்ந்த எத்தகைய குறிப்பிட்ட தகவல்களைப் பதிவு செய்ய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்பதிவுகளைப் படிப்பவர்கள் யார் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைகளின் முழுமையான விருத்தி, பலம், பலவீனம், சிறப்புக்கள் என்பவற்றைக் கொண்டதாக பதிவுகள் இருக்க வேண்டும் எனப் பொரும்பாலான ஆரம்பக்கட்டக் கல்விப் பணியாளர்கள் கூறுவர். பதிவுகள், குழந்தைகள் பாலர் பள்ளியில் அனுமதி பெற்று அடுத்த ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும் வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்க வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. எனினும் ஆரம்பப்பள்ளியாசிரியர்கள், மிகக் கவனமாகப் பாலர் பள்ளியாசிரியர்கள் செய்யும் பதிவுகளைக் கூடப் பெரும்பாலும் கருத்திற் கொள்வதில்லை எனப் பாலர் பள்ளியாசிரியர்கள் விசனிக்கின்றனர். ஆரம்ப நிலையாசிரியர்கள் தாமாகக் கணிப்பீட்டைச் செய்தபின்னரே இப்பதிவுகளைப் பார்க்க விரும்புகிறார்கள். இது ஒரு நல்ல அணுகு முறையாகவுமிருக்கலாம். ஆயினும் இவ்வணுகு முறை ஒரே விடயத்தைத் திரும்பச் செய்வதாக விருப்பதோடு குழந்தைகளுக்கு அலுப்பையுண்டாக்குவதாயுமமையும். மேலும் ஆசிரியர்களைப் பொறுத்து நேரவிரயத்தோடு குழந்தைகளுக்குச் சவாலாகக்கூட இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிகளில் தயாரிக்கப்படும் பதிவுகள் ஆரம்பப்பள்ளியாசிரியர்களின் பயன்பாட்டுக்கு மட்டுமன்றி, பெற்றோர், பாடசாலை முகாமையாளர் முகாமைத்துவக்குழு, குழந்தைகளின் நலன்விரும்பிகள் ஆகியோருக்கும் பயன்படலாம். குழந்தைகளின் நடத்தை, செயலாற்றல் என்பன பற்றி எதனைப் பதிவு செய்வது என்பதை நிர்ணயிக்கும்போது, அத்தகைய கணிப்பீடுகள் கலைத்திட்டத்தை முடிவு செய்வதாக அமையக்கூடாது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**அடிநிலைக் கணிப்பீடு**

கலைத் திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கல்வியதிகார சபையினர் ஏதேனும் ஒரு அடிநிலைக் கணிப்பீட்டை அறிமுகம் செய்கின்றனர். இதனால் குழந்தைகளின் கற்றல் தேவைகளைப் புரிந்து கொள்ளலாம். இது குழந்தைகளின் விருத்திக்கான ஆரம்பக்கட்டத்தை வழங்குகிறது. மேலும் முதற் கட்டத்தின் முன்னேற்றத்தையும் அளந்துகொள்ள முடியும். இவற்றின் காரணமாக இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள ஐம்பது சதவீதமான கல்வியதிகார சபைகள் அடிநிலைக் கணிப்பீட்டை மேற்கொள்கின்றன. நாடெங்கும் வெவ்வேறு முறைகளில் கணிப்பீடு நடாத்தப்படுகிறது. இதனால் கலைத்திட்டக் கணிப்பீட்டு அதிகார சபை, கணிப்பீட்டு முறைகளைத் தரப்படுத்துதற்காக, முழுநேரப் பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளை மதிப்பீடு செய்வதற்காகச் சில தேசிய வரையறை நியமங்களை எடுத்துரைத்துள்ளது. சிறிது காலம் கலந்தாலோசித்தபின் 1997இல் இவ்வடிநிலைக் கணிப்பீட்டை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இக்கணிப்பீட்டு அதிகார சபை வெளியிட்ட ஒரு ஆவணத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிநிலைக் கணிப்பீட்டின் நோக்கம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

1. குழந்தைகளின் பலம், பலவீனத்தை இனங்காணல்
2. குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தியாக்கப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரியர் திட்டமிட உதவுதல்
3. குழந்தைகளின் தனிப்பட்ட கற்றல் தேவைகள், விஷேட கல்வித் தேவைகள் என்பவற்றை இனங்காணல்.
4. குழந்தைகளின் கற்றல், முன்னேற்றம் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடுதற்கான தகவல்களை வழங்குதல்.

இம் முயற்சி, கலைத்திட்டத்தைத் திட்டமிட உதவுவதோடன்றி பொறுப்புக் கூறும் தன்மையை மேம்படுத்தவும் பயன்படும். பெறுமதியைக் கூட்டவும் உதவும்.

இவ்வடிநிலைக் கணிப்பீடுகளை, கலைத்திட்ட நிகழ்வுகளுடன் நெருக்கமாகத் தொடர்புபடுத்தும்போது சில இடர்ப்பாடுகள் தோன்றும். இவ்வணுகுமுறை பற்றிச் சில ஐயங்களை மௌரின் சீல்ட்ஸ் (Maureen Shields) என்ற ஆய்வாளர் எழுப்பினார். அவை கீழே தரப்படுகின்றன.

"கணிப்பீட்டில் உள்ள ஒரு அபாயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கணிப்பீட்டுக்குள்ளாகும் குழந்தைகளின் விருத்தி, செயலாற்றல் பற்றிய பயனுள்ள தகவல்களைத் தருவதை விடுத்து, என்ன கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதாகச் சிலவேளை அது அமையக்கூடும். இது பொருத்தமானதல்ல. கணிப்பீட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நோக்கம்,' ஆசிரியரின் தேவைகளை நிறைவு செய்வதாகும். ஆசிரியர்கள் மீது வெளிவாரியான நியமங்களைச் சுமத்துவது கணிப்பீட்டின் நோக்கமல்ல.''

கலைத்திட்டத்தைத் திட்டமிடல், பதிவுகளைப் பேணுதல் என்ற இரண்டும் ஒன்றாக இடம்பெறலாம். ஆனால் சீல்ட்ஸ் குறிப்பிட்ட அபாயத்தைத் தவிர்க்க வேண்டுமானால் முதலில் கலைத்திட்டத் தத்துவங்கள் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். நோக்கங்கள் வரையறை செய்யப்படும்போது, ஒரு பதிவு பேணும் அட்டவணை இருத்தல் நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தை அறிய இது உதவும். பாடசாலைகள் தமக்குத் தேவையான தகவல்கள் எவையென்பதை கவனமாகத் தீர்மானிக்க வேண்டும். தகவல்கள் எவ்வடிவில் வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். முன்பள்ளிக் கலைத்திட்டத்தைத் தீர்மானிப்பதில் நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பவற்றைக் கொண்ட மாதிரிகையைப் பயன்படுத்தப் பல ஆசிரியர்கள் விரும்புவதாக இல்லை. காரணம், அது கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதாக அவர்களால் கருதப்படுவதாகும். எனினும் கற்பித்தலைத் திட்டமிட, வழிகாட்டுவதற்கு அது உதவுமென்பது மறுக்க முடியாததே.

**கணிப்பீடுகளைச் செய்வது எவ்வாறு?**

ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளைப் பொறுத்து பதிவுகளைப் பேணப் பொருத்தமான முறை எது என்பதைச் சிந்திக்குமுன்னர், அவர்களைக் கணிப்பீடு செய்கையில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் எவையென்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். அப்போது எவ்வாறு கணிப்பீட்டைச் செய்யலாம் என்பதற்கும் பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். இளங்குழந்தைகள் அடிக்கடி மாற்றத்திற்கு உட்படுபவர்கள். அதனால் அவர்களைக் கணிப்பீடு செய்வதில் பல பிரச்சினைகள் ஏற்படும். அவைபற்றி இங்கு நோக்கலாம்.

1. முதலாவது பிரச்சினை, அவர்கள் பொருத்தமான மொழி அறிவைப் பெற்றிராமையாகும். இது அவர்களது விருத்திக்கட்டத்தோடு தொடர்புடையது. ஆனால் மேலோட்டமாகப் பார்க்கும்போது மொழியறிவு உள்ளவர்களாகக் காணப்படலாம். இக்குறைபாடு காரணமாக அவர்கள் தவறான விடைகளையும் வழங்க இடமுண்டு. வினாவை அவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளாமையே இதற்கான முக்கிய காரணமாகும். உதாரணமாக ''சிவப்பு முத்துக்களை ஒரு பெட்டியில் போடு'' எனச் சொன்னால் குழந்தை அதை விளங்கிக் கொண்டதானால், அதைச் சரியாகச் செய்யும். ஆனால் சிவப்பு, முத்து, பெட்டி என்ற சொற்களை குழந்தை விளங்கிக் கொள்ளாவிட்டால் என்ன செய்ய முடியும்?

2. இப்பருவக் குழந்தைகளின் சிந்தனையில் சில மட்டுப்படுத்தல்கள் இருக்கும். அவர்களின் சிந்தனை வளர்ந்தோருக்கு முட்டாள்தனமாகவும் தோன்றலாம். கேள்வியின் உட்பொருளை விளங்கிக் கொள்ளாத குழந்தை விடைதர மறுக்கும், அல்லது தான் விளங்கிக் கொண்டதற்கேற்ப விடை தர முயற்சிக்கும். ஆனால் அந்த விடை பரீட்சகருக்குத் தவறானதாகவே அமையும். வினா விளங்காததால் குழந்தை விடை தரவில்லையா? அல்லது விடைதரக் குழந்தை விரும்பவில்லையா? இதை அறிந்துகொள்ள வழியில்லை. இந்த இடத்தில் இது ஒரு முக்கிய பிரச்சினையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நன்றாக ஒத்துழைக்கக் கூடிய இவ்வயதுக் குழந்தைகள் கூட களைப்படையக் கூடும். அதனால் விடை எழுத அலுப்பேற்படலாம். சிறு குழந்தைகள் சிறிது நேரமே தமது கவனத்தை ஆழமாக நிலைநிறுத்தக் கூடியவர்கள். பரீட்சை சில நிமிடங்களுக்குத் தான் என்றாலும் கூட இந்த நிலைமை ஏற்படலாம். குறிப்பாக அறிவாற்றல் சார்பான பணிகளில் அவர்கள் இவ்வாறே நடப்பர். இந்த அம்சத்தையும், பரீட்சைத் தயாரிப்பாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு குழந்தையைப் பொறுத்தும் முறையான இலட்சியபூர்வமான கணிப்பீட்டுச் சூழலை ஏற்படுத்துவது கடினமாகும். குழந்தைகளின் தனிப்பட்ட இயல்புகளோடு, பரீட்சை நடக்கும் நேரம், குழந்தையின் பசி, நித்திரைக் குறைவு போன்றனவும் குழந்தைகளின் பரீட்சைக் செயற்பாட்டைப் பாதிக்கலாம். ஆசிரியர்கள் பரீட்சையைப் பொறுத்து இவ்வம்சத்தையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

5. முறையான நியமப் பரீட்சைகளின் போது, குழந்தைகள் பயம் அல்லது பதகளிப்படைவது இயல்பு. இதனாலும் மனத்தடைகள் ஏற்படலாம். வளர்ந்தோர் கூட பரீட்சகருக்குப் பதட்டமடையும்போது அறிமுகமில்லாத பரீட்சகரையிட்டுக் குழந்தைகள் அசாதாரணமாக நடப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இந்தக் காரணத்தைப் பொறுத்து குழந்தைகளின் ஆசிரியர்களோ அல்லது பழக்கமான நபர்களோ பரீட்சை நடத்துவது விரும்பத்தக்கதாகும். ஆயினும் இதனால் ஓரளவு பரீட்சை அகவயத்தன்மையுடையதாக அமையலாம் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. குழந்தையின் சுய ஆளுமை அல்லது வீட்டுப் பின்னணி சார்பான உறுதிப்பாடற்ற நிலை மனவெழுச்சியைப் பாதிக்கும். ஆகவே, பாடசாலைச் சூழலில் குழந்தை ஓய்வுடன் பதட்டமின்றியிருக்கச் செய்தல் வேண்டும். வெளிநிலைக் காரணிகளால் உருவாகும் மன அழுத்தங்களை அகற்றுவது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, காந்தனுக்கு வழங்கும் அதே அளவு வசதிகளையே சோமனுக்கும் வழங்குகிறோம். ஆயினும் காந்தன் முதல் நாள் இரவு தான் அனுபவித்த கவலைக்குரிய அனுபவங்கள் காரணமாக இவ்விரு குழந்தைகளின் கல்விப் பெறுபேறுகளில் வேறுபாடுகள் இருக்கவே செய்யும்.

7. கற்கும்போதும் பரீட்சையின்போதும் குழந்தையின் செயலாற்றுகையில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணி ஆசிரியராவார். ஆசிரியர் தனிப்பட்ட முறையில் குழந்தைகளுடன் கொள்ளும் தொடர்பு, குழந்தைகளின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகும். ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளைப் பொறுத்து இது அதிக அளவில் பொருந்தும். ஆசிரியர் தாய்க்குச் சமமானவராவார்.

இளங்குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள்? அவர்கள் தாமாக ஈடுபடும் கற்றற் செயற்பாட்டின் முக்கியத்துவம் என்ன? என்பன கணிப்பீட்டைச் செய்யும்போது மனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாகும். டொனால்ட்சனும் சகாக்களும் (1978) பரீட்சை முறையிலுள்ள இடர்ப்பாடுகளை எடுத்துக்காட்டியுள்ளனர். புரூணர், வைகொட்ஸ்கி ஆகியோர் குழந்தைகளை மதிப்பீடு செய்வதில் வளர்ந்தோரின் பங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர் வைகொட்ஸ்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் எந்த உதவியுமின்றிச் செயற்படுவதற்கும், உதவியுடன் செயற்படுவதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்கியுள்ளார். இவ் வேறுபாடு குழந்தைகளின் கற்பித்தலைத் திட்டமிடுவதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இத்தகைய கற்பித்தல் திட்டங்கள் குழந்தைகளின் திறன் விருத்திக்கும் எண்ணக்கரு விருத்திக்கும் உதவக் கூடியவை.

குழந்தைகள் சக குழந்தைகளுடன் கொள்ளும் இடைத்தாக்க விளைவுகளும் கற்றலை மதிப்பிடும்போது கருத்திற்குக் கொள்ளப்பட வேண்டும். குழந்தைகள் சோடிகளாகவும் சிறிய குழுக்களாகவும் செயற்படுதலிலுள்ள பெறுமதி, பயன் என்பன பற்றிப் பல ஆய்வுகள் விளக்கம் தந்துள்ளன. இந்த நிலைமைகளில் செய்யப்படும் குழந்தைகளின் ஆற்றல் பற்றிய மதிப்பீடு தனித்துச் செயற்படும் பிள்ளை பற்றிய கணிப்பீட்டைவிட உண்மையானதாகவிருக்குமென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குழந்தைகளின் உரையாடும் திறனை மதிப்பிடுவதைப் பொறுத்து இது உண்மையேயாகும். இதனாலேயே அனுபவமிக்க ஆசிரியர்கள், மொழித்திறனைக் கணிப்பீடு செய்யும்போது அமைப்பாக்கப்பட்ட விளையாட்டு, ஒன்றிணைந்த கற்றல் நிலைமைகளைப் பயன்படுத்துகின்றனர்.

எவ்வகையான பதிவுகளைப் பேணவேண்டும்? எத்தகைய வடிவத்தில் பதிவுகள் அமைய வேண்டும்? என்பதை முடிவு செய்யுமுன்னர் சில முக்கிய வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

- நியமம்சார் அடிப்படையில் கணிப்பீடுகள் அமையுமா? (புறவயமான தரப்படுத்தப்பட்ட பரீட்சைகள் பயன்படுத்தப்படுமா?) அல்லது கணிப்பீடுகள் பிரமாண

ஆய்வு (Crite.Ref) அடிப்படையில் அமைய வேண்டுமா?

கணிப்பீடு அளவுரீதியாக (Formative) அமைய வேண்டுமா? அல்லது மொத்தம் காணல் ரீதியாக (Summative) அமைய வேண்டுமா?

இரண்டு தொடக்கம் ஐந்து வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளுக்கான பரந்த நியமங்களை, விருத்திசார் சரிபார்க்கும் பட்டியல்கள் வழங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் குழந்தைகளின் முன்னேற்றம் எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்பதை அறிய இப்பட்டியல் உதவும். இவ்வாறான மொத்தம் காணல் வகை சார்ந்த (Summative) கணிப்பீட்டில் உள்ள ஒரு பிரச்சினை இக்கணிப்பீடு கலைத்திட்டத்துடன் தொடர்பற்று இருப்பதாகும். இக்கணிப்பீடு குழந்தை பெற்றிருக்கும் விளக்கத்தைப் பரந்த ரீதியில் அளவிடுகின்றது. குழந்தையின் சமூகநிலைமையை அது கருத்தில் கொள்வதில்லை. ஆயினும் சிறிய கற்றற் பிரச்சினைகளையுடைய குழந்தைகளைப் பொறுத்து ஏராளமான பிரமாண விபரப் (Criterian ref) பரீட்சைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சை ஏனைய விருத்தி சார்பான பரீட்சைகளை விடக் கூடிய அளவு கலைத்திட்டத்துடன் தொடர்பான முறையில் ஆசிரியர்களால் தயாரிக்கப்படுகின்றன. இவை பாடசாலை மாணவர்க்கே குறிப்பாகப் பொருந்துவன. குழந்தைகளின் கற்றலில் விரும்பத்தக்க விளைவுகள் (Desirable outcome for children's Learning) என்ற பிரசுரத்தில் காணப்படும் திறன்களையும் தகைமைகளையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும் பாடசாலைகள் கலைத்திட்டத்துடன் தொடர்பான பிரமாண விபரக் கணிப்பீட்டு முறை எதனையாவது மேற்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவதானிப்பு முறை**

பெரும்பாலான ஆசிரியர்கள், ஐந்து வயதுக்கு முற்பட்ட குழந்தைகளைக் கணிப்பீடு செய்வதற்கு அவதானம் சார்ந்த முறைகளையே மேற்கொள்ளுகின்றனர். இது பெரும்பாலும் சரியானதே. ஆரம்ப காலக் கல்வியாளர்கள் தம் கீழ் வந்த குழந்தைகளை விரிவான முறையில் நீண்ட கால அவதானத்துக்குட்படுத்தினர். சுசான் ஐசாக்ஸின் ஆய்வின் வழிவந்ததே இந்த அவதானிப்பு முறையாகும். அவர் இந்த அவதானிப்பு நுட்பம் மூலம் குழந்தைகளின் பாலியல், உளவியல் விருத்தியை விளங்கிக்கொள்ள முற்பட்டார். பாலரைப் பொறுத்து நாளாந்தம் அவதானிப்பு மூலம் செய்யும் கணிப்பீடு மிக ஆற்றலுள்ளதாகும். எனினும் சிறந்த அவதானிப்பு முறையைக் கற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி இயல்பாக உருவாக்க முடியாது.

பல முன்பள்ளியாசிரியர்கள் அவதானிப்புச் சார்ந்த குறுங்காலப் பயிற்சியின்பின், கவனமான அவதானிப்பு மூலம் குழந்தைகளின் திறன்கள், தகைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களை நன்கு விளங்கிக்க கொள்ள முடிந்ததையிட்டு வியப்படைந்தனர். அமைதியாகச் செயற்படும் குழந்தை உண்மையில் சிறிதளவு பணியையே செய்யக்கூடும். அதே வேளை சற்று ஒதுங்கி ஓடித் திரிகின்ற மாதிரிக் காணப்படும் குழந்தை பல பணிகளைச் செய்து முடிக்கக் கூடும். இவ்வாறான தொடர்ச்சியான இயக்கத்துக்குக் காரணம், அக்குழந்தை குறுகிய நேரத்தில் ஏராளமான பணிகளைச் செய்யும் ஆற்றல் பெற்றிருப்பதாகும். அவதான முறை பொருத்தமாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டுமானால், அவதானச் செயல்முறை முறையாக ஒழுங்கமைக்கப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், சரியான சட்டகமொன்றுக்கு இசைவாகக் கையாளப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் அவதானிப்புத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான நல்ல யோசனைகள் பல பாடசாலைப் பேரவைச் செயற்றிட்டத்தில் (Clift, Weiner and Wilson - 1981) காணப்படுகின்றன. அவை பின்வருமாறு :

1. எதனை அவதானிக்க வேண்டும் என்பதை முன் கூட்டியே தீர்மானித்தல். (வழமைக்கு மாறான நடத்தைகளையிட்டும் விழிப்பாயிருத்தல்)

2. நிலைமையை நன்றாக அவதானித்து போதியளவு பதிவுகளை மேற்கொள்ளல். (இதனால் நடத்தையைக் கருத்துள்ளதாக்கலாம்)

3. ஒரு சம்பவத்தை அவதானித்ததும் கூடிய அளவு துரிதமாகப் பதிவினைச் செய்தல்.

4. நிகழ்ந்ததை, ஒரு தனிப்பட்ட சம்பவச் சுருக்கமான விவரணக் குறிப்பாகப் பதிந்து கொள்ளல்.

5. சம்பவம் பற்றிய உண்மையான விபரங்களைப் பதிந்து கொள்ளல். (சம்பவம் பற்றிய உங்கள் வியாக்கியானங்களை வேறாக வைத்தல், சம்பவத்தை விபரிக்கும்போது அதுபற்றிய முடிவுகளைக் குறித்துச் சொல்லக்கூடிய சொற்களைப் பயன்படுத்தலாகாது).

6. உடன்பாடான, எதிர்மறையான இருவகை நடத்தைகளையும் பதிந்து கொள்ளல்.

7. ஒரு மாணவன் பற்றிய சுவையான பல நிகழ்வுகளையும், குறிப்புக்களையும் திரட்டிக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதன்பின்னர் மாணவனின் நடத்தை பற்றிய முடிவுகளைச் செய்து கொள்ளலாம்.)

முன்பள்ளிக் குழந்தைகளைப் பொறுத்தான கணிப்பீடு மிக முக்கியத்துவமுடையது. அவதானத்தால் மட்டுமே ஆசிரியர் பல முக்கிய வினாக்களுக்கு விடைகாண முடியும். அவ்வாறான வினாக்கள் பின்வருவன :

- ஒரு குறிப்பிட்ட பணியைக் குழந்தை செய்து முடிக்க முடியுமா?
- அப்பணியைக் குழந்தை எவ்வாறு செய்து முடிக்க முடியும்?

பிள்ளை பணியில் காணும் இறுதிப் பெறுபேறு கிடைக்கப் பெற்றதா என்பதையறிய இவை அவசியமானவை அவதானத்தைப் பதிவு செய்யும் முறை பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடலாம். ஒரு பாடசாலை மாதிரி விவரண (Specimen description) அணுகுமுறையையும், (Lesley Webb 1974) வேறொரு பாடசாலை இலக்குக் குழந்தை அணுகுமுறையையும் பயன்படுத்தலாம். (இது Oxfordshire இன் முன்பள்ளிக் கல்விச் செயற்றிட்டத்தில் பயன்படுத்தப்பட்டது) இலக்குக் குழந்தை அணுகுமுறையை சில்வா, றோய், பெயின்ரர் (Silva, Roy, Painter - 1980) ஆகியோர் உருவாக்கினர். இம்முறையில் அவதானிப்பவர் ஒரு பிள்ளையின் மேல் கவனம் செலுத்தி, பிள்ளையின் செயற்பாடுகள், மொழி, நடத்தை என்பன வளர்ந்தோருடன் தொடர்பு கொள்ளும்போது எவ்வாறு அமைகின்றன என்பதைக் குறித்துக்கொள்வார். அவதானத்துக்குப் பயன்படுத்தும் எந்த முறையும் மிக விரிவானதாயிருக்கத் தேவையில்லை. அப்படியானால் ஆசிரியர் அதிக நேரத்தைச் செலவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்கும். அவதான அட்டவணையைப் பயன்படுத்தும் ஆசிரியர், அவதானத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். பிள்ளைகள் பற்றிய தமது அறிவையும் பயன்படுத்தி விபரக் குறிப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

**தனியாள் விபரக்குறிப்பு**

ஒவ்வொரு குழந்தைக்குமான தனித்தனி விபரக் குறிப்பைத் தயாரிக்கும் ஆசிரியர், அவர்கள் முன்பள்ளிக் கல்வியில் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கும் திறமைகள், தேர்ச்சிகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். கல்வித்திணைக்களம் அங்கீகரித்த கற்றல் துறைகளின் அடிப்படையில் பாடசாலைகள் சரிபார்க்கும் பட்டியல்களைத் தயாரித்துக் கொள்கின்றன. தனியாள் விருத்தியும் சமூக விருத்தியும், மொழியும் எழுத்தறிவும், கணிதம் வெளியுலகு பற்றிய விளக்கமும் அறிவும்; உடல்வளர்ச்சி ஆக்கத்திறன் வளர்ச்சி என்பன அத்துறைகளாகும். சில பாடசாலைகள் தேசிய கலைத்திட்டம் சார்ந்த முறையில் தமது கணிப்பீடுகளைச் செய்கின்றன.

தனிப்பட்ட ஒரு குழந்தையின் விபரக்குறிப்பில் அடங்க வேண்டிய அம்சங்கள் இவை :

கலைத்திட்ட விடயங்களில் குழந்தையின் செயலாற்றல்; குழந்தையின் ஆரோக்கியம்; குடும்பப் பின்னணி சார்பான தகவல்கள்; ஆசிரியருக்குப் பயன்படக் கூடிய ஏனைய உண்மை விபரங்கள், குழந்தை செய்துள்ள பணிகளுக்கான சில உதாரணங்கள் என்பன.

கீல்ஸ் பி எஸ் ஏஜி (Keels PSAG (Tyler 1976) இல் காணப்படும் விபரக் குறிப்புவகைகள், கேர்ட்டிசும் விக்னாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Curtis and wignal - 1980) குறிப்பிட்ட ஆரம்பகாலக் கற்றல் பற்றிய மாதிரிகை என்பன ஆசிரியர்களுக்கு உதவக் கூடியன. கேர்ட்டிசும் சகாக்களும் குழந்தைகளின் பலம், பலவீனம் பற்றிய பகுப்பாய்வு செய்வதில் அக்கறை செலுத்துகின்றனர். மேலும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் குழந்தைகளின் கற்றலை மேம்படுத்துவதற்கான பல ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

**"அனைத்தும் என்னைப் பற்றியவை"** (Wolfendale 1990)

இத்தலைப்பு இளங்குழந்தைக் கல்வி நிறுவனங்களிலும், பல பாலர் பாடசாலைகளிலும் குழந்தைகளின் முன்னேற்றத்தைப் பதிவு செய்யக் கையாளப்படும் பதிவேட்டைக் குறிக்கிறது. குழந்தைகளின் விருத்தியின் முன்னேற்றத்தைப் பெற்றோர் பெற்றுக்கொள்ள இது உதவுகிறது. இதைக் குடும்பத்துக்குரிய பதிவேடு என்றும் கூறலாம். பெற்றோர் ஆசிரியர் முதலானோருடன் குழந்தைகளின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாட இது தரும் தகவல்கள் உதவுகின்றன. இரண்டு தொடக்கம் ஆறுவயதுவரையான வயதுக்குழந்தைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து எட்டு விடயங்கள் உள்ளடங்குகின்றன. 1. மொழி, 2. விளையாட்டும் கற்றலும் 3. குழந்தைகள் சுயமாகச் செய்யும் பணிகள் 4. உடல் விருத்தி 5. சுகாதாரமும் பழக்கவழக்கங்களும் 6. குழந்தையும் மற்றவர்களும் 7. குழந்தைகளின் நடத்தை, 8. உணர்வுகள் மனநிலைகள்.

இப்பதிவேடு பாடசாலையில் அனுமதி பெறுதற்கான அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருக்கும் தொடர்ச்சியான விபரக் குறிப்பேடாகவும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அனைத்தும் என்னைப் பற்றியவை" என்ற தலைப்பிற்கேற்ப, இப்பதிவு குழந்தையின் நோக்கிலிருந்தே எழுதப்படும்.

**ஆரம்பகால முன்னேற்றக் கட்டங்கள்**
(Early milestone Waller and Britto 1992)

'அனைத்தும் என்னைப் பற்றியவை' என்ற பதிவேட்டிலிருந்து பெறப்படும் ஒரு சரிபார்க்கும் பட்டியலே இதுவாகும். இதனைப் பூரணப்படுத்துவோர் குழந்தைகளும் பெற்றோருமாவர். இதில் இடம்பெறுவன : என்னையும் என் குடும்பத்தையும் அறிந்து கொள்ளல்; நாள்தோறும் நான்கிற்கும் புதிய விடயங்கள், பாடசாலை போக ஆயத்தமாதல்; எனது குழந்தைபற்றிய மேலதிக விபரங்கள் என்பன. ஆரம்பத்தில் இப்பட்டியல் ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்காகத் தயாரிக்கப்பட்டுப் பின்னர் பிரசுரிக்கப்பட்டது. ஆசிரியர்களின் விபரக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு உள்ளூர் அதிகார சபைகளும் இதை உருவாக்கலாம். அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஊழியர்களும் கூட இதற்கு உதவலாம். இவ்விபரக் குறிப்புக்கு, குழந்தைகளின் நடத்தை கூர்ந்து அவதானிக்கப்படல் வேண்டும். அத்தோடு பிரதான கற்றல் நிகழ்வுகளையும் இணைத்துக் கொள்ளலாம். இவ்விபரக் குறிப்பேடு பின்வருமாறு பல கூறுகளாக அமையலாம் - சென்று முறையாக அமர்ந்து கொள்ளல், மனவெழுச்சி விருத்தி, சமூகவிருத்தி, உடல்விருத்தி, தொடர்பாடல் மொழி, ஆன்மீக விழிப்பு, உளப்பாங்கு, கற்றலுக்கான அணுகுமுறை என்பன.

சில கணிப்பீட்டு விபரக் குறிப்புகளில், குழந்தைகளின் திறன்கள் கணிப்பீடு செய்யப்படுவதோடு அவர்களின் விருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்புகள், செயற்பாட்டு ஆற்றல், விருப்புச் செயற்பாடுகள், வழமையான பணிகள் என்பன பதிவு செய்யப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டு வால்சலுக்காக (Wallsall) தயாரிக்கப்பட்ட முன்பள்ளிப்பருவ விபரக்குறிப்பாகும். (1991) இதில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள்; சுய உதவியும் சுயாதீனமும், விளையாட்டு; இயக்கத்திறன்; எண்; வாசிப்புத்திறன், முழுமை இயக்கத்திறன், பாலர் வகுப்பின் நாளாந்தப் பணிகள், பிரச்சினை தீர்த்தல், அமைப்பு ஆற்றல், கேட்டல் திறன்கள் என்பன.

முன்பள்ளிப்பருவப் பதிவேட்டுக்கு மற்றொரு எடுத்துக்காட்டு, உள்ளூராட்சி அதிகார சபையொன்றும் உயர்கல்வி நிறுவனமொன்றும் சேர்ந்து தயாரித்த அவதானக் குறிப்பேடும் (Steiver 1991) பெற்றோர் கலந்துரையாடற் பதிவேடுமாகும். இதன்படி வகுப்பறை அவதானம், கற்றலைப் பொறுத்து ஆறு அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவை பரிசீலனை (Investigation) உயரங்களை கையாளுதல் (Use of Strategies) பிரதிநிதித்துவம்; தொடர்பாடல், இடைத்தாக்கம் (Interaction) உளப்பாங்குகள் என்பன. பெற்றோர் கலந்துரையாடற் பதிவேடு, பெற்றோருடனான உண்மைக் கலந்துரையாடல்களைக் குறிக்கின்றது. இதில் பெற்றோரும், ஆசிரியர்களும் குழந்தைகளின் விருத்தி சம்பந்தமாகத் தமது அறிவையும் புரிந்துணர்வையும் பரிமாறிக் கொள்கின்றனர். இந்த அவதானம் கலந்துரையாடல் என்பன குழந்தையின் மொத்தம் காணல் ரீதியான பதிவுக்கான நியாயங்களாக அமைதல் வேண்டும். அத்தோடு ஐந்து வயதுக் குழந்தைக்கான அடிப்படைத் தகவல்களைத் தருவதாகவும் இருக்க வேண்டும். அதனைக் கொண்டு பிரதான கட்டம் I இன் முடிவில் குழந்தையின் முன்னேற்றம் பற்றி அறியக்கூடியதாகவும் இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். குழந்தைகளின் விருப்பு வெறுப்புகளைக் காட்டும் பதிவேடுகள் முன்பள்ளியாசிரியருக்கும் பெற்றோருக்கும் தேவையான தகவல்களை வழங்கும். இதனால் பெற்றோர் தமது குழந்தைகள் பற்றித் தாம் அதிகம் அறிந்திருக்கவில்லையென்பதையும் உணர்வர்.

ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் மேற் கொள்ளப்படும் பதிவேடு பேணும் முறையானது பல காரணிகளில் தங்கியிருக்கிறது. கல்வியதிகாரிகளின் நியமமான கொள்கை; முன்பள்ளிக்கும் ஏனைய ஆரம்பநிலை நிறுவனங்களுக்குமிடையேயுள்ள தொடர்பு; கணிப்பீடு; கலைத்திட்டம் தொடர்பான ஆசிரியரின் மனப்பாங்கு என்பன அவையாகும். கல்விக் கலைத்திட்டத்திற்கும் கணிப்பீட்டு முறையின் உள்ளடக்கத்துக்குமிடையே ஒரு தொடர்பு இருக்க வேண்டும். இதன் காரணமாக அப்பகுதிப் பாலர் கல்விக் கலைத்திட்டத்தின் அமைப்பும் உள்ளடக்கமும் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்கலாம். சரியாகச் சரிபார்க்கும் பட்டியலின் அடிப்படையில் பதிவேடுகளைப் பேணும் பாலர் பள்ளிகளில் சரியாக ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டமும் இருக்கும். ஒழுங்கான கலைத்திட்டம் அவசியமெனக் கருதும் பாலர் பள்ளிகள், தொடர்ச்சியாகப் பதிவேடுகளைப் பயன்படுத்தி அதன் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிடும், மதிப்பீடு செய்தலைப் பொறுத்து ஆசிரியர்கள் அவதானம் மூலம் கணிப்பீட்டைச் செய்வர். கல்வி நிகழ்ச்சித் திட்டத்திலன்றிக் குழந்தைகளின் உண்மையான பணிகளிலும் இவ்வாறான அவதானமுறைக் கணிப்பீட்டைச் செய்வர். குழந்தைகள் செய்யக் கூடியவை எவை என்பது பற்றிய ஆசிரியர்களின் எதிர்பார்க்கைகள் இங்கு முக்கியத்துவம் பெறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்பள்ளிக் காலக் கணிப்பீடு எப்போது?**

**எத்தனை தடவை?**

பாலர் கல்வியைப் பொறுத்து மதிப்பீடு என்பது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகும். கணிப்பீடு குழந்தைகளின் முழுமையான சுயவிபரத்திரட்டின் ஒரு பகுதியாக அமைந்து பதிவு செய்யப்பட்டு, அடுத்தகட்ட ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும். கணிப்பீடு அடிக்கடி நிகழ வேண்டியதில்லை. கணிப்பீட்டு வழிகாட்டிகள் பலவும் பாடசாலையில் தவணையின் அரைப்பகுதி முடிந்த பின்னரே மதிப்பிடல் நிகழ்த்தப்படவேண்டும் என்கின்றன. ஒரு கையேடு (NFER for Assessment in Nursury Education - Date et al. 1973) ஆறுமாத இடைவெளியில் கணிப்பீட்டை மேற்கொள்ளலாம் என்கிறது. முன்பள்ளிக் கல்வியாளரில் பெரும்பாலோர் குழந்தை பள்ளியில் சேர்ந்தவுடன் அடிக்கடி கணிப்பீட்டுக்குள்ளாகக் கூடாதெனக் கருதுகின்றனர். முன்பள்ளிப் பரவத்தில் செய்யப்பட்ட கணிப்பீட்டுத் தகவல்களும் பதிவேடுகளும் ஏனைய அடிப்படைக் கணிப்பீட்டுத் தகவல்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படலாம். ஒருசில ஆவணங்கள் பரிந்துரைக்கின்றன. (SCAA) பொதுவாக பெரும்பாலான பாடசாலைகள் தமது பதிவேடுகளை அலட்சியம் செய்வதாக முன் பள்ளியாசிரியர்கள் குறை கூறுகின்றனர். இவ்வாவணத்தின் பரிந்துரை முன்பள்ளியாசிரியர்களைத் திருப்திப்படுத்தலாம்.

**நம்பகத்தன்மை**

அவதானத்தை மட்டும் கணிப்பீட்டுக்குப் பயன்படுத்தும்போது, தனிப்பட்ட குழந்தைகள் பற்றிய பார்வையில் பக்கச்சார்பு ஏற்பட வாய்ப்புண்டு. சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் ஒத்துழைப்பவராயும் மொழித் தேர்ச்சியுள்ளவர்களாயுமிருப்பர் என நாம் கருதும் காரணத்தால் கணிப்பீடு செய்வதற்கு ஒருவரை மட்டும் பயன்படுத்தாமல் ஒன்றுக்கு மேற்பட்டவர்களையும் பயன்படுத்தலாம். இவ்வாறு செய்வது பாலர் வகுப்புகளைப் பொறுத்து இலகுவானது. ஆனால் முன்பள்ளிக் கல்வியிலும், விளையாட்டுக் குழுக்களிலும் இம்முறை கடினமானதாகவிருக்கலாம். பாலர் பள்ளியாசிரியர்களின் பார்வையில், குழந்தைகளின் ஆற்றல், நடத்தை என்பவற்றைப் பொறுத்து பல வேறுபாடுகள் இருப்பதாக கிப்ஸ் (Gipps - 1982) என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். அவதான மூலமான கணிப்பீடுகளில் நம்பகத்தன்மை இருக்க வேண்டுமாயின் இந்த அம்சம் கவனிக்கப்பட வேண்டும். கணிப்பீடு பயனுறுதிவாய்ந்த கலந்துரையாடலுக்கு வழிவகுப்பதுடன், குழந்தைகளின் செயலாற்றல், கலைத்திட்டம் பற்றிய பல்வேறு அம்சங்களையும் விளங்கிக் கொள்ள உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

இதுவரை முன்பள்ளிக் குழந்தைகள் சார்பான பதிவேடுகளைப் பேணுதல் பற்றிய பல்வேறு அம்சங்களைக் காணமுற்பட்டோம். அதிலே பாடசாலை ஆரம்ப ஆண்டுகளில் கற்கும் மாணவர்களுக்கு ஏற்புடைத்தான பதிவேட்டுமுறை எது என்பது பற்றியும் அவ்வயதெல்லையில் உள்ள குழந்தைகளை எப்போது, எவ்வாறு, ஏன் கணிப்பீடு செய்ய வேண்டும் என்பதையும் கவனித்தோம். பதிவேடுகளைப் பேணுவதில் பிரச்சினைகள், சிரமங்கள் பல உள்ளன என்பதையும், அவ்வாறே முன்பள்ளி மாணவர் செயலாற்றல்களை மதிப்பிடுவதிலும் பல பிரச்சினைகளும் சிரமங்களுமுள்ளன என்பதையும் உணர்ந்தோம். முன்பள்ளிக் கல்வியாளர்கள், விபரக்குறிப்பை தயாரிக்குமுன்னர் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் சில இங்கு தரப்படுகின்றன.

1. குழந்தை விருத்தியில் அளவிடப்பட வேண்டிய அம்சங்களும் அவற்றின் இயல்புகளும்.

2. பயன்படுத்தப்படவேண்டிய கணிப்பீட்டு முறை.

3. அவதானிப்பு முறையின் நம்பகத்தை உறுதிசெய்யுமுகமாகக் கணிப்பீட்டை நிகழ்த்தத் தேவையான உதவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆசிரியர், சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு என்ன செய்ய முற்படுகிறார் என்பது.

5. கணிப்பீடு செய்யப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை.

6. குழந்தைகளின் நல்ல முன்னேற்றைக் காண்பதற்காக வகுப்பறையில் செய்ய வேண்டிய மாற்றங்களும் அவற்றின் இயல்புகளும்

7. பெற்றோரின் கருத்துகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது.

8. குழந்தைகளின் அபிப்பிராயங்கள் கருத்திற் கொள்ளப் பட வேண்டுமா என்பது.

இவற்றைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படும் பதிவேடுகள் முன்பள்ளியாசிரியர்களுக்கும், அவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆரம்பப்பள்ளியாசிரியர்களுக்கும் பயனுடையவையாகும். மேலும் அவை கட்டாயமில்லாக் கல்வி நிலையிலிருந்து கட்டாயக் கல்வி நிலைக்கு மாறிச் செல்லும் குழந்தைகளின் மேம்பாட்டில் ஒரு தொடர்ச்சியை உறுதி செய்யவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

599089

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி...



மா. செல்வராஜா

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு மா. செல்வராஜா பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டத்தையும் (B.Ed.Hons) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி, கல்வி தத்துவ முதுமாணிப் பட்டங்களையும் (M.Ed, M.Phil) இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றார். கல்வி நிருவாகம் முகாமைத்துவம் என்பவற்றில் புலமை பெறுவதற்காக இங்கிலாந்திலுள்ள லிட்ஸ் பல்கலைக்கழகம் சென்று கல்வி முதுமாணிப் பட்டத்தையும் (M.Ed Mgt. and Administration) பெற்றார். கொழும்பு டி.எஸ் சேனநாயக்கக் கல்லூரி உட்படப் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், மட்/ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும், கொழும்பு இந்துக் கல்லூரி, மட்/ சிவானந்த வித்தியாலயம் என்பவற்றில் அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் பணியாற்றினார். 1982ல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் பதவி உயர்வு பெற்றார். பிலிப்பைன்ஸ், தாய்லாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று கல்வி நிருவாகம் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகளில் பங்கு கொண்டார். ஐக்கிய அமெரிக்கா, இஸ்ராயேல் முதலிய நாடுகளில் தொடக்கப் பள்ளிச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகளிலும் கலந்து கொண்டார்.

1998ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்ட அவர் கல்விப் பிரிவின் இணைப்பாளராகப் பணியாற்றுவதோடு ஆரம்பப் பிள்ளைப் பராமரிப்புக்கும், அபிவிருத்திக்குதபன நிலையத்தின் பணிப்பாளருமாக இருந்து தொடக்கப் பள்ளிக் கல்விக்கு பல்வேறு வகையான பங்களிப்பைச் செய்து வருகின்றார்.

திரு. பாலசுகுமார்
பீடாதிபதி
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org